
# அடியார்க்கு நல்லார் வரலாற்று

## ஆராய்ச்சி



954
செகந்

பொ. செகந்நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி

யாழ்ப்பாணத்து

வேலணைச்

சரசுவதி உயர்நிலைப்பள்ளி (High School)

ஆசிரியர்

பொ. செகந்நாதனால் இயற்றப்பெற்று

மதுரை

விவேகாநந்தா அச்சுக்கூடத்திலும்

எக்ஸெல்ஸியர் பவர் அச்சுக்கூடத்திலும்

அச்சிடுவிக்கப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : மார்ச்சு, 1944.

954
ெகக்
EVELYN RUT INSTITUTE
34
REFERENCE
LIBRARY
JAF

பதிப்புரிமை ஆசிரியருக்கே,

கிட்டடில் வகையரா, (8-பக்கம்)
கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், லி.டி., சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டுப் பேரறிஞருள் ஒருவரும்
தமிழ்ப் "புரபெசரு"ம் (Professor) நாவலருமாகிய

## உயர்திரு S. சோமசுந்தர பாரதியார், M. A., B. L., அவர்கள்

## இந்நூலினைப் பார்வையிட்டுக்கொடுத்த

# மதிப்புரை.

---

யாழ்ப்பாணத்து வேலணைச் சரசுவதி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்
திரு. பொ. செகந்நாதன் அவர்கள் எழுதிய

## "அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி"

எனும் கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன். கொங்கு நாட்டு நிரம்பையர் (காவலன்) ஆய அடியார்க்கு நல்லார், ஈழநாட்டுச் சிங்கை (நல்லூர்) அரசன் "குணபூஷணசிங்கை ஆரியனு"க்கு அமைச்சராயும், அவ்வரசன் படைத் தலைவனான (பொப்பண்ண) காங்கேயனுக்கன்பருமாய் இருந்த [illegible]கையில் சிலப்பதிகாரவுரை எழுதினார் என்றிவ்வுரைகாரர் முடிபுகட்டுகிறார்கள். இப்போது நல்லூரெனப்படும் பழைய சிங்கையில் மந்திரியாய் இருந்த 'பண்டித மணியான அடியார்க்கு நல்லாரே இளங்கோவடிகளின் முத்தமிழ் முதற்காப்பிய விரிவுரைகாரரானால் பெரும் புலவர் அநுமரசு விளையாட்சித்துரியராம் பெருமை நிறுவிய சீர் அடியார்க்கு நல்லார்க்கும் அவ்வுண்மைகண்டு வெளியிட்ட தனிச்சிறப்பு—திரு செகந்நாத பண்டிதருக்கும் உரியவாகும். தம் நுண்மதியால் எண்ணுபல சான்றுக்களை இணைத்திந்தத் துணிபு வலியுறுத்த முயன்றெழுதிய இக் கட்டுரை, இப் பண்டிதரின் கல்வி வளம், எதடுக்கும் வாதவலி, உரைப்பவற்றை வற்புறுத்தும் உள்ளுரன், யாருங்கூறச் செய்திகளை ஆராயும் பேரார்வம் முதலிய சால்புகளை விளக்குகிறது.

இந்நன்முடிபுக்குக் கட்டுரையில் காட்டப்படும் பொருட்டுக்கள் ஒருதலையாய்த் துணியப்போதா. திரு. ஆ. முத்துத்தம்பி அவர்கள் குறிப்புக்கு முன் ஆதரவு ஒன்றும் விளக்கப்படவில்லை. மறுக்கொணுத முடிந்த முடிபென நாட்டச் சான்று போதாவெனினும் பிற முடிபுசுட்டும் நற்சான்று வேறு காணுதவரை இவ்வுரைத் துணிபே உண்மையாகலாம் எனக் கொள்ளத் தடையில்லை..............ஆனால் இவ்வரலாற்றுக் குறிப்புக்கள் இவ்வாராய்ச்சிப் புலவர் மதிவலியும் ஆய்திறனும் உடையவர் என்பதை வலியுறுத்தப் போதியவாம். இனிய தமிழ் உரை நடையும், சொல்வளமும் இவ்வுரையை அழகு செய்கின்றன.

S. S. Bharati,
Advocate.

பசுமலை,
மதுரைஜில்லா,
9-1-45.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவித்துவான் புன்னாலைக்கட்டுவன்

**பிரம்மஸ்ரீ. சி. கணேசையர் அவர்கள்**

இந்நூலினைப் பார்வையிட்டு உவந்தளித்த

# மதிப்புரை.

## அடியார்க்கு நல்லார் வரலாற்றாராய்ச்சி

இந்நூல் நம் தமிழகத்திற்கு ஓர் அரிய விருந்தாகும். இஃது ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாக எண்ணப்படும் சிலப்பதிகாரத்துக்கு உரை இயற்றிய அடியார்க்கு நல்லாரின் வரலாற்றை ஆராய்வது. இதனை இயற்றியவர் வேலணைச் சரசுவதி உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் ஸ்ரீமாந். போ. ஜகந்நாதன் அவர்களாவர். இவர்கள இவ்வாராய்ச்சியுள் கொங்குநாட்டிற் பிறந்தவராகக் கொங்குமண்டல சதகத்திற் கூறப்படும் அடியார்க்கு நல்லார், யாழ்ப்பாணத்து நல்லூரில் இருந்தரசாண்ட குணபூஷண சிங்கை யாரியச் சக்கரவர்த்தியினால் அழைக்கப்பட்டு, அவற்கு மந்திரியாக இருந்த காலத்தில் அவன் சேனாபதியாய காங்கேயன் சொற்படி சிலப்பதிகார உரையை இயற்றினார் என்றும், அடியார்க்குநல்லார் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்திருந்தார் என்பதை அவர் பெயரால் வழங்கிய குலப்பெயரும், நிலப் பெயருமே உணர்த்தும் என்றுங் கூறி அவற்றைத் தமது மதிநுட்பத்தாற் கண்டபல ஏதுக்களாலும் அரசினர் கச்சேரியிலும், கொழும்புச் சாசன நிலையத்திலுமுள்ள எட்டுச் சாசனங்களாலும் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

அஃது அவர்களுடைய பொறுமையான ஆராய்ச்சி வன்மையையும் நுண்மதியையும் நன்கு தெரிக்கின்றது. சிலப்பதிகார உரையை இயற்றியவர் எமது யாழ்ப்பாணத்தில் குணபூஷண ஆரியச் சக்கரவர்த்திக்கு மந்திரியாய் இருந்த அடியார்க்கு நல்லாரே எனத் தாமெழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத்தில் மானிப்பாய் ஸ்ரீமாந். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்களேயாயினும், இத்துணை விரிவாக அவர் சரித வரலாற்றை ஆராய்ந்து கூறிற்றிலர். இந்நூலாசிரியராகிய இவர்கள் அவர் சரித வரலாற்றை மிக நுட்பமாகவும் விரிவாகவும் ஆராய்ந்து கூறியிருக்கின்றமை யாவராலும் போற்றப்படத் தக்கதே. இவ்வாராய்ச்சி முழுவதையும் யாம் ஆழ்ந்து படித்துப் பார்த்து மகிழ்தற்கு எமது உடலின் தளர்ச்சியும், நலமின்மையும் தடையாய் இருக்கின்றமைக்கு மிகவும் வருந்துகின்றேம். ஆயினும் பொதுவகையாக யாம் நோக்கியபோது அடியார்க்கு நல்லார் என்னும் ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருந்தார் என்பதற்குத் தக்க சான்றுகள் கிடைத்தனவாகக் காணப்படுகின்றன. அதுபோல அவர் பண்டை யாழ்ப்பாணச் சிங்கை நகரில் இருந்தபோதே உரை இயற்றினார் என்பதைத் தமது ஆராய்ச்சி முகத்தால் நிரூபித்துக் காட்டியதற்கும் இன்னும் தக்க சான்றுக்களும் கிடைக்குமாயின் இவ்வாராய்ச்சி பொன்மலர் நறுநாற்றம் உடைத்தாயது போன்றதாகி விளங்கும் என்பதற்குத் தடையே யின்றும். இவ்வரிய ஆராய்ச்சி நூலை எழுதிய இவ்வாசிரியரவர்களே அவற்றையும் நாடிப் பெறுதற்கும் முயல்வார்களென எண்ணுகின்றேம். இவ்வரிய ஆராய்ச்சி நூலை முயன்று எழுதிய இவ்வாசிரியர் அவர்கள் இதுபோன்ற ஆராய்ச்சி நூல்களை இன்னும் ஆராய்ந்து எழுதித் தமிழுலகுக்கு உதவுமாறு எல்லாம் வல்ல இறைவனருள்வானாக.

புன்னாலைக்கட்டுவன்,
6—10—44

சி. கணேசையர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணந் திருநெல்வேலிப் பரமேசுவரக் கல்லூரித்
தலைமைப் பேராசிரியரும், (Principal) இலங்கை அரசாங்க சபை
அங்கத்தவருமாகிய உயர்திருவாளர்:

**சு. நடேசபிள்ளை, B. A., B. L., F. R. E. S., M. S. C.,**

அவர்கள் உவந்தளித்த

# மதிப்புரை

இந்நூல் "புதுவது கிளக்கும்" ஓர் அரிய ஆராய்ச்சி நூலாகும். முத்தமிழ்க் கருவூலமாகிய சிலப்பதிகாரத்துக்கு உரைகண்ட அடியார்க்கு நல்லாரது சரித்திர சம்பந்தமாக, இதுகாறும் தமிழுலகம் அறியாத சில முக்கிய செய்திகளை இந்நூல் தக்க ஆதாரங்காட்டி விளக்குகின்றது. கொங்கு மண்டலத்திற் பிறந்த அடியார்க்கு நல்லார் ஈழ மண்டலத்தில் அமைச்சுரிமை பூண்டு வாழ்ந்தாரென்றும், அவ்வாறு வாழ்ந்த காலத்திற்றான் சிலப்பதிகார உரை அவரால் இயற்றப்பெற்றதென்றும் யாழ்ப்பாணத்திற் கிடைத்த சில சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, இவ்வாராய்ச்சி நூலாசிரியர் திரு. பொ. செகந்நாதன் அவர்கள் நிரூபித்துள்ளார்கள். இவர்களது மதிநுட்பத்தையும், ஆராய்ச்சித் திறனையும் யான் மிகவும் பாராட்டுகின்றேன். இவர்கள் இயற்றிய இந்நூல் தமிழாராய்ச்சித் துறையில் ஈடுபட்டுள்ள அறிஞர்களாற் பாராட்டப்படுதற்குரியதாகும். இந்நூலிற் காட்டிய முடிபுகளைத் தமிழறிஞர்கள் மேலும் தொடர்ந்து ஆராய்தல் அவசியமாகும்.

"கடல் சூழிலங்கைக் கயவாகு" மன்னனைப் பற்றிச் சிலப்பதிகாரம் கூறிய குறிப்பினைக்கொண்டு, ஈழ நாட்டிற் பேரறிஞராக விளங்கிய கௌரவ. பொன் குமாரசுவாமியவர்கள் அக்காப்பியத்தின் காலத்தை, ஈழநாட்டுச் சரித்திர நூலாகிய மஹாவமிசத்தின் துணைகொண்டு வரையறுத்துத் தமிழாராய்ச்சித் துறையில் ஓர் எல்லைக் கல்லை நாட்டினார்கள். "அடியார்க்கு நல்லார் வரலாற்றாராய்ச்சி" என்ற இப்புதுநூலிற் காட்டப்படும் முடிபுகள் ஏற்றுக் கொள்ளப்படுங் காலத்தில், தமிழ்ச் சரித ஆராய்ச்சியாளர்களுக்கு இந்நூல் ஒரு பெருந்துணையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. பண்டைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நாகரீகத்தைப்பற்றி உணர்த்துவதில் ஒப்பற்ற சிலப்பதிகார வுரை ஈழ நாட்டில் இயற்றப்பட்டதென்பது, ஈழ நாட்டுத் தமிழர்களுக்கு இறும்பூது விளைவிப்பதாகும். ஈழ நாட்டுக்கும், ஏனைய தமிழகப் பகுதிகளுக்கும் உள்ள இன்றியமையாத சரித்திரத் தொடர்பையும் இவ்வாராய்ச்சி நூல் நிலை நாட்டுகின்றது.

பரமேசுவரக் கல்லூரி
யாழ்ப்பாணம்
20—3—44.

சு. நடேசபிள்ளை.

---

யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரித்
தலைமைப் பேராசிரியர்

## வி. வீரசிங்கம் B. A., J. P. அவர்கள்

இந்நூற் கட்டுரைகள் சிலவற்றைக் கையெழுத்துப் படிகளில்
பார்வை இட்டபொழுது உவந்தளித்த

## மதிப்புரை

Mr. P. Jaganathan's method of approach in unravelling the doubtful statements offering a fruitful field for all sorts of controversial opinions deserves high commendation and encouragement.

Hindu College,
Manipay.
*12—12—41.*

**V. Veerasingam.**
*Principal.*

இதன் தமிழ்மொழி பெயர்ப்பு.

ஐயப்பாட்டை உடைய முடிபுகளே எல்லா வகையான மாறுபட்ட அபிப்பிராயங்களையும் வளர்க்குகின்ற ஒரு பண்பட்ட நிலமாக இருக்கின்றன. அவ்வையப்பாட்டை உடைய முடிபுகளிலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் திரு. பொ. செகந்நாதன் எடுத்துக் கொண்ட முறையானது மிகவும் போற்றுதற்கும் ஊக்கப்படுத்துதற்கும் உரியதாக இருக்கின்றது.

இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.
12-12-41.

**(Sd.) வி. வீரசிங்கம்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

அடியார்க்கு நல்லார் வரலாறு ஒருவாறு இப்பொழுது வெளியாகின்றது. முன்னர் இவ்வரலாறு பற்றிய கட்டுரைகள் சில இந்த சாதனம் என்னும் பத்திரிகையில் வெளி வந்தவைகளாகும். ஆயினும் பின்னரும் இவர் தம் வரலாற்றைப்பற்றி அறியவும் ஆராயவும்பட வேண்டிய பல உண்மைகள் நமக்குப் புலனாகி வருவனவாயின. இத்தகைய ஆராய்ச்சிக் குறிப்புகளை இயைபும் தொடர்பும் இடையீடுபட இவ்வாறு மேலும் பத்திரிகையில் வெளியிடுதல் தக்கதாகத் தோன்றவில்லை. ஆகையால் அவற்றை நூல் வடிவாக வெளியிடுதல் வேண்டியதாயிற்று.

இக்கால வரலாற்று ஆராச்சி நூல்களில் சில தமக்கு வேண்டிய நல்லியல்புகளாய காலம், இடம், வரையறவு என்பனவற்றைக் கொண்டதாய்த் தக்க முறை கொண்டு தக்கவாறு விளக்கி எழுதப்பெருமையால் அவை தம்மை வாசிப்போரின் மனம் நியாய அடைவு பெறும்மாறில்லை. அன்றியும் அவ்வரலாற்றில் சொல்லப்படுபவை வாசகர்க்கு உள்ளபடியாக நிகழ்ந்த நிகழ்ச்சியாம் என்னும் உணர்ச்சியைத் தோற்றுவிப்பனவாய் இராமல் ஏதோ நூலாசிரியரின் கருத்தோ கற்பனையோ தான் என்று அவர்கள் எண்ணத் தக்கவிதமாயும் இருக்கின்றன. இவ்வாற்றால் ஆராய்ச்சி நூல்களின் அருமையும் பெருமையும் வேண்டிய அளவு நன்குமதிக்கப்படவில்லை. இவை நிற்க, இவ்வடியார்க்கு நல்லார் வரலாற்றினைப் பற்றியாம் ஆராய்ந்து செல்லும் வழியில், இவ்வரலாற்றில் ஒரு புடை தொடர்பு பட்டுவரும் பண்டை இலங்கைச் சிங்கை நகரைப்பற்றியும் ஆராய்ந்தறிதல் இன்றியமையாததாயிற்று. சிங்கை நகரைப்பற்றிச் சிறந்தவாராய்ச்சிக்காரரால் சிறந்த முறை கொண்டெழுதப்பட்ட நூல்கள் சில இருப்பினும் அவற்றால் முன்னர் ஆராய்ச்சிப்பட்டு முடிந்த முடிபுகள் உண்மையிற்றிறம்பியவைகளாகவே நமக்குத் தோன்றுகின்றன. அவை பின்னர்க் காட்டப்படும்.

இந்நூலின் கண் அடியார்க்கு நல்லார் வரலாறு பற்றி இயன்றவாறு இயன்ற முறைகொண்டு நன்கு விளக்கப்படுகின்றது. ஆராய்ச்சிக்காரர் இதுகாறும் சிவரிலேயோ, சித்திரத்திலேயோ, பழம்பாடலிலேயோ, சிலையிலேயோ, நூற் குறிப்புகளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயோ அறிந்தவற்றை ஆதாரமாகக் கொண்டே பெரும்பாலும் தங்கருத்தை முடிபு செய்து வந்தனர். இந்நூலில் அது ஒரு வழியாகவும் இன்னொரு வழியில் களிறு கொண்டு களிறுயாத் தாற்போல, ஐயமற அறியப்பட்ட உண்மைகளை அறிந்து கொண்டு அவை துணையாக ஏனையறியப்படாத உண்மை கள் கணக்கீடுகளால் விளக்கம் செய்தும் காணப்படுகின்றன. எனவே இந்நூலில் ஒவ்வொரு உண்மைகளும் இருநோக்கில் அறியப்படுகின்றன என்க. இவ்வாறு காண்பதால் உண்மை களைக் கண்டு கொள்ளலாம் என்பதும் கண்ட உண்மைகளும் சரியாகவே இருக்குமென்பதும் நமது எண்ணம்.

புதிய கருத்தும் முடிபும் உடைமையாலும் ஆராய்ச்சிக் காரரேயன்றி எல்லாரும் விளக்கம் கருகாது விளங்க வேண்டு தலானும் ஒரே முடிபுகளை வெவ்வேறு வழிகளாலும் முகங் களாலும் பின்பற்றிச் சொல்லப்பட்ட இடங்களும் உண்டு. அன்றியும் நன்கு விரித்து எழுதப்பட்ட இடங்களும் உண்டு. இத்தகைய வரலாற்று ஆராய்ச்சியை எழுதுவோர் படும் அல்ல லும் அலேச்சலும் அரும்பாடும் சொல்லும் தரத்ததல்ல. அடி யார்க்கு நல்லார் வரலாறு பற்றிய உண்மைகளை அறிவதும், அவற்றைப் பிற ஆராய்ச்சிச் சிக்கலில் இருந்து விடுவித்து எடுத்து விளக்குவதும், இக்காலத்தில் அவற்றை அச்சிட்டு வெளியிடுவதும் கடினமான காரியங்களே. இவற்றுல் யாம் பெற்ற வரலாறுகளும் சோதனைகளும் பல.

இன்னும் அமைதியோடும் ஆராய்வோடும் நோக்கினல் வெவ்வேறு வழிகளாலோ முறைகளாலோ அறிந்தும் சொல்ல லாம். ஆயினும் முடிபுகள் இம்முடிபுகளே. அச்சிடுதல் வசதி நோக்கி இந்நூலை இருபகுதிகளாகப் பிரித்துக் கொள்ள நேர்ந்தது. அவை இரண்டும் ஒரே தொடர்பாக அமைந்த ஒரு நூலே.

இனி, இவ்வரலாறு நூலாகும் வழியில் உதவி செய்த உப காரிகளும் பெரியாரும் பலர். டாக்டர் உயர் திருவாளர். S. சுப்பிர மணியம் J. P. அவர்கள் இந்நாலிற்கு ஒருவகையில் உபகாரி யாவர். உயர் திருவாளர் சு. நடேசபிள்ளை B. A. B. L. M. S. C. அவர்கள் ஒருவகையிலும் திருவாளர் J. V. செல்லையா M. A. J. P. அவர்கள் இன்னொரு வகையிலும் சிறந்த உதவிகளைப் புரிந்தவர்க ளாவர். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வழக்கறிஞர் திருவாளர் வே, நாகலிங்கம் அவர்கள் காட்டிய அன்பு சாலவும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் திரு. க. சின்னையா அவர்களும் கொழும்பிலே சில உதவிகளைச் செய்த திரு. M. துரைசிங்கம் அவர்களும் நமது அன்புக்குரியவர்களே. இனி இந்நூலின் முற்பிற் பகுதிகளை முறையே அச்சிட்டுத் தந்த அச்சகங்களின் சொந்தக்காரரான திருவாளர் K. பழனியப்பன் அவர்கள் ; திருவாளர் இ. மா. கோபால கிருஷ்ணக்கோனார் அவர்களும் நமது நன்றிக்குரியவர்களே. இக்கட்டுரைகளை யாம் எழுதிவரும் காலத்தில் நட்பாம் பெருங் கிழமையினாலே அவற்றுள் இரண்டொன்றைப் பார்வை இட நேர்ந்த பொழுது அதிக உவகையோடு "அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சிக் கட்டுரையின் சில பகுதிகளைப் பார்த்தேன். நான் பார்த்த பகுதிகள் ஆசிரியர் எடுத்துக்கொண்ட பொருளை வலியுறுத்துச் செல்வனவாயிருக்கின்றன. இக் கட்டுரை முழுதும் வெளிவரின் யாவரும் அடியார்க்கு நல்லாரின் வரலாறு முழுவதையும் திட்பமாக அறியக்கூடியராவார் என்பது எனது துணிபு. ஆசிரியர் இதை எழுதுமிடத்து இயைபு நோக்கி, சிங்கை நகர் யாண்டிருந்தது அக்காலக் கல்வி நிலை எத்தன்மைத்து என்பனவற்றைத் தக்க ஆராய்ச்சியுடன் அறுதியிட்டுக்கூறத் துணிந்து முன்னுள்ள ஆராய்ச்சியாசிரியர் கொள்கைகளை எடுத்து மறுத்துத் தங்கொள்கைகளை நிலை நிறுத்திய முறை போற்றத்தக்கது." என இதன் கட்டுரைக் காலத்தில் இதற்கொரு அணிந்துரைதந்த பண்டிதர் திருவாளர். சு. இராம சுவாமி அவர்களும் இவ்வாறு இன்னொரு வகையில் உதவி புரிந்த திருவாளர் வி. வீரசிங்கம் B. A. J. P. அவர்களும் நமது அன்புக்குரியவர்களே.

இதன் கண்ணுள்ள அச்சுப் பிழைகளைத் திருத்தி வாசித்துக் கொள்க. அவற்றை யாம் அடுத்த பதிப்பில் திருத்திக்கொள்வோம். அமைச்சரே உரையாசிரியர் என்பதற்கு விளக்கங்கள் பல கூறப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் வகையில் அமைந்தவை. அவ்வுண்மையை அறிதற்கு அவற்றுள் பலவே போதுமானவை. ஆயினும் அவ்வையங்கள் நீங்குதற்கு அவை அனைத்தும் நன்கு அறிய வேண்டியவைகளே. இந்நூலில் நன்கு பயில்வார் இந்நூலாராய்ச்சியால் புதிதாய் அறியப்பட்ட உண்மைகள் அனைத்தையும் தாமே நன்கு அறிந்து கொள்வார்கள்.

சரசுவதி உயர்நிலைப்பள்ளி
வேலணை,
17--3--44

இங்ஙனம்
பொ. செ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி


**முதலாவது பகுதி** — பக்கம்

அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி முகவுரை

1. கொங்கு மண்டல சதகம். ... 1
2. மண்டல சதகங்களும் அவை பாடுதன்மரபும் ... 9
3. கொங் மண்டல வரலாற்று உண்மைகளும் அவற்றைச் சதகாசிரியர் கூறுமாறும் ... 16
4. கொங்குமண்டல சதகமும் சிலப்பதிகார உரைச்சிறப்புப் பாயிரமும். ... 28
5. அகச்சான்றும் புறச்சான்றும் ... 44
6. சதகச் செய்யுளின் கருத்து ... 51
7. நிரம்பையர். ... 57
8. நிரம்பையர் காவலன் ... 61
9. காவலன் ... 64
10. உரைச் சிறப்புப்பாயிரம் நிரம்பையில் பாடப் பெறவில்லை. ... 68
11. அடியார்க்கு நல்லார் பிற்காலத்தில் நிரம்பையில் வாழவில்லை. ... 71
12. அடியார்க்கு நல்லார் பிற்காலத்தில் கொங்கு மண்டலத்தில் வாழவில்லை ... 72
13. கொங்கு மண்டலத்தில் உரை இயற்றப்பெறவில்லை ... 73
14. பொப்பண்ணகாங்கேயர்கோன் கொங்கு மண்டலத்தில் வாழவில்லை. ... 77
15. உரையை இயற்றுவித்த பொப்பண்ண காங்கேயர் கோன் வரலாறு ... 77
16. அடியார்க்கு நல்லாரும் சிங்கை நகர் வரலாறும். ... 80
17. உரை இயற்ற நேர்ந்த சந்தர்ப்பம். ... 91

**இரண்டாவது பகுதி**

18. உரைச் சிறப்புப்பாயிரத்திலும் சிங்கை நகர் வரலாற்றிலும் உள்ள ஒரே உண்மைகள் ... 1
19. அமைச்சரே உரையாசிரியர். ... 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. உரைச் சிறப்புப்பாயிரம் பாடப்பட்ட
இடம் இலங்கைச் சிங்கை நகரம். ... 31
21. காருந்தருவு மனையான். ... 38
22. உரையின் வரலாறு ... 40
23. உரை தோன்றிய இடம் இலங்கைச் சிங்கை நகரம். ... 51
24. உரைச்சிறப்புப் பாயிரம் பாடினோர் சிங்கை நகரத்து
ஒருவரே ... 54
25. சிங்கை நகர் வரலாறும் கொங்குமண்டல சதகமும் ... 55
26. அடியார்க்கு நல்லார் ஒருவரே ... 56
27. அடியார்க்கு நல்லார் காலம் ... 58
28. சதகச் செய்யுளின் சரியான முடிபு 'அவதரித்த'
என்பதே ... 64
29. அடியார்க்கு நல்லார் வரலாறு, மறைவும் மாற்றமும்
பெற்ற காரணங்கள். ... 66
30. பிறர் கருத்துக்கள், முடிபுகள் ... 75
31. நான் முடிபும் குறிப்பும். ... 88
இந்நூலாராய்ச்சியால் புதிதாய் அறியப்பட்ட
உண்மைகள். ... 90

## படங்கள்

முதலாம் பகுதி

I. க. வட இலங்கையும் தென் இந்தியாவும் கி. பி. 12-ம் 16-ம்
நூற்றுண்டு ... 83
உ. கி. பி. பதினுன்காம் நூற்றுண்டில் அடியார்க்கு நல்லாரின்
சிங்கைநகர்த் தொடர்புகள் ... 83

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# அடியார்க்கு நல்லார்

## வரலாற்று ஆராய்ச்சி

செந்தமிழ் மொழியின்கண் அமைந்துள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருகச் சிறந்துவிளங்கும் சிலப்பதிகாரம் என்னும் அரியதொரு காப்பியத்திற்கு, உரை வரைந்து விருந்துசெய்த முத்தமிழ் வித்தகராய், சிறந்த உரையாசிரியருள் ஒருவராய் விளங்கும் ஆசிரியர் அடியார்க்கு நல்லார் வரலாறு, சரித்திர மறைவு என்னும் தடப்பெருங் கடற்சுழியில் தட்டுப்பட்டுத் தமிழகத்தில் இருந்தும் மறைந்துவிட்டது. அடியார்க்கு நல்லார் வரலாற்றை ஆராயப் புகுந்த டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களும் "இவருடைய வருணம், காலம், சமயம் யாதும் புலப்படவில்லை" என்று கூறி இட்டார்கள். ஆயினும் அம்மறைவுகளை ஒருவாறு புறங்கண்டு எமது சிறிய அறிவு ஆராய்ச்சி எல்லைக்குள் வைத்து அவ்வரலாற்று உண்மைகளைத் தெளிவாக நிச்சயித்து, வெளியாக்க முடியுமென்று யாம் எண்ணுகின்றேம். அவற்றை மேலே சென்றறிவாம்.

### 1. கொங்குமண்டல சதகம்

சிலப்பதிகாரத்துக்குரை செய்த இவ்வாசிரியர் அடியார்க்கு நல்லார் வரலாற்றைப்பற்றிக் கூறுவதாக ஐயமின்றி இப்பொழுது எல்லாராலுங் கொள்ளப்படுபவற்றுள் இக்கொங்குமண்டல சதகம் என்பது சிறந்த ஒன்ருகும். இக்கொங்குமண்டல சதகப் பாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தே முதலில் இவர்தம் வரலாற்றை ஆராய்ந்து செல்லின், எல்லோர்க்கும் ஏற்புடையதும் ஒன்றாகும். இக் கொங்குமண்டல சதகம் என்பது, இந்தியாவில் உள்ள நமது தமிழ்த் தாயகமான நிலப்பகுதிகளில் பண்டை நாட்களில் அரசாண்ட தமிழ் மூவேந்தருள் ஒரு பகுதியினரான சேரரால் ஆளப்பட்ட கொங்குமண்டல வரலாற்றை அறிதற்குக் கருவியாய் உள்ளது. அதாவது தொண்டைமண்டல சதகம், சோழமண்டல சதகம், பாண்டி மண்டல சதகங்களைப்போல நூறு கட்டளைக்கலித்துறைச் செய்யுட்களால் கொங்குமண்டலச் சிறப்பை உணர்த்துவது. இம்மண்டலத்து விஜயமங்கலம் என்னும் ஊரில் இருந்த சைன வித்துவான் ஒருவராற் பாடப்பட்டது. இச்சதகத்திலே அகத்தியர், கம்பர், கொங்கணச்சித்தர், இடைஞானி, பவணந்திமுனிவர், சிவப்பிரகாசர், வேதாந்த தேசிகர், இளங்கோவடிகள், காழிப்புலவன், அடியார்க்கு நல்லார், பொய்யாமொழிப்புலவர், கொங்குவேளிர் முதலிய புலவர்களும்; குமணன், ஓரி, அதிகமான், வையாவிக் கோப்பெரும்பேகன் முதலிய வள்ளல்களும் பாடப்பட்டிருக்கின்றனர். அன்றியும் இது, "இம்மண்டலத்துப் பண்டைக்கால நிலப்பரப்பு, தெய்விக விளக்கம், சித்தர், சமயாசாரியர், முடியுடை மூவேந்தர், குறுநில மன்னர் ............ மற்றும் மாந்தர்களின் நீதி, வீரம், கொடை, பிற ஆண்பாலார், பெண்பாலார், கல்வி, கற்பு,நட்பு என்றின்னவும் பிறவுமான விடயங்களைக் கூறுகின்றது. "இக் கொங்கு நாட்டில் சைனரில் பல கவிகள் தோன்றி இருக்கின்றனர். அவர்களில் முற்காலத்தில் கொங்குவேண்மாக்கதை எழுதிய கொங்குவேளிரும், பிற்காலத்தில் கொங்குமண்டல சதகம் எழுதிய கார்மேகக்கவிஞரும் மேலோர்" † இதுவரை அடியார்க்கு நல்லாரைப்பற்றிப் பாடிய கொங்கு மண்டல சதகத்தையும் அச்சதகத்தாற் பாடப்படுதற்கிடனாய் இருந்த கொங்கு மண்டலத்தையும் பற்றிப் பொதுவாகக் கூறினும். இனி மேலே செல்வாம்.

---

† கொங்குநாட் ச. சரு. பக். 1—4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்க்கு நல்லாரைப்பாடிய கோங்குமண்டல சதகச் செய்யுள்.

இச்சதகத்தில் இவரைப் பாடிய பாட்டாவது:-

"குருவையு ணர்ந்த விளங் கோவடிகளுட் கொண்டு சொன்ன
தருவை நிகரும் சிலப்பதிகாரத் தனித் தமிழுக்
கருமை யுரை செய் யடியார்க்கு நல்லார் அவதரித்து
வருமைப் பொழில் நிரம்பைப்பதியுங் கொங்குமண்டலமே"
[கொ. ம. ச. பா. 95]

என்பது. இச்சதகத்துக்கேயன்றி இம்மண்டல சதகப்பாக்கள் எல்லாவற்றுக்கும் அவற்றோடு கருத்துரையும், வரலாற்றுக் குறிப்பும், மேற்கோளும் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் மேலே அடியார்க்கு நல்லாரைப்பற்றிப் பாடிய அப்பாட்டின்கீழ் அதன் கருத்துரையாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

"சற்குரு நிலையை நன்குணர்ந்து துறந்த இளங்கோவடிகள் சாத்தனுரற் கேள்வியுற்ற கதையைக் கருத்திற்கொண்டு, விரும்பிக் கேட்டவற்றைத் தரும் தருவைப் போல எல்லாப்பொருளையும் தன்னுள் அடக்கியுள்ள சிலப்பதிகாரம் என்னும் ஒப்பற்ற முத்தமிழ் நூலுக்கு, அருமையான உரைகண்டருளிய அடியார்க்கு நல்லார் அவதரித்துவந்த நிரம்பை என்னும் நகரமும் கொங்குமண்டலம் என்பதாம்." என்பது.

இக்கருத்துரையின் கீழ்உள்ள வரலாற்றுக் குறிப்பாவது:—

"இவர் கொங்குமண்டலத்துள்ள நிரம்பை என்னும் நகரில் உதித்தவர் என்றும், போப்பண்ணகாங்கேயன் என்னுங் கொடையாளியின் ஆதரிப்பில் வாழ்ந்தவர் என்றும், சிலப்பதிகார உரைச் சிறப்புப் பாயிரச் செய்யுட்களால் விளங்குகின்றது. நிரம்பை என்பது குறும்புநாட்டூர்த் தொகைச் செய்யுளில் காணப்படுவது. அவ்வூர் விஜயமங்கலத்துக் கணித்தாக இருத்தல்வேண்டும் என்பது" இச் சதகப்பாட்டுக்கு இச்சதகத்தைப்பாடிய இவ்வாசிரியரால் எடுத்துக் காட்டப்பட்ட மேற்கோள் பாட்டுக்களாவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஒருந் தமிழொரு மூன்று முலகின்புற வகுத்துச்
சேரன் தெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்த பொருள்
ஆருந் தெரிய விரிந்துரைத் தானடி யார்க்கு நல்லான்
காருந் தருவு மனையான் நிரம்பையர் காவலனே.

2. காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்துக் கடிய பெருங்
காற்றைக் குரம்பை செய் வார்செய்கை போலுமக்
[காலமெனுங்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர்
[கோனளித்த
சோற்றுப் பெருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்
வித்ததே" என்பது.

இங்கே காட்டப்பட்ட இவை இரண்டும் சிலப்பதிகார உரைச்சிறப்புப் பாயிரப்பாக்கள். [சிலப்பதிகாரத்திலே சாமிநாதையர் அவர்கள் போலுமக்காலம் என்பதைப் போலு மற்காலம்' எனவும், "சோற்றுப் பெருக்கல்லவோ என்பதைச் சோற்றுச் செருக்கல்லவோ" எனவும் பதித்து இருக்கின்றார்கள். அவையே பொருத்தமானவை என எமக்குத் தோற்றுகின்றன. அவ்வாறே அவ்வுரைப் பிரதிகளில் அவை வெளிவந்தனபோலும். இப்பாயிரப்பாக்களில் வரும் அவ்விடங்களை இவ்வாறு திருத்திய வடிவமாகவே வைத்து இவ்வாராய்ச்சியில் மேற்கொள்ளுகின்றோம்.] இச்சதகப் பாட்டில் கூறப்பட்ட அடியார்க்கு நல்லார் தம் வரலாற்றுக் குறிப்பானது, அப்பாட்டைத் தொடர்ந்துவந்த சதகக் கருத்துரை, மேற்கோள், அவற்றை விளக்கி எழுதப்பட்ட வரலாற்றுக் குறிப்பு என்பனவற்றுள்ளும் செறிந்திருத்தலின் அவை தம்மையும் சிந்தித்தே அப்பால் செல்லவேண்டியதாயிற்று. அன்றியும் பின்னர் அவ்வவற்றால் கூறப்பட்ட உண்மைகளை வரைவாய் அறிந்த அறிவு, இவ்வாராய்ச்சியை விளங்குதற்குத் தேவைப்படுகின்றது. எனவே அவற்றை முன்னர் அறிந்து செல்வாம்.

இந்நூன்முக வுரையில் பதிப்பாசிரியர் சதகக் கருத்துரையையும் வரலாற்றுக் குறிப்புக்களையும் தாமே எழுதியதாகக் குறிப்பிடலால், இம்மேற்கோள்பாட்டுக்கள் இரண்டும் சதக ஆசிரியரான கார்மேகக் கவிஞர் என்பவரால், அவர் தாம் பாடிய சதகமூலப்பாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்களின் உண்மையை விளக்குவதற்கண் அவற்றுக் காதாரமாக அம்மூலப் பாட்டுக்களோடு முன்னரே எடுத்துக்காட்டப்பட்டவைகள்தான் என்பதை நன்கு அறிந்துகொள்ளவேண்டும். அற்றன்று சதக ஆசிரியர் சதகப் பாட்டுக்கள் மட்டுமே பாடித் தம் நூலே அமைத்தார். பிறவாறுக ஆராய்ந்து பதிப்பாசிரியராலேயே அம்மேற்கோள் பாட்டுக்கள் இரண்டும் [அன்றி இச்சதகப் பாக்களுக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டப்பட்ட மேற்கோள்பாட்டுக்கள் அனைத்தும்] சேர்க்கப்பட்டதென்னலாகாதோ எனின் ஆகாது.

தொண்டைமண்டல சதகம் முதலிய பழம் சதக நூல்களிலே அச்சதகப் பாக்களேயன்றி அவற்றுக் காதாரமாகத்தான் கண்டு பாட எடுத்துக்கொண்ட அவ்வவ் மேற்கோள் பகுதிகளை அவ்வாசிரியன்மாரே சேர்த்து இருக்கின்றனர் என்பதை அவ்வச் சதக நூல்களிலே காண்க. அன்றியும் அச்சதக ஆசிரியன்மாரே அவ்வாறு தங்கூற்றுக்கேற்ற மேற்கோள்களைத் தாமே காட்டவேண்டுதல் முறையாகலானும் அவர்களே அம்மேற் கோள்பாக்களைக் காட்டினுர் என்பதும் நிச்சயமே.

அன்றியும் இக்கொங்குமண்டல சதகத்திலே அவை அடக்கச் செய்யுளுக்கும் மேற்கோள், காப்புச் செய்யுளுக்கும் மேற்கோள், ஆக்கியோன் என்பதற்கும் மேற்கோளாக அம்மேற்கோள்பாக்கள் சேர்க்கப்பட்டிருத்தலின் அவை அனைத்தும் அந்நூலாசிரியராலே தான் சேர்த்துக்கொள்ளப்பட்டனவாம் என்றும் நன்கு தோன்றுகின்றன. நூலாசிரியராய கார்மேகக் கவிஞர் செய்த சதகப் பாக்களையும், அவற்றுக் காதாரமாக அவரால் காட்டப்பட்ட மேற்கோள் பாட்டுக்களையும் கண்டு, அச்சதகத்துக்குக் கருத்துறையையும் செய்து, அம் மேற்கோள் பாக்களையும் அம்மேற்கோள் பாக்களால் குறிப்பிடப்படும் வரலாறுகளையும் திரட்டி இப்பதிப்பாசிரியரால் இந்நூல் பதிக்கப்பட்டனவென்றுதான் நமக்குத் தோன்றுகின்றன. ஆயின் இதில் சரித்திர முக்கியம் ஒன்றுமில்லை. இதில் எவர்காட்டினுலுமென் இம்மேற்கோள் பாக்களில் கூறப்படும் உண்மைகளை நியதமாக பதிப்பாசிரியரினும் பற்பல நூற்றுண்டுகளுக்குமுற்பட வாழ்ந்தவரான இந்நூல் ஆசிரியரான கார்மேகக் கவிஞர் அறிந்திருந்தார் என்பதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகவே கூறினும். அன்றியும் இந்நூலாசிரியர், இம்மேற்கோள் பாக்களில் கூறப்பட்ட உண்மைகளையேயன்றி இன்னும் அதிகமாக அவ்வுண்மைகளை இம்மேற்கோள் பாக்களாலேயன்றிப் பிற வழிகளாலும் அறிந்திருந்தார் என்பதற் கையமே இல்லை. இச்சதகப் பதிப்பாசிரியராய முத்துச்சாமிக் கோனார் இந்நூல் 11ம்–13ம் பக்கங்களில் நூலாசிரியர் வரலாறு என்பதன்கீழ் "இவர் (கார்மேகக் கவிஞர்) சேது சமஸ்தானத்தைச் சேர்ந்த அனுமந்தக்குடிக்குச் சென்று, ஆருகத சமயநூல் முறையே கற்றுப் பின்பு பாண்டிநாடு, சோழநாடு, தொண்டை நாடுகளில் சைவம் முதலிய மற்றைக் கருவி நூல்களும் செவ்வனே அறிந்தும் பிறர்க்கு எடுத்துரைத்தும் வந்தார்; அங்குள்ள சமஸ்தானங்களில் பிரசங்கமாரியும் பொழிந்தார். இடைவிடாது பெரு முழக்காகச் சொரியும் சொன்மாரி கவிமாரிகளை நோக்கிய செந்தமிழ்வல்லார் இவரைக் கார்மேகம் என்றழைத்தனர்; அதனால் இவர்க்குக் கார்மேகக் கவிஞர் என்பது பெயராயிற்று. இளமைக்காலத்தே கவி சொல்லல், பொருள்கூறல், பிரசங்கித்தல் என்பனவற்றால் வன்மை வாய்ந்து, நாற்றிசையும் உள்ள கல்விமான்களைக்கண்டு பழகி, விஜயமங்கலம் வந்து சேர்ந்தனர். ........... நாம் தோற்றிய இக்கொங்குமண்டலத்து எற்ற மிகத்தோற்ற ஒரு சிறுநூல் சாற்றவேண்டும் என்றெண்ணினார். சங்கநூல்களிலும் இதிகாசங்களிலும் காணப்படுபவைகளைக் குறித்துக்கொண்டார். ஒவ்வொரு நாடுகளுக்கும் சென்றார். அங்குள்ள சமஸ்தானங்களைக் கண்டும், செந்தமிழ்ப் புலவர்களையும் தலவாசிகளையும், சந்தித்து அளவளாவியும், பழம் சரிதங்களை வினவி அறிந்தனர் ........... இவ்வாறு கொங்கு மண்டலமெல்லாம் சுற்றிப்பார்த்து நுணுகி ஆராய்ந்து அறிந்த சரித்திரங்களைத் திரட்டிக் கோங்கு மண்டல சதகமென இந்நூல் இயற்றினர். இதன் உட்பொருளை ஆராய்ந்தோர் கொண்டாடினர் என்பர்" என்பதாலும், இவ்வாசிரியரும் தமது அவை அடக்கச்செய்யுளில் "மடவார் சிறுவர்போற் கொங்குவளமும் சீருமோராதேன் திடமாய் வினவி நோக்கியிசை தெளிவோர்முன் இம்மண்டலத்தின் அடைவாங் கதைகள் பொதிசதகமாக்கில் அறிஞர் இகழாரே" என்பதாலும் இவர் தம் சதகப் பாக்களில் கூறியவற்றை அம்மேற்கோள் பாக்களாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்றி, கதைகளாலும், மற்று கர்ண பரம்பரைக் கதைகளாலும் பழம் சரித்திரங்களாலும் அறிந்திருந்தனர் என்பது தெற்றெனத் தோற்றமாகிறது. அன்றியும்

"திருத்நகுசரிதமாய்ந்து தேர்பவர் தமக்குச் சற்றும்
வருத்தமில்லாதுகொங்கு மண்டல சதகம் சொன்னான்."

எனப் பிறரும் கூறினமைகொண்டும் இவ்வுண்மை உணரப்படும். எனவே! இச்சதக ஆசிரியர் அடியார்க்கு நல்லாரைப்பற்றிக் கூறும் அச்சதகப்பாட்டைப்பாடி அப்பாட்டிற் கூறப்பட்ட உண்மைகளுக் காதாரமான அச்சிலப்பதிகார உரைச்சிறப்புப் பாயிரப்பாக்களைத் தாமே காட்டினார் என்றும், அடியார்க்கு நல்லாரை அம்மேற்கோள் பாக்களாலன்றியும், கதைகள் கர்ணபரம்பரைக்கதைகள் பிறசரித் திரங்கள் என்பனவற்றுள் யாவற்றினாலேனும் அன்றிச் சில பலவற் றினாலேனும் அறிந்திருந்தனர் என்றும் அறிந்துகொள்க.

அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சியின்கண் சிறந்துநிற்பன இவரைப்பற்றிக் கூறும்கொங்குமண்டல சதகப்பாட்டொன்றோடு, ஏனைச்சிலப்பதிகார உரைச்சிறப்புப் பாயிரப்பாட்டுக்கள் மூன்றுமே. பாயிரப்பாக்கள் ஐயம் தீர்ந்து அவர் உரை வரலாற்றையே மட்டும் குறிப்பதென்று கொள்ளப்படுவன. இவைகள் ஆசிரியர் அடி யார்க்கு நல்லாரைப்பற்றிப் புலமையும் வரலாறும் தெரிந்தோரால் முற்றிலும் அறிந்தே பாடப்பட்டன. ஆனால் அச்சிலப்பதிகார உரைச்சிறப்புப் பாயிரப்பாக்களிலோ அப்பாயிரம் எவ்விடத்தில் இயற்றப்பட்டதென்றேனும் அவ்வுரை எவ்விடத்தில் செய்யப்பட்ட தென்றேனும் வெளிப்படையில் கூறப்படவில்லை. அடியார்க்கு நல்லார் எவ்விடத்தில் எச்சந்தர்ப்பத்தில் உரை இயற்றினாரோ அவ்விடத்தில் அச்சந்தர்ப்பத்தைச் சார்ந்து அவர்மேல் பாடப்பட்ட தென்பது மட்டும் நிச்சயம். கொங்குமண்டல சதகமோ கொங்கு மண்டலத்தில் உள்ள புலவர் ஒருவரால் பாடப்பட்டதென்பதும் நிச்சயம். ஆயின் அக்கொங்குமண்டல சதகப்பாட்டோ அடி யார்க்கு நல்லாரைக் கொங்குமண்டலத்தோடு சேர்த்துக் கூறுவதாய் அவர் வரலாறு முழுமைக்கும் பொதுமையில் நின்று அது இந்தியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டின் பகுதியான கொங்குமண்டலத்துக் குரியதென்று கருத இடம் வைத்துக்கொண்டிருப்பது. அதன் உண்மை எவ்வளவு அது எவ்வாறு அமைந்திருக்கின்றது என்பதை அப்பாட்டாராய்ச்சியால் வெளிப்படுத்துவாம்.

பாயிரம்பாடி வெளிவந்த பல நூற்றாண்டுகளின் பின்னரும், சதகம் வெளிவந்து சில நூற்றாண்டுகளின் பின்னரும் அவ்விரண்டினையும் பின்பற்றி ஓர் ஆராய்ச்சிக் குறிப்பாகத் தமிழ் நாட்டுக்கு வெளியிட்டவர் மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் ஆவர். அவர்கள் சிலப்பதிகார முகவுரையிலும் அப்பால் பெருங்கதை என்னும் நூலில் நூலாசிரியர் வரலாற்றிலும் இவ்வடியார்க்கு நல்லாரைப்பற்றிச் சில குறிப்புக்களைமட்டும் கூறி, "அப்பால் ஒன்றும் புலப்படவில்லை" என்றுங் கூறி இருக்கின்றார்கள். ஐயரவர்கள் அவ்விரண்டிடங்களிலும் சதகம், பாயிரம் என்னும் இவ்விரண்டனையுமே மேற்கொண்டு அவற்றின் வழியால் தெளிவாய்ப் புலப்படுபவைகளையுங் குறிப்பிட்டுத் தனது ஊகிப்பையுங் கூறி இருக்கின்றார்கள். இவை இரண்டனையும்விட வேறு சான்றுக்களை அவர்கள் எடுத்துக்காட்டவில்லை. இவை இரண்டும் எல்லோராலும் மறுக்கமுடியாதன. இவற்றின் உண்மையான முடிபுகளைக் காண்டலே இவ்வாராய்ச்சியின் முடிபுமாகும். ஐயரவர்கள் கூறியவைகளை அடியார்க்கு நல்லாரைப்பற்றிப் பிறர் கருத்துக்கள் என்பதன் கீழ்க்காட்டுவாம்.

இச்சதகத்திலே அடியார்க்கு நல்லாரைப்பற்றிப் பாடிய அச்சதகப்பாட்டு அவர் வரலாற்றை அறிதற்கு ஒரு வழிகாட்டியாக அமைந்திருக்கின்றது. ஆயினும் அப்பாட்டைக் கதைகள் முதலியவற்றைக் குறித்து எழும் கவித்துவம் வாய்ந்த இலக்கியப் பாட்டாக மட்டும் எண்ணி நேரே பொருள்செய்து முடிபை அறிந்துகொள்ளல் கூடாது. அதன் முன்னர் மண்டல சதகப்பாக்களின் சிறப்பியல்புகளையும் அப்பாட்டுக்களின் போக்குகள் என்பனவற்றைப் பற்றியும் அறிந்துகொள்ளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மண்டல சதகங்களும் அவை பாடுதன் மரபும்.

அடியார்க்கு நல்லாரைப்பற்றிக்கூறும் சதகச் செய்யுளை அறிந்தபின்னரும், அதிற் கூறப்பட்ட பொருளை அறிவதன் முன்னரும், அப்பாட்டின் உண்மைப்பொருளை மிகாதும், குறையாதும், விலகாதும் வரைவாக அறிந்துகொள்வதற்காக மண்டல சதகங்கள் பாடப்படும் மாபு யாது? அப்பாட்டுக்கள் எத்தகையன ? அவை எவ்வாறு வரலாற்றுப்பொருள்களை உணர்த்துகின்றன; என்னும் இவைகளை ஆராய்ந்து அறிதல் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. இன்றேல் அலைகடலில் இருந்து நீர் ஓடும் துலைவழி தெரியாமைபோல, அடியார்க்கு நல்லார் வரலாறு இச்சதகத்திலிருந்தும் எவ்வாறு போகின்றது என்பதும் தெரியாதுவிடும்.

வரலாற்று வசனநூல்கள் வெளிவராப் பண்டைக்காலத்திலே ஒரு நாட்டில் நிகழ்ந்த உள்ளபடியான நிகழ்ச்சிகளையோ அந்நாட்டில் வாழ்ந்த புலவர் முதலியோரையோ சதகக்காரர் பாட நேர்ந்தவிடத்து அவர்களையும், அவர் தம்மைத் தொடர்ந்தறியப்படும் பல குறிப்புக்களையும், அவ்வச் சந்தர்ப்பங்களையும் விலக்காது அவரை அவ்வூரோடும்— அன்றி நாட்டோடும் அந்நாட்டையோ ஊரையோ மண்டலத்தோடுமாய்ச் சேர்த்துத் தொடர்புபடுத்திப் பாடுவதுதான் மரபு. மிகத் தொன்மைக்காலந்தொட்டுத் தமிழக எல்லைக்குள்ளே வழங்கற் பாடுபெற்று வரும் பண்டைத் தொண்டைமண்டல சதகம் முதலாக எல்லாச் சதக நூல்களும் இவ்வாறே உரைத்து வருகின்றன. அன்றியும் இக்காலத்தைப்போல பண்டைக்காலத்திலும் ஒரு தமிழ்நாட்டிலுள்ள புலவர் எக்காரணத்தை முன்னிட்டேனும் இன்னொரு தமிழ்நாட்டிற் சென்று வாழ்தலும், அன்றியும் அவ்வின்னொரு நாட்டாரும் தமக்குப் பிற நாட்டிற் சென்று நூலோ உரையோ இயற்றி வாழ்தலும் இயற்கையாக நிகழ்ந்துவந்த உண்மை நிகழ்ச்சிகளாமன்றே. அன்றேல் ஒரு மண்டலச் சதகத்திலே நூறு சதகப்பாக்களாக; அப்பாக்கள் அனைத்தானும் பாடப்படும் புலவர்கள் எல்லாரும் அம்மண்டலத்திலே தான் பிறந்து, பின் நூலோ உரையோ இயற்றி வாழ்ந்து அம்மண்டலத்திலேதான் மறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் என்பது எவ்வாறு பொருந்தும்? அன்றியும் அவ்வொரு மண்டலத்திலே நூலோ உரையோ செய்தவர், எல்லாரும் பிறப்பு முதலிய எவ்வாற்றானும் அம்மண்டலத்திற்குரியவர் என்பதும் எவ்வாறு பொருந்தும்? அவ்வாறே பிறப்பு முதலியவாற்றான் ஒரு மண்டலத்திற்கு தொடர்புடையவர்கள்; எக்காரணத்தை முன்னிட்டோ இன்னொரு நாட்டில் வாழ்ந்ததான குறிப்புக்கள், செய்திகள், சதகங்களாலேயன்றி வரலாற்று நூல்களாலும் அறியப்படுகின்றன. இவ்வாறு பிறத்தல், வாழ்தல் நூலோ உரையோ இயற்றல், தனிப்பாடல் செய்தல் என்பனவாக ஒரு மண்டலத்திற்கு ஒரு புலவரின் உரிமையாம் தொடர்பு எவை எவை உண்டோ அவற்றைச் சரிவரத் தெரிந்து அவ்வவற்றை அவ்வம்மண்டலங்களோடு சேர்த்துப் பாடுவதுதான் மண்டல சதகங்கள் பாடுதன் மரபு என நன்கு அறிந்துகொள்ளல் வேண்டும். அதற்காகவே சதகக்காரர் சில புலவரின் வாழ்வை அம்மண்டலத்தோடு தொடர்புபடுத்திப் பாடுதலும், நூலோ உரையோ சொன்னவற்றைமட்டும் தொடர்புபடுத்திப் பாடுதலும், அன்றியும் சில புலவர்களை அவதரித்த ஒன்றை மட்டும் தொடர்புபடுத்திப் பாடுதலுமாம் என்க. இது எல்லாச் சதகத்தாரும் கைக்கொண்டு பின்பற்றிவரும் மரபின் வழியதாம் என்க. அன்றியும் உண்மைக்கியையவும் அவ்வாறுதானே இருத்தல் வேண்டும். இவ்வாறே இக்கொங்குமண்டல சதகத்தில் இச் சதக ஆசிரியர், சிலரை வாழ்ந்ததும் கொங்குமண்டலமே என்றாற்போல் கூறுவதும், சிலரைச் சொன்னதுங் கொங்குமண்டலமே என்றாற்போல் கூறுவதும் சிலரை அவதரித்ததுங் கொங்குமண்டலமே என்றாற்போலக் கூறுவதும், சிலரைத் தனிப்பாடலைமட்டும் பாடியதாகக் குறிப்பிடுவதும் என்க.

இக் கொங்குமண்டல சதகத்திலே பாடப்பட்ட அடியார்க்கு நல்லார் வரலாற்றைப்பற்றிய இச் சதகப்பாட்டு, அவர் வரலாற்றுக்கு ஒரு தக்க சான்றாக முன்னிற்றலின் இச் சதக ஆசிரியர் உண்மையில் இப்பாட்டை இம் மண்டலத்தோடு எவ்வாறு தொடர்பு பட்டதாகக் கருதிப்பாடினார் என்பதை நன்கு அறிதல் வேண்டும். அவ்வாறு அறிதல் எங்ஙனம்? இக் கொங்குமண்டல சதகத்தைப் பாடி இட்ட இக் கார்மேகக் கவிஞர் என்பவர், தாம் பாடி இட்ட இக் கொங்குமண்

2

டலச் சதகத்திலே இவ்வடியார்க்கு நல்லார் ஒருவரைப்பற்றி மட்டும் பாடினாரல்லர். சதகப்பாக்கள் நூறாகவின் இவ்வடியார்க்கு நல்லாரை ஒரு பாட்டாற் பாடி, ஏனைய பாட்டுக்களால் ஏனைய புலவர் முதலியோரையும், அவரது பிற சந்தர்ப்பங்களையும், இன்னும் பிற குறிப்புக்களையும் குறித்துப் பாடியிருக்கின்றனர். அன்றியும் இவர் இவ்வாறு மரபு, யாப்பு, விதிகளை அறிந்து இவரின் முற்பட்டதான தொண்டை மண்டல சதகம் முதலிய சதகப்பாக்களின் போக்கைப் பின்பற்றியே தம் சதகத்தைப்பாடி இட்டார் என்க. எனவே! அடியார்க்கு நல்லாரைப்பற்றி இக் கொங்கு மண்டல சதகக்காரர் கூறிய கருத்தை அறிதற்கு அச்சதகத்து ஏனைய பாட்டுக்களும், சதகத்து மரபு பற்றிய விதிகளும், ஏனைய தொண்டை மண்டல முதலிய சதகங்களும் சான்றாக வருகின்றன. எனவே ஏனைய மண்டல சதகச் செய்யுள்களும் அவற்றின் மரபுகளும் ஒரு பிரமாணமாம் என்பதும், அப் பிரமாணமாவதும் ஈண்டு இச்சதக ஆசிரியர் இவ்வடியார்க்கு நல்லாரைப்பாடும் இடங்களோடு அன்றிப் பாடற்பாலன வாய இடங்களோடு, இவ்வடியார்க்கு நல்லார் வரலாற்றோடொத்த வரலாற்றை உடைய பிற புலவர்களைப் பிற சதகக்காரர் பாடும் இடங்களாமென அறிந்துகொள்ளல் வேண்டும். அன்றியும், இச் சதக ஆசிரியர் தம் அகச்சான்று என்னும் வலிபெற்ற நிலை பெற்ற சான்றுகளாலும் இவ்வடியார்க்கு நல்லார் வரலாறு துணியக்கூடியதாய் அமைந்தும் இருக்கின்றது. எவ்வாறெனின் இச்சதக ஆசிரியர் இவ்வொரு பாட்டால் அடியார்க்கு நல்லாரைப் பாடியது போல ஏனைச் செய்யுட்களால் ஏனையோரைப் பாடியிருக்கின்றனர் என்றும். அவ்விடங்களை கண்டும் அவற்றோடு சாரவைத்தும் அடியார்க்கு நல்லோரைப்பற்றி இவர் கொண்டகருத்தாக அகச்சான்றாக அறியவும் படும் என்பது. அன்றியும் இச்சதகச் செய்யுள்கள் சங்கச் செய்யுள்கள் போல மாட்டெறிந்து பொருள் முடிக்கப்படுமாறு பாடப்படுவதன்றி, தெளிவும் புலப்பாடும் உடை யவைகளாய்ப் பாடப்படுவதென்பதையும் அறிதல்வேண்டும். இனி இவற்றின் விளக்கத்துக்காகவும் ஒருவரின் வரலாறுகளை மண்டலங்களோடு புணர்த்தி உரைக்கும் வாறு எவ்வாறு என்றறிதற்காகவும் இவ்வாராய்ச்சியை விளக்குவதற்காக இவற்றிற்குப் புறம் பேசில பல சதகப் பாக்களையும் காட்டுகின்றாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[மரபுகள் இவையென மட்டும் அறிந்தால் போதாது, அம்மரபுகள் அமைய அப்பாக்களைப் பார்த்தபயிற்சியும் ஈண்டு வேண்டப்படுகின்றது] மண்டல சதகங்கள் எல்லாவற்றினும் சிறந்ததும் மிகப்பழமை வாய்ந்ததுமான தொண்டைமண்டல சதகத்திலிருந்து சில பாக்கள் காட்டுவாம். எல்லாச் சதகங்களினும் காட்டின் இடம்விரியும் என்க.

"சீருறும் பாடல்பன் னீராயிர மும்செழுந் தமிழ்க்கு
வீரர்தஞ் சங்கப் பலகையி லேற்றிய வித்தகனார்
பாரதம் பாடும் பெருந்தேவனார் வாழும் பழம்பதிகாண்
மாருதப் பூவின் மணம் வீசிடும் தொண்டை மண்டலமே"
[தொ. ம. ச. பா. 53.]

"ஊரார் மலிபுலி யூர்க்கோட்ட நற்குன்றத் தூரிலுள்ள
சீரார் வளமலி பாக்கிழ வோன்புகழ்ச் சேக்கிழவோன்
காராளன் கூடற், கிழவோன் முதுமொழிக் காஞ்சிசொற்ற
வாரார் புரிசைக் கிழவோனும் வாழ் தொண்டைமண்டலமே"
என வாழும் பழம் பதிகாண், வாழ் தொண்டை மண்டலமே என அவர் தம் வாழ்வை மண்டலத்தோடுபடுத்திப் பாடியிருத்தல்காண்க.

"கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள் கண்ணின்முனே
பொன்னி கரைகடந் தாளெனு நிந்தை புவியிலுள்ளோர்
பன்னி யிகழா தமரெனக் கம்பரோர் பாச்சொலச்செய்
மன்னிய கங்கைக் குலத்நாரும் வாழ் கொங்கு மண்டலமே"

"பனிமிகு நீள்கடல் சூழ்மே தினியிற் பலருமெச்ச
இனிமை தருந்தமிழ் மாதுகளிப்புற் றெலா வணியுங்
கனிவுறப்பூண்டு வளர்ந்தோங்கச் செய்யுங்கருத்தொடு நன்
மனமிகுகோசரும் வாழ்ந்நாண்டதுங் கொங்கு மண்டலமே."
என வாழ்கொங்குமண்டலமே, வாழ்ந்தாண்டதும் கொங்குமண்டலமே என அவ்வாறே அவர்கள் வாழ்வைக் கொங்குமண்டலத்தோடு தொடர்புபடுத்திப் பாடியிருத்தல் காண்க.

அந்தப் புரமு மறுநான்கு கோட்டத் தாரு மொன்றாய்க்
கந்தப் புராணம் பன்னீராயி ரம் சொன்ன கச்சியப்பர்
தந்தப்பல் லக்கும் சிவிகையுந் தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப் புராண மரங்கேற்றினார் தொண்டை மண்டலமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதப் புகழுத யேந்திரன் காதை நிகழ்த்து தற்குக்
கோதற்ற மங்கையின் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி
மேதக்க சொற்சங்கத் தார் வெள்கவே கொங்கு வேளடிமை
மாதைக் கொண்டுத்தரஞ் சொன்னதுவும் கொங்குமண்டலமே •
[கொ. ம ச. பா. 99]

என அரங்கேற்றினர் தொண்டைமண்டலமே, சொன்னதும் கொங்குமண்டலமே யென முறையே கந்தப் புராணந் தொண்டை மண்டலத்தில் இயற்றப்பட்டதென்பதையும், உதயேந்திரன் காதையாகிய உதயணன் கதை கொங்குமண்டலத்திற் சொல்லப்பட்டது என்பதையும் புலப்படக் கூறி இருத்தல் காண்க. அன்றியும் இவ்விரு பாட்டிலேயுமே கந்தப்புராணம் சொன்ன கச்சியப்பரையும், அவரோடு தொடர்ந்ததாய்ப் புராணம் அரங்கேற்றலில் வந்த வரலாறுகளையும், அவ்வாறு கொங்குவேண்மாக்கதை † யோடு சேர்ந்த பிற பொருட்கள் சந்தர்ப்பங்களையும் கூறி இருத்தல் காண்க. இனிச் சிலரைத் தனிப்பாடல்களானும் தொடர்புப்படுத்திக் கூறுதலும் உண்டு. அவற்றைக் காண்பாம்.

"நீளத்திரிந்தென்று வெண்பாவினலன்று நின்றயர் கோன்
காளத்தி வாணனைப் பாடிய பாடல் கருதுமண்ட
கோளத் தினும்சென்று பாதாளம் புக்குக் குலவுசக்ர
வாளத்தி னுஞ்சென்றதா லெனிதோ தொண்டை மண்டலமே.

"பண்பார் சிவப்பிர காசனைத் துட்டர் பழிக்கவவர்
கண்பார்க்க வில்லார் பொதுச் சபை யின்வித்த காவெனவோர்
வெண்பா சொலக்கல் லிடபங் கடலையை மென்று தின்னும்
வண்பா வலர்வரு செங் கோடையுங் கொங்கு மண்டலமே"

இப்பாட்டுக்களால் தனிப் பாடல்களையும் அவற்றைப் பாடியோரையும் அவை பாட நேர்ந்த சந்தர்ப்பங்களையும் குறிப்பிட்டிருத்தல் காண்க. ஒரு மண்டலத்தில் வாழ்ந்தவரை இன்னொரு வழியில் அம் மண்டலத்தோடு அவரைப் பாடித் தொடர்பு படுத்துதலும் உண்டு.

" நூலார் கலைவல்ல செம்பியன் கேட்க நொடித்துமிக்க
கோலா கலனெட்டக் கூத்தனை யன்றுநற், கோலியென்று [ட
மேலார் கவி சொல்லி நெய்த்தானத் தேசென்று, வென்றுகொண்
மாலார் களந்தைப் புகழேந்தியுந் தொண்டை மண்டலமே"

† சொன்ன கொங்குவேளிரையும், அவர் சொன்னதால் அக்கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்காப், பியத்தின் குணதோடந் தேர்ந்து, சொலுவதற்குத்
தொல்காப் பியங்கற்க நீண்ட ததனைச் சுருக்கி யிசை
யொல்காப் பெரும்பவ ணந்தியென் றோதி யுபகரித்த
வல்கா வலன்சீய கங்கனுந் தான் கொங்கு மண்டலமே"

புகழேந்தியும் தொண்டை மண்டலமே, சீயகங்கனும் கொங்கு மண்டலமே யென அவர்கள் பெயரை அம்மண்டலத்தோடு தொடர்பு படுத்திக் கூறி இருத்தல் காண்க. அவ்வாறு கூறினும் அவர்கள் அம்மண்டலத்திற்கே உரிமைப்பட்டவர். என்பது கொள்ளப்படும் இனி நூலோ உரையோ செய்தாரையன்றிச் செய்வித்தாரையும் பாடுதல் உண்டு.

"எம்பெரு மானைக் கொடுநக்கை யென்னு மிசைத் தமிழால்
நம்பு மிராம கதையை யன்பாக நவில விசை
வம்பவிர்த் தார்ப்புய நல்லயனுங் கொங்கு மண்டலமே"

என அவ்வாறு செய்வித்தாரையும் பாடி இருத்தல் காண்க. அன்றியும் ஒரு நாட்டில் பிறத்தல் வளர்தல் மட்டும் தொடர்பு பட்டவரை அத் தொடர்பை மட்டும் குறிப்பிட்டுப் பாடப்படுதலும் உண்டு.

கங்கக் குரிசில் உவக்கநன் னூலைக் கனிந்துபுகல்
துங்கப் புலமைப் பவணந்தி மாமுனி தோன்றிவளர்
கொங்கிற் குறும்பு தனிலாதி நாத குருவிளங்கு
மங்குற் பொழிற்சன காபுரமுங் கொங்கு மண்டலமே"

எனவருமாற்றைக் காண்க. இதில் தோன்றிவளர் என்பது அவதரித்துவந்த என்றவாறு. தொண்டைமண்டல சதகம் சதக இலக்கணம் முற்றிலும் நிரம்பியது. மண்டல சதகம் பாடுவார் எல்லார்க்கும் வழிகாட்டியாய் உள்ளது. தொண்டைமண்டல சதகத்தில் இருந்து எடுத்துக்காட்டியதும், இக்கொங்குமண்டல சதகத்தை அதனோடு சாரவைத்துக் காட்டியதும் என்னையெனில்! எல்லாச் சதகங்களினின்றும் ஈண்டு எடுத்துக்காட்டின் இவ்விடம் விரியும் என்று அஞ்சியதோடு, இக்கொங்குமண்டல சதகப்பாக்களும் எனைத் தொண்டைமண்டல சதகப்பாக்களை ஒத்தன என்று காட்டுதற்காகவே. பொதுவில் சதகமரபு சம்பந்தமாகக் கொள்ளப்படும் உண்மைகளைக் கொங்குமண்டல சதகத்தை மட்டும் மேற்கொண்டு சொல்லின் வலி இல்லாதிருக்கவுங் கூடும் என்று கருதி என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்குமண்டல சதகத்தில் இவ்வடியார்க்கு நல்லார் வரலாற்றுக் குறிப்பில் ஐயம் நேர்ந்தவழி அவ்விடத்தை இவ்வாசிரியர் கூறும் ஏனைய இடங்களைச் சிறப்பாகவும் தொண்டைமண்டல சதகம் முதலிய சதகங்களின் ஏனைய இடங்களைப் பொதுவாகவும் பார்த்து நிச்சயிக்க நிர்மாணிக்கப்படும் என்பதற்குமாம் என்பது.

நூலோ உரையோ இயற்றினரையோ இயற்றுவித்தாரையோ மட்டும் குறிப்பிட்டால் போதாது. ஒருவரின் வரலாறு பிறத்தல், வளர்த்தல், வாழ்தல் என்னும் முப்பாற்பட்டதாகலின் ஒரு நாட்டில் பிறந்தார் இன்னொரு நாட்டில் நூலோ உரையோ இயற்றவும் கூடுமல்லவா? அன்றியும் இன்னார் இந்நூலை எம்மண்டலத்தில் செய்தார்; இந்நூற் குறையை எம்மண்டலத்தில் செய்தார்; என்று பின்னுள்ளார் அறியவேண்டியதும் அவசியமல்லவா? அவற்றுக்காகவே சொன்னதுங் கொங்குமண்டலமே என்றுற்போலும் சதகக்காரர் கூறுகின்றமை என்க. இனிமேற்காட்டியவாறு செய்யுளின் கடையடியிலே அவ்வச் செயல் நிகழ்ச்சிகளைக் கூறி அவற்றை அம்மண்டலப் பெயரோடும்; ஒருவரது பெயரைக்கூறி அவர் பெயரை அம்மண்டலப்பெயரோடும், ஒருவரது வாழ்வைக் கூறி அவற்றை அம்மண்டலப்பெயரோடும் உணர்த்துமாறின்றிச் செய்யுள் அகத்தே உணர்த்தப் பெறுவதில்லையாலோ எனின் அவ்வாறு அருகி வருதலும் உண்டு. வரினும் இவ்வுண்மையை உள்ளுறுத்தி விலகாமல் இவற்றுக்கடையாகவேவருகின்றன. உதாரணமாக ''சீருறும் பாடல் பன்னீராயிரமும் செழுந்தமிழுக்கு; வீரர்தஞ் சங்கப் பலகையில் ஏற்றியவித்தகனர்; பாரதம் பாடும் பெருந்தேவனர் வாழும் பழம்பதிகாண் ............தொண்டைமண்டலமே'' எனக் கூறின் அங்ஙனம் பாடல் பன்னீராயிரமும் பாடிய இடம் அவர் வாழ்ந்ததான தொண்டைமண்டலம்தானென்பது நிச்சயிக்கப்படும் என்பது. இங்கு காட்டப்பட்ட இப்பகுதியில் நன்கு மனப்படியச் செய்தல் வேண்டும். இனிமேல் அடியார்க்கு நல்லாரைப்பற்றிக் கூறும் அச்சதகாசிரியர் கூற்று எவ்வாறு உண்மையொடு வரைவுபட்டது என்பதை அறிவாம். அன்றியும் இவ்வாசிரியர் தாம் மேற்கோளாகக் காட்டும் பாட்டுக்களிலிருந்தே வி ட ய ங் க ளை அறிந்துகொண்டே பாடுகின்றார் என்றும் அறிக.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. கோங்குமண்டல வரலாற்று உண்மைகளும் அவற்றைச் சதக ஆசிரியர் கூறுமாறும்.

இச்சதகாசிரியர் கூற்றையே வழித் துணையாகக் கொண்டும், ஒரு தக்க பிரமாணமாகவும் கொண்டும் இவ்வடியார்க்கு நல்லார் வரலாற்றைச் சென்று காணவேண்டி இருத்தலின் இவர் தம் கூற்று எத்தகையன. இவராற் கூறப்பட்ட, அன்றி இவர் சொன்ன ஒருவரது வரலாற்றுக் குறிப்புக்கும், உண்மையில் அவர் தம் உள்ளபடியான வரலாற்று நிகழ்ச்சிக்கும் ஒற்றுமையுண்டா? அதாவது ஒருவரின் உண்மையான வரலாற்றை இவர் வரைவாக அறிந்து பாடுகின்றனரா? அன்றி இவர் பாட்டுக்களை பாட்டின்போக்கை அறிவார் வரலாற்றைத் தெளிவாய் அறிய முடியாமல் ஐயமும் மயக்கமும் எய்தக் கூறுகின்றனரோ!, என்றறிவதற்காக இப்பகுதியை எடுத்துக்கொண்டாம். இதில் இவர் தம் சொந்த நாட்டுக்கே எல்லாவற்றானும் உரிமையுள்ளவர்களைப் பாடும் பாட்டுக்கள், பிறநாட்டில் இருந்து ஒவ்வோர் சந்தர்ப்பம் நோக்கி இக்கொங்குமண்டலத்திற்கு வந்து வாழ்ந்து தனிப்பாடல் முதலியவைகளைப் பாடியவர்களைப் பாடும் பாட்டுக்கள், இக்கொங்குநாட்டிலே பிறந்து இன்னொரு நாட்டிலே நூலோ உரையோ செய்தவர்களைப்பாடும் பாட்டுக்கள் என மூன்று வகையாகப் பிரித்துரைக்கலாம். இவ்வாறே ஏனையோர் பாடிய சதகப் பாக்களும் அவர் தம் கூற்றுக்களுமாகும். இவற்றை மேலே சதக மரபியலில் காட்டியவற்றில் இருந்தும் உணரலாம். ஈண்டு பிற நாட்டுப்புலவர்கள் இக்கொங்குநாட்டுக்கு வந்து சம்பந்தப்பட்டு இவராற் பாடப்பட்ட இடங்களையும், இக்கொங்குநாட்டுப் புலவர்கள் இன்னொரு நாட்டிற்சென்று அந்நாட்டில் நூலோ உரையோ இயற்றியதால் இவராற் பாடப்பட்ட இடங்களையுமறிவாம். அன்றியும் சதகம் என்னும் மரபும் விதியும் பொருந்திப்பாடும் பிரபந்தத்துக் கமைந்து நின்றே இக்கொங்குமண்டல சதக ஆசிரியரும் இச் சதகத்தைப் பாடினராதலின், இவர் இந்நூலுள் ஏனையோரைப்பாடி இட்டதோடொத்த இவரைப் பாடாமல்விட்ட அன்றிப்பாடிய இடங்கள் இவர் தம் அகச் சான்றுவைத்து அறியப்படும் என்றறிக. அவ்வகச் சான்று கொண்டும் ஈண்டறியப்படும் என்பது. அடியார்க்கு நல்லார் மேற்கண்டவாறு இக்கொங்குமண்டல சதகத்தால் பாடப்பட்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வரலாற்றை அவ்வரலாற்றுக்குரிய இடத்தை வெளிப்படையிற் சொல்லி அவ்விடத்தோடு படுத்திக்கூறும் சான்று இதுவரை கொங்குமண்டல சதகமன்றி வேறெதுவும் அகப்படவில்லை. ஆயின் அடியார்க்கு நல்லார் உரைசெய்த சிலப்பதிகாரம் இன்றும் வழங்கப்படுவதால் அவர் இன்னோர் இடத்தில் வாழ்ந்து இவ்வுரையைச்செய்தார் என்பதுதான் அவர் “அவதரித்து வருமைப்பொழில் நிரம்பைப்பதி” யெனப்பாடி இட்டதைக்கொண்டு நிச்சயிக்கக் கிடப்பது. ஆயின் அவர் இன்னொரு இடத்தில் வாழ்ந்ததான உரை சொன்னதான செய்திகளைக் குறிப்பிடும் சான்றுக்கள் இதுவரை கிடைக்கப்பெறாமையானும் கொங்கு மண்டல சதகமே அவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றமையானும் அடியார்க்கு நல்லார் இக்கொங்கு மண்டலத்திலேயே வாழ்ந்து அம்மண்டலத்திலேதான் இவ்வுரையையும் செய்திருக்க வேண்டுமென்று பிறர் கருதுகின்றவராயினர். அவதரித்தலின் வேறாய வாழ்தலையும், உரை சொல்லுதலையும், அன்றியும் காங்கேயன் வாழ்வையும், அவன் உரை சொல்லுவித்தலையும் அகத்தடக்கி அல்லது அவை அனைத்தையும் தழுவி “அவதரித்து(த)வருமைப் பொழில் நிரம்பைப் பதி” என்னும் அச்சதகக்காரர் கூற்று இல்லை என்பதை அப்பிறர் விளங்காராயினர். ஆயின் இவ்வாசிரியர் அவ்வவதரித்த ஒன்றை மட்டும்தான் இக்கொங்குமண்டலத்துக் குரிமைப்படுத்திக் கூறினார் என்றும், ஏனைய உரை செய்தல், வாழ்தல் முதலியன இன்னொரு நாட்டுக்கே உரியதென்றும் கருதிக் கூறினாரென்றும் இன்னொரு வழியால் முட்டின்றிச் சரிவர அறியவும்படும்.

எவ்வாறெனில் ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இருந்துவந்த தொடர்புபோல, இக்கொங்குநாட்டுக்கும் அண்டை ஏனைத் தமிழ் நாடுகளுக்கும் இருந்துவந்த பண்டைத் தொடர்பினால் அப்பிற தமிழ்நாட்டுப் புலவர் முதலியோர் இக்கொங்குமண்டலத்துக்கு வந்து தனிப்பாடல் முதலியன செய்திருக்கின்றனர். அவ்வாறே இக்கொங்கு நாட்டிற் பிறந்த புலவர் முதலியோர் ஏனைத் தமிழ்நாடுகளுக்குச் சென்று நூலோ உரையோ இயற்றி இருக்கின்றனர். அவரில் பலர் அன்றி எல்லாரும் வரலாறு நன்கு அறியப்படுபவர். அவருள்ளும் இவ்வடியார்க்கு நல்லார் வரலாற்றை நேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்த வரலாற்றை உடையவர்களும் பலர் உண்டு. அவர் தம்மை-அவர் தம் வரலாற்று நிகழ்ச்சிகளை இக்கொங்கு மண்டலத்துக்குரிய அம்மட்டையும் வரைந்தும் ஏனையவற்றை விலக்கி இவ்வாசிரியர் பாடியும் இருக்கின்றனர். அவ்வவ்விடங்களை அறிவதனாலும் இவ்வடியார்க்கு நல்லார் வரலாறு நிச்சயிக்கப்படும் என்பது.

## ஞானசம்பந்தரைப் பாடியது.

"சீகாழியில் அவதரித்த ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பல நாடுகளிற் சென்று தேவார பதிகங்கள் பாடிக்கொண்டு கொங்குநாட்டிற் காவேரிக்குத் தென்கரையில் உள்ள ஆலயங்களைத் தரிசனம் செய்துகொண்டு வடகரையில் உள்ள திருச்செங்கோடு என வழங்கும் கொடிமாடச் செங்குன்றூருக்கு எழுந்தருளினர். தேவாரம்பாடி அர்த்தநாரீசுரரைத் தரிசித்துப் பொன்னிநதிக்கு மேல்பாலில் திரு நணா முதலிய தல யாத்திரை செய்துகொண்டு மறுபடியும் திருச்செங்கோட்டுக்கு எழுந்தருளினர். அப்பொழுது பனிப்பருவம் வந்தது. பலநாள் அங்கு வசித்திருந்தமையால் அந் நாட்டில் அக்காலத்து வருத்தும் குளிர் முன்னுனசுரம் திருக்கூட்டத்தாரையும் பிடித்தது. அறிந்தனர் ஞானசம்பந்தப் பெருந்தகையார். அவர் "அவ்வினைக் கிவ்வினையாம்" என்ற பதிகத்தைத் தொடங்கி "அடியார்களைத் தீண்டப்படா" என்று ஆணைவைத்துத் திருநீலகண்டப் பதிகத்தை யோதியருளினார். உடனே திருக்கூட்டத்தாரை அன்றியே அந்நாட்டிலுமே அந்நோய் நீங்கிவிட்டது." [இத்திரு நீலகண்டப் பதிகத்தை மந்திரமாக ஓதி விபூதி பூசினும் நாளும் குளிர் சுரம் நீங்குமென்பர்.] அவர் பாடிய அப்பாட்டாவது.

"அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மதுவறியீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான் கழல் போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறுதிரு நீலகண்டமே.

என்பது. இந்நிகழ்ச்சியைப் பாட எடுத்துக்கொண்ட இச்சதகக்காரர், கொங்கு மண்டலத்துக்கு வந்த இவரைக் கொங்குமண்டலத்தில் அவதரித்தார், வழ்ந்தார் என்று கூறுவரோ. பாடவேண்டியது அம்மண்டலத்தில் நிகழ்ந்தனவே உரிமைக்குரியதால் அவர் பாடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாட்டையும், அது கொங்கு மண்டலத்தில் பாடப்பட்டதென்பதையும், அவரையும், அத்திருக் கூட்டத்தையும் அக்குளிர் சுரத்தையும் என்பதன்றோ! இச்சதகக்காரர் அவை அம்மட்டையுமே வரைந்து

"திருக்கூட்டத்தாரையும் சேர்ந்த நளிர்சுரம் தீரவன்பின்
பெருக்காக வவ்வினைக் கெவ்வினை யாமெனப் பீடுபெறத்
திருக்காழிப் பிள்ளையார் நற்றமிழ் பாடவத் தேயமுற்றும்
வருத்தாதந் நோயினும் நீங்கிய துங்கொங்கு மண்டலமே"

என்று பாடினர். இதனால் இவர் அம்மண்டலத்துக்குரிய குறிப்புக்களை விலக்காதும், மிகாதும் பாடுகின்றார் என்பதும் தோன்றுகின்றது [கொ. ம. ச.—50-51.]

காளிப்புலவனைப் பாடியது.

"தொண்டைமண்டலத்து வல்லம் என்னும் ஊரிலே இடையர்களிலே கல்விகேள்விகளிற் சிறந்த நம்பிகாளி என ஒரு வித்துவான் வாழ்ந்தனர். ........... பின்பு (அக்காளிப்புலவரான) அவ்வாதவர்கோனென செந்தமிழ்ப் புலவர் தேச சஞ்சாரஞ் செய்து வரும்பொழுது கொங்குமண்டலத்தே செருவூர் நகரத்தைச் சேர்ந்தனர்".

"கையேட்டுக்காரரால் இப்புலவரின் வாக்கு வல்லமையைக் கேட்ட விப்ரர்கள், அழுக்காறு கொண்டு இந்நாவலரையும் தமிழையும் இகழ்ச்சி கூறினர்கள். மாணுக்கர் மறுத்தெதிர் கூறினர். தமிழும் தமிழ்ப்பாக்களும் தெய்வ வருள் நிரம்பியதென்ப துண்மையாயின் பட்டுப்போன இம்மரத்தைத் தழையும்படி பாடுவரோ என்றார்கள். தெய்வத் தமிழ் என்னுஞ் சொல்லை நிலையாக்குங்கள் என்று மாணுக்கர் வேண்டுதலும் ஒரு வெண்பாக் கூறினர். அம்மரம் உடனே பசுமையாய்த் தளிர்விட்டது என்பர்." இவ்வாலாற்றால் தொண்டைமண்டலத்திலே உள்ள காளிப் புலவர் கொங்கு மண்டலத்திலே வந்து கவி பாடிய வரலாறு கூறப்பட்டிருத்தல் காண்க. அப்புலவர் பாடிய பாட்டாவது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெய்வத் தமிழென்னுஞ் செம்மொழியு மம்மொழி நேர்
செய்விப்பர் தேவரெனல் தேறத்--தெய்வம்
சுரந்தளிக்கு மா நெருவூர்ச் சோலையிலே பட்ட
மரந்தளிர்க்க வின்று வளர்ந்து".

என்பது. இவ்வரலாற்றை அறிந்து இப்பாட்டையே மேற்கோளகக் காட்டி இச்சதகக்காரர்

"பரந்த கடலுல கெல்லா மறியப் பரமசிவ
னிரந்தர மாயருள்சண் முகவேலனன் னேயத்திறற்
புரந்தரன் போற்றும் நெருவூரிற் காழிப் புலவன்பட்ட
மரந்தழை யக்கவி பாடியதுங் கொங்கு மண்டலமே"

என அவர் பிறத்தல், வளர்தல் என்னும் இவைகளை விலக்கி அக்கவி பாடியது ஒன்றையே குறிப்பிட்டுப் பாடி இருத்தல் காண்க.

## சிவப்பிரகாசரைப் பாடியது

"நவகோடி சித்த வாசபுரமான திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்த சிவப்பிரகாசர் (கொங்குமண்டலத்துள்ள) திருச்செங் கோட்டுக்கு எழுந்தருளினர். அவர் வரும் வழியிற்செய்த அற்புதங்களைக் கேள்வியுற்ற அக்கோயில் வந்தாரிற் சில அறிவிலிகள் அற்புதஞ் செய்திருப்பரேல் (ஸ்ரீ அர்த்தநாரீசுரர் திருமுன் துவஸ்தம்பத் துக்கருகில் உள்ள) கல்லிடபத்தைப்பார்த்து இந்தக் கல்லிடபம் எழுந்து நாங்கள் வைக்கும் கடலையை உண்ணட்டும் பார்க்கலாம் என இழிவுரையாடினார்கள். இதனைப்பொறுது தம் ஆசிரியரை அடியார்கள் வேண்டினார்கள். சிவபெருமான் அருளுளதேல் இது ஒரு பெரிதோ என்று விபூதியைக் கையில் எடுத்துக்கொண்டு "வில்லார் பொதுச்சபையின் வித்தகா" என்னும் முதலையுடைய வெண்பாக் கூறவே எழுந்து அவர்கள் திடுக்கிடும்படி அக்கல்லிடபமானது முக்காரமிட்டுவைத்த கடலையை உண்டு பழையபடியே படுத்தது" அவர் பாடிய பாட்டாவது.

"வில்லார் பொதுச் சபையின் வித்தகா நீயுமுனங்
கல்லானைக் கிக்கருத்திக் காட்டியவுன்--வல்லாண்மை
கட்டுரையே யாயினிந்தக் கல்லேறெழீ இக்கடலை
இட்ட இவர் முன்றினச் செய்யே."

என்பது. இவ்வாற்றல் இந்நாட்டுக்கு இப்பாட்டுப்பாடின ஒன்றிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வரலாறு தொடர்புடையதென்பதைக்கண்டு இவரையும், இவர் பாடிய அப்பாட்டையும், அக்கல்லானையையும், அவர்கள் வைத்த கடலையையும் குறிப்பிட்டு, இப்பாட்டையே மேற்கோளாகக் காட்டி

''பண்பார் சிவப்பிரகாசனைத் துட்டர் பழிக்கவவர்
கண்பார்க்க வில்லார் பொதுச்சபையின் வித்த காவெனவோர்
வெண்பா சொலக்கல் லிடபங் கடலையை மென்றுதின்னும்
வண்பா வலர்வரு செங்கோடை யுங்கொங் குமண்டலமே.''

எனப் பாடினார் என்பது. இத்தகைய இடங்களை இன்னும் விரிக்கின் இவ்விடம் பெருகிவிடும். இவ்வாறு பிறநாட்டில் இருந்து இக் கொங்குமண்டலத்துக்கு வந்து தனிப்பாடல் முதலியன பாடியதால் இவராற் பாடப்பட்டோர் இவர்களேயன்றி முருகன், வேதாந்த தேசிகர், அகத்தியர் என்பவர் முதலாக இன்னும் பலர் உண்டென்பதை இக்கொங்குமண்டல சதகத்திற் கண்டுகொள்க.

எனவே வரலாறு நன்கறியப்பட்டுள்ளவரான பிறநாட்டுப் புலவர் இக்கொங்கு நாட்டோடு தனிப்பாடல் முதலிய பாடிய காரணத்தான் இச்சதகக்காரராற் பாடப்பட்டனர். இவர் பாடிய அவ்விடங்களை-அவர்களை இவர் குறிப்பிட்டு இக்கொங்குமண்டலத்தோடு தொடர்புப்படுத்திக் கூறிய கூற்றுக்களை அறியின். அவற்றால் உணர்த்தப்பெறுவன முன்னர் யாம் அவர் தம் வரலாற்றில் அறிந்த அவ்வளவேயல்லாமல் யாதும் மிகாதும், குறையாதும், விலகாதும் இருத்தலினால் இவ்வாசிரியர் இச்சதகத்தில் கூறுவனவெல்லாம் நுண்மையும், வரைவும் உடைய உண்மைகள் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை என்க. எனவே! இவ்வாசிரியர் அடியார்க்கு நல்லாரை "அவதரித்து வருமைப்பொழில் நிரம்பைப் பதியுங் கொங்கு மண்டலமே" என்று பாடியதால் அவர் அவதரித்த ஒன்றை மட்டுமே இம்மண்டலத்தில் நிகழ்ந்ததென்று கருதிப் பாடினார் என்றும் தெளிந்திடுக. இம்மண்டலத்தில் நிகழ்ந்ததாகக் காணப்படும் ஒருவரது உண்மை வரலாற்றுக்கும் அவரைப்பற்றிக் கூறும் இக்கொங்கு மண்டல சதகத்தார் கூற்றுக்கும் எவ்வித பேதமும் இல்லை என்க.

இவ்விடத்தில் இதுவரை கூறியது பிறநாட்டில் இருந்து இக் கொங்குமண்டலத்துக்கு வந்து இச் சதகக்காரரார் பாடப்பட்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களேயே. இனி, இக்கொங்குமண்டலத்திற் பிறந்து வளர்ந்தோ இன்ெருரு நாட்டிற் சென்று நூலோ உரையோ செய்தாரை இவர் பாடிய இடமொன்றையும் பார்ப்போம். [தம் மண்டலத்தில் வாழ்ந்து தம்மண்டலத்திலே நூலோ உரையோ இயற்றியவரை அவர் செய்த அவற்றைக் குறிப்பிட்டு அவர் அம்மண்டலத்திலே வாழ்ந்தவர் என்பதாகவே குறிப்பிட்டுப் பாடுவர். ஆதலின் அதில் ஐயமில்லை ஆராய்ச்சியுமில்லையென்க. அவ்வாறு பாடாது பிறவாருகப் பாடப்பட்டவர்களேயே ஈண்டு அறியப்பட வேண்டியதாகின்றது. அதனைச் சதகமரபிலுங் காண்க.]

## பவணந்தி முனிவரைப் பாடியது.

இப்பவணந்தி முனிவரும் இக்கொங்குமண்டல சதகக்காரராற் பாடப்பட்ட ஒருவரே யாவர். இச்சதகக்காரர் இவரைத் தம் மண்டலமான கொங்குமண்டலத்திலே தோன்றி வளர்ந்தவர் என்று பாடி இருக்கின்றனர். ஆனல் இவர் சன்மதி முனிவரிடம் உபதேசம் பெற்றுத் துறவுபூண்ட இடம் தொண்டை மண்டலம். நன்னூலைச் செய்த இடமும் அத்தொண்டைமண்டலந்தான். பவணந்திமுனிவரின் இத்தொண்டைமண்டல சம்பந்தமான வரலாற்றை கொ. ம. சத. (49-ம் 50-ம்) பக்கத்தில் கூறப்பட்டபடி அப்படியே தருவாம்.

கொங்குமண்டலத்தில் குறுப்பி (குறும்பு) நாட்டில் சனகாபுரம் என்னும் ஊரில் பிறந்து வளர்ந்தவர் பவணந்தி முனிவர். ஆனல் இவரைத் தொண்டைமண்டல சதகத்திலே

"தன்னூர் சனகையிற் சன்மதி மாமுனி தந்தமைந்தன்
நன்னூ லுரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்
சின்னூல் உரைத்த குணவீரபண்டிதன் சேர்பதியும்
மன்னூபுரத்திரு வன்னமின்னே தொண்டை மண்டலமே."

எனக் கூறப்படுகின்றது.

"பவணந்தி முனிவரது ஊரைப்பற்றி விசாரிப்பின் ஒன்றிற்கொன்று முரண்படுவதால் ஒன்று கொள்ளப்படவும் மற்ருென்று தள்ளப்படவுமாக ஏற்படுமேயெனச் சிலர் ஆசங்கிக்கலாம். மேற்கூறிய இரண்டு மண்டல சதகச் செய்யுள்களும் கொள்ளத்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவேயாம். கொங்குமண்டல சதகத்தே பவணந்திமாமுனி தோன்றிவளர் ......... சனகாபுரம்" என்று கூறுவதால் அவர் பிறந்து வளர்ந்தவூர் இதுவென்றும், "சனகையிற் சன்மதி மாமுனி தந்த மைந்தன்" எனத் தொண்டைமண்டல சதகத்தே கூறுவதால் சனகைப் பதியினரான சன்மதி முனிவரது புத்திரர் எனப் பொருளாகின்றது. [இப்பவணந்தி துறவறத்தினர் என்பதை பவணந்தி என்னு நாமத்திருந்தவத்தோனே என்பதும் நந்தி முனிவர் என வழங்கப்படுதலும் இதை வலி உறுத்துகின்றன. ஜைனரில் துறவினர் நந்தி என்று வழங்கப்படுதலே, வச்சணந்தி அச்சணந்தி என்னும் பெயர் வழக்குகளானும்

"கன நந்தியும் புட்ப நந்தியும் பவண நந்தியும் குமணமா
சனக நந்தியுங் குனக நந்தியுந் திவண நந்தியும்"

எனச் சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவாலவாய்த் தேவாரப் பாசுரங்களானும் தெரியப்படுகிறது. ஆதலின் சன்மதி மாமுனியும் பவணந்தி முனிவரும் துறவிகளானதால் ஞான பிதாவும் ஞான புத்திரருமாவார்வள்]" எனவே பவணந்தி பிறந்து வளர்ந்ததும், சன்மதி முனிவர்க்குப் புத்திரராய் இருந்ததும் கொங்குமண்டலமும், சன்மதி முனிவரிடம் உபதேசம் பெற்றுப் பின் துறவு பூண்டிருந்தது தொண்டை மண்டலமுமாகக் கொள்ளல் வேண்டும். இவற்றால் பவணந்தி முனிவர் தொண்டை மண்டலத்திலேதான் நன்னூலைச் செய்தார் என்பதை அறிந்து கொள்க. என்னையெனில் துறவுக்காலத்திலேதான் அவர் இந்நூலைச் செய்தார் என்பது அறியப்படும். கொங்குமண்டல சதகக்காரர் இவ்வுண்மையைத் தொண்டைமண்டல சதகத்தில் இருந்து அறிந்துகொண்டு இத்தகைய பெருமைப் பாட்டுக்குரியவர் கொங்குமண்டலத்திலே உள்ள ஜனகாபுரத்திற் தோன்றி வளர்ந்த † பவணந்தி முனிவர் தான் என்பதை வெளிப் படுத்துபவராய்

---

† பவணந்தி முனிவர் பிறந்து வளர்ந்த (சீனுபுரம்) ஜனகை என்பது கோயமுத்தூர்ச் சில்லா ஈரோடு தாலுகாவில் பெருந்துறையில் ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் இருக்கின்றது. இவ்விடத்தில் ஆதிநாத தீர்த்தங்கார் கோயில் இருக்கின்றது. ஜைனப் பிராமணர்கள் இன்னும் பூசித்து வருகின்றார்கள். சன்மதி முனிவரைக் குறிக்கும் சனகை யென்கிற சனநாதபுரமானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கங்கக் குரிசில் உவக்க நன்னூலைக் கனிந்துபுகல்
துங்கப் புலமைப் பவணந்தி மாமுனி தோன்றிவளர்
கொங்கிற் குறும்பு தனிலாதி நாதகுருவிளங்கு
மங்குற் பொழிற்சன காபுரமுங் கொங்கு மண்டலமே" என்று

பாடி அமைத்தார். இதற்காதாரமாக அத்தொண்டை மண்டல சதகத்தையும் எடுத்துக் காட்டினர். ஈண்டு யாம் கவனிப்பது என்னை யெனில்; இன்னொரு மண்டலமான தொண்டை மண்டலத்திலே பவணந்தி முனிவர் நன்னூலைச் செய்தார்; வாழ்ந்தார்; ஆதலின், அங்ஙனஞ் செய்தல், வாழ்தல் கொங்கு மண்டலத்துக்குரிய வல்லவாயின என்பதும்; ஆயினும் பவணந்தி முனிவர் பிறந்து வளர்தற்கு மாத்திரம் உரிமையான இடம் இக் கொங்கு மண்டலம்தான் என்று கருதி, "பவணந்தி முனிவர் தோன்றி வளர் ...... சனகாபுரமுங் கொங்குமண்டலமே" என்று கூறப்பட்டிருத்தலுமேயாம். அதாவது:- பவணந்தி முனிவர் தோன்றி வளர்ந்த அவ்வளவுமே கொங்குநாட்டுக் குரிமை யுடைமை கண்டு அப்பாட்டில் அவ்வாறே தோன்றிவளர்... சனகாபுரமென்று கூறப்பட்டிருத்தல் என்பது. பவணந்தி முனிவர் முழுவரலாற்றிலும் தோன்றி வளர்ந்த அப்பகுதி மட்டுமே கொங்குமண்டலத்துக் குரியதென்றும், அவர் நன்னூலைச் செய்தல், வாழ்தல் கொங்கு மண்டலத்துக் குரியவல்ல வென்றும் விலக்கியே இவ்வாசிரியர் பவணந்தி முனிவர் சொன்னதுங் கொங்கு மண்டலம்

---

காவேரியின் வடகரையில் உள்ள மாவிலங்கையாக வேண்டும். இப்பொழுது மைசூர் ஜில்லா திருமுக்கூடல் நரசபுரம் தாலுகாவைச் சேர்ந்தது. அந்தக் கிராமம். இது கங்க இராச்சியத்திலே இருக்கின்றது. இதற்கும் கங்க நாட்டுப் பழைய இராசதானியாகிய தலைக்காட்டுக்கும் இடையே காவேரி தான் இருக்கின்றது. இதைக்குறித்துச் சாசனங்களில் அடியில் வருமாறு காணப்படுகின்றது.

1. முடிகொண்ட சோழ மண்டலத்து கங்கை கொண்ட சோழ வளநாட்டு இடைகாட்டு ஜனநாதபுரத்து.
2. கங்க பாடியான முடிகொண்ட சோழ மண்டலத்துத் தென்கரை இடைநாட்டு மாயிலங்கையான ஜனநாதபுரத்து
3. கங்கபாடி தென்கரை இடைநாட்டு
4. பெரிய நாட்டு மாயிலங்கையான ஜனநாதபுரத்து" என்று அச்சனகை யறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றேனும், பவணந்தி முனிவரும் கொங்கு மண்டலம் என்றேனும், பவணந்தி முனிவர் வாழ்வானதுங் கொங்கு மண்டலமே என்றேனும் சொல்லாமல் அவ்வாறு தோன்றி வளர்......என்றுசொன்னார் என்ற வாறு. இதில் இருந்து இவ்வாசிரியர் இம்மண்டலத்துக்குரிய அவ் வளவையும் வெகு நுட்பமாகவும், வரைவாகவும், உரைக்கின்றார் என் றறிக. மேலே இவ்வாசிரியரே பவணந்தி முனிவரை நாற்பத்தேழா வது பாட்டாகப் பாடிப் பின்னர் 95-ஆவது பாட்டாக இவ் வடியார்க்கு நல்லாரைப் பாடினர். [இவ்வடியார்க்கு நல்லார் முன்னர் பாடப்பட்டுப் பவணந்தி முனிவர் பின்னர்ப் பாடப்பட்டிருப்பதிலும், பவணந்தி முனிவர் உண்மையில் முன்னர்ப் பாடப்பட்டு இருப்பதி ஞல் இவரை இவ்வாறு பாடிய அறிவும், வரைவும், ஆராய்ச்சியும், பாட்டமைப்பும் என்பன இவர் வரலாற்றையே நேரொத்த அடி யார்க்கு நல்லார் வரலாற்றையும் அவ்வாறு பாடவே செய்யும் என் பது] இது இவ்வாசிரியர் அதாவது பவணந்தி முனிவர் இம் மண்ட லத்திலே பிறந்து, இன்னொரு மண்டலத்திலே தம் நூலைச் செய்தவ ரைத் தம் மண்டல சதகத்திலே கூறிய இடத்தைக் கண்டவாறு. எனவே மேலே "அருமையுரை செய்யடியார்கு நல்லார் அவ தரித்து வருமைப்பொழில் நிரம்பைப்பதியுங் கொங்கு மண் டலமே" என்றதற்கு அருமையுரையை அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்தில் செய்தார் என்றேனும் கொங்குமண்டலத் தில் வாழ்ந்து மறைந்தார் என்றேனும் தவறாகக்கொள்ளற்க. அவர் அந்நாட்டில் அவதரித்த ஒன்றுதான் இவ்விடத்திலும் அப்பகுதி யாற் சரியாகத் தெளிவாகின்றது என்பதையறிக. அவதரித்த, அவதரித்துவந்த, தோன்றிவளர், தோன்றிவளர்ந்த என்னும் இவை பிறந்ததை அன்றிப் பிறந்து வளர்ந்ததைக் குறிக்கும் ஒரு பொரு ளனவே யென்க. [தோன்றி வளர் என்பது தோன்றி வளர்ந்து என்று வினையெச்சமாய் வாராது தோன்றி வளர்ந்தவென்று பெய ரெச்சமாய் அது சனகாபுரம் என்னும் பெயரோடு முடியுமாற்றைக் காண்க. அவ்வாறே அடியார்க்கு நல்லார் "அவதரித்து வருமைப் பொழில் நிரம்பை" என்பதினுக்கு அவதரித்து வந்த என்று உரை காரர் கூறி அதை நிரம்பையோடு சேர்க்குமாற்றைக் காண்க. அவ் வாறாயின் அவதரித்த † வரு என்பதுதான் சரியான வடிவம் போலும். அது இடத்தை எஞ்சி முடியும் பெயரெச்சமாக இருக்க வேண்டும். அதைப் பின்னர் அறிவாம்.]

† (அவதரித்த † வரு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்க்கு நல்லார் எவ்விடத்தில் அவதரித்தார் என்றஐயப்பாடு, பவணந்திமுனிவர் கொங்குமண்டலத்தில் அவதரித்ததைக் கூறும் அப்பகுதியோடு, அக்கூற்றோடு ஒத்துமுடியுமாயின் ஐயவையம் நீங்கி இவ்வடியார்க்கு நல்லாரும் இக்கொங்குமண்டலத்தில்தான் அவதரித்தார் என்பது நிச்சயம் என்றறியப்படும். அன்றியும் இவ்வாசிரியர் இவ்வுரை இயற்றல் முதலியனவும் இன்னொரு மண்டலத்தில் நிகழ்ந்ததென்றும் கருதித்தான் இவ்வாறு கூறினர் என்றும் நிச்சயமாய்த் தெரிகிறது. பவணந்தி முனிவருக்கு அவர் காட்டிய மேற்கோள் (காட்டவில்லை யென்றால் கண்ட) தொண்டைமண்டல சதகத்தோடு சேர்ந்த சதகமாதலின் அப்பகுதி—அவர் நன்னூலியற்றிய அவ்விடம் தெளிவாய்விட்டது. ஆயின் அடியார்க்கு நல்லார்க்கு அவர் காட்டிய மேற்கோள் அவ்வாறு மண்டல சதகமல்ல. அவை சிலப்பதிகார உரைச் சிறப்புப் பாயிரப் பாக்களாதலினாலும், அவை இன்ன இடத்தில் இயற்றப்பட்டன என்று தெரியப்படாதன ஆதலினாலும் எம்மண்டலத்தில் உரை செய்தார் என்று இவ்வளவில் நிச்சயிக்க முடியவில்லை. [பவணந்தி முனிவரைப்பற்றிய உண்மை இக்கொங்குமண்டல சதக ஆசிரியரான கார்மேகக் கவிஞர் காலத்துக்கு முன்னும், அவர்காலத்தும், இப்பொழுது நம் காலத்தும் ஒரே அளவினதாய் அறியக்கூடிய பவணந்தியார் வரலாற்றில் பிரசித்தி பெற்றவைகளே.] எனவே இப்பகுதியால் கண்டவற்றையும் தெளிவாக்கிக் கொள்வாம். கொங்குநாடும் பிறநாடும் சேரக் கொங்குமண்டல சரித்திர உண்மைகளும் அவற்றைச் சதகாசிரியர் கூறுமாறும் என்பதன்கீழ் "ஒரு பானை சோற்றுக்கு ஒரு அவுள்தானே பதம் பார்த்தல்" என்னும் பழமொழிபற்றி இவ்வாசிரியரால் பாடப்பட்ட பிறநாட்டுப் புலவர்களாய் நாம் பார்த்த ஞானசம்பந்த(மூர்த்திசுவாமிகள்)ர், சிவப்பிரகாசர், காளிப்புலவர் என்னும் இவர்களை இவ்வாசிரியர், அவர்கள் பாடிய தனிப்பாடல்களையும், அவற்றோடு தொடர்ந்த பிறவரலாற்றையும் மட்டும் சுட்டி அவைதாம் இம்மண்டலத்துக் குரியனவாம் என்று கூறினரன்றி, அவர் வாழ்வு முதலானவற்றை இம்மண்டலத்தோடு தொடர்புபடுத்திக் கூறவில்லை என்றும், அவ்வாறு இவர் கூறுதலும் எல்லாவாற்றானும் இந்நாட்டிற்குரிய புலவர்க்கே யென்றும், அவ்வாறே இந்நாட்டிற் பிறந்து தொண்டைநாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில் நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர் ஒருவரையே இந்நாட்டில் தோன்றிவளர்ந்தவர் என்பதாகவே கூறினர் என்றும், இவ்வாசிரியர் கூற்று மிகாதும், குறையாதும், வரைந்த உண்மையோடுபட்டவைகளென்றும், ஆகையால் இவ்வாசிரியர் கூற்றையே ஒரு தக்க பிரமாணமாகக்கொண்டு இவர் அடியார்க்கு நல்லாரை இம்மண்டலத்தில் அவதரித்தவர் என்பதாக மட்டும் கூறியதால் அவர் இம்மண்டலத்தில் அவதரித்தமை ஒன்று மட்டும்தான் (வளர்ந்ததும் சேர) என்றும் ஏனையவை ஏனைய மண்டலத்துக்குரியவை என்றுங் கருதினர் என்பது ஐயமற அறியப்பட்டதென்றும், இவர் தம் வரலாற்றில் இம்மண்டலத்துக்கில்லாத பகுதிகளைச் சொல்லாமலேவிட்டார் என்றும், இது பவணந்திமுனிவரைப்பாடிய வாற்றில் இருந்தும் வலியுடையதாயிற்று என்றும் கண்டுகொள்க. இனி, இக் கொங்குமண்டல சதகத்தில் நூறு செய்யுட்களாக, அவற்றால் பாடப்பட்ட பெருமக்களின் வரலாறு நன்கு அறியக்கூடியவைகளாய் இருக்கின்றவைகளாக, அவை தம்மை ஆராய்ந்து பார்த்ததிலிருந்து இக் கொங்கு மண்டலத்துக்கு அவ்வவர் வரலாறு எவ்வளவோ அவற்றை மட்டுமே வரைந்து இவ்வாசிரியர் இக்கொங்குமண்டலத்தோடு சேர்த்துக் கூறுகின்றார் என்பது பல்லாற்றானும் நன்கு அறியப்படலானும், அவரவர் வரலாற்று நிகழ்ச்சிகளில் அம்மண்டலத்தோடு சேர்த்துச் சொல்லப்படாதவை அம்மண்டலத்தில் இல்லாதவையென்றே அறியப்படலானும், வரலாற்றுக் குறிப்புக்கள் முற்றிலும் ஐயமற அறியப்பட்ட புலவர் முதலியோரை இவர் பாடியிருப்பது வரைவுபட்ட மெய்ம்மையாக இருப்பதானும், அடியார்க்கு நல்லாரைப்பற்றிப் பாடிய இவர் கூற்றும் மெய்ம்மைக்கரண் உடையதாம் என்க. இவ்வாற்றால் அடியார்க்கு நல்லாரைப்பற்றி இவர் கூறும் கூற்றும் தக்கதோர் பிரமாணமுமாம் என்க. எனவே இப்பகுதியால் பெற்றுக் கொள்ளப்பட்டவைகளாவன.

1. அடியார்க்கு நல்லார் நிரம்பையில் அவதரித்தார்.
2. நிரம்பையிலே வாழாமலும் உரை சொல்லாமலும் விட்டார்.
3. சிலப்பதிகார உரை கொங்குமண்டலத்தில் செய்யப்படவில்லை. இன்னொரு இடத்தில் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. கொங்குமண்டல சதகமும் சிலப்பதிகார உரைச்சிறப்புப் பாயிரமும்

ஆசிரியர் அடியார்க்கு நல்லார் வரலாற்றைப்பற்றிச் சிறிதே னும் அறிந்தார்க்கும், இனிமேல் ஆராய்ந்து அறிய வருவார்க்கும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளக்கூடியதாய்த் தக்க சான்றுக்களாய் முன் நிற்பன; மேலே காட்டிய இக்கொங்குமண்டல சதகப் பாட்டொன்றும், சிலப்பதிகார உரையைப்பற்றி விளக்க விரித்துரைக் கும் அவ்வுரைச் சிறப்புப்பாயிரப் பாட்டுக்கள் மூன்றுமேயாகும். ஈண்டு அவற்றை ஒப்புநோக்கிச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டப்படு கின்றது. அதற்காக அச்சதகப்பாட்டையும் அப்பாயிரப் பாக்களை யும் கீழே தருவாம்.

''பருந்தும் நிழலுமெனப் பாவு முரையும்
பொருந்துநெறி, யெல்லாப் பொருளும்—தெரிந்திப்
படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்னூல்
அடியார்க்கு நல்லானென் பான்.''

''ஒருந் தமிழொரு மூன்று முலகின் புறவகுத்துச்
சேரன் றெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொரு
ளாருந் தெரிய விரித்துரைத் தானடி யார்க்குநல்லான்
காருந் தருவு மனையான் நிரம்பையர் காவலனே.''

''காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்துக் கடியபெருங்
காற்றைக் குரம்பை செய்வார்செய் கைபோலுமற் காலமெனுங்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர் கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்வித்ததே.''

என்பது. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் இவற்றைச் சிலப் பதிகாரம் பதினோராம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அன் றியும் அவர்கள், இப்பாட்டுக்களையே உரையாசிரியர் அடியார்க்கு நல் லார் வரலாற்றைக் குறிப்பதென் றெடுத்துக்காட்டியதோடு, இவ் விரண்டாம் பாட்டில் குறிப்பிட்ட நிரம்பையர் காவலன் என்பதை எடுத்துக்காட்டி, இவ்வுரையாசிரியர்க்கு நிரம்பையர் காவலர் என்று ஒரு பெயர் உண்டென்பதும் தெரிகின்றதென்றும் குறிப்பிட்டிருக் கிறார்கள். அன்றியும் அவற்றின் கீழ்க் குறிப்பில் இம்மூன்றும் பண்டைக்காலத்தனவே; இயற்றியவர் பெயர் தெரியவில்லை; இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வோர் உறுப்பின் உரை இறுதியிலும் இருந்தன என்றுங் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இப்பாயிரப்பாக்களுள் முதலாம் இரண்டாம் பாட்டுக்களின் பொருள்கள் அவ்வளவு கடினமாகவில்லை. மூன்றாம் பாட்டு அருஞ்சொற்கள் பல உள்ளன. அன்றியும் இதன் கண்ணுள்ள உவமை இது ஒரு பழங்காலப் பாட்டென்பதைக் காட்டுகின்றது. அச்சொற்களின் கருத்தை அறிவாம். கடம், குரம்பை என்னும் இச் சொற்களுக்குச் சென்னை சர்வகலா சங்க "லெக்ஸிகன்" அகராதிக்காரர் பொருள்கூறி இருக்கின்றனர்.

1. கடம்=water pot, vessel, குடம், "மலயந்தன்னில் குடமுனி சேறலொடும்" (கந்தப்புராணம் திருக்கலியாணப்படலம்) Hand drum played on at bothends, குடமுழவு, Body human or other, உடம்பு (பிங்கலந்தை). ஷை அகராதி பகுதி II (Volume II).

2. குரம்பை=Small hut, hovel shed, சிறு குடில் "இலைவேய்குரம்பை" (மதுரைக் 310) Birds nest, பறவைக் கூடு; Body, உடல், "பொருந்திய குரம்பைதன்னைப் பொருளெனக் கருதல் வேண்டா" (தேவாரம் 488—1) granary, store house for grain; தானியக்கூடு, "நெற்குவை குரம்பையின் நிரப்புவித்தனரே" (கந்தப்புராணம் நாட்டுப்படலம் 26) [மேற்படி அகராதி பகுதி II.] என்பன இவற்றின் கருத்துக்களாகும். இவ்வாற்றால் அவ்விரண்டு சொற்களின் கருத்துக்களை விளங்கிக்கொள்க. ஈண்டுக் கடம் என்பதற்குக்கடம் போன்ற பாத்திரம் எனவும், குரம்பை என்பதற்குக் கூடுஎன்றும் பொருள் கொள்க. இனி அப்பாட்டின் கருத்துரையையும் தருவாம். பருந்தும் நிழலுமென்னும் அம்முதலாம் பாட்டின் கருத்துரையாவது; 1. அடியார்க்கு நல்லான் என்பான் சிலப்பதிகாரம் என்னும் நல்ல நூலுக்குப் பொருந்து நெறியெல்லாப் பொருளும் தெரிந்து அதன் பாவும், அதற்குச் செய்யப்படும் உரையும், பருந்தும் நிழலுமென்னப் பொருந்த இத்தமிழகத்தார்க்கு நல்லமிர்தம் போலும் இனிமையான உரை செய்தான் எனவும், [பொருந்த என்பதைத் தமிழகத்தார்க்கு நல்லமிர்தம்போலும் பொருந்த என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுங் கூறலாம்.] "ஒருந்தமிழ் ஒரு மூன்றும்" என்னும் முதலேயுடைய அவ்விரண்டாம்பாட்டால், உலகம் இன்புறும்படியாக ஓர்ந்துணரும் தமிழ் ஒரு மூன்றூலும் வகுத்துச் சேரனுன இளங்கோவடிகளால் சொல்லப்பட்ட சிலப்பதிகாரம் என்னும் நூலுக்குச் சேர்ந்த பொருள்கள் எல்லாரும் தெரிந்து விளங்கும்படியாக விரித்துரைத் தான் அடியார்க்கு நல்லான். அவன் யாரெனில்; காரையும் தருவை யும் ஒத்த கொடைக்குணத்தவனை நிரம்பையர் காவலனே என்பது. இவ்வாறன்றி 'ஒருந்தமிழ் ஒரு மூன்று முலகின்புற' என உலகத் தோடு சேர்க்கிலும் 'ஒருந்தமிழொரு மூன்றும் ஆரும் தெரிய விரித் துரைத்தா னடியார்க்கு நல்லானென் றுரைப்பினும் பொருந்தும். இவ்வாறு அப்பொருத்தங்கள் இருக்குமாற்றை அறிக. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்குரைசெய்தார் என்னும் செய்தி அம் முதலாம் பாட்டாற் கூறப்பட்டிருக்கவும் பின்னர் அவ்விரண்டாம் பாட்டாலும் கூறியது என்னேயெனின்; முன்னர் அடியார்க்கு நல்லார் என்று வாளா கூறினர். பின்னர் அவ்வடியார்க்கு நல்லார் யார் என்பதை விளக்குவதற்கு "நிரம்பையர் காவலனே" என்னும் அடி யார்க்கு நல்லாரே என்று ஏகார ஈற்றொடு புணர்த்தித் தேற்றமாகக் கூறி வெளிப்படுத்தினர். அடியார்க்கு நல்லார் என்பதினும் நிரம் பையர் காவலனே என்பதால் அவ்வாசிரியர் பெயரை இன்னுங்கூட விளங்குமென்று அவர் கருதியதோடு அவ்வுரைக்கும் அவருக்கும் அது பெருமையைக் கொடுக்குமென்று கருதினர் என்றவாறு. இனி அம்மூன்றும் பாட்டு வலியது ஆதலினுலும், பின்னர் ஆராய்ச்சிப் பட இருப்பதாலும் அதற்குத் தெளிவாகச் சொற்பொருள் அறிந்து கொள்வாம். காற்றைப் பிடித்து — காற்றினைப் பிடித்து; கடத்தி லடைத்து—குடத்தில் (அல்லது குடம்போன்ற பாத்திரத்தில்) அடைத்து; கடிய பெருங் காற்றை — வலிமை பொருந்திய அப் பெருங்காற்றை; குரம்பை செய்வார் — கூடாகச் செய்வாரது செய்கைபோலும் —(அவ்வளவு கடினமான வலிமை பொருந்திய) செய்கையைப் போலும்; காலமென்னுங் கூற்றை — காலக்கடவுள் என்னும் எமனையும், தவிர்த்தருள் — (எதிர்த்துவந்தாலும் ஊறு செய்யப்படாது) தவிர்த்தருள் செய்கின்ற; மற்பொப்பண்ண காங் கேயர்கோன் — மல்யுத்தத்தில் சிறந்தவனை பொப்பண்ண காங் கேயன் என்னும்சேனைத்தலைவன்; அளித்த சோற்றுச் செருக்கினு

லல்லவோ—கொடுத்த சோற்றை உண்ட செருக்கினலல்லவோ; தமிழ் மூன்று—மூன்று தமிழையும் சொல்லும் சிலப்பதிகாரத்துக்கு, உரை சொல்லுவித்ததே—உரையைச் சொல்லுவித்ததே என்பது. மேலே சோற்றினல் அல்ல; சோற்றினது செருக்கினுல் என்பதை யறிக. கோன் என்பது "தொண்டை நன்ஞடுபுரக்கின்ற கோன்......தோன் றலெங்கள், வண்டையர்கோன் கருணாகரன்" [தொ. ம. ச 92] என்று படிக்காசுப்புலவர் கூறிஞற்போல ஒரு அரசியல் தலைவனையே குறித்து வந்தது. ஈண்டு காங்கேயர், எனினும் காங்கேயன் எனி னும் ஒன்றே. காங்கேயன் என்பது பட்டப்பெயரா இயற்பெயரா என்பது தோன்ற விரித்துரைக்காமல் விட்டது, பின்னர் அது ஆராய்ச்சிப்பட இருப்பதால் என்க. சிலப்பதிகார உரை வெளியாகி இப்பொழுது ஆறு நூற்றுண்டுகள்வரை சென்றுவிட்டன. சிலப்பதி காரத்தின் ஒரு மூலையிலே ஒதுக்கப்பட்டுச் செய்வித்தவர் பொப் பண்ண காங்கேயர்கோன் என்னும் பிரபு என்றும், செய்த அடி யார்க்கு நல்லார்க்கு நிரம்பையர் காவலர் என்னும் பெயருண்டென் றும், இவ்வளவையும் [வரலாறு புலஞகாமையால்) சந்தர்ப்பம், இடம் அறியாமையால் பிறர்க்கு அறிவித்து இவை இதுகாறும் வந் தன. இப்பொழுது அவர் வரலாறு வெளியாகி இப்பாட்டின் பல் வேறு சந்தர்ப்பங்களையும் அறிந்த பின்னரே இவ்வாறு உரை செய்ய நேர்ந்தது. இனிமேல் இப்பகுதியால் அவர்கள் சரித்திரக் குறிப் பாக அறியக்கிடப்பவைகளை அறிவாம்.

1. சிலப்பதிகாரத்துக்கு ஆருந்தெரிய விரித்து உரைசெய்த அடியார்க்கு நல்லார் என்பார் யாரெனின் காரையும் தருவைபு மோத்த நிரம்பையர் காவலனே என்பது,

2. அவ்வுரையைச் சொல்லுவித்த காங்கேயன் என்பான் கால மென்னும் கூற்றுவன் எதிர்த்து வந்தாலும் தவிர்த்தருள் செய்யும்மல் லில் வல்லவஞன பொப்பண்ணகாங்கேயன் என்னும் சேனைத்தலை வன் என்பது.

இனி, இப்பாயிரப்பாக்கள் மிக முக்கியமானவை. இவை மிகவொட்ட நின்றே இவ்வரலாற்றுக் குறிப்பை உணர்த்துகின்றன. பாயிரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதகம் என்னும் இவ்விரண்டினையும் ஒப்பநோக்கி அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை யாவையென்றறிவாம்.

"ஒருந்தமிழொரு மூன்றும் ... ... ... ... ஆருந்தெரியவிரித்துரைத் தானடியார்க்கு நல்லான், காரும் தருவு மனையான் நிரம்பையர் காவலனே" என உரைச் சிறப்புப் பாயிரத்தால் உரையாசிரியராய அடியார்க்கு நல்லார் குறிக்கப்படுகின்றார். "குருவைபுணர்ந்த ... ... ... ... தருவை நிகரும் சிலப்பதிகாரத் தனித் தமிழுக் கருமை உரைசெய் யடியார்க்கு நல்லார்" எனச் சதகக்காரரால் குறிப்பிடப்படுகின்றார். சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் உரை செய்ததைஇட்டு இரண்டும் ஒன்றுபட்டுரைக்கின்றன. சதகமோ அவர்க்கு அடியார்க்கு நல்லார் என்னும் இயற்பெயர் ஒன்றையே சொல்லி அமைகின்றது. சிறப்புப் பாயிரமோ அவருக் கவ்வியற்பெயரே யன்றியும் நிரம்பையர், காவலனே, என்றும் இன்னும் இரண்டு காரணப் பெயர்களைச் சேர்த்துச் சொல்லி அமைகின்றது. சதகக்காரர், அங்ஙனம் இயற்பெயரை மாத்திரம் சொல்லியவாறும்; பாயிரக்காரர், அவ்வியற்பெயரையே யன்றிக் காரணப் பெயர்களையும் சேர்த்துச் சொல்லியவாறும் என்னை? ஒருவர், தம் இளமைக் காலத்தே முன்னர் இயற்பெயரால் அழைக்கப்பெறுவதும், தம் செயலின் புகழ்காரணமாக அக்காரணப் பெயரால் பின்னர் அழைக்கப்பெறுவதும்தானே யாண்டும் வழக்காறு. அவ்வாறாயின் இயற்பெயரை மாத்திரம் சுட்டியுரைக்கும் சதகம் அவர் தம் இளமைக் காலத்தே பாடப்பட்டது. காரணப்பெயர்களைச் சேர்த்துரைக்கும் பாயிரமோ அவர் தம் பிற்காலத்திற் பாடப்பட்டதாங்கொல் எனல் வேண்டுமே. அவ்வாறாயின் சதகம் பாயிரத்தின் முன்னர் பாடப்பட்டது என்னும் புரைபாடான முடிபன்றோ முடிபாகின்றது. அது குற்றமே. ஒரு பெரியார் பிறந்து, புகழ்பட (வாழ்கின்றபோது அருகியும்) வாழ்ந்து ஆண்டுகள் பல சென்றதன்பின்னன்றோ அப்புகழ்காரணமாகச் சதக நூலிற் குறிக்கப்படுகின்றனர். அவ்வாறு குறிக்கப்பட்டிருத்தலைத் தொண்டை மண்டல சதகம் முதலிய சதகங்களில் காண்கின்றோமன்றே. ஆனால் பாயிரமோ நூலியற்றினார் அன்றி உரையியற்றினார் காலத்தே பாடப்படுவதன்றி, அவருமறிய அவர் முன்னிலையிலும் பாடப்பெறும் வழக்காறும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்க்கு நல்லார்க் கமைந்த நிரம்பையர், காவலன் என்னும் காரணப் பெயர்களைக்கொண்டு மட்டும் நோக்கியவழி சிறப்புப் பாயிரம் பின்னரும், சதகம் முன்னரும் பாடப்பட்டதென்னல் வேண்டுமாலும் பாயிரம், சதகம் என்னும் அவை இரண்டையும் நோக்கிய வழி, பாயிரம் முன்னரும், சதகம் அதன் பின்னரும் பாடப்பட்டதென்றன்றோ முடிபாகிறது. உண்மையில் இவற்றுள் பாயிரம்தான் முன்னர்ச் சொல்லப்பட்டது. அது எவ்வாறெனில் ஒருவர் ஒரு நூல் செய்யின் அந்நூல் அணிந்துரையும் அந்நூல் அரங்கேறி வெளிவரும் அக்காலத்தே செய்யப்பட்டாற்போல, அடியார்க்கு நல்லார் உரைசெய்த அக்காலத்திலேயே; அவ்விடத்திலேயே உரைச்சிறப்புப் பாயிரமும் பாடப்பட்டிருக்கவேண்டுமென்பது நிச்சயம். இன்னும் சதகம்தான் பின்னர்ப் பாடப்பட்டது, என்பது, பலவாற்றாலும் பெறப்படுகின்றது. பாயிரம், 'ஆருந் தெரிய விரித்துரைத்தான்' என அவர் உரை செய்த வரலாற்றைச் சொல்லச் சதகமோ! அப்பாயிர வாயிலாகவே அவரை அறிந்து, 'அருமை உரை செய்த அடியார்க்கு நல்லார்' எனப் பாயிரக்காரர் பாடியிருத்தலினாலும் என்பது. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்கு உரைசெய்தார் என்னும் செய்தியை அறிந்தபின்னரன்றோ? சதகக்காரர் அங்ஙனம் உரை செய்தமையை அவர்க்கு அடையாகப் புணர்த்திப் பாடியிருத்தல் கூடுமென்பது. உரை செய்தமையைப்பற்றி உரைக்கும் பாயிரம், உரை செய்தவரைப்பற்றி உரைக்கும் சதகத்திலும் காலத்தான் முந்தியது என்க. இப்பாயிரத்தைவிட அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்குரை செய்த செய்தியைத் தமிழ்நாட்டுக்கு முதன் முதல் வெளியிட்ட சான்று ஒன்றுமேயில்லை.

அன்றியும் அச்சதகக்காரர், தம் சதகப் பாக்களிலே இச்சிலப்பதிகாரப் பாயிரப்பாக்களை மேற்கோளாகக் காட்டித் தம் சதகம் பாடியிருத்தலின் சதகம் பிந்தியதென்பது இன்னும் அறியப்படும். அன்றியும் இச்சதகம், இச்சதக ஆசிரியரால் இயற்றப்பட்டதாகலின் அவர் வாழ்ந்தகாலமான கி. பி. ஆயிரத்து எழுநூற்று இருபதாம் ஆண்டுவரை இயற்றப்பட்டது. பாயிரமோ! அடியார்க்கு நல்லார் வாழ்ந்த காலமான பதினாலாம் நூற்றாண்டின் மத்தியபகுதிவரையில் இயற்றப்பட்டது. எனவே ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுவரை

5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயிரம் முந்தி இயற்றப்பட்டதென்க. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களும் இப்பாக்களை மிகப் பழங்காலத்தனவே என்று கூறினர்கள். சிலப்பதிகாரஉரை பதினைன்காம் நூற்றாண்டின் மத்தியபகுதிவரை வெளியானதாக, அவ்வுரையோடு கூடிய பாயிரப் பாக்களும் அவ்வுரையோடு வெளியாயின. அவ்வுரையைச் செய்த அடியார்க்கு நல்லார் நிரம்பையிலே அவதரித்தார் என்பதை அப் அப்பாயிரப்பாக்களில் இருந்து அறிந்து கொண்டு, அவ்வாறு அறிந்த சதகக்காரர், அவர் நிரம்பையிலே அவதரித்தார் என்பதையே குறிப்பிட்டுப்பாடி, அப்பாயிரப்பாக்களையே மேற்கோளாகக் காட்டி, அதனோடு இச்சதகப்பாக்களையும் சேர்த்து அமைத்திட்டார் என்க. எனவே, சதகக்காரர் அடியார்க்கு நல்லாரைப்பற்றிக் குறிப்பிட்டது பிந்தி, சிறப்புப் பாயிரக்காரர் அடியார்க்கு நல்லாரைப்பற்றிக் குறிப்பிட்டது முந்தி. அப்பாயிரம்பாடிப் பல நூற்றாண்டுகள் கழிந்துதான் சதகம் பாடப்பட்டது என்பது பல வழிகளாலும் நாட்டப்படுவது ஒன்றாகும். இது நிற்க, சிறப்புப் பாயிரம் சதகம் என்னும் இவ்விரண்டும் சிலப்பதிகாரத்துக்குரை செய்த அவ்வாசிரியரைப்பற்றிக் கூறிய வழியில், அன்றிச் சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் என்பார் உரை செய்தார் என்பதைச் சொல்லும் ஒரே வழியில், ஒற்றுமையேயன்றி வேற்றுமைகள் பல வழிகளில் அதிகமாய்க் காணப்படுகின்றன. பாயிரத்தில் அவர் காரும் தருவுமொத்த நிரம்பையர் காவலனே என்னும் அடியார்க்கு நல்லார் என்று அழைக்கப்படுகின்றார். சதகத்தில் அவர் அடியார்க்கு நல்லார் என்று தனிப் பெயரால் மாத்திரம் அழைக்கப்படுவதோடு, அவர் பிறந்த நிரம்பைப்பதி கொங்குமண்டலத்துள்ளதென்றும் அச்சதகம் கூறுகின்றது. சதகம் உரை செய்த வரலாற்றைப் பற்றிச் சொல்லவில்லை. உரை செய்த அடியார்க்கு நல்லாரை மட்டும்தான் சுட்டி உரைக்கின்றது. பாயிரமோ! சதகத்தினும் பார்க்க இன்னும் அடியார்க்கு நல்லாரைப் பற்றியும் அவரின் வரலாற்றுக் குறிப்புக்களையும், அவ்வுரையை இயற்றித் தரும்படி கேட்டவரான காங்கேயர்கோனையும், அவன் வரலாற்றுக் குறிப்புக்களையும், இன்னும் இவ்வடியார்க்கு நல்லாரோடு தொடர்ந்த பிற குறிப்புக்களையும் அதிகப்பாடாக உரைக்கின்றது. சதகக்காரர், அவரை நிரம்பை யென்னுமூரோடும், நிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையைக் கொங்குமண்டலத்தோடும் உரைக்கப், பாயிரக்காரர் அவரை நிரம்பையர், காவலன் என்னும் பெயர்களைச் சேர்த்துச் சொல்லுகின்றார் என்றோமல்லவா? அங்ஙனமாயின் என்னை! நிரம்பையர்காவலர் என்னும் பெயரை அச்சதகக்காரர் கூறுமல்விட்டவாறு. அன்றியும் என்னை! அச்சதகக்காரர் பாயிரக்காரர் கூறியாங்கு அவ்வடியார்க்கு நல்லாரது பிறவரலாற்றுக் குறிப்புக்களையோ; அவருடன் வாழ்ந்த காங்கேயர்கோனையோ! அவனது வரலாற்றுக்குறிப்புக்களையோ கூறுமல்விட்டவாறு. வரலாறு கூற வந்த — கூறக்கடமைப்பட்ட சதகக்காரர் வரலாற்றைக் கூறுது விடவும், உரை வரலாற்றைமட்டும் பேசவந்த உரைச்சிறப்புப் பாயிரக்காரர், அச்சதகத்திற் கூறப்படாத பிற வரலாறுகளைச் சேர்த்துக் கூறிஇடவும் கிடந்த காரணம் தான் என்னை?

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக் குரைசெய்தார் என்னும் செய்தி, இவ்வுரைச் சிறப்புப்பாயிரத்தில் இருந்தே யாண்டும் பரவியதாக, அப்பாயிரப்பாக்களையே மேற்கோளாகக் காட்டி, அவற்றில் கூறப்பட்ட உண்மைகளையே உண்மைகளாகக் கொண்டு, அவற்றைக்கண்டுவைத்தே இச்சதகக்காரர் இச்சதகப்பாட்டைப்பாடினராக, இவ்வாறு மிகுகாலத்தின் பின்னரே பாடப்பட்ட இச்சதகத்தில் அவ்வாறு அவரைப்பற்றிக் கூறுதுவிடக் கிடந்த தக்க காரணம் என்னை?

அடியார்க்கு நல்லார்க்கு இன்னொரு பெயரான நிரம்பையர், காவலர் என்னும் பெயர்கள் (தொடரால் ஒன்று பொருளால் இரண்டு) அவர் தமக்குவாய்த்த கல்விச் சிறப்பினும் பார்க்க, இடையே ஏற்பட்ட காரணங்களால் ஏற்பட்ட பெயர்களாகக் காணப்படலானும், அவற்றைப் பாயிரகாரர் கூறியாங்கு சதகக்காரரும் ஒருதலையான் கூறவேண்டுதலானும், இவ்வுரையை இயற்றுவித்தவனான காங்கேயர் கோனையும் இச்சதகக்காரர் ஒருதலையான் குறிப்பிட்டே பாட வேண்டுதலானும், அவ்வாறே அடியார்க்கு நல்லார் உரையியற்றியிட்ட சந்தர்ப்பத்தையும் கூறுது விட்டமையானும், பின்னர்ப்பாடிய சதகக்காரர் முன்னர் வெளியான சிறப்புப் பாயிரத்தில் வெளியான வரலாற்றுக் குறிப்புக்களினும் கூடவே பாடுதலன்றிக் குறைத்துப் பாடுதல் கூடாவாகலானும், செய்தாரை அன்றிச் செய்வித்தாரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விருவர் தம் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களையும் பாடி இருத்தல் சதகமரபில் கண்டதாலும், ஆசிரியர் இவை அனைத்தும் இம்மண்டலத்து இல்லாத நிகழ்ச்சிகளாதலின் சொல்லாமல் விட்டார் என்று கடைப்பிடிக்க. சதகம் பாடுவார் எல்லாரும் முன்னர் வெளிப்பட்ட நூற் குறிப்புகளையோ, பிறவரலாற்றையோ, சான்றுக்களையோ பின் பற்றிப் பாடுவதாக, பாயிரம் வெளிப்பட்டு எவ்வளவோ ஆண்டுகளின் பின் வெளிவந்ததான இச்சதகச் செய்யுளிலே, பாயிரத்தில் கூறப் பட்டதான அவ்வரலாற்றுக் குறிப்புக்கள் ஒன்றேனும் கூறப்பட வில்லையே! இதன் காரணம் தான் என்னை? இவ்வாற்றால் இன்னொரு நாட்டில் இவர் வாழ்வு நிகழ்ந்ததென்பதுதான் இவ்வாசிரியர் உள்ளக் கருத்து மென்பது விளங்கவில்லையா? எனவே ஆசிரியர் இவ்வாறு அவதரித்த ஒன்றையே பாடி, பாயிரத்தால் கூறப்பட்ட ஏனையவெல் லாம் இந்நாட்டுக்குத் தொடர்பில்லையென வேண்டுமென்றே விலக்கி விட்டார் என்க. இவ்வுண்மையை நாட்ட இன்னும் பலவழிகள் உண்டு.

1 கொங்குமண்டல வரலாற்றுண்மைகளும் அவற்றைச் சதகாசிரியர் கூறுமாறும் என்பதன்கீழ் இவ்வாசிரியராற் பாடப்பெறும் சரித்திரக் குறிப்புக்கள் மிகவும் நுண்மையும், வரைவுமுள்ளன வென்றும், அவர் கூற்றுக்கள் ஒரு பிரமாணமாக ஏற்றுக்கொள்ளும் தகுதிப்பாடுடையன வென்றும், அவரால் சொல்லப்பட்டவைகளே அந்நாட்டில் நிகழ்ந்தவை என்றும், சொல்லாதவையெல்லாம் அந் நாட்டில் இல்லையென்றே—அதாவது நிகழாதனவென்றே அவ்வாசிரி யரால் விலக்கிப் பாடப்பட்டவை என்றும் கண்டாமன்றே. எனவே இவ்வாற்றானும் இவை விலக்கிவிடப்பட்டவை யென்றே முடிபாகிறது.

2 இனிமேலே சதகமரபிலே, இயற்றினரையன்றி இயற்றுவித் தாரையும் பாடி அமைத்தல் சதகவழக்காம் என்றும் கண்டாமன் றே. அன்றியும் அவர் தம் பல்வேறு குறிப்புக்களையும் அகப்படுத் திப்பாடுதலே அம்மரபிலன்றிச், சதகக் கூற்றுக்களிலும் கண்டாமன் றே. ஆகையால் அவதரித்த ஒன்றே தவிர ஏனைப் பாயிரத்தால் பெறப்பட்ட உண்மைகள் அனைத்தும் வேண்டுமென்றே இச்சதகக் காரரால் விலக்கிப்பாடப்பட்டவை என்றும் அறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 இவையேயன்றி இன்னொரு வழியால், சித்திரமாக அவர் பாடியவிதத்தில் இருந்தும் பாயிரத்தில் விலக்கப்பட்ட மேற்படி பகுதிகளை உறுதியாகவே விலக்கிவிட்டார் என்பதைக் காண்பாம்.

உரைச்சிறப்புப் பாயிரப்பாக்கள் மூன்று என்பது அவற்றை நோக்கிக்காண்க. (அவை மேலே காட்டப்பட்டிருக்கின்றன.)

இச்சதகக்காரர், அடியார்க்கு நல்லாரை அடியார்க்கு நல்லார் என்னும் அவரது இயற்பெயராலேயே மட்டும் குறிப்பிட்டார் என்றும்; அவ்வாறு குறிப்பிட்டவர் அவ்வியற்பெயரையே மட்டும் சுட்டி உரைக்கும் அப்பாயிரப்பாட்டை மட்டுமே மேற்கோளாகக் காட்டினற் போதுமானதே. அப்பாட்டைக் காட்டாமல் விலக்கி, அடியார்க்கு நல்லாரின் பிற குறிப்புக்களோடு, அவருக்கு நிரம்பையர் காவலர் என்னும் பெயருண்டென்றுகூறும் அவ்விரண்டாம் பாட்டையும், காங்கேயனது வரலாற்றைக்கூறும் மூன்றும் பாட்டையும், மேற்கோளாக எடுத்துக் காட்டினர். அவ்வாறு காட்டின அவ்விரண்டாம் பாட்டிலுள்ளபடி தம் சதகத்திலே நிரம்பையர் காவலன் என்னும் இன்னொருபெயரைக் கொண்ட அடியார்க்கு நல்லார் தான் நிரம்பைப் பதியில் அவதரித்தார் என்று பாடவேண்டும். அவ்வாறு பாடாமல், அடியார்க்கு நல்லார் என்று மட்டும்பாடி நிரம்பையர் காவலன் என்னும் பெயரை விலக்கிவிட்டனர். எனவே! அம்முதலாம் பாட்டைக் காட்டினலே போதும்மானதாயிருக்க, அவ்வாறு காட்டாமல் அவ்விரண்டாம், மூன்றும் பாக்களையே காட்டி உண்மை அளவால் உடன்பட்டு, அவற்றை மேற்கொண்டு, அவை இம்மண்டலத்துக்குரியவல்ல வென்று விலக்கி, அத்துடன் நிரம்பையர் காவலன் என்னும் பெயரையும் பாடாமல் விலக்கி விட்டார் என்பது. அன்றியும் அப்பாயிரத்தில், ஆருந்தெரிய விரித்துரைத்தானடியார்க்கு நல்லான் என்பதையே சுட்டி, அவ்வடியார்க்கு நல்லாரையே சுட்டி, 'தருவைநிகரும் சிலப்பதிகாரத் தனித்தமிழுக்கருமையுரை செய்யடியார்க்கு நல்லார்' என்றுகூறியதேயன்றி அப்பாயிரத்திற் கூறப்பட்ட ஒன்றையுமே சதகக்காரர் சொல்லவில்லை என்பதுமாம். அற்றன்று அச்சதகக்காரர் அடியார்க்கு நல்லார் அவதரித்த செய்தியைக்கூறினுரெனின் அவதரித்த செய்தியைப் பாயிரத்திலும் குறிப்பிடவில்லையென்க.

எனவே! சிறப்புப்பாயிரமும், சதகமும் காலத்தால் வேறு பட்டாற்போல, இடத்தாலும் வேறுபட்டு விட்டது என்றறிக. சிறப்புப்பாயிரம் பாடப்பட்ட இடம் வேறு. சதகம் பாடப்பட்ட இடம் வேறு. சிறப்புப்பாயிரம் பாடினோர் ஓர் இடத்தார்; சதகம் பாடினோர் இன்னோர் இடத்தார்; சிறப்புப்பாயிரம் பாடினோர் அப்பொழுது அடியார்க்கு நல்லார்க்கு நிரம்பையர் காவலன் என்னும் பெயர் இருந்தலையும், அக்காலத்து அவர் நிலையையும், அவ்வுரை வரலாற்றையும் தாமே நேரே அறிந்து பாடினோர். சதகக்காரர், சிலப்பதிகாரத்துக் குரைசெய்த அடியார்க்கு நல்லார் நிரம்பைப் பதியிலே பிறந்தவர் என்பதை மட்டும் நான்கு நூற்றூண்டுகள் வரை பின்னர் அறிந்தே பாடினோர் என்க. எனவே அடியார்க்கு நல்லாரைப்பாடிய சதகத்தையும், அதற்குச் சான்ருக காட்டப்பட்ட உரைச்சிறப்புப் பாயிரப் பாக்களையும் ஒப்பிட்டுப்பார்த்து, இச்சதக ஆசிரியரால் வேண்டுமென்று விலக்கிவிடப்பட்டனவென்று காணப்பட்டனவாய், இக் கொங்கு நாட்டில் இல்லை யென்று தீர்மானிக்கப்படுபவைகளாவன.

1. நிரம்பையில் காங்கேயர்கோன் என்னும் அரசியல் சேனைத் தலைவன் ஒருவனுல் சிலப்பதிகாரத்துக்குரை சொல்லுவிக்கப்பட வில்லை.

2. அக்காங்கேயன் நிரம்பையில் வாழவில்லை.

3. அடியார்க்கு நல்லார்க்கு நிரம்பையர் என்றும் காவலன் என்றும் அழைக்கப்படும் பெயர்கள் நிரம்பையில் இல்லை.

4. அடியார்க்கு நல்லார் வரலாற்றைப்பற்றித் தொடர்ந்து அறியப்படும் குறிப்புக்களும் இல்லை.

5. காங்கேயன் வரலாற்றைத் தொடர்ந்தறியப்படும் குறிப்புக் களும் இல்லை. இனி இப்பாயிரப் பாக்களையும், அவற்றுள் கூறப் பட்ட உண்மைகளையும், இவ்வடியார்க்கு நல்லாரைப் பாடிய சதகப் பாட்டோடு சேரவைத்து அறிந்ததோடு நில்லாமல், இவற்றைச் சதக மரபு என்பதோடு சார்த்தி எவ்வாறு பொருண்முடிபாகின்றதென்பதையும் அறிவாம். மேலே சதக மரபில், ஒரு புலவர் ஒரு நாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தால் வாழ்ந்ததுங் கொங்குமண்டலமே என்றாற்போலவும், அவ்வாறே நூலோ, உரையோ சொல்லப்பட்டவைகளைக் குறிப்பிட நேர்ந்தால், சொன்னதுங் கொங்குமண்டலமே என்றாற்போலவும், அவ்வாறே சொல்லுவித்தவைகளைக் குறிப்பிடநேர்ந்தால், சொல்லுவித்ததுங் கொங்குமண்டலமே யென்றும் சொல்லுகின்றதென்றும், அவ்வாறே செய்தாரையன்றிச் செய்வித்தாரையும், பாடும் மரபுண் டென்றும் நன்கு அறிந்தாமன்றே. இது வரலாற்றுக்குப் பொருத்த மாவதோடு, இச்சதக ஆசிரியர் மட்டுமல்ல; தொண்டைமண்டல சதகம் முதலிய பழம்சதகங்களிலேயும் சதகமரபு சம்பந்தமாய் ஆசரித்து வரும் உண்மை யென்பதை, முன்னர் நன்குகண்டு வைத்தாமன்றே. அவற்றின்படியும் இங்கிரம்பையிலே — இக்கொங்குமண்டலத்திலே இல்லை என்று கொங்குமண்டல சதகாசிரியரால் விலக்கிவிடப்பட்டவைகள் என்று கொள்ளப்படுபவைகளாவன; (முன்னர்க் கண்டனவும் சேர்த்துக்கொண்டால்)

1. அடியார்க்கு நல்லார் கொங்குமண்டலத்தில் அவதரித்த தொன்றேயன்றி வாழவில்லை.

2. காங்கேயன் கொங்குமண்டலத்தில் அவதரிக்கவும் இல்லை. வாழவுமில்லை.

3. அடியார்க்கு நல்லார் கொங்குமண்டலத்தில் உரை சொல்லவில்லை.

4. காங்கேயன் இம்மண்டலத்திலே இவரைக்கொண்டு உரை செய்விக்கவில்லை.

5. அடியார்க்குநல்லார் கொங்குமண்டலத்தில் நிரம்பையர்காவலன் என்றும் அழைக்கப்படவில்லை என்னுமிவைகள். [வாழ்ந்ததும் கொங்குமண்டலமேயென்று மண்டலத்தைக் கடையடியிற் புணர்த்துவதன்றி இவை தம்மைச் செய்யுள் அகத்தே சேறியக்கூறின் அது ஒப்பில்லை யாலோவெனின்! இவ்வையத்தை முன்னரும் நீக்கினுமன்றே. இவை எல்லாவற்றையும் கூறுதுவிட்டு அடியார்க்கு நல்லாரைப் பாடியது அவ்வொரு பாட்டென்றும், அதில் உரைசெய்த அடியார்க்கு நல்லார் அவதரித்த நிரம்பைப்பதி கொங்குமண்டலமே என்று கூறியதன்றி அதன் அகத்தேயும்யாதும் கூறப்படவில்லையென்றும்அறிக.] இவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாராய்ச்சியின் அகத்தே பெற்றுக்கொள்ளப்பட்டவை. இப் பகுதியான் சதகம், பாயிரம் என்னும் இவ் இரண்டனுலும் பெற்ற முடிபுகளைத் தெளிவாக்கிக்கொண்டு அப்பாற் செல்வாம்.

1 சதகம் சிறப்புப்பாயிரம் என்னும் இரண்டும் உரையாசிரிய ராய அடியார்க்கு நல்லாரைப்பற்றித்தான் சொல்லுகின்றன.

2 எனவே இவ்விரண்டனுலும் குறிக்கப்படுபவர் அவ்வொரு அடியார்க்கு நல்லாரே

3 பாயிரம் அவர் உரைசெய்த வரலாற்றைச் சரிவர அறிந்து சொல்லியது.

4 சதகம், அவ்வுரை செய்த அடியார்க்கு நல்லார் நிரம்பையிலே பிறந்தார் என்பதைப் பாயிரம் வெளியாகி, ஏறைக்குறைய நானூறு ஆண்டுகளின் பின் சொல்லியது. பாயிரமுடிபும் அதற்குடன்பட்டது.

5 சதகம் அடியார்க்கு நல்லார் வரலாற்றைக்கர்ணபரம்பரைக் கதை முதலியவற்றுலும் பாயிரப்பாக்களாலும் சரிவர அறிந்து, அடி யார்க்கு நல்லார் நிரம்பையிலே பிறந்தார் என்பதை மட்டும் கண்டு, ஏனையவற்றை கோங்குமண்டலத்துக்குத் தொடர்பில்லை என்று வேண்டுமென்று விலக்கிப்பாடியது. எனவே!

6 A. சிறப்புப்பாயிரம் சதகத்தின் முன்னர்ப் பாடப் பட்டது.

B. அப்பாயிரம் கி. பி. பதினுன்காம் நூற்றுண்டுவரை இயற் றப்பெற்றது

7 A. சதகம் பாயிரத்தின் பின்னர்ப் பாடப்பட்டது.

B. சதகம் கோங்குமண்டலத்தில் இயற்றப்பெற்றது.

8 பாயிரத்தில் கூறப்பட்ட உண்மைகளால் பாயிரம் கோங்கு மண்டலத்தில் இயற்றப்பட்டிருக்க முடியாது. (ஆனுல் அதுஇவ்வள வில் நிரூபிக்கப்படவில்லை

9 பின்னர் கூறப்பட்ட சதகத்தால் அடியார்க்கு நல்லார் வர லாற்றின் முற்பகுதியான அவர் பிறப்பு அறியப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 முன்னர்ப் பாடப்பட்ட சிறப்புப் பாயிரத்தால், அவர் வாழ்க்கையில் நடுப்பகுதியில் நிகழ்ந்ததான உரைவரலாறு அறியப்பட்டது.

இப்பாயிரத்தில் வைத்து இன்னும் சில ஐயங்களைக் களைவாம். உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரைப்பற்றி ஒரு நாட்டோடு தொடர்புபடுத்திக் கூறும் சான்றுகள் இதுவரை யாதேனும் இல்லை. இக்கொங்குமண்டல சதகம் ஒன்றே, அங்ஙனம் கொங்குமண்டலத்தோடு தொடர்புபடுத்தி உரைக்கின்றமையின்; அதாவது அந்நாட்டில் அவதரித்தார் என்றுரைக்கின்றமையின்; அவதரித்தவர் அந்நாட்டிற்றானே வாழ்ந்து, அந்நாட்டிற்றானே உரையும் செய்திருத்தல் கூடும் என்றும் பிறர் கருதவுங் கூடும். ஆயின் அது, ஆராய்ச்சி அறிவென்னும் செம்பொருள் அமைவரப் பெறுர் மாட்டுத்தான் எழவல்லதாம். அடியார்க்கு நல்லாரைப்பற்றி வேறும் இடத்தொடு தொடர்புபடுத்திக் கூறும் சான்றுக்கள் பல இருக்கின்றன. ஆயின் அவை ஆராய்ச்சியாலேயேமட்டும் பெறப்படுகின்றன. அம்முடிபைத் தருகின்றன. வெளிப்படையிற் கூறப்படவில்லை. தத்தமக்குப் புலப்படாமைகொண்டு அங்ஙனம் இல்லை என்னல் பொருந்தாதே. [வெளிப்படையிற் சொன்னுல் இவ்வளவுகாலம் செல்லாமல், சிரமம் இல்லாமல் அறியலாமே. வெளிப்படையிற் சொல்லாமையாற்தான் பிறர்க்கு இதுவரை புலப்படவில்லை. அன்றியும் அச்சதகாசிரியர் அவதரித்த ஒன்றுக்காகவே அம்மண்டலத்தோடு சேர்த்துப் பாடியதெனவும், ஏனைய ஆண்டு நிகழாத நிகழ்ச்சிகள் என்றும் கண்டு வைத்தே; அதுபற்றி அப்பாயிரத்தில் கூறப்பட்ட உண்மைகள் அனைத்தையும் விலக்கிப்பாடியது எனவும், சதகாசிரியர் இப்பாயிரத்தின் வழியினுலேயன்றி பிறவழிகளாலும் அறிந்துதான் அடியார்க்கு நல்லாரை இவ்வாறு பாடினுர் எனவும், அச்சதகக் கருத்துரைக்காரர் கூறியவாறு "அவதரித்து வந்த" என்பதும், யாம் கூறியவாறு அவதரித்தவென்பதும் ஒன்றுதான் எனவும், அவை அப்பாட்டால் பெறப்படுபவை என முன்னர் அறுதியிட்டுக் கூறினுமன்றே. அன்றியும், விலக்கி விடப்பட்ட இப்பகுதிகள் ஏனைய சதகாசிரியன்மாரால் போற்றிப் பாடப்பட்ட இடங்களாகவும் இருக்கின்றனவென்பதைச் சதக மரபு, சதகாசிரியர் கருத்து, என்பவற்றினுலும் தெருட்டி இட்டாமன்றே.] இவை நிற்க, இன்னொரு வழியாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாம். ஒரு மண்டல சதகத்தில் பாடப்படுவார் யாவரும், அம் மண்டலத்திலே தான் வாழ்ந்து, அம்மண்டலத்திலேதான் நூலோ, உரையோ செய்து மறைந்தவர் என்னின்! அது வாய்வதாமோ? பவணந்தி முனிவர் தொண்டைமண்டல சதகத்தில் பாடப்பெறுதல் கொண்டு அவரைத் தொண்டை நாட்டினர் என்போமா? அன்றிக் கொங்குமண்டல சதகத்தில் பாடப்பெறுதல் கொண்டு அவரைக் கொங்குமண்டலத்துக்கு மட்டும்தான் தொடர்புடையவர் என் போமா?

ஞானப்பிரகாசமுனிவர் இவ்வீழமல்லாத இந்தியத் தமிழ் நாடான சிதம்பரத்தின்கட்சென்று சிவஞானசித்தியாருக்கோ ருரை யும், பிற நூல்களும் செய்ததும், அவர் பெயரால் ஞானப்பிரகாசம் என்னும் குளம் இப்பொழுதும் சிதம்பரத்தில் வழங்கப்பெறுவதும் பொய்யாமோ? இவர் (ஞானப்பிரகாச முனிவர்) "புசித்தற்கு ஆன் கன்று கேட்ட ஒல்லாந்த தேசாதிபதிக்கு அது மறுத்த குற்றத்துக் கஞ்சிச் சோழநாட்டுக்கோடி அங்கே தமிழ்கற்று வல்லுனராகிச் சிதம் பரத்திலே இருந்துசிவஞான சித்தியாருக்குத் தமிழிலோருரையும்பின் னர்க் கௌட தேசம் சென்று வடமொழியிலும் வல்லுனராகிக் ஹேமாத்திரி கற்ப முதலாக அனேக வடமொழி நூல்களும் செய்த வர். சிதம்பரத்து ஞானப்பிரகாசம் அவர் வெட்டிய குளம்'' என்பர். (ஆ. மு. ஈ. ம. பு.ச. பக். 8) ஞானப்பிரகாசரேயன்றி இன்னும் இவ் வீழத்தார் சிலர் பலரும் இவ்வீழத்தையே பிறப்புக்கும், இந்தியத் தமிழ் நாட்டையே மறைப்புக்கும், இடனாகப் பெற்று வாழ்ந்த செய் திகள் எல்லாம் இன்னும் ஐயமின்றி அறியப்படுகின்றன வல்லவா? எனவே பிறப்பொன்றினன் இவ்வீழ மண்டலத்துக்கு இவர்கள் உரி மையாம் தொடர்புபற்றிய உண்மைபோல; அதைக்கூறியிட்ட ஒரு குறிப்பைப்போல; அக்கொங்கு மண்டல சதக்காரரும், அப்பிறப் பொன்றையே தொடர்ந்து, அதனுள்ளும் நிரம்பைப்பதி யென்பதை யும் குறிப்பிட்டுச் சுட்டி "அவதரித்த நிரம்பைப் பதியுங் கொங்கு மண்டலமே" யென்று பாடினர் என்க. அன்றியும் அது இன்னும் வலிபெற்ற நிலைபெற்ற உண்மையாமாறு என்னையெனின்! "அடி யார்க்கு நல்லாரும் கொங்கு மண்டலமே" யென்றாற்போலப் பாடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாமல் " அடியார்க்கு நல்லார் அவதரித்த (நிரம்பைப்பதியுங்) கொங்குமண்டலமே" யென்று பாடப்பட்டமையால் அது அவரால் கருத்தாக அப்பிறப்பொன்றையே வரைந்து சுட்டிக் கூறப்பட்டது தான் என்பது. ஒருவரின் வரலாறு, பிறத்தல் வளர்த்தல் வாழ்தல் என்றும் முப்பாலதாம் என்பது. ஈண்டு, அடியார்க்கு நல்லாரும் கொங்கு மண்டலமே யெனின் அது அம்மூன்றையும் தழுவுதலும் பிறப்பொன்றையே தழுவுதலும் கூடும். [வல்காவலன் சீய கங்கனும் தான் கொங்கு மண்டலமே, வாட்டடங் கைத்தரு மக் கு மணன் கொங்குமண்டலமே என இவ்வாசிரியர் அம்மூன்றையும் தழுவியே கூறினர். சதகமாபுக்கும் அம்மூன்றையும் தழுவுதலே ஒத்தது. யாமும் அவ்வாறே கருதியதாகச் சதக மாபில் சேர்த்தாம். ஆண்டுக் காண்க.] ஆயின் ஈண்டு இக்கார்மேகம் என்னும் மெய்க்கவிஞரோ!. (கொ. ம, ச. ஆசிரியர்) அதன் உள்ளேயும் சென்று அடியார்க்கு நல் லாரின் அவ்வையங்களுக்கு இடமே வை யா ம ல் அவதரித்த ஒன்றையே வரைந்தெடுத்து, 'அடியார்க்கு நல்லார் அவதரித்த நிரம் பைப்பதி' யென்றே கூறினர் என்க. அன்றியும் பவணந்தி முனிவர் நன்னூலைச் செய்தார் என்றும், அவர்தம் வரலாற்றுண்மை இப் பொழுதும் எல்லோரானும் அறியக்கூடியதாய் இருப்பது என்றும், அது அவர் கொங்குமண்டலத்திலே பிறந்து உபதேசம் பெற்றுத் தொண்டைமண்டலத்திலே நன்னூல்இயற்ற இட்டதைக் கொண்டது என்றும், இவ்வாறு இக்கொங்குமண்டலத் திலே பிறந்து இன்னொரு மண்டலத்லே நூல் இயற்றி இட்டவரும், இவ்வாசிரியரால் பாடப்பட்டவரும் இவர் ஒருவரே என் றும், அவரைப்பாடும் கொங்குமண்டல சதக ஆசிரியரும், இவ்வடி யார்க்கு நல்லாரைப்பாடும் கொங்குமண்டல சதக ஆசிரியரும், இவ் வொருவரே என்றும், 'பவணந்தி முனிவரைப்பவணந்திமா முனி தோன்றிவளர் ......... சனகாபுர'மெனவும் அடியார்க்கு நல்லாரை "அவதரித்த நிரம்பைப்பதியெனவுங்கூறிய இடங்களில் உள்ள "தோன்றிவளர்" "அவதரித்த" என்பன ஒரே வரலாற்றுக் குறிப்புக் களைக் கொண்டவைகளெனவும், தோன்றிவளர் என்பது இன்னொரு மண்டலத்தில் நூல் இயற்றியவர் கொங்குமண்டலத்திலே பிறந் தமைக்காகப் பாடப்பட்டதானல் அவ்வாறே "அவரித்த" என்பதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு மண்டலத்தில் உரை இயற்றி அக்கொங்கு மண்டலத்தில் அவதரித்த ஒருவர் என்பதையே அகக்குறிப்பாக நின்று குறிக்கு மெனவும் நிச்சயப்படுத்திக் கொள்க. இப்பத்தியால் மேலும் நிச்சயிக்கப்பட்டவைகளாவன

1 அடியார்க்கு நல்லார் கோங்குமண்டலத்தில் அவதரித்தார் என்பது.

2 இவ்வாசிரியர் சிறப்புப் பாயிரத்தில் கூறப்பட்ட ஏனைய வரலாற்றுண்மைகளை யெல்லாம் இந்நாட்டுக்குரிமைஇல்லையென்றே-வேண்டுமேன்றேவிலக்கிப்பாடினார் என்பது.

---

## 5. அகச்சான்றும் புறச்சான்றும்

இனி, சதகாசிரியர் அகச்சான்றுகொண்டும் அதன் புறச்சான்று கொண்டும் இவ்வலாற்றுண்மை துணிந்து காட்டப்படும். இந்நூலைப் பாடிய இவ்வாசிரியர், தம் ஒரு அறிவையும் மனம் முதலிய அகக் காரணங்களையுமே கருவியாகக்கொண்டு, இக் கொங்குமண்டலத் தோடு தொடர்புடையபுலவர் முதலானோரைப்பாடினார் ஆதலினாலும், அவர் தம்மைப்பாடிய ஒவ்வோர் பாட்டிலும், அப்பாட்டின் ஒவ்வோர் அடிகளிலும், அன்றி ஒவ்வோர் சொற்களிலும்கூட அவ்வாசிரியரின் கருத்தும் கவனமும் சென்று தான் இவ்வாறு பாட்டாக அமைந்திருக்கின்றன ஆதலினாலும், அப்பாட்டெல்லாம் இவ்வாசிரியர் தம் கருத்தென்றும், அகச்சான்று என்றும், வைத்து அறியப்படுமென்க. இவ்வாறு எஞ்சாது பஞ்சமில்லாமல் எண்ணிறந்த இடங்கள்—அதாவது இந்நூன் முழுவதும் இவ்வாசிரியர் அகக் கருத்தே பாட்டாக உருவெடுத்திருக்கின்றன வென்க. ஈண்டிவ்வடியார்க்கு நல்லார் வரலாறு இவர்தம் அகச்சான்று கொண்டறியுமாறு என்னை யெனின்! அவரைப்பாடிய அக்கருத்தை—அதாவது அக்கருத்தை வெளியிட்ட அப்பாட்டின் வரலாற்றுக்கூற்றை, இவர் ஏனையோரைப்பாடிய ஏனைய பாட்டுக்களின்மத்தியில் வைத்து, இவரை இவ்வாறு கூறியது இவ்வாறு கருதித்தான் என நிச்சயிக்கவல்லதாம் என்பது. இனிப் புறச்சான்றுமாறு என்னை யெனின், இவ்வாசிரியர் இச்சதகத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட எடுத்துக்கொள்வதன் முன்னர்த் தொண்டைமண்டல சதகம் முதலிய சதகங்களிலே நன்கு பயின்றிருந்தார் என்பதில் ஐயமில்லை. இவர்காலத்தில் மிக முன்னதாக உள்ள தொண்டை மண்டல சதகத்தை இவர் அறிந்திருந்தார் என்பது நிச்சயம். அன்றியும் இவ்வுண்மை, "தன்னூர்ச் சனகையிற் சன்மதி மாமுனி தந்தைமைந் தன்,............. தொண்டை மண்டலமே" எனப்பவணந்தி முனிவரைப்பாடிய தொண்டைமண்டல சதகப்பாட்டை எடுத்துக்காட்டி இவர்பவணந்தி முனிவரைப் பாடியதாலும் நிச்சயிக்கப்படும். அன்றியும் இவர்,

"ஐவே லசதி யிரவினி லௌவைக் கமுதளித்து
மெய்வேதம், போனிற்கும், கோவை கொண்டோன்புவி, மீதிற் [றவஞ்
செய்வோன் றனிலும் பசுக்காவன் மிக்கெனச் செய்யு மன்பன்
மைவேலை வண்ண னசதியுடன் வாழ்நந்த மண்டலமே"

என நந்த மண்டலசதகத்தில் அசதியைப் பாடிய இப்பாட்டை எடுத்துக்காட்டி,

"தெய்வீக மான தமிழ்ப்புல வோர்கள் தினமுளங் கொள்
பொய்தீ குரையெம் பிராட்டியா ரௌவை புனைந்து புகழ்
செய்கோவை யேற்ற திறலோ னசதி செழித்துவளர்
மைதாழ் பொழிறிகழ் வேலி யுங்கொங்கு மண்டலமே"
(ஷை ச 45)

என, இவர் தமது கொங்குமண்டல சதகத்தில் பாடி இட்டதைக் கொண்டு, தொண்டைமண்டல சதகம் மாத்திரமல்ல நந்தமண்டல சதகம் முதலிய பிற சதகங்களினையும் அறிந்திருந்தார் என்பது ஐயமில்லை. அன்றியும், சதகம் பாட எடுத்துக்கொண்டவர் அதன் முன்னர் பாடி வெளியாய் இருந்த தொண்டை மண்டல சதகம் முதலியவற்றைப் பயின்றே இருப்பார் என்பது நிச்சயமே. எனவே, இவர் கொங்குமண்டல சதகம் பாட எடுத்துக்கொள்வதன் முன்னர் ஒரு மண்டலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி முதலியவற்றை அம்மண்டலத்தோடு சேர்த்துக் கூறும் மரபும், அம்மரபமமையப் பாடிய மண்டல சதகங்களும், இவரால் பாடியிட்ட அடியார்க்கு நல்லாரைப் பற்றிய அப்பாட்டின் சரித்திரக் குறிப்பை நிச்சயித்தற்கண் புறச் சான்

ருக வைத்துக்கொள்ளற்பாலனவாம் என்க. ஆயின், மரபு முன்னர்க் கூறப்பட்டதாதலானும், எல்லாச் சதகப் பாக்களையும் இங்கு எடுத்தாள முடியாதாதலானும், இவர் இக் கொங்குமண்டல சதகம் பாடுதற்கு அங்ஙனம் பாடும் முறையினும், மரபினும், தொண்டை மண்டல சதகம் இவருக்காதாரமாக இருந்ததோடு, சதக இலக்கணம் முற்றிலும் நிரம்பிய சிறந்த சதகமாக இருத்தலினாலும், இத்தொண்டை மண்டல சதகத்தை, இவ்வடியார்க்கு நல்லாரின் வரலாற்றைச் சுட்டிக் கொங்குமண்டலத்தோடு சேர்த்துரைப்பதாக இவ்வாசிரியரால் பாடப்பட்ட அப்பாட்டிற்குப் புறச்சான்ருக ஒருபுறமும்; அடியார்க்கு நல்லாரைப் பாடிய அப்பாட்டை இடையேயும்; கொங்குமண்டல சதகத்தில் அடியார்க்கு நல்லாரைப்பாடிய பாட்டைத் தவிர்த்த ஏனைய பாட்டுக்களை இவ்வாசிரியர் கருத்தென்னும் அகச்சான்ருகவும் வைத்து, இவ்வாசிரியர் அடியார்க்கு நல்லாரை இவ்வாறு கருதித்தான் பாடினர்; இவர் இவ்வாறு பாடியதால் கொங்குமண்டலத்தில் அடியார்க்கு நல்லார் வரலாறு இவ்வளவுதான் என்பதை ஒட்டவைத்துச் சரிவர நன்கு அறிய முடிவதாம் என்க.

இனி, அவ்வழியிற் செல்வாம். அங்ஙனம் நிச்சயிக்க எழுவதன் முன்னர், அவ்வாசிரியர் கருத்தாக எவ்வெவற்றை அதாவது அவர் கூறும் எவ்வெவ் இடங்களை நிச்சயிக்கவேண்டுமென்பதை முன்னரே நிச்சயித்து வரைவு செய்து கொள்ளல்வேண்டும். இவ்வாசிரியர்க்கு இவர் தம் வரலாற்றை உதிக்கச் செய்தவை, அன்றியும் இவ்வாசிரியர் இவர் வரலாற்றை அறிதற்குக் கருவியாய் இருந்தவை, சிலப்பதிகார உறைச்சிறப்புப் பாயிரப்பாக்களும் கர்ண பரம்பரைக் கதைகளுமே யெனக் கண்டோம். கதையோ அவர் மனத்தோடுள்ளது. அவர் மறைய அதுவும் மறைந்துவிட்டது. கர்ண பரம்பரைக் கதையைச் சொன்ஞரும், கேட்டாரும், அவர்வாய்க் கேட்டாருமாய்க் காலாந்தரத்தில் அவர் எல்லாரும் மறைய அக் கதையும் மறைந்துவிட்டது. எனவே, அக்கர்ண பரம்பரைக் கதைகளில் அடியார்க்கு நல்லார் வரலாறு இவ்வாறு வழங்கப்பட்டதென்றேனும், அன்றி, நிச்சயமாக அவர் வரலாற்றுக் குறிப்பைக் கொண்டதொரு கர்ணபரம்பரைக் கதை வழக்கு இருந்ததென்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் இப்பொழுது தெளிவாய்ச் சொல்லுவதற்கில்லை. ஆயின் சிலப்பதிகார உரைச்சிறப்புப் பாயிரமோ! இச்சதக ஆசிரியர் காலத்துக்கு மிக முற்பட்டதாதலாலும், அன்றியும் அவர் அடியார்க்கு நல்லாரைப்பற்றிப் பாடுதலின்கண் ஒரு தலையான் முன்னர் உணர்ந்தே இருந்தாரென்பது ஐயமற முன்னர் பெறப்பட்டதாதலாலும், அன்றியும் இச்சதக ஆசிரியர் தாம் அடியார்க்கு நல்லாரைப்பற்றிக் கூறிய அச்சதகப் பாட்டுக்கு மேற்கோளாகச் சிறப்புப்பாயிரப் பாக்களையே காட்டி இருத்தலினாலும், இப்பாயிரப் பாக்களேயன்றி இத்தமிழகத்தில் இச்சதகப்பாட்டிற்கும் முற்பட்டதாய் அடியார்க்கு நல்லாரைப் பற்றிக்கூறும் ஐயமற்ற சான்றுக்கள் யாதும் இல்லையென்பது நிச்சயமாய் அறியப்படலாலும், இப்பொழுதும் இப்பாயிரப் பாக்களையன்றியே வேறெதுவும் கிடைக்கப்பெறுமையாலும், பாயிரம், சதகம் என்பனவற்றின் ஆராய்ச்சியால் பாயிரம் ஓர் காலத்து ஓர் இடத்தும், சதகம் அதன்பின் இன்னோர்காலத்தில் இன்னோர் இடத்தில் அதனை மேற்கொண்டு இயற்றப்பட்டதென்றும் முடிபு காணப்பட்டதாலும், சிலப்பதிகார உரைச்சிறப்புப் பாயிரத்தாற் சுட்டப்பட்ட அடியார்க்கு நல்லாரும் கொ. ம. சதகத்தாற் குறிக்கப்பட்ட அடியார்க்கு நல்லாரும் ஒருவர் என்பது மேலே பெறப்பட்ட அவ்வாற்றுனும், சிலப்பதிகார உரைச்சிறப்புப் பாயிரத்தில் காணப்படும் அடியார்க்குநல்லார் வரலாற்றுக்குறிப்புக்கள் அனைத்தும் சதக ஆசிரியரால் குறிப்பிட்டு அச்சதகப் பாட்டினகத்தே படைற்பாலனவாம் என்றறிக. ஆயினும் அக்குறிப்புக்கள் அவரைப்பாடிய அப்பாட்டினும் இல்லை. அன்றிப் பிறநாட்டுக்களினுலேனும் அவர் பாடி இருக்கவுமில்லை. அன்றியும் சதகத்தில் அடியார்க்கு நல்லார் கூறப்பட்ட போக்கும் வேறு. சிறப்புப்பாயிரத்தில் கூறப்பட்ட போக்கும் வேறு. சதகம் பாயிரத்தில் கூறப்பட்டவைகளை மறக்காது உடன்பட்டே கூறுகிறது. அன்றியும், அப்பாயிரத்திற் கூறப்பட்ட அடியார்க்கு நல்லாரைச் சதகம் பாடியதே யன்றி, பாயிரத்தில் கூறப்பட்ட வரலாற்றுக் குறிப்புக்கள் ஒன்றையேனும் சதகம் கூறவில்லை. சதகம் பாயிரத்தில் கூறப்பட்டதொன்றையே—அதாவது அவர் "அருமையுரை செய்யடியார்க்கு நல்லார் அவதரித்துவரு நிரம்பைப்பதியுங் கொங்குமண்டலமே" (அவர் நிரம்பைப் பதியில் அவதரித்தார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை மட்டுமே கூறியது. எனவே, சதகம் சொல்லாததாய்ச் சிறப்புப் பாயிரத்தில் கூறப்பட்ட உண்மைகளாவன.

1. அடியார்க்கு நல்லார் உரை சொன்னமை.

2. காங்கேயன் உரை சொல்லுவித்தமை.

3. அடியார்க்கு நல்லார் வாழ்வு.

4. காங்கேயன் வாழ்வு.

5. காங்கேயன் உரை சொல்லுவிக்கவும் அடியார்க்கு நல்லார் உரை சொல்லவும் நேர்ந்த சந்தர்ப்பங்கள், என்னும் இவைகளும் பிறவுமாம் என்க. இவை பாயிரத்தில் நேரே கூறப்பட்டனவும் சில அங்ஙனம் கூறப்பட்டவைகளில் இருந்து பெறப்பட்டவைகளுமாம் என்க. காங்கேயன் உரை இயற்றித் தரும்படி கேட்க, அடியார்க்கு நல்லார் உரை இயற்றினர் எனவே அடியார்க்கு நல்லார் ஒரு காலத்தில் ஓர் இடத்தில் காங்கேயனுடன் வாழ்ந்தமை. காங்கேயன் ஒரு காலத்தில் ஓர் இடத்தில் இவருடன் வாழ்ந்தமை. அவர்கள் அங்ஙனம் உரை இயற்ற நேர்ந்த சந்தர்ப்பம் என்னுமிவைகள் அங்ஙனம் பெறப்பட்டவைகளாய் வருமாறறிக. இன்னும் அஃதென்னையெனின், பாயிரமோ இவ்வரலாற்றுக் குறிப்புக்களை இடத்தொடு படுத்திக் கூறவில்லை எனவும், ஆயினும் அது பாடப்பட்ட இடம் ஆராய்ச்சியான் பெறப்படுகின்றதெனவும், அவ்விடமும் கொங்கு மண்டலமல்லாத இன்னொரு இடமுமாம் என்பது முன்னர் நிகழ்ந்த ஆராய்சிகளாற் கண்டாம். ஆயின் கொங்குமண்டல சதகமோ! கொங்குமண்டலத்துள் இயற்றப்பட்டதெனவும், அது இவ்வடியார்க்கு நல்லாரை அம்மண்டலத்தோடு படுத்திப் பாடி இருக்கின்றதெனவும், அதுவும் இவ்வுரைச்சிறப்புப் பாயிரத்தையே மேற்கோளாகக்கொண்டு அவ்வாறு பாடி இருக்கின்றதெனவும் மேலே கண்டாம். அன்றியும் அச்சதமோ தானெழுந்தவாரியாய்த் தம் கருத்தை எடுத்துரைப்பதல்லாமல் உண்மைக்கும், சதகமரபென்னும் வரம்புக்கும் உட்பட்டு நின்று பண்டைச் சதகமரபுகளின் வழிவழியாய் தம் மண்டலமான கொங்குமண்டலத்து நிகழ்ந்ததான வரலாற்றுண்மைகளை வெளிப்படையில் அம்மண்டலத்தோடுபடுத்தியே கூறுகின்றதெனவும், அதாவது அம்மண்டலத்தில் ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்ததைக்குறிப்பிட நேர்ந்த இடத்து "அவதரித்ததுங் கொங்கு மண்டலமே" என்றாற்போலவும் நூலோ, உரையோ இயற்றியதைக் குறிப்பிட நேர்ந்த இடத்து உரைத்ததுங் கொங்குமண்டலமே யென்றாற்போலவும், இயற்றினாரேயன்றி இறற்றுவித்தாரையும் சொன்னதுங் கொங்குமண்டலமே, சொல்லுவித்ததுவுங் கொங்குமண்டலமே என்றாற் போலவும், இனி, அவர்தம் வாழ்வைக் குறித்து வாழ்வானதுங் கொங்குமண்டலமே என்றாற்போலவும் இச்சதக ஆசிரியர் பாடியவற்றை மேலே சதகமரபில் கண்டாமன்றே. அன்றியும் அவ்வவ் நூலோ உரையோ செய்ய நேர்ந்த சந்தர்ப்பங்களையும் அவ்வாறு அகத்தடக்கிக் கூறியமையையும் ஆண்டுக்கண்டாமன்றே. எனவே இச்சதகமரபுக்களை அறிந்தவர், இவ்வாறே இக் கொங்குமண்டலத்தோடு படுத்தி ஏனையோரைப்பாடி அமைத்தவர், எந்நாட்டோடும் தொடர்பு படுத்திக் கூறாத உரைச் சிறப்புப்பாயிரத்தையே மேற்கோளாகக் கொண்டவர், அடியார்க்கு நல்லார் கொங்குமண்டலத்திலே பிறந்து, அக் கொங்குமண்டலத்திலேயே வாழ்ந்து, அம்மண்டலத்திலேயே காங்கேயன் என்பவனையும் சந்தித்து அவன் கேட்டபடி உரையும்செய்திருந்தார் என்பது தமக்கும் உடன்பாடானால் "அருமையுரைசெய் அடியார்க்குநல்லார் அவதரித்து(த) வருமைப்பொழில்' நிரம்பைப்பதியுங் கொங்குமண்டலமே" யென்று பாடுவர் கொல்லோ! எனவே் அடியார்க்கு நல்லார் அவதரித்தமை மாத்திரம் தான் நிரம்பைப்பதிக்குரிய கொங்குமண்டலத்துக் குரியதெனவும், ஏனைய அவ்வாறு உரிமை இல்லை யென்றும் கண்டே அவ்வாறு அவற்றை விலக்கியே அடியார்க்கு நல்லார் "அவதரித்த நிரம்பைப்பதியுங் கொங்குமண்டலமே" என்று பாடி இட்டார் என்றும் அறிந்து கடைப்பிடிக்க, எனவே! இவற்றால் முடிக்கப்படுபவைகளான.

1. அடியார்க்கு நல்லார் கோங்குமண்டலத்தில் உரைசொல்லவில்லை.

2. காங்கேயன் அவரைக் கோண்டு கோங்குமண்டலத்தில் உரை சொல்லுவிக்கவில்லை.

3. அடியார்க்கு நல்லார் கோங்குமண்டலத்தில் வாழவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EVELYN RUTNAM INSTITUTE
50
REFERENCE
LIBRARY
34
JAFFNA



4. காங்கேயன் கோங்குமண்டலத்தில் வாழவில்லை.

5. காங்கேயன் கோங்குமண்டலத்தில் அவதரிக்கவில்லை.

6. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்கு, உரைசொல்ல வோ, காங்கேயன் அவரைக்கோண்டு சோல்லுவிக்கவோ நேர்ந்த சந்தர்ப்பம் கோங்குமண்டலத்தில் நிகழவில்லை யென்னும் இவை களும் பிறவுமாகும் என்க. இனி, இன்னும் இதன் விளக்கம் என்னை யெனின்! ஒருவர் அவதரித்ததை அவதரித்ததுங் கொங்குமண்ட லமே யென்றாற்போலவும், வாழ்ந்ததை வாழ்ந்ததுங் கொங்கு மண்டலமே யென்றாற்போலவும், சொன்னதைச் சொன்னதுங் கொங்குமண்டலமே யென்றாற் போலவும், சொல்லுவித்ததைச் சொல்லுவித்ததுங் கொங்குமண்டலமே யென்றாற்போலவும் அவ் வவர் சரித்திரக் குறிப்புகளை அந்நாட்டோடுபட்ட அளவுக்கேற்ப வெவ்வேறு படுத்திப் பாடுகின்றார் என்று கண்டாமன்றோ? அவ் வாறே வினைச் சதகாசிரியன் மாரும் பாடுகின்றனர் எனக்கண்டா மன்றோ? அவற்றுள் அடியார்க்கு நல்லார் கொங்குமண்டலத்தில் வாழவில்லை யென்பதை அவ்வாசிரியர் வாழ்ந்ததுங் கொங்குமண் டலமே யென்றாற்போலுங் கூறும் பகுதிகளாலும் அதற்குப்புறச் சான்றாக அவ்வாறே தொண்டைமண்டல சதகத்தில் வாழ்ந்ததுந் தொண்டைமண்டலமே யென்றாற்போலக் கூறும் பகுதிகளாலும் கொங்குமண்டலத்தில் அடியார்க்கு நல்லார் உரை செய்யவில்லை யென்பதை அம்மண்டலத்தில் சொன்னதுங் கொங்குமண்டலமே யென்றாற்போலக் கூறும் பகுதிகளாலும், அன்றி அவ்வாறு சொன் னதைப்பற்றிக் கூறும் தொண்டைமண்டல சதகப்பகுதிகளாலும், அவ்வாறே இயற்றுவித்ததையும் அங்ஙனம் இயற்றுவித்தவனையும் தொடர்பு படுத்தி இயற்றுவித்ததும் அதாவது சொல்லுவித்ததுங் கொங்குமண்டலமே என்றாற் போலும் கூறும் பகுதிகளாலும்; அதனையொத்த தொண்டைமண்டல சதகப்பகுதிகளாலும் அவ் வாறே இன்னவும் பிறவுமான வரலாற்றுக் குறிப்புக்களை அவ்வப் பகுதிகளையொத்த கொங்குமண்டல தொண்டைமண்டல சதக ஆசிரியர் கூற்றுக்களில் அதாவது அப்பாக்களில் வைத்து அறியப் படும் என்பது. எனவே, அவ்வப்பகுதிகள் நமக்குச் சான்று பகர்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன என்பது. கொங்குமண்டல சதகத்தில் அடியார்க்கு நல்லாரைப்பற்றிப் பாடிய பாட்டைத் தவிர்ந்த ஏனையபாக்கள் அவ்வாசிரியரது அகச்சான்று என்க. தொண்டைமண்டல சதகம், கொங்குமண்டல சதகத்தைப்பாடிய இவ்வாசிரியர்க்குப் பாடும் முறையில் ஆதாரமான நூல். இவையே இவற்றை அகச்சான்று புறச்சான்று என்று கொண்ட இயைபென்க. இனி, இவ்விக்கியாயங்களால் முடிக்கப்படுபவைகளை அறிவாம்.

## 6 சதகச் செய்யுளின் கருத்து.

இனி அச்சதகச் செய்யுளின் சொன்முடிபு பொருண்முடிபுகளை அறிவாம். முன்னர் அச் செய்யுள்யாது என்பதற்காகக் காட்டினும். ஈண்டு அச் செய்யுளில் கூறப்பட்ட உண்மைகள் யாவை என்பதற்காகக் காட்டுவாம். அச்செய்யுளாவது:—

''குருவை யுணர்ந்த விளங்கோ வடிகளுட் கொண்டு சொன்ன
தருவை நிகரும் சிலப்பதி காரத் தனித்தமிழுக்
கருமை யுரைசெய் யடியார்க்கு நல்லார் அவதரித்து
வருமைப் பொழில்நிரம் பைப்பதி யுங்கொங்கு மண்டலமே''

என்பது அச்செய்யுள். இதன் கருத்துரைக்காரர் சொன்ன பொருள் முன்னர் சொல்லப்பட்டது. ஆயின் இவ்விடத்து ஆராய வேண்டிய மிக முக்கியமான பகுதியாவது;

''அருமை யுரை செய் யடியார்க்கு நல்லார் அவதரித்து
வருமைப் பொழில்நிரம் பைப்பதியுங் கொங்கு மண்டலமே''

என்பது. இப்பகுதியே அவர் வரலாற்றை இடத்தொடுபடுத்திக் கூறும் சரித்திரப் பகுதியுமாம் என்பது. இப்பகுதியால்—இப்பாட்டால் மேலே சதகமரபிற் கண்டபடி அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்தில் தான் உரைசெய்தார் என்றும் சொல்லப்படவில்லை. சிலப்பதிகார உரை இன்றும் வழங்கப்பெறுகின்றதன்றோ? ஏதோ ஒரு காலத்தில் ஒரு இடத்தில் வைத்து இவ்வடியார்க்கு நல்லாரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை செய்யப்பட்டது தான் என்பது ஐயமும் இல்லையே. என்னை யெனில் ஒருவினைக்கு அதாவது ஒருவினை நிகழ்ச்சிக்குக் காலமும் இடமும் வேண்டப்படுமே. கொங்குமண்டல சதகத்தாரால் பாடப் பெற்ற அடியார்க்கு நல்லாரை அச்சதகக்காரர் அவர் கொங்குமண் டலத்தில் வாழ்ந்தார் என்றாவது அம்மண்டலத்தில் உரை சொன் னார் என்றாவது ஏன் சொன்னார் இல்லை. இச்சதகக்காரர் தங்கருத் தாகமட்டும் சொல்லாமல் விட்டாரில்லை. இவரின் முற்பட்டதான தொண்டைமண்டல சதகம் முதலிய பழம் சதகங்களிலே அங்ஙனம் வாழ்ந்தவரை வாழ்ந்தவர் என்றும், சொன்னவரைச் சொன்னவர் என்றும் கூறி இருத்தலினை இவர் கண்டுவைத்தும் அச்சதகம் முத லியவற்றின் மரபின் வழித்தாய்த் தாமும் சதகம்பாடியவர் நியத மாய் அவ்வாறு வாழ்ந்ததும் கொங்குமண்டலமே சொன்னதுங் கொங்குமண்டலமே என்றாற்போலும் பாடவேண்டியதையன்றோ பா டாமல் விட்டார். அன்றியும் இவர் இவ்வாறு பிறரைத்தம் சதகத்திற் பாடியதை முன்னர் அச்சதகமரபிலும் கண்டாமன்றோ. அவற்றின் உண்மைக் காரணங்களைப் பின்னர்க்காட்டுவாம். ஈண்டு "அருமை யுரைசெய் யடியார்க்குநல்லார்" என்பது அவருக்கடையாக வந்தது. இச் செய்யுளகத்தும் வேறும் பிறகுறிப்புக்கள் காணப்படவில்லை. இச்சதகம்பின்என்னை கருதிப்பாடப்பட்டது. இதன் கண்பாடப்பட்ட ஒவ்வொரு சொற்களும் பொருள்களும் தக்க காரணம் நியாயம் உடையவைகளாய்த்தான் இருக்கவேண்டும். என்னையெனில்; வர லாற்று வசனநூல்கள் போலாகாது, பழங்காலத்தில் பாடப்பட்ட சதகங்களானவை; உள்ளபடி யாக நிகழ்ந்த வரலாற்றுக் குறிப்புக் களை ஒரு மரபும் விதியும் பற்றிப் புலமையும் வரலாறும் தெரிந்தோ ரால், சரிவர அறிந்தே பாடப்பட்டதாகக் காணப்படுகின்றமையா லும், இச்சதக ஆசிரியரும் இச்சதகத்தைச் சரியாக அறிந்தே பாடி யதாக மேலே இவர் வரலாற்றிலும் இவர் கூற்றாலும் அறியப்படு வதாலும் இவர், அடியார்க்கு நல்லாரைப்பற்றி உறைச்சிறப்புப் பாயி ரப்பாக்களால் அன்றிக் கர்ணபரம்பரைக்கதை முதலியவற்றாலும் அறிந்திருந்தார் என்று முன்னர்க் காணப்பட்டமையாலும் என்பது. இப்பாட்டு மிகக் கருத்தூன்றிப் பாடப்பட்டதென்றும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வாழ்ந்ததுங் கொங்குமண்டலமே என்றாற்போலும் சொல்லி அடியார்க்கு நல்லார் வாழ்வையும், உரை சொன்னதுங் கொங்கு மண்டலமே என்றாற்போலும் சொல்லி, உரைசொன்ன இடம் கொங்குமண்டலம் என்றும் சொல்லவுமில்லை "அருமையுரைசெய் யடியார்க்கு நல்லார் அவதரித்து, வருமைப் பொழில் நிரம்பைப்பதி யுங் கொங்குமண்டலமே" என்று வற்புறுத்துகின்றது. கொங்கு மண்டலசதகத்து ஊர்த்தொகை நிகண்டு 21-ஆவது பக்கத்தில் "வருவிஜயமங்கையும் நிரம்பையுங் கூடலூர் மறுவறு சிறுக் கழிஞ்சி" என நிரம்பையைக்குறும்பு நாட்டூர்களில் ஒன்றாகப் பாடி அந்நிரம்பையைக் கொங்குமண்டலத்தோடு சேர்த்த ஆசிரியர் ஈண்டுத்திரும்பவும் "நிரம்பைப்பதியுங் கொங்குமண்டலமே" யெனக் கூறிப் பின்னரும் நிரம்பையைக் கொங்குமண்டலத்துள்ளதென்று கூறக்கிடந்த காரணம் என்னை? ஈண்டு அந்நிரம்பையைக் கொங் குமண்டலத்துள்ளதென்று கூற எழவில்லை. அது அருமை உரை செய்த அடியார்க்கு நல்லார்க்கும் அந்நிரம்பைக்கும் உள்ள தொடர்பை ஏதோ! ஒருவாற்றான் உணர்த்த எழுந்ததென்க. அத் தொடர்பு யாது?

"அருமை யுரைசெய் யடியார்க்கு நல்லார் அவதரித்து, வருமைப் பொழில்நிரம் பைப்பதி யுங்கொங்கு மண்டலமே" என்பதில் அவதரித்து என்பது என்னை? இது ஒருவினையெச்சவினைச் சொல். இது எதனோடு முடிவடைகிறது. வரு என்பதோடுமுடிவடை கின்றதாயின் ஈண்டு வரு என்பதன் கருத்து யாது? வரும் அன்றி வருகின்ற என்பதுதான் அச்சொற்பொருளாயின் அவதரித்து, வரும் என்னும் இவ்விரண்டுக்கும் வினைமுதல்யாது? அடியார்க்குநல்லாரென் பதே. [அற்றன்று செயப்படுபொருளைச் செய்ததாகக் கூறியதாகக் கொண்டுவரு நிரம்பையை வரப்பட்ட நிரம்பை என்றால் என்னை யெனின் ஆண்டும் வருதல் அடியார்க்கு நல்லாரது செயல் அதனைப்படுதல் தான் நிரம்பைக்குரியது என்க] அவ்வாறாயின் சிலப் பதிகாரத் தனித்தமிழுக்கு முன்னர் அருமையான உரையைச் செய்த அடியார்க்கு நல்லார் இனிமேல் அவதரித்து வரும் அல்லது இப்பொழுது வருகின்ற நிரம்பையென பொருள்பட்டு நிற்பதாய் உரையைச் செய்தது முன்னும் அவ்வுரையைச் செய்தவர் அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரித்துவருதல் அவ்வுரையைச் செய்தபின்னரும் என அப்பொருள் பொருந்ாது நிற்கின்றதே. அற்றன்று ஆண்டுவருவென்பது வந்தவென்னும் பொருளதாய் அவதரித்து வந்ததென வாராவோ எனின்? அங்ஙனம் வருதல் இயல்நூலின்படி எவ்வாறு பொருந்தும்? அடுகளிறு, விடுகணை என்றாற்போலும் முக்காலத்துக்கும் பொதுவதாய் வரும் காலம் கரந்தவினைத்தொகை வினையடிகளைத் தான்; ஆண்டைக்குப் பொருந்தும் ஒருகாலத்திற்கு விரிப்பதன்றி, எதிர்காலத்துக்கேனும் நிகழ்காலத்துக்கேனும் வரைவுப்பட்டு வினையடிப்பகுதி விகாரப்பட்டுவரும் ஒன்றை, [அதாவது அதன்வினையடியாகிய வா என்பதாக இராமல்—அல்லது இருக்கமுடியாமல் வரும் என எதிர்காலத்துக்கும், வருகின்றவென நிகழ்காலத்துக்கும் பொருள் செய்யக்கூடியதாக இருக்கும் வரு என்னும் உருவத்தை.] இறந்தகாலத்துக்கு விரித்து வந்த நிரம்பைஎன, அக்கருத்துரைக்காரர் பொருள்கூறல் நன்கு பொருந்தாது என்க. அன்றியும் ஆசிரியருக்கு அதுகருத்தும் அன்று என்க. அவதரித்துவரு என்றுகூறி அவதரித்துவந்தவென்னும் பொருளையே கருதினராயின் அவதரித்த என்று சுருங்கக்கூறி இருக்கலாமே; எனவே! அவதரித்து என்பது வரு என்பதோடு முடியவில்லை ஆகின்றது. அது, வேறொன்றனோடும் முடிவடையக் காணேமே. வரலாற்று நிகழ்ச்சிகளை விளங்க விரித்துரைக்கும் சதகச்செய்யுள்கள் சங்கச்செய்யுள்கள்போல மாட்டெறிந்து பொருள்முடிக்கப் படுமாறில்லையன்றோ? அன்றி அண்மையில், அன்றிச் சேய்மையில் அவ்வினையெச்சத்தை முடிக்கக்கூடிய வினைச்சொற்கள் ஒன்றையும் காணேமே. இனி, மற்று அதன் உண்மை உரை இதுவெனவும் தெரிப்பாம். ஆண்டுவருவென்பது, மையென்பதற்கடையாய் வந்தது. வரு,மை என்னும் இவை இரண்டும் சேர்ந்து பொழிலுக்கடையாய் வந்தன. வரு,மை, பொழில் என அவை மூன்றும் சேர்ந்து நிரம்பைக்கடையாய்வந்தன. மை யென்பது, சூடாமணி நிகண்டு பதினோராவது பெயர்த்தொகுதி பதினோராவது பாட்டில் "மையேன்பதஞ்சனங்கார்" என்றபடி முகில் என்னும் பொருளதாய் ஆண்டுவந்தது. இனி வருமைப்பொழில் என்பதை மைவருபொழிலென மாற்றிப் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடலும் இன்னொருவழியாற் சிறந்தது. இரண்டற்கும் பொருள் ஒன்றே. அதாவது முகில் வந்து படிதற்குக் காரணமான அவ்வளவு உயர்ந்த பொழிலை உடைய நிரம்பைப்பதி என்றவாறு. இதற்கு இவ்வாறு யாங்கூறிய பொருளே பொருள் என்பதை,

''மங்குற் பொழிநிகழ் காவேரி சூழ்கொங்கு மண்டலமே'' ஷ 9
''மஞ்சுநிகழ் கஞ்ச மலையுங் கொங்கு மண்டலமே'' ஷ 35
மைதாழ் பொழிநிகழ் ஐவேலியுங் கொங்கு மண்டலமே ஷ 45
மங்குற் பொழிற்சண காபுரமுங் கொங்கு மண்டலமே ஷ 47
மைதவளப்பதி யோங்குவதுங் கொங்கு மண்டலமே ஷ 62

என இவ்வாசிரியர் பிறரைப்பாடும் பிறசந்தர்ப்பங்களிலும் அவர்தம் ஊரைக்குறிப்பிடும் போது இவ்வாறு மையென்பதையோ, முகிலையோ அப்பொருளில் வரும் வேறு பெயர்களையோ அடைகொடுத்துப்பாடி இடப்பெறுகின்றமை கொண்டு நன்குதுணிந்து கொள்ளப் படும் என்க. அன்றியும் அடியார்க்கு நல்லாரையும் அந்நிரம்பை யையும் தழுவிவரவேண்டிய அச் சொல், அவர் வாழ்ந்த—இருந்த பிறந்த—வளர்ந்த—நாடு என்றாற் போலும் நாட்டையோ ஊரை யோ கொண்டுமுடியும்பெயரெச்சமாயன்றோ இருக்கவேண்டும். நிரம் பைஎன்னும் பெயரை அவதரித்து என்னும் வினையெச்சத்தோடு முடி யக்கூடியதாகவும், அன்றி அவதரித்து என்னும் வினையெச்சம்முடிக் கும் சொற்கள் இன்றிச் செய்யுளகத்தே தனித்து நிற்கக் கூடியதாக வும் இத்தகைய மெய்க்கவிஞர் பாடார் என்க. அடியார்க்கு நல் லார் நிரம்பையில் அவதரித்தமையே ஈண்டும் பிறாண்டும் பெறப் படலானும், மேற்கூறியவற்றானும் அவதரித்து என்பதல்ல, அவத ரித்த என்றுதான் ஆசிரியர் பாடினார் என்று கடைப்பிடிக்க. எனவே! ஆண்டு அவதரித்த என்பதுதான் உண்மையான உருவம்என்க. அது காலாந்தரத்தில் ஏற்பட்ட ஏட்டுப்பிரதிகளின் பேதமாக (தகரம் துகர மாய்ப் பதிக்கப்பட்டு அவதரித்து என்று வெளியாய்விட்டது. ''அடியார்க்கு நல்லார் அவதரித்தவருமைப் பொழில் நிரம்பைப்பதி யென்று பொருள் கொள்க'' அன்றியும் இக்கடை அடிக் கடைச்சீர் மண்டலமே என முடிவதால் அதன்முதற்சீர் மோனை நோக்கி வருமையெனவே இருக்கவேண்டும் என்பது நிச்சயம். எனவே அவதரித்தவருமை யென்க. [அன்றியும் அவதரித்த என்பதுநிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியாகவும் அருமை என்பதை வருமொழியாகவும் வைத்துப் புணர்த்தியவழி வகரம் உடன்படு மெய்யாகத்தோன்றி அவதரித்த வருமையெனவும் வரும். அவ்வாறாயின் பொருளுக்கேற்ற அடையான வருமை என்பதைநீக்கி அருமையென்பதான சிறப்பில்லாத—ஏலாத அடையைச் சேர்த்துப் பொருள் கூறின் பொருத்தம் குறைவுடையதாகும். அன்றியும் மண்டலம் என்பதற்கு மோனையாய் வருதலில்இழுக்கி அருமைப்பொழில்நிரம்பைப்பதியுங்கொங்குமண்டலமே எனவும்வரவுங்கூடும். எவ்வாற்றானும் அவதரித்தஎன்பதே,நிலைமொழியாய் இருப்பதை நன்கு நோக்குக. அவ்வாறு கொள்ளலே அச்செய்யுளின் பொருள், சொல்லிலக்கண விதிகளுக்கும் பொருந்துவதாம்] அன்றியும் அக்கருத்துரை காரரும் யாம்கூறியவாறு அவர்தம் சரித்திரக்குறிப்புப் பொருளால் உடன்படுபவராய் "அடியார்க்கு நல்லார் அவதரித்துவந்த நிரம்பை என்றே பொருள் செய்தார்; ஆயின் அவர் அப்பாட்டை ஆராயாதும், அவ்வரலாற்றுண்மையை அறியாதும், அதுகூறும் உண்மைப்பகுதியை அறியாதும், சொல்லும் பொருளும் இயையாது அவ்வாறு படிமாற்றமாக(பிரதிபேதமாக)க் கிடந்தவழியையறியாதும் இவ்வாறு உரைசெய்தார். அவதரித்து வந்தவென அவர் கூறியவாறு கூறினும் அவதரித்த என யாம் கூறியவாறு கூறினும் உண்மைப் பொருள் ஒன்றே. ஆண்டும் அவர் நிரம்பையிலே அவதரித்தவர் என்னும் அப்பகுதிக்குமேல் ஒன்றும் பெறப்படாது. எனவே! அடியார்க்கு நல்லார் வாழ்ந்ததுங் கொங்குமண்டலமென்றுதல், உரைசொன்னதுங் கொங்குமண்டலம் என்றுதல் இப்பாட்டுச் சொல்லவரவில்லை. அடியார்க்கு நல்லார் பிறந்த இடம் நிரம்பை என்பது போதர அவர் உரை செய்தமையை அவர்க்கடையாகப் புணர்த்தி அவரை நிரம்பையோடும் நிரம்பையைக் கொங்கு மண்டலத்தோடும் சேர்த்து "அருமையுரைசெய் யடியார்க்கு நல்லார் அவதரித்த வருமைப்பொழில் நிரம்பைப்பதியுங் கொங்குமண்டலமே" என ஆசிரியர் பாடி அமைத்தார் என்க.

எனவே! இதுகாறும் சிந்தித்துவந்தவற்றால் நிச்சயித்துமுடிக்கப் படுபவைகளாவன.

1. இச்சதகக் கருத்துரைகாரர் அவதரித்து வந்தவேன்று அக்கருத்துரையிலும், வரலாற்றில் நிரம்பை என்னும் நகரில் உதித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் என்றுங் கூறுதலால் நிரம்பையில் அடியார்க்கு நல்லார் அவதரித்தார் என்பது நிச்சயம்.

2. அவ்வாறே 'அவதரித்த' வென்றே அப்பாட்டிருக்கவேண்டும் என யாம் கண்டதாலும் அவர் அந்நாட்டில் அவதரித்தார் என்பது நிச்சயம்.

3. எனவே! சதகமரபு முதலியவற்றையும் சேர நோக்கினால் இவ்வாசிரியர் இவர் வரலாற்றில் கோங்கு மண்டலத்தோடு சேர்த்துக் கூறாமல் விட்டமையால் அடியார்க்கு நல்லார் கோங்குமண்டலத்து வாழவில்லை.

4. இம்மண்டலத்தில் அவர் உரை செய்யவில்லை எனவும் செவ்விதில் துணிந்து கொள்ளப்பட்டன.

---

## 7. "நிரம்பையர்."

*'நிரம்பையர் காவலர்' என்னும் இச் சொற்றொடர் இவ்வராய்ச்சிக்குப் பல நுண்ணியவாய குறிப்புக்களைத் தரவல்லதாய் இருக்கின்றது. அச்சொற்றொடருள் நிரம்பையர் என்பது ஒரு தன்மையில் ஒரு குறிப்பும், காவலன் என்பது இன்னொரு தன்மையில் ஒரு குறிப்பும் நிரம்பையர் காவலர் என்பது அவ்விரண்டன் தன்மையில் இரண்டும் சேர்ந்து இன்னொரு குறிப்புமாக வெவ்வேறு குறிப்புக்களைத் தருகின்றன. முன்னர் வெவ்வேறு சந்தர்ப்பத்துக்காகவும் வெவ்வேறு உண்மையை அறிதற்காகவும், இடையே பிறவற்றோடு சார்த்திப் பேசியிட்டாம். ஈண்டும் அவை தம்மையே தனித்தனி எடுத்துக் காண்பாம். அடியார்க்கு நல்லார் நிரம்பையிலே அவதரித்தார் என்றும் அவர் அந்நிரம்பையிலே வாழவில்லை என்றும் முன்னர் எல்லா இடத்திலும் பல்லாற்றானும் முடிபாகி இருப்ப ஈண்டு அவருக்கே நிரம்பையர் என்னும் ஒரு பெயர் உண்மையும் போதருவதாயிற்று, இந்நுட்பம் தான் என்னை? அடியார்க்கு நல்லார் அந்நிரம்பையிலே அந்நிரம்பையில் உள்ளவராலேயே அடியார்க்கு நல்லார் என்னும் தமக்கியைந்த இயற் பெயராலே அழைக்கப்படாது (அன்றி அவ்வாறு அழைக்கப்பட்டதன்றியும்) நிரம்பையர் என்னும் ஒருகார*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணப் பெயரால் பேச்சுவழக்கில் அழைக்கப்பட்டவரா? அங்ஙனம் அழைக்கப்பட்டுப் பின் அப்பெயரே விளக்கமும் புழக்கமும் உள்ள பெயராய்க் காலச்செலவிலே வழக்காறு பெற்றுப் பின் அவ்வூரில் (அவ்வூராரால்) அவ்வூர்ப் பெயரால் தொடர்ந்து அவருக்கொரு காரணப் பெயரமைந்ததா? ஒரு நாட்டில் இருப்பார் தம்முள் ஒருவரை அவரது இயற்பெயர் இருக்கவும் அப்பெயரால் அழையாது அவரை அங்ஙனம் தம் நாட்டின் பெயரால் அழைக்கவுங் கூடுங்கொல் [அவ்வாறு கூடுவதாயின் அவர் ஒருவரையல்ல அந்நிரம்பை என்னும் ஊரில் உள்ள ஒவ்வொருவரும் தம்முள் ஒருவரை ஒருவர் நிரம்பையர் என அழைத்தார் என்னும் பொருந்தா வழக்கினையும் பொருந்திய வழக்கென்றன்றோ கூறவேண்டும்.] அங்ஙனம் அழைத்தல் யாண்டும் வழக்காற்றில் இல்லையே. அடியார்க்கு நல்லார் என்னும் பொதுநீக்கி அவரையே வரைந்துணர்த்தும் அப்பெயரை விட்டு அந்நாட்டில் உள்ள ஒவ்வொருவரையும் தனித்தனி சென்று உணர்த்திச் சுட்டும் நிரம்பையர் என்னும் காரணப் பெயரால் அந் நிரம்பையிலேயே அவரையோ அன்றிப் பிறர் தம்முள் ஒருவரை ஒருவரோ அழைக்கக் காரணம் சிறிதும் இல்லையே. இவ்வாற்றால் ஈண்டுண்மை சரியாய்த்தான் வெளியாய் விட்டது. முன்னர் அடியார்க்கு நல்லார் நிரம்பையில் அவதரித்தார் என்பது நிச்சயப்பட்டது. அவர் நிரம்பையில் வாழவில்லை என்பதும் நிச்சயப்பட்டது. அவர் நிரம்பையர் என்னும் பெயரைப்பெற்றார் என்பதும் நிச்சயப்பட்டது. அந் நிரம்பையர் என்னும் பெயரை அந் நிரம்பையில் பெறவும் முடியாது என்பதும் ஈண்டு நிச்சயப்பட்டது. எனவே இவ்வாற்றால் அடியார்க்கு நல்லார் நிரம்பையிலே பிறந்து அந்நிரம்பையிலே வாழாமல் நிரம்பை அல்லாத இன்னொரு இடத்தில் சென்று வாழ்ந்து அந்நிரம்பையர் அல்லாத இன்னொரு நாட்டு மக்களால் அவர் இருந்து வந்த ஊரின் தொடர்பைச்சுட்டி அக்காரணத்தால் நிரம்பையர் என அழைக்கப்பட்டார் என்பது நன்கு துணிந்து நாட்டப்படுகின்றது.

நிரம்பையிலே பிறந்த அவர் நிரம்பை என்னும் சொந்த ஊரை விட்டு இன்னொரு ஊரில்சென்று அவ்வூரார் மத்தியில் வாழ்ந்துவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வூரார் அல்லது அந்நாட்டினர் அவரை அங்ஙனம் பிறந்துவளர்ந்து இருந்துவந்த ஊரின்பெயரால் அவரை நிரம்பையர் என அழைக்கவும் அது அந்நாட்டில் இருக்கும் ஏனையோரை உணர்த்தாது அவரையே வரைந்துணர்த்தவும் அதுகாலச்செலவில் அடியார்க்குநல்லார் என்னும் அவர் பெயரினும்பார்க்கப் புழக்கவும் விளக்கமுமான பெயராகமாறி நிரம்பையர் என்னும் அக்காரணப் பெயராலே அவர் விளக்கமுற்று வழக்காறு பெற்றுவரவும் காரணம் இருக்கன்றே? இனி, அவர் நிரம்பையர் என்னும் பெயரைப்பெற்ற இடம் அவர் வாழ்ந்த இடம் ஆதலால் அவ்விடத்தில் கேட்டுக்கொண்ட காங்கேயனும் வாழ்த இடமும் அவ்விடமாயிற்று. நிரம்பையிலே பிறந்த அடியார்க்குநல்லார் அந்நிரம்பையை விட்டுச்சென்று வாழ்ந்த இன்னொரு இடத்திலேயே காங்கேயன் உரை இயற்றித்தரும்படி கேட்டான் எனவே காங்கேயன் நிரம்பைக்குரியவன் அல்லன்-அதாவது நிரம்பையையுடைய கொங்குமண்டலத்துக் குரியவன் அல்லன் என்பதும் நிச்சயமாயிற்று. நிரம்பையர் என்பது அன்றியும் அதனோடு புடைஅடுத்துவரும் காவலன் என்பதும் அடியார்க்கு நல்லார் கொங்குமண்டலமல்லாத இன்னொருமண்டலத்தில் பெற்ற பெயரெனவே கொங்குமண்டல சதகத்தில் கூறப்படும் அவர்பெயரோடு சேர்த்துக் கூறுதற்குரிய சரித்திர இயைபும் மதிப்பும் அந்நிரம்பையர் காவலர் என்பது உடையதல்லதாயிற்று. எனவே இவ்வுண்மைகள் அனைத்தையும் மேற்கூறியவாறு பாயிரப் பாக்களாலும் கர்ண பரம்பரைக் கதைகளாலும் தமது அறிவாராய்ச்சியாலும் கண்ட தெய்வக்கவிஞராகிய கார்மேகக் கவிஞர் அடியார்க்கு நல்லார் பிறந்த ஒன்றே கொங்குமண்டலத்துக் குரிமையுடைமை கண்டு ஏனைய அனைத்தையும் விலக்கி "அடியார்க்கு நல்லார் அவதரித்த... நிரம்பைப் பதியுங் கொங்குமண்டலமே" யென எத்தனையோ உண்மைகளுக்காணிட்ட நிலைக்களனுய் அச்சதகப்பாட்டைப்பாடி அமைத்திட்டார் என்றறிந்து வியக்க. எனவே இக்கொங்குமண்டல சதகக்காரர் அடியார்க்கு நல்லாரை அவர் நிரம்பைப்பதியை உடைய கொங்குமண்டலத்தில் அவதரித்தார் என்பது மட்டும் கூறி ஏனைய அனைத்தையும் விலக்கிக்கூறுமல் விட்டார் என்றும் கண்டாம். உண்மையில் ஏன் அவர் விலக்கிக் கூறினுர்? அக்கூற்று எவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையாகின்றதென்பதை மேலும் நிருபணமுகமாகக் காட்டுவாம். அடியார்க்கு நல்லார் இன்னொரு இடத்திற் சென்று வாழ்ந்து அவ்விடத்திலே நிரம்பையர் என்னும் பெயரைப் பெற்றார் என்பது மேலே முடிபாயிற்று. அவர் அவ்விடத்தில் நிரம்பையர் என்று மாத்திரம் சுட்டப்படவில்லை. நிரம்பையர் காவலன் என்றே அழைக்கப்பட்டார். எனவே நிரம்பையர் காவலர் என்று அழைக்கப்பட்ட இடமும் அப்பிற இடம் என்பது நிச்சயமாயிற்று. இங்ஙனம் நிரம்பையர் காவலன் என அழைக்கப்பட்டது ',ஆரும் தெரிய விரித்துரைத்தான் அடியார்க்கு நல்லான், காருந்தருவுமனையான் நிரம்பையர் காவலனே" எனப்பாயிரத்திலாதலால் அப்பாயிரமும் அப்பிற இடத்தில் பாடப்பட்டதாயிற்று. அன்றியும் உரைசெய்த பொழுதே நிரம்பையர் காவலன் என்னும் பெயர் உண்டென்பதும் முன்னர் நிச்சயமாயிற்று. எனவே உரைசெய்த இடமும் நிரம்பை அல்லாத இன்னொரு இடம் என்பதும் நிச்சயமாயிற்று. (இது சிறப்புப்பாயிரமும் சதகமும்'என்னும் ஆராய்ச்சியாலும் பெறப்பட்டது)காங்கேயன் சொல்லுவிக்கும்பொழுது நிரம்பையர் (காவலர்) என்னும் பெயர் இவருக்கு இருப்பதால் அவன் சொல்லுவித்த இடமும் நிரம்பை அல்லாத இன்னொரு இடம் என்பது நிச்சயமாயிற்று. இனி, இப்பத்தியால் முடிந்த முடிபைமேலும் தெளிவு படுத்திக்கொள்வாம். எனவே அடியார்க்கு நல்லார் நிரம்பையிலே பிறந்தார் எக்காரணத்தை முன்னிட்டோ இன்னொரு நாட்டிற் சென்று வாழ்ந்தார். அவ்விடத்தில் அவர் நிரம்பையர் என அழைக்கப்பட்டார். உரை அவ்விடத்தில் செய்யப்பட்டபடியால் உரைச்சிறப்புப் பாயிரம் அவ்விடத்தில்பாடப்பட்டது. பாயிரம் பாடப்படும்போது அப்பாயிரகாரர் காவலன் என்று குறிப்பிடக் கூடியதாய் இவர் வாழ்ந்தார். அது தமிழ்நாட்டில் எந்த மண்டலம் எந்தமூலே? நிரம்பையர் என்னும் அவ்வொரு சொல்லால் அறியப்பட்ட உண்மைகள் யாவை?

1 அவ்விடம்தான் உரைச்சிறப்புப் பாயிரம் பாடப்பட்ட இடம்.

2 அடியார்க்கு நல்லார் நிரம்பையர், காவலர் என்னும் பெயர்களைப் பெற்ற இடம்.

3 சிலப்பதிகாரத்துக்கு உரை இயற்றிஇட்ட இடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 அடியார்க்கு நல்லார் பிற்காலத்தில் வாழ்ந்த இடம்.

5 போப்பண்ண காங்கேயன் என்னும் சேனுபதியைச்சந்தித்த இடம்.

6 கோங்குமண்டலம் தொண்டைமண்டலம் என்பனவற்ருேடு தொடர்புபட்ட இன்னெரு தமிழ்மண்டலம் என்பதுதான் இந்தள வில் அறியமுடியும்.

---

## 8. "நிரம்பையர் காவலன்."

*சிலப்பதிகார உரைச் சிறப்புப்பாயிரப் பாட்டு முதலாவதால்*

*"படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னென்னால்*
*அடியார்க்கு நல்லான்" எனவும், அடுத்த இரண்டாம் பாட்டினுல்*

*"ஆருந் தெரிய விரித்துரைத் தானடி யார்க்கு நல்லான்*
*காருந் தருவு மனையான் நிரம்பையர் காவலனே"*

*எனவும் அப்பாயிர காரர் குறிப்பிட்டதால் அவ்வடியார்க்கு நல் லார்க்கு 'நிரம்பையர் காவலன்' என்னும் பெயர்கள் உண்டென்பது ஐயமின்றி அறியப்படுகின்றது. இனி, இந்நிரம்பையர் காவலன்(ர்) என்பது ஒரு பெயரா? அன்றேல் நிரம்பையர் என்பது ஒரு பெயர், காவலன் என்பது இன்னெரு பெயரா? அவ்வாருயின் இவருக்கு இப் பெயர்கள் ஏற்பட்ட காரணங்கள் தான் யாவை? என்றின்னவைகள் ஆராய்ந் தறியத்தக்கவைகளாய் நிற்கின்றன. நிரம்பை என்பது ஓர் ஊரின் பெயர் அது கொங்குமண்டலத்துள்ளது. இவரை "அவதரித்த நிரம்பைப்பதியுங் கொங்குமண்டலமே" யென அச் சதகக்காரர் குறிப்பிட்டிருக்கின்றனர். எனவே நிரம்பையர் என் பது இவருக்கு ஊரால் வருபெயர். காவலன் என்பது தொழி லால் வருபெயர். அவை முறையே நிரம்பை என்னும் ஊரின் பெய ரைப் பகுதியாகவும் 'அர்' என்பதை உயர்வுப் பன்மை விகுதியா கவும் பெற்று (நிரம்பை + அர்) நிரம்பையர் எனவும், காவல் என் னும் தொழிலின் பெயரையும் 'அன்' என்னும் ஆண்பாற் பெயர் விகுதியையும் சேர்த்துக் காவலன் எனவும் வந்திருக்கின்றன. இவையொவ்வொன்றும் அவ்வாறு தனித்தனிப் பெயராம் தகுதிப்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுடையனவாய் இருக்கின்றன. எனவே அவை தனித்தனிப் பெயராம் என்க. எனவே மீட்டும் நிரம்பையர் என்பது ஒருஇடத்தால் தொடரப்பட்டு அவருக்கு இடத்தால் வந்த காரணப்பெயரெனவும், காவலன் என்பது காவல் என்னும் தொழிலால் தொடரப்பட்டு வந்த காரணப்பெயர் என்றும் நன்கு அறிந்துகொள்க.

இனி, அங்ஙனம் காவலன் என்னும் பெயர்வந்தவாறு என்னை? அது நிரம்பையர் என்னும் இடத்தால் வந்த காரணப்பெயரோடு சேர்ந்து நிரம்பையர் காவலன் எனப்பட்டவாறு என்னை? காவலன் என்னும் சொல் அரசனெனக் கொண்டு நிரம்பையர்க்குக்காவலன் என்னலாமோ வெனின் காவலனாய் இருந்த வரலாறுண்டேல் அவ்வரலாறு சான்றாக வைத்து அவர் நிரம்பையர் காவலனாய்—அதாவது நிரம்பைக்கரசராய் இருந்தார் என்று சொல்வதன்றி, காவலன் என்னும் சொல் ஒன்றே துணையாகவைத்து அவர் நிரம்பையர்க்குக் காவலராய் இருந்தார் என்றல் பொருந்தாதாம். அன்றியும் இச்சதகாசிரியர் அவர் நிரம்பையர்க்குக் காவலன் என்ற குறிப்பு ஒன்றேனும்கூறியிடாமை என்னை? அன்றியும் அச்சதகத்தாலும் பிறவற்றாலும் அவர் நிரம்பையில் பிற்காலத்தில் வாழவில்லை என்பது முன்னர் முடிந்திட்ட முடிபுமன்றோ? நிரம்பையில் வாழாத ஒருவர், நிரம்பைக்கரசராய் இருந்தார் என்றல் எவ்வாறு பொருந்தும்? நிரம்பையர் என்பது அவரால் ஆளப்பட்ட ஒரு ஊரினை- ஒரு நாட்டினை உணர்த்திவரவில்லை அவர் நிரம்பையைவிட்டு இன்னொரு இடத்தில் சென்று வாழ்ந்ததினால் அவருக்கேவந்த பெயரென்றன்றோ முன்னர்ச் சொற்றாம். அதை மறுக்குமாறுதான் என்னை? அன்றி நிரம்பைக்கவர் காவலராய் இருந்திருப்பாராமாயின் ஒருதலையான் நிரம்பையர் காவலர் என்றே வருமென்பது எப்படி? அன்றியும் அவ்வாறு நிரம்பையென்னும் ஊருக்குக்காவலனாயின் நிரம்பை காவலன் (காவலர்) என்றேவரும் என்று சொல்லின் இழுக்கென்னை? அன்றியுமவர் நிரம்பையில் இருக்கும் பொழுதே நிரம்பையர் என்ற பெயருமில்லை அதனால் காவலன் என்னும் பெயருமில்லையாகவே அவர்நிரம்பைக்கரசனுமில்லை என்பதும் உறுதியாயிற்று. நிரம்பையர் என்ற பெயரின் பின்னே காவலன் என்ற பெயர் வந்தமைவதால் நிரம்பையைவிட்டு இன்னொரு நாட்டிற் சென்று நிரம்பையர் எனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டபின்னரே அப்பெயரைப் பெற்ற அந்நாட்டிலேயே காவலன் என்னும் பெயரையும் பெற்றார் என்றன்றோ முன்னர்த்தெளிவா கிற்று. காவலனாய் இருந்த இடமொன்றுண்டாயின் அது அவர் சென்றுவாழ்ந்த இடமாகவேண்டுமென்பதன்றோ பொருந்துவதாம் (இஃது இவ்வாறாகச் சென்னைப்பல்கலைக்கழகத்துத் தமிழ் 'லெக்ஸி கன்', அகராதிக்காரர் "கொங்கு நாட்டில் உள்ள நிரம்பை என்னும் ஊருக்குத்தலைவரான அடியார்க்கு நல்லார்' என்று பொருந்தா வாறாக உரைத்தார். அதைப்பின்னர்க்காண்பாம்.)

இனி, இவர் உரையைச் செய்தது முந்தியதா, இவரைப்பா யிரகாரர் நிரம்பையர் காவலன்என அப்பாயிரத்தில் குறிப்பிட்டது முந்தியதா எனின் உரையைச் செய்ததுதான் முந்தியது சிறப்புப்பா யிரகாரர் அவர் உரைசெய்த பின்னர்த்தானே அவர்க்குச்சிறப்புப்பா யிரம் பாடினார் ஆதலின் என்க. ஆயின் அவ்வாறுகுறிப்பிடுதற் கேற்றவாறு அவர் நிரம்பையர்என ஊராலும் காவலனெனத் தொழிலாலும் பெயர்பெறுதற்கேற்ற தொடர்பு அப்பாயிரகாரராற் குறிப்பிடப்படுவதன் முன்னரும் அவர் உரைசெய்தவன் முன்ன ரும் அன்றிச் செய்யும் பொழுதும் உளதென்பது அறியப்படும். எனவே இவ்வடியார்க்கு நல்லார் இவ்வுரையைச் செய்ய முன் ஒரு பண்டிதராய் விளங்கினரன்றி நிரம்பையர் என்னும் ஊராலும் காவ லன் என்று கூறுதற்கேற்ற தொழிலாலும் தொடர்புடையவராய் விளங்கினார் என்றறிக. இனி நிரம்பையர் என அழைக்கப்பட்டது முந் தியதா காவலனென அழைக்கப்பட்டது முந்தியதா எனின் இவை இரண்டும் ஒரேகாலத்தில் நிகழ்ந்தன. நிரம்பையில் பிறந்த இவ்வுரை யாசிரியரே இன்னோர் இடத்தில் காவலனாய் இருந்தார். அவர் காவல னாய் எப்பொழுதிருக்கத் தொடங்கினாரோ அப்பொழுதே நிரம்பை யராய் இருந்தார். ஆயினும் காவலனாய் இருக்க முன்னர் நிரம்பையர் என்றுபிறர் அழைத்தனரா? இல்லைக் காவலனாய் இருந்தபின்னர் தான் நிரம்பையர்என்பது காலத்திலேற்பட்டதாகும். அதன் பின்னர் அவர் நிரம்பையரும் தான்காவலனும் தான். நிரம்பையரே காவலனாய் இருந் தார் எனவே இரண்டு காரணப்பெயர்களையும் பெறுதற்குரிய கார ணங்கள் ஒரே காலத்தில் நிகழ்ந்தனவென்க. ஆயின் நிரம்பையர் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்பட்டது அந்நாட்டு மக்களால், எனவே நிரம்பையர் (காவலனே) என்று குறிப்பிட்டுப் பாயிரம்பாடியவர் அந்நாட்டுமக்களில் ஒருவர் என்பதும் அறிதல்வேண்டும். அன்றியும் அச்சிறப்புப்பாயிரகாரர் நிரம்பையர் எனப்பிறர் அழைத்தாற் போலத்தாமும் அவ்வாறே அப்பெயராலே அவரைச்சுட்டி அழைத்துக் காவலன் என்பதையும் சேர்த்து நிரம்பையர் காவலன் என்றது என்க. எனவே நிரம்பையர் யாரோ அவரே நிரம்பையர் காவலன். ஆண்டுக் காவலன் யாரோ அவரே நிரம்பையர் என்றும் தெளிவாய் அறிந்திடுக. காவலன், நிரம்பையர் என்பன அவ்வொருவர்மேலெழுந்த காரணப் பெயர்கள் தாம் என்க. நிரம்பையர் என்பதால் நிரம்பை அல்லாத பிறநாட்டில் வாழ்ந்தார் என்பதும், அதனோடு காவலன் என்பதால் வாழ்ந்த அந்நாட்டில் காவலனாக வாழ்ந்தார் என்பதும் நன்கு அறிந்திடுதல் வேண்டும்.

---

## 9. "காவலன்."

இனி, காவலன் என்பது நிரம்பையர் என்னும் பெயரோடு கூடிவராலாலும், நிரம்பையர் என்ற பெயரைப் பெற்றபின்னரே பெற்ற பெயராகப் பெறப்படலாலும் அது சிறப்புப்பாயிரக் காரரால் மட்டும் இன்னொரு காரணத்துக்காகக் கூறப்பட்ட இன்னொரு பெயராம் என்க. அன்றி அதுவும் பிறரால் சுட்டியும் பேசியும் வழக்கில் அழைக்கப்பட்ட பெயரென்றால் என்னை யெனின் அத்தகையதொரு பெயரானால் காவலன் என்றிராது காவலர் என்றிருக்குமென்க. அன்றி, நிரம்பையர் என்ற இன்னொரு பெயரால் அழைக்கப்பட்ட அவர் காவலன் என்றும் அவ்வாறு பேச்சுவழக்கில்அழைக்கப்பட்டார் என்றல் பொருந்தாதாம், நிரம்பையர் என்னும்பெயரைப் பெற்ற இடம்அப்பிற இடமெனவே அதனைப்புடை அடுத்துவரும் காவலன் என்னும் பெயரை (அச்சிறப்புப்பாயிரத்தால்) அவர் பெற்ற இடமும் நிரம்பை அல்லாத பிற இடமென்க. அன்றியும் இவ்வுண்மையைக் கீழேகாண்பாம்.

"பலிதி ரிந்துழல் பண்டரங்கன் மேயஜ யாற்றினைக்
கலிக டந்தகை யான் கடற் காழியர் காவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிகொள் சம்பந்த ஞெண் தமிழ் பத்தும்வல் லார்கள் போய்
மலிகொள் விண்ணிடை மன்னிய சீர்பெறு வார்கள்''

எனத் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளைச் சுட்டிய இத்திரு விருத்தத்தில் வரும் 'காழியர் காவலன்' என்பதும், இக் நிரம்பை யர் காவலன் என்பதும் பெரிதும் ஒப்புடையன. ஈண்டுக் காழியர் என்பது அவர்பிறந்த இடத்தினல் வரு பெயராய் சுவாமிகளையே சுட்டிவந்தது. அவ்வாறே நிரம்பையர் என்பதும் என்றறிக. நிரம் பையர், காழியர் என்னும் இவைகளைத் தனித்தனிப் பெயர்கள் என் றது இன்னும் என்னையெனின், அவைகள் காவலன் எனப் புடை அடுத்து வரும் அச்சொற்களை வேண்டாமல் நின்றே, அடியார்க்கு நல்லாரையும், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளையும் சுட்டி உணர்த்தும் ஆற்றலுடைமையான் என்க.

இனி இக்காவலன் என்பதன் பொருள் யாது? காத்தலில் வல்ல வன் என்றோ காப்பவன் என்றோ பொருள்தருவதாய் அரசன் என் னும் நேர்பொருளை உடையதாகும். எனவே, உரையாசிரியர் அரச ராக வாழ்ந்தாரோ எனின், "திருந்திய செங்கோற் சியகங்கன் அருங் கலை விநோதன் அமராபரணன்" என்றுற்போலும் அரசர்க்குரிய செங்கோலையோ அன்றி அவர் தமக்கு இயைந்து கிடந்த அமரை யோ அன்றியும் இத்தகைய பிற குறிப்புக்களையோ அடியார்க்கு நல்லார்க்கு அடையாகச் சேர்த்து அப்பாயிரக்காரரும் உரைச்சிறப் புப்பாயிரத்தில் பாடியிட வில்லை. அப்பாயிரத்தைப் பார்த்துப்பாடிய சதகக்காரரும் அத்தகைய யாதொரு குறிப்புக்களும்குறிப்பிடவில்லை. சதகக்காரர் பாயிரத்தை அன்றியும் பிறவழியாலும் இவரைப்பற்றி அறிந்திருந்தாராதலின்,அச்சதகக்காரர் இவரை அரசர்க்குரிய அடை கொடுத்துக் குறிப்பிடாமையின் இவர் அரசர் அல்லர் என்பது நன்கு துணிபாம். எனவே, அரசர் அல்லாத ஒருவரையே காவலன் என்று (அரசன் என்று) குறிப்பிட்டுப் பாயிரக்காரர் பாடியிட்டார் என்றும் அறிக. அற்றன்று, அது பொருந்துவதல்ல வெனின் இப் பாயிரக்காரரே இவ்வுரையை இயற்றுவித்த பொப்பண்ண காங்கே யன் என்னும் சேனபதியைப் பொப்பண்ண காங்கேயர்கோன் என அரசரை உணர்த்தும் 'கோன்' என்னும் சொல்லால் குறிப்பிட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலினாலும், "காழியர் காவலனே"னத் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளே காவலன் இல்லாதிருக்கக் காவலன் என்னும் சொல்லால், அதாவது உபசாரமாக அரசன் என்னும் பொருட்டில் குறிப்பிடப் பட்டார் ஆதலினாலும், இவ்வாறு குறிப்பிடப்படுதல் ஒவ்வோர் இயைபும் தொடர்பும் பற்றி அவ்வவரைச் சிறப்பித்துக் கூறும் வழியில் புலவரான் கைக்கொண்டு போற்றிக் கூறப்பட்டு வரும் மரபின் வழியதாம் என்க. எனவே, அரசனல்லாத காங்கேயனைக் 'கோன்' என்று பாடினாற்போலவும், அரசனல்லாத திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைக் காவலன் என்று பாடினாற்போலவும் அரசனல்லாத அடியார்க்கு நல்லாரையும் அரசனென்று பாடியது அவரைச் சிறப்பித்துப் பாடிய வழியதாம் என்க. எனவே, உரைசெய்த அடியார்க்கு நல்லாரைச் சிறப்பிக்கும் முகமாக இவ்வுரைச் சிறப்புப்பாயிரம் அவர் அரசனாக இல்லாமல் இருக்கவே பொதுத்தன்மையில் அவரை அரசன் (காவலன்) என்றுபசரித்துக் குறிப்பிட்டதாம் என்க. அன்றியும் அரசனல்லாத ஒருவரை அரசன் என்று பாயிரங்கூறியதெனின் அது உபசரித்துத்தான் அவ்வாறு கூறவல்லதாம் என்று கடைப்பிடிக்க. இனிக் காவலன் என்பது அவரை உபசரித்துக் கூறியிட்டதெனின்—அது அவருக்குத்தொழிலால் வருபெயரெனின்—அவ்வாறுபசரித்துக் காவலன் என்று கூறப்படக்கூடிய தொழிலை உடையவராய் அவர் இருந்தார் எனின் அத்தொழில் தான் யாது? ஆயின் அவரை உரை இயற்றித்தரும்படி கேட்டவனே ஒரு அரசனது படைத்தலைவனாகிய சேனாபதி யென்பது நன்கு ஆராய்ந்து காணப்பட்டது. இன்னும் அவ்வாறு காணப்பட இருப்பது. எனவே தமிழ் அரசனின் சேனாபதி யொருவர் இயற்றித்தரும்படி கேட்க, இயற்றி இட்டவர் உபசாரமாகக் காவலன் என்றே கூறப்பட்ட ஒருவர் ஆனால், அங்ஙனம் இயற்றினவரும் இயற்றியிட்டவரும் பண்டைத்தமிழரசன் ஒருவனின் அரசியல் அவைக்களனைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தான் என்பது ஐயமின்றி அறியப்படும். அன்றியும், இயற்றின அடியார்க்கு நல்லார் பெரும் புலமையுடையவராய் இருந்தும் அவரைக் "......... காரும் தருவுமனையான்" எனக் கொடைக்குணமும் செல்வச் சிறப்பும் வாய்ந்த ஒருவரெனவே சிறப்பித்து அப்பாயிரக்காரர் பாடினாராதலினாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்தம் புலமைச்சிறப்பினும் பிரபுத்துவம்வாய்ந்த அச்சிறப்பையே பாயிரக்காரர் அப்பொழுது போற்றி உரைத்தாராதலினாலும் அவர் ஒரு புலமைச் சிறப்புமட்டும் உடைய கல்விமான் அல்ல எனவும் நன்கு அறியப்படும். எனவே அவர் ஒரு புலவரான்றியும் காவலன் றன் காவற் கடமையில் கடம்பூண்டு அவ்வரசியலில் விளங்கிய ஒருவருமாமென்றறிக. இனி காவலன் என்று பொதுவில் குறிப்பிடத்தக்கவர் அரசர் சிற்றரசர் அமைச்சர் சேனாபதி எனப் பலர் அன்றோ? அது அமைச்சரை மட்டுந்தான் ஈண்டு எவ்வாறு குறிக்குமெனின், அடியார்க்கு நல்லார் அரசராகவோ சிற்றரசராகவோ இல்லை யென்பது மேலே நன்கு பெறப்பட்டது. எனவே அக்காவலன் என்பது அரசரையுமல்ல; சிற்றரசரையுமல்ல என்பதாயிற்று. இனி அது ஒரு சேனாபதியைக் குறிப்பிட்டுவந்தால் என்னையெனின், உரையை இயற்றி இட்டவரையே குறிப்பிட்டு வந்ததாதலானும், உரையை இயற்றும்படி கேட்டுக்கொண்டவனே காங்கேயன் என்னும் சேனாபதி யெனக் கூறப்பட்டிருப்பதாலும் அது ஒரு சேனாபதியைக் குறிப்பிட்டு வரவில்லை என்க. எனவே, ஒரு அரசியலில் தொடர்புபட்டவராய், சிற்றரசருமல்லாத, சேனாபதியுமல்லாத ஒரு அமைச்சரையே அக்காவலன் என்பது குறிப்பிட்டு வந்ததென்க. (இனி நிரம்பையர் காவலன் என்னும் அச்சொற்றொடரின் பொருள் நிரம்பையராகிய காவலன் என்க. காவலன் என்னும் அப்பெயரைப்பெற்ற இடமும் நிரம்பையிலல்ல; நிரம்பையை விட்டு வந்த இன்னோரிடத்திலென்க. எனவே,

1. அமைச்சரையே அக்காவலன் என்பது சுட்டி வந்தது.

2. காவற்றொழில் உபசாரமாகக் கூறுதற் கேற்றவாறு, அக்காவற்றொழிலில் காவலனை ஒப்ப மதிப்புடைய அமைச்சரே என்பதும் பொருந்துவதொன்றாகும்.

3. உபசரித்து உரைசெய்வித்துக் கொண்டவர் காங்கேயன் என்னும் சேனாபதி யெனவே அவராற் கேட்டுக்கொள்ளப்பட்டவர் அமைச்சர் என்பதும் சரியே.

4. சிலப்பதிகாரத்துக் குரைசெய்த அடியார்க்கு நல்லார் ஒரு அமைச்சராய் இருந்தார் எனின் அது இன்னும் பொருத்தமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அடியார்க்கு நல்லார் அமைச்சராய் இருந்தமையாற்றான் காங்கேயன் சோற்றைக்கூலியாகக் கொடாமல் சோற்றைக் கொடுத்துச் செருக்கச் செய்துஅவரை உபசரித்து உரைசெய்வித்துக் கொண்டார் என்க.

## 10. உரைச்சிறப்புப் பாயிரம் நிரம்பையில் பாடப்பெறவில்லை.

சிறப்புப் பாயிரம், சதகம், நிரம்பையர் என்னும் இவைகளின் ஆராய்ச்சிக்கண்ணும் பிறஇடத்தும் வெவ்வேறு சந்தர்ப்பத்தில் கூறப்பட்ட உண்மைகளால் உரைச் சிறப்புப்பாயிரம் நிரம்பையில் பாடப்படவில்லை என்னும் முடிபு நன்கு பெறப்பட்டு நிற்கின்றது. எனினும் உணர்ச்சி வல்லாரன்றி இளைஞர் எளிதாக உளங்கொள்ளுதல் நோக்கி இவ்வாறு இவற்றை ஒரு பத்தியுள் வைத்து அவ்வுண்மையை விளக்க எடுத்துக்கொண்டாம். முதலில் இருந்தே ஆராயின் அவ்வுண்மை விரியுமாதலால் முன்னர் முடிந்த முடிபுகளைத் துணைக்கொண்டே விளக்குவாம். முன்னர்க்கண்ட பாயிர வாராய்ச்சியால் பெறப்பட்டவைகளாவன:

1. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்குரைசெய்தார்.

2. அவ்வுரையைச் செய்யுங்காலத்து அவர் நிரம்பையர், காவலர் என்னும் பெயர்களையுடையவராய் இருந்தார்.

3. காங்கேயர்கோன் அவ்வுரையை இயற்றித்தரும்படி கேட்டார்.

4. அவர் கேட்டவாறு அடியார்க்கு நல்லார் உரைசெய்தார் என்பது.

5. காங்கேயனும் அடியார்க்கு நல்லாரும் உரைசெய்த அவ்விடத்தில் வாழ்ந்தார்கள் என்பன. இச்சிறப்புப் பாயிரத்தில் கூறப்பட்ட அத்தனையும் நிரம்பையில் நிகழவில்லை என்று நிரூபணத்தில் சாதித்துக்காட்டவே உரைச்சிறப்புப்பாயிரம் நிரம்பையில் பாடப்பெறவில்லை என்பதும் முடிபாகும். இவற்றை முறையே காண்க.

1. அடியார்க்கு நல்லார் நிரம்பையில் உரைசெய்யவில்லை என்பது சதகக்காரரால் அவர் உரை சொன்னதுங் கொங்குமண்டலம் என்றேனும், அன்றிக்காங்கேயன்மேல் வைத்து உரைசொல்லுவித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துங் கொங்குமண்டலமென்றேனும் கூறப்படாமையானும் அறியப்படும். அன்றியும், இவர் நிரம்பையில் உரைசெய்தார் எனின் ஒரு வினை நிகழ்ச்சிக்குக் காலமும் இடமும் வேண்டப்பட்டாற்போல இவர் நிரம்பையில் ஓர்காலத்து வாழ்ந்து அந்நிரம்பையையே இடமாகக் கொண்டனர் என்னல்வேண்டும். ஆயின் நிரம்பையில் அவர் வாழவில்லை என்பது முன்னர்ப் பல்லாற்றானும் நன்கு நிச்சயமாயிற்று. அவ்வாறாயின் நிரம்பையில் எப்படி உரை செய்யவும், உரைச் சிறப்புப் பாயிரம் பாடவும் முடியும்? நிரம்பையில் வாழ்ந்தாலன்றோ நிரம்பையையும் உரைசெய்தற்கிடனாகக் கொள்ளல் கூடும்? அன்றியும் இவர் நிரம்பையர் என்னும் பெயரைப் பெற்றது இன்னொரு இடத்தில் சென்று வாழ்ந்தமையாலன்றோ. இன்னொரு இடத்தில் சென்று வாழ்ந்தவர் நிரம்பையில் உரைசெய்தல் முடியாதே. உரை சொன்ன இடத்திலன்றோ உரைச்சிறப்புப் பாயிரமும் பாடப்பட்டது. ஆகவே உரை சொன்னது நிரம்பையில் இல்லையெனவே உரைச்சிறப்புப் பாயிரம் பாடப்பட்டதும் நிரம்பையிலல்ல என்பதாயிற்று.

2. இனி, இரண்டாவதாக இவ்வுரையை இவர் செய்யுங்காலத்து நிரம்பையர் காவலர் என்பவராய் அதாவது: அப்பெயர்களை உடையவராய் இருந்தார் என்பது: நிரம்பையர் என்பது இன்னொரு பெயர் என்றும், காவலன் என்பது இன்னொரு பெயர் என்றும் கண்டாம். அன்றியும் நிரம்பையர் என்பது நிரம்பையில் அல்லாமல் இன்னொரு நாட்டில் அழைக்கப்பட்டது எனவும் கண்டாம். காவலன் என்னும் பெயர் நிரம்பையர் என்பதோடு அதன் பின்னரே வந்து சேர்ந்து "நிரம்பையர் காவலன்" என வருதலால் நிரம்பையர் என்னும் பெயரைப் பெற்ற இடமே காவலன் என்னும் பெயரைப்பெற்ற இடமாகின்றது. எனவே, காவலன் என்னும் பெயரையும் நிரம்பையிற் பெறவில்லை. நிரம்பையர் காவலனே என அவர்நிரம்பையில் அழைக்கப்படவுமில்லை. அவ்வாறாயின் நிரம்பையர் காவலனே என அவரைச் சிறப்பித்து உரைக்கும் பாயிரம் நிரம்பையில் பாடப்பெறவில்லை.

3. இனி, காங்கேயன் அவ்வுரையை இயற்றித்தரும்படி கேட்டார் என்பது பாயிரம். ஆனால் சதகக்காரரால் இக்காங்கேயன் நிரம்பையில் அவதரித்ததான—வாழ்ந்ததான குறிப்புக்கள் கூறப்படாமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானும், அதாவது அச்சதகவாராய்ச்சியால் காங்கேயன் நிரம்பை யில் அவதரிக்கவுமில்லை; வாழவுமில்லை என்று பெறப்படுதலானும், அவர் கேட்டபோது நிரம்பையர் காவலனான அடியார்க்கு நல்லாரே உரையைச் செய்தார் என்று அப்பாயிரத்தால் பெறப்பட்டதாலும் அடியார்க்கு நல்லார் நிரம்பையை விட்டுச் சென்று வாழ்ந்த அந்த இடத்திலேயே காங்கேயன் எக்காரணத்தினாலோ சந்தித்து உரை இயற்றித் தரும்படி கேட்டார் என்பது பெறப்படலாயிற்று. எனவே, காங்கேயன் நிரம்பையில் உரை இயற்றித் தரும்படி கேட்கவில்லை. அவ்வாறானால் காங்கேயனை உரை இயற்றித்தரும்படி கேட்டதாகக் கூறும் சிறப்புப் பாயிரம் நிரம்பையில் பாடப்பெறவில்லை. ஏனை 4-ம் 5-ம் நியாயங்களும் மேற்கூறியவாற்றால் முடிக்கவல்லது எனி னும் சிறிது கூறுவாம்.

4. காங்கேயன் கேட்டபடி அடியார்க்கு நல்லார் உரைசெய்தார் என்பது பாயிரத்தின்முடிபு. இங்ஙனம் உரை செய்து தரும்படி கேட்டது கொங்குமண்டலத்திலல்ல வென்பது எவ்வாறெனின், கொங்குமண்டலத்தில் காங்கேயனும் வாழவில்லை; அடியார்க்கு நல் லாரும் வாழவில்லை என்பது முன்னர் நன்கு பெறப்பட்டது. எனவே, கொங்குமண்டலத்தில் வாழாத காங்கேயன் அம்மண்டலத் திலேயே வாழாத அடியார்க்கு நல்லாரை அம்மண்டலத்தை இட னாகக் கொண்டுகேட்டல் அசம்பாவிதமாகும். அதாவது முடியாத காரியமே.

5. இதற்கும் மேலே நாலாம் பத்தியில் கூறப்பட்டவைகளே நியாயமாகும். காங்கேயனும் அடியார்க்கு நல்லாரும் உரைசெய்யப் பட்ட இன்னொரு இடத்திலேயே வாழ்ந்தார்கள் என்றும், கொங்கு மண்டலத்தில் வாழவில்லை என்றும் முன்னர் நன்கு காட்டப்பட் டது. எனவே, இவ்வாறு அறியப்பட்ட அவ்விருவரும், அவர் தம்மைத் தொடர்ந்தறியும் பாயிரத்தாலறியப்பட்ட எவ்வித சரித் திரக் குறிப்புக்களும் நிரம்பையில் இல்லையாகவே சிறப்புப்பாயிரம் நிரம்பையில் பாடப்பெறவில்லை என்பதைச் சரிவரக்கண்டு கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. அடியார்க்கு நல்லார் பிற்காலத்தில் நிரம்பையில் வாழவில்லை.

அடியார்க்கு நல்லார் நிரம்பையில் வாழவில்லை என்பதை முன்னர் இடை இடையே வெவ்வேறு சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறினும். எனினும், பின்னர் நிகழ விருக்கும் ஆராய்ச்சிக்குதவியாக அதற்கென ஒரு பத்தியில் அதனை வைத்து முடித்துக்கொண்டு அப்பாற் செல்ல வேண்டுவதாயிற்று.

இக் கூற்றை அடியார்க்கு நல்லாரைப்பற்றிக் கூறும் கொங்கு மண்டல சதகப்பாட்டு, ஏனைச் சதகப்பாட்டுக்கள், உரைச்சிறப்புப் பாயிரப் பாக்கள், நிரம்பையர் காவலர் என அவர்க்கமைந்த பெயர் வழக்குகள் என்பன முதலாக எல்லாம் ஒன்றுபட்டுரைக்கின்றன. அவரைப் பற்றிக் கூறிய சதகப்பாட்டில் அவர் வாழ்ந்ததுங் கொங்கு மண்டலமே எனக் கூறப்படாமையானும், அவ்வாசிரியரே ஏனையோரை வாழ்ந்ததுங் கொங்குமண்டலமே எனக்கூறி இருப்பதானும், சிறப்புப்பாயிரத்தில் நிரம்பையர் (காவலன்) என்னும் பெயரைப் பெற்றது அறியப்படலானும், அப்பெயர் அவர் நிரம்பையை விட்டு இன்னொரு இடத்திற் சென்று வாழ்ந்ததால் தான் வந்ததாதலானும், அது பிற்காலத்திலாதலானும், உரைசொன்னதும் உரைச் சிறப்புப் பாயிரம் பாடப்பட்டதும், காங்கேயன் சந்தித்ததும், அவர் கேட்டுக் கொண்டதும் பிற்காலத்திலேயே ஆதலானும் இவ்வுண்மை அறியப் படும் என்க. இவை முன்னர்ப் பெற்றவையும் இனிமேற் பெறப்பட இருப்பவையும் என்க. அன்றியும், இதுவரை முன்னர் ஆராய்ந்து வைத்திட்ட பல பிற நியாயக் கோட்பாடுகளானும் பிறத்தல், வளர்தல், வாழ்தல், இறத்தல் எனவரும் ஒருவரது வாழ்க்கைப் பகுதிகளில் பிறத்தல் ஒன்றையே அச்சதகாசிரியர் கூறி ஏனைய பகுதிகளை அக் கொங்குமண்டலத்துக்குத் தொடர்பில்லை என்று விலக்கிவிட்டமை யானும், இன்னும் இன்னோரன்ன பல ஏதுக்களானும் அடியார்க்கு நல்லார் பிற்காலத்தில் நிரம்பையில் வாழவில்லை என்பது ஐயமற நாட்டப்படும் என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. அடியார்க்கு நல்லார் பிற்காலத்தில் கொங்குமண்டலத்தில் வாழவில்லை.

நிரம்பையில் வாழவில்லை என்பதே போதுமானாலும், ஒரு வகைபற்றி அதன் ஐயம் நீங்க இப்பத்தியையும் எடுத்துக்கொண்டாம். இவரைப்பற்றிப் பாடிய கொங்குமண்டல சதகப் பாட்டாவது:

"அருமை யுரைசெய் யடியார்க்கு நல்லார் அவதரித்த (து)
வருமைப் பொழில்நிரம் பைப்பதி யுங்கொங்கு மண்டலமே"

இவ்வாறு பாடியதால் அதாவது அடியார்க்கு நல்லார் வாழ்ந்ததுவும் கொங்குமண்டலமே என்று கூறுமையாலும், தொண்டைமண்டல சதகத்தில்,

"பாரதம் பாடு பெருந்தேவ னார்வாழும் பழம்பதிகாண்
மாருதப் பூவின் மணம்வீசி டும்தொண்டை மண்டலமே"
[தொ. ம. ச. பா. 53]

"காராளன் கூடற் கிழவோன் முதுமொழிக் காஞ்சிசொற்ற
வாரார் புரிசைக் கிழவோனும் வாழ்தொண்டை மண்டலமே"
[தொ. ம. ச. பா. 66]

"வெல்லையி னீடுங் கரடக் கடாக்களி றென்றுசொன்ன
வல்லையிற் காளத்தி வாழ்வான துந்தொண்டை மண்டலமே"
[தொ. ம. ச. பா. 52]

"பல்லக்கி லேயன்றி மண்படு மோவென்னும் பாடல்
கொண்ட
வல்லப் பதிக்கச்சி யப்பனும் வாழ்தொண்டை மண்டலமே"
[தொ. ம. ச. பா. 50]

என்னும் இப்பாக்களால் "பாரதம் பாடும் பெருந்தேவனார் வாழும் பழம்பதிகாண்.........தொண்டை மண்டலமே" என்றும், "முதுமொழிக் காஞ்சி சொற்ற வாரார் புரிசைக்கிழவோனும் வாழ் தொண்டை மண்டலமே" என்றும், "சம்பந்தனும் வாழ்தொண்டை மண்டலமே" என்றும், "நீடுங்கரடக் கடாக்களிறென்று சொன்ன வல்லையிற் காளத்தி வாழ்வானதுந் தொண்டை மண்டலமே," என்றும், "பல்லக்கிலேயன்றி மண்படுமோ என்னும் பாடல் கொண்ட கச்சியப்பனும் வாழ் தொண்டை மண்டலமே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் கூறப்பட்டிருத்தல் காண்க. இவ்வாசிரியராற் பாடப்பட்ட கொங்குமண்டல சதகத்திலே

"மதியூகி யான வதிகனும் வாழ்கொங்கு மண்டலமே"
[கொ. ம. ச. பா. 93]

"வல்லவன் வேட்டுவச் செய்யானும் வாழ்கொங்கு
மண்டலமே"
[கொ. ம. ச. பா. 97]

"வங்கிசந் தார்வாண ராயனும் வாழ்கொங்கு மண்டலமே"
[கொ. ம. ச. பா. 96]

"மனமிகு கோசரும் வாழ்ந்தாண் டதுங்கொங்கு
மண்டலமே"
ஷை பா. 40

என்றின்னவாறு பாடியிருத்தல் காண்க. அன்றி அப்பாட்டினுள் அவர் வாழ்வைத் தொடர்புபடுத்தி "வாழ்ந்தாண்டதும்" "வள்ளல் தங்கும்" என்றாற்போலவேனும் கூறியிடவில்லை. அன்றி அம்மா பிற்கண்டவாறு பெயரையேனும் மண்டலத்தோடு சார்த்தி "சர்க்கரையும் கோங்கு மண்டலமே" "வரையாதளித்த நல்லோரிவள்ளலும் கோங்குமண்டலமே" என்றாற்போலவேனும் கூறியிடவில்லை. இவ்வாற்றான் அந்நல்லார் கொங்குமண்டலத்தில் வாழவில்லை என்றே அச்சதகாசிரியர் கருதினர் என்றே அறியப்படும். இச் சதகங்கள் முறையே புறச்சான்றாகவும் அகச்சான்றாகவும் ஒரு இயைபில் வருமாற்றை அறிக.

---

## 13. கொங்கு மண்டலத்தில் உரை இயற்றப் பெறவில்லை.

(1) இவ்வடியார்க்கு நல்லார் இம்மண்டலத்திலே தான் உரை இயற்றியதாக அச்சதகாசிரியர் சொல்லவில்லை. அங்ஙனம் இயற்றியவர் பலரை வெளிப்படையாகக் குறிப்பிட்டிருக்கின்றார். அவ்விடங்களையும் காண்பாம்.

"படிபுகழ் தேசிகர்...............
குடிபுகுந் தாய்ந்து பரமந பங்கங் குலவவொண் ணூல்
வடிதமி ழாற்சொலத் தேறிய துங்கொங்கு மண்டலமே"
[கொ. ம. ச. 60]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புரந்தரன் போற்றும் நெருலூரிற் காளிப் புலவன்பட்ட
மரந்தழை யக்கவி பாடிய துங்கொங்கு மண்டலமே"
[கொ. ம. ச. 72]

"போயா தரவுட னெற்போர் கிடந்திடப் புற்றிரைச்சற்
றியார வெந்து பொடிபட வென்றன்று செந்தமிழால்
ஓயாத வாக்கிதென் மங்கைச் சுவாமியென் றோர்புலவன்
வாயார அங்கதம் பாடின துங்கொங்கு மண்டலமே
[கொ. ம. ச. 81]

"முட்டையென் பேர்சுரம் போக்கா வொருபா மொழி
[யெனக்கேட்
டிட்டமுறுபொய்யாமொழி...பொன்போ லெனவுரைக்கச்
சுட்டழ கில்லையி தென்று விழுந்த துளியென்றுநன்
மட்டவிழ் தார்முரு கோன்சொன்ன துங்கொங்கு
மண்டலமே"

எனக்கூறி இருக்குமாற்றை யறிக. இவ்வாறு வரும் இக்கூற்றுக் களால் அடியார்க்கு நல்லார் கொங்குமண்டலத்தில், உரை இயற்ற வில்லை என்பதே நன்கு துணியப்படும் என்று அறிந்து கொள்க. அங்ஙனம் இயற்றி இருந்தால் உரை இயற்றியதும் கொங்குமண் டலமே என்ருற்போலும் சொல்லுவர் என்க. அன்றியும் இவ்வுண் மையை மேலே காண்பாம்.

(2) கோங்கு மண்டல சதகப் பொருள்களும் பிறகுறிப்புக்களும்.

இனி, ஈண்டு நாம் கவனிக்கும் இன்னென் றென்னையெனின், இச் சதக ஆசிரியர் தாம்பாடிய அச்சதகப் பாட்டிலே இவ்வாறு பாடுவதோடு, அவ்வவர்கள் உரையோ நூலோ பாடநேர்ந்த அவ்வச் சந்தர்ப்பங்களையும் உடன் சேர்த்தே பாடி இருக்கின்றமை என்பது. இந் நல்லார் சிலப்பதிகாரத்திற் குரைசெய்ய நேர்ந்த சந்தர்ப்பம், இன்னதென்பது அப்பாயிரப்பாட்டில் "கூற்றைத் தவிர்த்தருள் போப்பண்ண காங்கேயர் கோனளித்த சோற்றுச் செருக்கல்லவோ" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது எவ்வாருே காங் கேயர்கோன் என்பான் கேட்டுக் கொண்டமைதான் என்பது. அச் சந்தர்ப்பத்தைக்கூட இவ்வாசிரியர் விலக்கியேபாடியிட்டார் என்பது, அவர்வனேயோரதுவனேச்சந்தர்ப்பங்களைப்பாடிஇருத்தலினுலும்நன்கு துணியப்படும் என்க. முன்னர்க் காட்டப்பட்ட அப் பாக்களிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சந்தர்ப்பத்தையும் காண்பாம். புற்றிரைச்சல் என்னும் ஊரதி பனைக்கண்டு நெற்போர் கேட்டமையையும், அவன் கொடுக்க மறுத்தமையையும், அதற்காகவே அவர் அங்கதப்பாட்டுப் பாடினமையையும் சுட்டி "போயா தரவுடன் நெற்போர் கிடந்திடப் புற்றிரைச்சற், றீயார வெந்து பொடிபட வென்றன்று செந்தமிழால், ஓயாத வாக்கிதென் மங்கைச் சுவாமியென் றோர்புலவன், வாயார அங்கதம் பாடின தும்கொங்கு மண்டலமே" என்றும், பொய்யாமொழிப் புலவரைக் காட்டுவழியிடையே சந்தித்து, முருகவேள் தம்பெயர் முட்டையென்று வைத்துச் சுரம்போக்காக ஒரு பா மொழியெனக் கேட்டமையையும், அதற்கவர் "பொன்போலுங் கள்ளிப் பொறிப் பறக்கும்......காடு" என்னும் வெண்பாவைச் சொல்ல அது அழகில்லை என்று" அவர் பிறிதொன்று பாடியதையும் விளங்கவிரித்து "முட்டையென் பேர்சுரம் போக்கா வொருபா மொழியெனக் கேட்டிட்டமுறு பொய்யாமொழி...பொன்போ லெனவுரைக்கச், சுட்டழகில்லையீ தென்று விழுந்த துளியென்றுரன், மட்டவிழ் தார்முருகோன்சொன்ன தும்கொங்கு மண்டலமே" என்றும், கங்கை கரை கடந்ததையும், அதையறிந்து அதற்கஞ்சிய அந்நாட்டு வேளாளர் கம்பரை வேண்டியமையையும், கம்பர் ஒரு பாட்டுச்சொல்லி அடக்கியதையும், சுட்டி "கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள் கண்ணின்முன்னே பன்னி யிகழாதமரெனக் கம்பர்ஓர் பாச்சொலச்செய் மன்னிய கங்கைக் குலத்தாரும் வாழ்கொங்கு மண்டலமே"என்றும், சிவப்பிரகாசர் என்பவரைத் துட்டர் பழித்தமையையும் அதற்கவர் கல்விடபம் கடலையைத் தின்னும்படி பாடியதையும் "பண்பார் சிவப்பிர காசனைத் துட்டர்பழிக்கவவர், கண்பார்க்க வில்லார் பொதுச் சபை யின் வித்த காவெனவோர், வெண்பாச் சொலக்கல் விடபம் கடலையை மென்றுதின் னும், வண்பா வலர்வரு செங்கோடை யுங் கொங்கு மண்டலமே" என்றும், பிரதாப பயங்கரன் என்னும் புலவன், இன்னொரு புலவனை இம்மலை நாகமலை யானால் படம்விரித்து ஆடாததென்னை என்று அம்மலையைச் சுட்டி வினவியமையையும், அதற்கு முருகக்கடவுள் அம்மலையின் மேலுள்ள மயில்வாகனம் கொத்துமென்றே என்று பதில் கூறியமையையும் சுட்டி "பெருமை மிகுமா வச்சிலம் பாமெனில் பெட்புறுமவ், வரவு படம்விரித் தாடாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னென்று அகத்துனுமோர்,கருவி வெருக்கொள......வாமேய்ப் பறைக் கனிந்துதிரு, மருகன்மயில் வாகனம் கொத்துமெனச் சொல்கொங்கு மண்டலமே" என்றும், சண்முகவேலன் நன்னேயத் தினாலே காளிப்புலவன் பட்ட மரம் தழையக் கவிபாடியதைச் சுட்டி, "பரந்த, கடலுல கெல்லா மறியப் பரமசிவ, னிரந்தர மாயருள் சண்முக வேலனன் னேயத்தினற், புரந்தான் போற்றும் நெருவூரிற் காழிப்புலவன் பட்ட,மரந்தழை யக்கவி பாடிய துங்கொங்கு மண்ட லமே" என்றும் இன்னவாறு ஒவ்வொருவரது ஒவ்வொரு சந்தர்ப் பத்தையும் விளங்க விரித்துப் பாடி இருத்தல்காண்க. இவை ஒரு சிலவற்றை உதாரணத்துக்காகக்காட்டினும். இவ்வாறே இச்சதக ஆசிரியர் ஒருவர் பாடிய நூலையோ—தனிப்பாடலையோ பாடநேர்ந்த சந்தர்ப்பங்களையும் நியதியாய் உடன் கூறியே செல்கின்றனர் என் பது நன்கு விளங்குகின்றது. இவ்வாறு வருமிடங்கள் இன்னும் பல. அவற்றை அந்நூலிலேயே கண்டு தெளிக.

இவ்வாறு எச்சந்தர்ப்பங்களையும் விலக்காது அச்சதகப்பாட் டுடைத்தலைவரோடுசேர்த்துப்பாடிய இவர், இந்நல்லார்உரைஇயற்றுவ தற்குரிய மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தையும் பெற்றுக்கொண்டது கொங்குமண்டலமானல், அவர், "அவதரித்த வருமைப் பொழில் நிரம்பைப்பதியும் கோங்கு மண்டலமே" எனப் பாடுவர் கொல்லோ? அங்ஙனம் ஒருக்காலும் பாடார் என்க. அன்றியும்;

"நீதப் புகழுத யேந்திரன் காதை நிகழ்த்துதற்குக்
கோதற்ற மங்கையின் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி
மேதக்க சொற்சங்கத் தார்வெள்க வேகொங்கு வேளடிமை
மாதைக்கொண் டுத்தரஞ் சொன்ன துவுங்கொங்கு
மண்டலமே"

என இப்பாட்டிலே கொங்குவேளிர், அவர் பெற்ற சந்தர்ப்பம், சங் கத்தார், அடிமை மாது, அவள் சொன்ன உத்தரம் என்னும் எல்லாச் சந்தர்ப்பப் பொருள்களையும் அச்சந்தர்ப்பங்களையும் சேர்த்து இச் சதக ஆசிரியர் பாடியிருத்தல் காண்க. அன்றியும் இப் பாட்டொன் றிலேயே வைத்தும் இவ் வுண்மை துணியப்படு மென்க. எனவே இவ்வாற்றல் கொங்குமண்டலத்திலே சிலப்பதிகாரத்துக்குரை இயற்றப் பெறவில்லை என்பது, நன்கு முடிபாயிற்று எனக் கண்டு கொள்க.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. போப்பண்ண காங்கேயர்கோன் கொங்குமண்டலத்தில் வாழவில்லை

இவ்வுரையை இயற்றுவித்தவர் பொப்பண்ண காங்கேயர் கோன் என்று கூறப்படுகின்றார். கொங்குமண்டல சதகத்தில் இவர் பாடப்பெறுமைகொண்டே இவர் இம்மண்டலத்தில் உள்ளவர் அல்ல என்பது அறியப்படும். சிலப்பதிகாரத்துக்குரைசெய்த உரிமையும் பெருமையுமுடைமையால் இவ்வடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்தொடுபடுத்தி இச்சதகாசிரியராற் பாடப்பெற்றாற்போல அங்ஙனம் அவ்வுரையை இயற்றுவித்த உரிமையும் பெருமையு முடைமை காரணமாக இவ்வுரையை இயற்றுவித்த காங்கேயர்கோ னும் இவ்வாசிரியரால் ஒருதலையான் இப்மண்டல சதகத்திலே பாடப்படுதற்குரியரே யாவர். அன்றியும், சதகமரபென்னும் பொது விதியின்படி நூலோ உரையோ செய்தாரை யன்றிச் செய் வித்தாரையும் பாடல்வேண்டுமென்றோ? எனவே இவ்வாற்றால் அவர் இம்மண்டலத்துள்ளவர் அல்ல என்பது நன்கு நிச்சயமே. அன்றி யும் தக்க இராமாயணக் கதையை இயற்றுவித்த நல்லதம்பிக் காங் கேயன் நன்னூலை இயற்றுவித்த சீயகங்கன் முதலியோர் இக்கொங்கு மண்டல சதகாசிரியரால் பாடப்பெற்றுள்ளமைகொண்டு அவ் வுண்மை இன்னும் நிச்சயமே. இன்னும் இவ்வுண்மையை இடத் தொடுபடுத்தியறியும் மேல்வரும் அதிகாரங்களில் காண்பாம். இது ஆசிரியர் கூற்றுகமட்டும் அறியப்பட்ட இடமென்க.

## 15. உரை இயற்றுவித்த போப்பண்ண காங்கேயர்கோன் வரலாறு

இச்சிலப்பதிகார உரையை இயற்றுவித்தவர் ஒரு பெரியார் என்பதில் ஐயமே இல்லை. இவர் வரலாற்று யாது? இதில் பொப் பண்ணன் என்பது என்னை? காங்கேயன்(ர்) என்பது என்னை?

"காங்கேயர் என்ற பட்டப்பெயர் கொண்டுவாழும்பரம்பரை யார் இன்னும் இம்மண்டலத்தில் இருக்கின்றார்கள். காங்கேயப் பட்டமுற்றவர்கள் செய்வித்த கோயில்களும் நூல்களும் இருக்

கின்றன" [கொ. ம. ச. பக். 117] என்று குறிக்கப்பட்டிருப்பதால் காங்கேயன் என்னும் ஒரு பட்டமும் உண்டென்பது அறியப்படுகின்றது. கொங்குமண்டல சதகம் ஐம்பத்து நாலாவது பாட்டில் சூரிய காங்கேயன் என்னும் ஒருவன் குறிப்பிடப் படுகின்றான். அப் பாட்டாவது:

"வில்லாள ராகிய மூவேந்தர் போரின் வினைமுகத்து
நில்லா தகன்றிடச் செய்யாறை வாண நிருபதியைக்
கொல்லாது பற்றியப் பாண்டியன் முன்னங் கொணர்ந்து விட்ட
வல்லாண்மை மீறிய சூரிய னும்கொங்கு மண்டலமே"

என்பது. அப்பாட்டின் கருத்துரையாக "தமிழ்நாட்டு மூன்று மன்னர்களையும் திகிலடையும்படி செய்யவல்ல ஆறகழூர் வாணனைப் பிடித்துப் பாண்டியன் முன்னர் நிறுத்திய சூரிய காங்கேயனும் கொங்குமண்டலமே" என்பதாம் என்றும், அதன் வரலாற்றுக் குறிப்பில் "...........மோரூர் கண்ண குலத்தானை சூரியன் என்னும் சேனுவீரவாலிபன் என்றிவன் சொல்லப்படுவதானும் காங்கேயன் என்பது வல்லாண்மை மீறியவர்களாய்ச் செயற்கரிய வீரச் செயல்களைச் செய்த சேனுபதிகளுக்கே கொடுக்கப்படும் ஒரு பட்டப்பெயர் என்பதும் அறியப்படுகின்றது. அன்றியும், இச்சூரிய காங்கேயனது வரலாற்றைக் குறிப்பிடும் இன்னேரிடத்தில் "இந்தச் சூரியன் என்பவனுக்கு காங்கேயன் என்ற பட்டமும் கொடுத்து ........ ......... அதிகாரமும் கொடுத்தான்" என்றின்ன குறிப்புக்களும் இச்சதகத்தால் காணப்படுகின்றன. [கொ. ம. ச. பா. 64. வரலா.] குறிப்பு.]

அன்றியும் இச்சதகத்தி இப்பாட்டால் நல்லதம்பிக் காங்கேயன் என்னும் ஒருவன் பாடப்பட்டிருக்கின்றான். "......... நம்பு மிராமகதையையன் பாக நவிலவிசை, வம்பவிர்த் தார்ப்புய நல்லய னும் கொங்கு மண்டலமே" என்பது அவனைப்பாடிய அப்பாட்டு. அதன் கருத்துரையில் நல்லயன் என்பதற்கு நல்லதம்பிக் காங்கேயன் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவன் இயற்றுவித்ததாகக் கூறும் தக்க இராமாயணப் பாயிரத்தில் "இவனும் நல்லதம்பிக் காங்கேய னிவன் றனூரு மோரூராம்" என்றும் அதன் அரசியற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலத்தில் "திரமன் புகழ்மோரு ரத்தப்பன் செஞ்சொல், நல்ல தம்பிக் காங்கேயன்" என்றும் குறிக்கப்படுகின்றான். இவ்வாற்றால் நல்லதம்பி என்னும் ஒரு அதிடன் காங்கேயன் என்னும் பட்டத்தைப் பெற்று நல்லதம்பிக் காங்கேயன் என அழைக்கப்பட்டான் என்பது இந்நூலாற் புலனாகின்றது. இனி "காங்கேயன், மும்முடிப் பல்லவராயன் பட்டத்தை வகித்துவரக் கூடியவர்கள் கொங்கு வேளாளரில் செங்கணகுலத்தலைவர்" (கொ. ம. ச. ப. 90) என்று கூறப்படுவதால் மும்முடிப் பல்லவராயன் என்னும் பட்டமும் காங்கேயன் என்பதைப் போன்றதொன்றே.

> "திரிபுவனச் சக்கர வர்த்தி வளவன்றன் சிந்தைகொளுஞ்
> செருவிற் படையைச் செலுத்திச் சயங்கொள் நிறலறிந்து
> விருதுப் பெயர்மும் முடிப்பல் லவவடல் வீரனென்றே
> வருபட்டம் பெற்றவன்........."

என மும்முடிப் பல்லவராயனைப் பாடியதில் இருந்தும் காங்கேயன் என்னும் பட்டத்தையுடையான்றன் குறிப்பும் அறிய முடிகிறது. அன்றியும் இக்கொங்குமண்டல சதகத்தில் இன்னோர் பாட்டின் (ஷை. ச. 75) வரலாற்றுக் குறிப்பில் "...........அவன் பாண்டிய வேந்தர் போர் வீரரிற் சேர்ந்து சண்டை நடத்தி வெற்றிபெற்றதற்கு மகிழ்ந்து காங்கேயன் என்ற பட்டமும் மற்றும் இராச சின்னங்களாய மாலை கொடி முதலியனவும் கொடுத்தான்" என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாற்றாலும்

> "பலகலைதேர் காங்கேயன் பட்டமுடையான்
> உலகறியச் சொன்ன வுரிச்சொல்" (உ. சொ. நி.) எனவும்

"கங்கா குலத்தினரான வேளாண்டலைவருக்குக் காங்கேயர் என்ற பட்டப்பெயர் இட்டு அரசர் அழைத்திருக்கின்றனர்" எனவும் கூறியிட்டவைகளாலும் காங்கேயன் என்பது பட்டப்பெயர் என்பதும் அதுவும் சேனைபதிகளுக்கே கொடுக்கப்படும் பட்டப்பெயர் என்பதும் நன்கு அறிந்துகொள்க. (மோரூர்க் காங்கேயன், காடையூர்க் காங்கேயன், புதுவைக் காங்கேயன் என ஊராலும் ஆட்கொண்ட காங்கேயன், உரிச்சொல் ,நிகண்டு பாடிய காங்கேயன் எனச் சிறப்புக்களாலும் இக்காங்கேயன் என்பது தொடர்ந்து வரும்.) எனவே பொப்பண்ணகாங்கேயன் என்பதில் பொப்பண்ணன் இயற்பெயரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேயன் பட்டப்பெயருமென்க. எனவே சிலப்பதிகாரத்துக்குரை செய்வித்தோன் ஒரு சேனபதியே என்க. பொப்பண்ண காங்கேயர்கோன் என்பதற்குக் காங்கேயர் என்னும் மரபினர்க்குத் தலைவன் என்றும் பிறர் உரைத்தனர். அவன் சேனபதியாயினமையானன்றே அவனைப்பாடிய பாயிரக்காரர் காற்றைப் பிடித்தல், கடத்திலடைத்தல், கடிய பெருங் காற்றைக் குரம்பையாகச்செய்தல் என்பனவற்றை அவன்றன் குணஞ்செயல்களைக் குறிப்பிட்ட உவமானக் குறிப்புக்களாகவும், காலமென்னும் கூற்றைத் தவிர்த்தருள் என்பது அத்தகைய உபமேயக் குறிப்பாகவும் பொருந்தப் பாயிரம்பாடி இட்டனர். அன்றியும், கங்கா குலத்தினரான வேளாண்டலைவர்க்குக் கொடுக்கப்படும் பட்டமே காங்கேயன் என்பதுஎன்றும் மேலே அறியப்பட்டதால் இவனும் அத்தகையஒருவனே போலும்! எனவே கோன் என்பது அப்பாயிரக்காரரால் மட்டும் சேர்க்கப்பட்ட பெயரே. எனவே சிலப்பதிகாரத்துக் குரைசொல்லுவித்த மேலோன் கங்காகுலத்தலைவனும் பொப்பண்ணன் என்னும் இயற்பெயருள்ளவனும் சேனபதியாயுமுள்ள ஒருவனே என்க. இவன்றன் ஏனையவரலாற்றைப் பின்னர்க் காண்பாம். பாயிரத்தில் கொடுக்கப்பட்ட அடைகள் மாத்திரமே கொண்டும் அல்லது காங்கேயன் என்னும் அவனது பட்டப்பெயர் மாத்திரமே கொண்டும் அவன் சேனபதியென்பது அறியப்படும் என்க. ஈண்டுக்காங்கேயர்கோன் என்பதைக் காங்கேயன்(ர்) ஆகிய தலைவன் என்க.

---

## 16. அடியார்க்கு நல்லாரும் சிங்கைநகர் வரலாறும்.

இனி, இவ்வடியார்க்கு நல்லார் வரலாற்றுக்கும் சிங்கை நகர்க்குமுள்ள இயைபையும் காண்பாம். அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சியின் முடிபின் பின்னர் அவர் வரலாற்றை இடத்தொடுபடுத்தி அறிவதன்கண் சிங்கைநகர் வரலாற்றைப்பற்றியும் ஆராய்ந்தறிதல் இன்றியமையாததாயிற்று. சிங்கை நகரைப்பற்றி ஈண்டிதன்கண் ஆராய்வோமாயின் மற்றொன்று விரித்தலாய் விரிந்து பட்டுச் செல்லுமாதலால் அதை இவ்வாராய்ச்சியின் இன்னொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியாக இன்னொரு நூலின்கண் வைத்து, பொதுவகையான் அத் தலைநகரின் முடிபை மட்டும் ஈண்டைக்கு வேண்டிய அளவு சுட்டி அப்பால் செல்வாம். வட இலங்கையில் இருந்த தலைநகரங்களுள் சிங்கைநகரம் ஒன்றென்பதும், அது கி. பி. 1242-ம்-கி. பி. 1450ம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்திலிருந்த நகரமென்பதும் மட்டும் அறிந்துகொண்டு, அச்சிங்கை நகரம் நல்லூரில் இருந்ததென்பதை அறிந்துகொள்ளாமல் அது பருத்தித்துறைக் கருகேயுள்ள வல்லி புரம் என்னும் இடத்திலமைந்ததென்னும் ஒரு கோட்பாட்டை இதுகாறும் அந்நகர்பற்றி ஆராய்ந்த ஆராய்ச்சிக்காரர் விளக்கம் செய்துவைத்திட்டனர். சிங்கை நகர் வல்லிபுரத்திலேதான் அமைந்ததென்பார் கூற்று, "அந்தரத்திலே படர்ந்த ஆகாயத் தாமரை" தான் என்பது அந்நகரைப்பற்றிய சரியான ஆராய்ச்சி யால் பின்னர் வெளியாகும். அச்சிங்கைநகர் நல்லூரில் இருந்ததென் பதும், அந்நகரே ஒரு அமைச்சராகிய அடியார்க்கு நல்லார் வாழ்ந்த தற்கு இடனாய் இருந்ததென்பதும், அந்நகரும் அவர் வாழ்வும் மறைந்துவிட எஞ்சிநின்ற நல்லூரோடு எஞ்சிநின்றவைதான் அடி யார்க்கு நல்லார் வரம்பும், அடியார்க்கு நல்லார் குளமும் என்பதும் இதுகாறும் அறிந்துகொள்ளப்படவில்லை. இவைநிற்க, இனி மேலே செல்வாம்.

இதுவரை நாம், இவ்வுரையாசிரியராய அடியார்க்கு நல்லார் வரலாற்றை அவர் உரை செய்தபின் பாடப்பட்டதாண கொங்கு மண்டல சதகம், உரைச்சிறப்புப் பாயிரம் என்பவற்றின் உதவி யோடு அறிந்து வந்தோம். ஆயின் அவர் (உரை செய்ய முன்) யாவர் என்பதைத்தான் இனிமேல் அறியவேண்டும். முதலில் இன்னார் என்றும், அவர் இன்ன நூலுக்குரைசெய்தாரென்றும் சொல்லுவது தான் முறையானாலும், அறிந்ததிலிருந்தே ஏனை அறியாத பகுதிகளை யும் அறிதல் வேண்டுமென்னும் இன்னொரு நயமும் முறையும் கருதி முதலில் உரையாசிரியராய் வைத்து அறிந்து வந்தாம். உண்மையில் இவ்வுரையைச் செய்தவர் மறைந்துபோன இலங்கைச் சிங்கைநகரத்தரசனான குணபூஷண சிங்கையாரிய அரசனுக்கு அச் சிங்கையிலே அமைச்சராய் இருந்த அடியார்க்கு நல்லார் தான் என் றும், அவ்வாறு அவ்வுரையைச் சொல்லும்படி கேட்டுக்கொண்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அவ்வரசனுக்கு அச்சிங்கையிலே சேனபதியாய் இருந்த காங்கேயன் தான்என்றும், அவ்வுரைசெய்த இடம் அச்சிங்கை நகரம் என்றும் வெவ்வேறு வழிகளால் இன்னும் சரிவர அறியவும்படும். ஆயின் அது எவ்வாறு ஆகும் என்பதை இனிமேலே சென்றறிவாம்.

அச்சிங்கை நகரைப்பற்றிய ஆராய்ச்சி புறம்பே இன்னெரு நூலின்கண் நிகழவிருப்பதால், ஈண்டு சிங்கை நகர் என்பதொன்று வட இலங்கையிலே நல்லூர் என்னும் இடத்திலே இருந்ததென்றும், குணபூஷண சிங்கையாரியன் என்னும் அரசன் ஒருவன் அந்நக ரத்து இருந்தான் என்றும் அறிந்து வைத்துக்கொள்க.

குணபூஷணன் என்பான் சிங்கை நகரில் அரசாண்டமை சரித்திர சம்மதமே. அவ்வாறே அடியார்க்கு நல்லார், காங்கேயன் என்பார் (என்னும் பெயர் உள்ளவர்கள்) மறைந்த அச்சிங்கை நகரில் முன்னர் வாழ்ந்திருந்தனர் என்பதற்கு நூற்சான்றின்றியே அறியக்கூடிய குறிப்புக்களோ உண்மைகளோ பல இருக்கின்றன. அவற்றுக்குச் செல்வாம்.

இலங்கையின் வடபகுதியிலே பண்டைச் சிங்கைநகர் இருந்த நல்லூரின் எல்லைப்புறத்தில் இப்பொழுது கன்னதிட்டி என்றழைக் கப்படும் அக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெரும் நிலப்பகுதி அடி யார்க்கு நல்லார் வரம்பு என்று அழைக்கப்படுகின்றது. அந்நிலத் திலே வேங்கடேசப்பெருமாள் கோயில், விசுவேசுவரி அம்மன் கோயில் என்னும் இரண்டு கோயில்கள் இருக்கின்றன. அதில் பல நூற்றுக் கணக்கானோர் குடி வாழ்ந்து வருகின்றனர். அவ்வரப்பில் இருப்போர் எல்லாரும் தத்தம் காணி உறுதிகளில் அடியார்க்கு நல் லார் வரம்பென்றே குறித்து உறுதி முடித்து இருக்கின்றனர். இவ் வாறே அக்கோயில் உறுதியிலும் அக்கோயில் இருக்கும் அந்நிலம் அடியார்க்கு நல்லார் வரம்பென்றே குறிக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும், அடியார்க்கு நல்லார் வரம்பென்னும் அந்நிலப்பெயர் அம்மக்கள் உறுதியிலும் அக்கோயில் உறுதியிலுமேயன்றி, யாழ்ப் பாணம் கச்சேரியிலே உள்ள தோம்பிலும் (ஓலையில் எழுதப் பட்ட ஏடு) அதற்காதாரமான கொழும்பு 'சாசனவாராய்ச்சிக்' கந் தோரில் (archives office of Colombo) உள்ள தோம்பிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் அடியார்க்கு நல்லாரின் சிங்கைநகர்த் தொடர்புகள்.

குறிக்கப்பட்டிருக்கின்றது. அவை யொவ்வொன்றிலும் ஒவ்வொன்றை மட்டும் உதாரணமாகக் காட்டுவோம்.

1. கோட்டு விற்பனவு விளம்பரம்:—
"1938ம் ஆண்டு மார்கழி மாதம் 23ந் திகதி.........அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்பெறும்......."

"காணி விபரம்: வண்ணார்பண்ணை கிழக்கிறை அடியார்க்கு நல்லார் வரம்பு, வயலும் ..............." (இது காணி விற்பனவுக் கொம்மிஷனரின் கையெழுத்துடன் வெளியிடப்பட்ட துண்டுப் பத்திரம். இது அவ்வரம்பில் இருப்பவர்களின் காணிப்பெயர் இன்னது என்று காட்டுகின்றது. அவ்வரம்பில் இருப்பவர் ஒருவரே இதைத் தந்தார். (இல. டீ. 1242)

2. வேங்கடேசப் பெருமாள்கோயில் உறுதி:—
"ஆதிநாராயண ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் கோயிலுக்கு என்னால் கொடுக்கப்பட்ட ......... தரும சாசனம். வட மாகாணம் ......... அடியார்க்கு நல்லார் வரம்பு........." (இல. 2730)

3. யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள தோம்பு:—
"அடியார்க்கு நல்லார் வரம்பு கன்னன் தயிலக் கொட்டுவான் இருளப்பன் வசம்" பாடு ...... அடை, வீதம் (பழைய காலத்து அத்தோம்பிற் குறிக்கப்பட்ட அவ் இலக்கங்களைக் குறிக்க வசதிப் படவில்லை.) (1295/g. R. 1822.)

4. கொழும்பிலே உள்ள சாசன வாராய்ச்சிக் கந்தோர (archives office) ரில் உள்ளதோம்பு:—

யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள தோம்பில் குறிப்பிட்டவாறே கொழும்பிலே உள்ள டீ சாசனவாராய்ச்சிக் கந்தோரிலுள்ள தோம்புக்களிலும் குறிக்கப்பட்டிருக்கின்றது. (இல. 1295/g. R. 1822.)

5. அடியார்க்கு நல்லார் குளத்தினைக் குறிப்பிட்ட ஒரு பழைய உறுதி:-

"வண்ணார் பண்ணை கிழக்கிறை அடியார்க்கு நல்லார் வரம்பும், தலை மடையும் அடியார்க்கு நல்லார் குளத்திலருகும் குழி......
[Land Rd. No. 3681. 19—8—1902 Jaffna.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, இவ்வாற்றால் இந்நிலத்தோடும் அதன் அருகேயுள்ள குளத்தோடும் தொடர்புபட்டு அடியார்க்கு நல்லார் ஒருவர் முன்னர் வாழ்ந்திருக்கின்றார் என்பது மட்டும் நிச்சயம். ஆயின் கொழும்பு சாசனவாராய்ச்சி சாலையில் இருந்து எடுக்கப்பட்ட தோம்புகளோ, கி. பி. 1822-ல் எழுதப்பட்டவை என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆகையால் அக்குளமும் வரம்பும் அந்நல்லார் பெயரால் வழக்குப்பெற்ற காலம் கி. பி. 1822-ம் ஆண்டுக்கும் முற்படவே யாகும். ஆயின் இவ்வட இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலமான கி. பி. 1658—1796ம் ஆண்டுகளின் இடைக்காலத்திலேனும் போர்த்துக்கேயர் காலமான கி. பி. 1505—1658ம் ஆண்டுகளின் இடைக்காலத்திலேனும் அடியார்க்கு நல்லார் என்பார் ஒருவர் பிரசித்திபெற்றவராய் வாழ்ந்திருந்தார் என்ற செய்தி அறியப்பட வேண்டும். ஆங்கிலேய ஒல்லாந்த போர்த்துக்கேய காலத்தில் இத்தகைய ஒரு அடியார்க்கு நல்லார் இல்லை. அன்றியும், இப்பெயருடையார் ஒருவர் அவர்கள் காலத்தில் இருந்திருக்கவும் முடியாது. எனவே, கி. பி. 1505க்கும் முற்பட்ட காலமான தமிழரசர் காலத்திலேதான் அவர் வாழ்ந்த ஒருவராதல் வேண்டும் என்பது இவ் வியைபுகளின்படி நன்கு நிச்சயமாகும்.

ஆயின் அவர் எத்தகையார் அன்றி யாவர் என்பது இதுவரையில் பெறப்படவில்லை. ஆயின் திரு. ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள்சிங்கையாரியரைப்பற்றிஎழுதிய சரித்திரம் 27-ம்பக்கத்தில் "மார்த்தாண்ட சிங்கையாரியனுக்குப் பின் அவன் மகன் குணபூஷண சிங்கையாரியன் அரசு கைக்கொண்டான் அவன் "...... காங்கேயன் என்னும் போர் வீரனை............ தனது சேனைகட்கெல்லாம் அதிபதியாக்கினான். அடியார்க்கு நல்லார் என்னும் பண்டித சிரோமணியைத் தனக்கு முதன் மந்திரியாக்கினான். அம் மந்திரியால் ஊர்கடோறும் குளங்களும் பாடசாலைகளும் அமைப்பித்தான். மந்திரி தன் பெயரால் ஒரு குளமும், இராசா பெயரால் ஒரு குளமும் அமைப்பித்தான். இராசாவின் குளம் ஆரிய குளமென வழங்குகின்றது. அடியார்க்கு நல்லார் குளம் இன்னும் அவ்வாறே வழங்குவதோடு கன்னாதிட்டிக் குளமெனவும் வழங்குகின்றது. காங்கேயன் என்னும் சேனாபதி இருந்தவிடம் காங்கேயன்றுறை எனவும் வழங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது." எனத் தெளிவுபடுத்தி எழுதியிருக்கின்றார்கள். எனவே, நமது ஊகிப்பின்படி அடியார்க்கு நல்லார் குளம், வரம்பு என்பன அவர் பெயரோடு வழக்குப்பெற்ற காலம் கி. பி. பதினைந்தாம் (15ம்) நூற்றாண்டின்முன் என்பதன்றியும் அது சிங்கைஆரியத் தமிழ்அரசர் காலத்திற்றான் என்பதும் ஈண்டுத் தெளிவாயிற்று. அன்றியும் அக் குளம் அமைச்சராய அடியார்க்கு நல்லார் பெயரால் கட்டப்பட்ட தென்பதும் அவ்வாறானால் அந்நிலமும் அவராலேதான் தொடர்பு கொண்டதென்பதும் பெறப்பட்டது.

எனவே, அடியார்க்கு நல்லார் குளமும் அக்காலத்திலே அவர் பெயரால் கட்டப்பட்டதென்பதால் யாம் மேலே கூறியவாறு அந் நிலத்தோடும் அக்குளத்தோடும் அடியார்க்கு நல்லார் என்னும் அப் பெயர் வழக்குப்பெற்றமை அத்தமிழ் அரசர் காலத்திலேதான் என் பதுதேற்றம். எனவே, இதுகாறும் கூறியவற்றால் அடியார்க்கு நல்லார் வரம்பு, அடியார்க்கு நல்லார் குளம் என்பன அடியார்க்கு நல்லார் என்னும் ஒருவரது பெயராலேயே தொடர்ந்துவந்தன என்பதும், அன்றியும் அவை சிங்கை ஆரியத் தமிழ் அரசர்காலத்திலே அதனுள் ளும், குணபூஷணன் காலத்திலே அவனுக்கு மந்திரியாய் இருந்த அடியார்க்கு நல்லார் பெயராலேயே தொடரப்பட்டனவென்பதும் ஐயமின்றிக் கொள்ளப்பட்டன. அன்றியும் அடியார்க்கு நல்லார் என் னும் ஒருவர் பெயராலே அந்நிலமும் குளமும் தொடரப்பட்டு வரு மானால் அவர் இத்தகைய பிரபலமான ஒரு பெரியாராகவே இருக்க வேண்டுமென்பது நிச்சயம். இனி இவ்வமைச்சராய அடியார்க்கு நல்லார் தம் வரலாற்று ஆராய்ச்சியால் அவர் தம் வரலாறன்றியும் அவருக்கரசனாய் இருந்த குணபூஷணனது வரலாறும், இக் குணபூஷ ணனுக்குச் சேனாபதியாய் இருந்த காங்கேயனது வரலாறும் அறி யப்பட முடிவதாயிற்று. இனி இக்காங்கேயனைப்பற்றியும் அறிவாம். மேலே குறிப்பிட்ட வட இலங்கைச் சிங்கையாரியர் வரலாற்றில் (ஆ. மு. யா. ச.) "காங்கேயன் என்னும் சேனாபதி இருந்த இடமே காங்கேயன் துறை எனப்படுகின்றது" என்று கூறப்பட்டுள்ளது. காங்கேயன் றுறை இலங்கையின் வட பகுதியில் உள்ளது. இது காங் கேயன் என்னும் ஒருவன் இருந்த இடமென்பது பிறவாற்றானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறப்படுகின்றது. கொங்குமண்டல சதகத்திலும் இத்தகைய இடங்கள் பலவருகின்றன. அவற்றில் காங்கேயன் இருந்தஇடம்காங்கேயம் எனவும், அது நகரத்தோடு சேர்ந்து காங்கேய நகரம் எனவும், அது நாட்டோடு சேர்ந்து காங்கேய நாடு எனவும் வழங்கப் பெற்றுள்ளனவென இச்சதகத்தாற் றெரிகிறது. இவ்வாற்றல் மேலே காங்கேயன் இருந்த இடம் காங்கேயம் என்றேனும், காங்கேயநாடு, காங்கேய நகரமென்றேனும் இராமல் காங்கேயன் துறை என்று குறிக்கப்படல் எவ்வாறு பொருந்தும் எனவும் அறியத்தக்கது. ஆயின் இக்காங்கேயன் இருந்த இடம் அங்ஙனம் நாடாகவேனும் ஒரு நகரமாகவேனும் இல்லாமல் ஒரு துறையாக இருந்தமையின் காங்கேயன் துறை என வழங்கப்படுவதாயிற்று. எனவே, மேலே காட்டிய வரலாற்றில் "காங்கேயன் என்னும் சேனுபதி இருந்த இடம் காங்கேயன் துறையாயிற்று" என்னும் கூற்று உண்மையையே அரண்செய்து நிற்பதாகும். அற்றன்று காங்கேயன் என்னும் விக்கிரகம் இறக்கப்பட்ட துறைமுகமானமையின் காங்கேயன் துறையாயிற்று என்றும் வைபவமாலையார் கூறினரெனின் அவர் ஊகிப்பொன்றனே கூறினர். அது தவற்றின்பாலதாம் என்க. அன்றியும் இவ்வுண்மை இன்னும் வலி உறுத்தப்படும். "பெரிய மனத்துள்ளார் வரவொடு காங்கேயன் துறைப்பெயர்க்கு ஊர்க்கதை யுற்பத்தியுங் காட்டப்படுவதாயிற்ற. உண்மையில் அது காங்கேயன் சீமா (மாவிட்டபுரத்தில்) காங்கேயன் கலட்டி (தைட்டியில்) எனும் இடங்களுக்கண்டையில் உள்ளதாதலால் ஓர் அதிபன் பெயரோடேயே சம்பந்தப்பட்டதாதல் வேண்டும் என்பது ஒரு தலை" என வணசுவாமி ஞானப்பிரகாசர் அவர்களும் கூறினர்கள். காங்கேயன் துறை என்பது காங்கேயன் என்னும் ஒரு அதிபன் பெயரால் அழைக்கப்படாவிட்டால் காங்கேயன் என்னும் ஒருவன் ஈண்டு இருந்திருக்கவில்லை என்பதல்ல. இருந்து மறைந்த பலருள் இடவழக்குகள் பெறுதவருள் அவனுமொருவனுகலாம் என்றறிக. இனி இக்காங்கேயன் துறை என்பதனுள் சுட்டப்பட்ட காங்கேயன் என்பவன்றன் இவ்வுரையைச் சொல்லுவித்த காங்கேயனுமோவெனின் அவன்றன் குணபூஷணனது சேனுபதியாய காங்கேயன் என்பது நன்கு நிச்சயமாயின் அதுவும் நிச்சயமே. ஆயின் கண்ணகியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குரை காதை என்னும் காப்பியம் செய்த காங்கேயர்(தேவையர்) கோன் என்பவரே இவ்வுரையைச் சொல்லுவித்த காங்கேயன் என் பது நிச்சயம். ஆகவே மேலே காங்கேயன்துறை என்னும் பெயர் ஒரு அதிபர் பெயரோடேயே தொடர்பு கொண்டதென்க. அவ்வதி பர் யாவராயினும் ஆகலாம். ஆயின் அப்பெயருடையார் யாவராயினும் ஒருவர் முன்னர் வாழ்ந்தார் என்றறிதற்கு அதுவுமொரு இயைபாம் என்க. எனவே, அடியார்க்கு நல்லார் என்னும் ஒருவர் தமிழரசர் காலத்தில் அதுவும் குணபூஷணன் காலத்தில் அவனுக்கு அமைச்ச ராக வாழ்ந்தார் என்பதும், அவ்வாறே காங்கேயன் என்பார் ஒரு வரும் அவன் காலத்திலே அவனுக்குச் சேனுபதியாக வாழ்ந்தார் என்பதும் நன்கு அறியப்பட்டன.

இனி, இன்னும் இவர்கள் யார்? இவர்கள் சிங்கை நகரிலே பிறந்து வளர்ந்து வாழ்ந்த வரலாறுகள் உண்டா? இவர்கள் எத்தகையார் என் பனபோன்ற வரலாற்றுப்பொருள்கள் இனிமேல் ஆராயற்பாலனவாய் நிற்கின்றன. இவருள் குணபூஷணன் என்பானே முன்னர் சிங்கை நகரை அரசாண்ட தமிழ் அரசர்களான ஆரியச் சக்கரவர்த்திகளின் வழிவழி வந்த ஒரு தமிழ்மன்னன். அவன் இச்சிங்கை நகரத்தையே தாயகமாய்ப் பெற்று இந்நாட்டிலேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்து மறைந்த ஒருவன் என்பதில் யாருக்கும் யாதும் ஐயமும் அபிப்பிராய வேற்றுமையுமில்லை. ஆயின் அடியார்க்கு நல்லார் என்பார் பிறர் யாரும் இந்நாட்டில் பிறந்து வளர்ந்த செய்திகள் யாதும் இல்லை. அன்றி அப்பெயர்தானும் ஈழத்திலே பேச்சுவழக்கிலேனும் நூல் வழக்கிலேனும் இதுகாறும் கேட்கப்படவில்லை. அன்றியும் காங்கே யன் என்னும் சேனுபதி பிறந்து வளர்ந்த வரலாறுகள் இந் நாட்டில் அறியப்படவில்லை. எனினும் இவர்கள் ஒருகாலத்தில் பண்டைச் சிங்கைநகரில் வாழ்ந்தவர்கள் என்பதுஉறுதிப்படுகின்றது. இவ்வுண்மை வட இலங்கைத்தமிழ் வரலாற்றாலன்றிப் பிறவாற்றால் அறியமுடியாது என்பதும் நிச்சயம். இவ்வாறு ஆராய்ந்த முடிபால் இவ்வுண்மையும் தெளிவாயிற்று. இனி மேலே திரு. ஆ. மு. அவர்கள் தமது நூலில் இவ்வாறு காங்கேயன்துறை என்பதிற் குறிக்கப்படும் காங்கேயனையும், நிலம் குளம் என்பவற்றில் வழக்குப் பெற்ற அடியார்க்கு நல்லாரையும் பற்றிய அவர்கள் பூர்வ வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாற்றைப்பற்றிக் கூறுபவராய் அதாவது அச்சேனுபதியினதும் அவ்மைச்சரதும் பூர்வத்தைப் பற்றிச் சொல்லுபவராய் "குண பூஷண சிங்கையாரியன் ......... காங்கேயன் என்னும் போர் வீரனைத் தொண்டை நாட்டில் இருந்தும் வரவழைத்தான் அடியார்க்கு நல்லார் என்னும் பண்டிதசிரோமணியை (இந்திய தேசத்தினின்றும்) வரவழைத்துத் தனது முதல் மந்திரியாக்கினுன்" (இச்சரித்திராசிரியர் குணபூஷணன் காங்கேயனைத் தொண்டை நாட்டில் இருந்து அழைத்தான் என்று விதந்து சொல்லினுர். ஆயின் அடியார்க்கு நல்லாரை எம்மண்டலத்தில் இருந்து அழைத்தார் என்றும் சொல்லவில்லை. ஆனுல் அடியார்க்கு நல்லாரைத் தொண்டைநாடு தவிர்த்த இன்னெரு தமிழ்நாட்டில் இருந்து அழைத்தான் என்று கூறினுர் என்பதை விளங்கிக்கொள்க) என்றும் கூறினுர். அன்றியும் இக்கூற்றுக்களையே ஆதரிப்பவராய் ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதக்காரரும் "அச்சோழன் புதல்வன் ஒருவன் சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி என்னும் பெயரோடு முடிசூட்டப்பெற்று அரசாண்டான். ...... இவனுக்குப் பின் இவன் மரபில்வந்த குணபூஷண சிங்கைஆரியச் சக்கரவர்த்தியும் தமிழை நன்கு பரிபாலித்தனன். இவன் அடியார்க்கு நல்லார் என்னும் பண்டித மணியை இந்திய தேசத்தினின்றும் அழைப்பித்துத் தனக்கு முதன் மந்திரியாக வைத்து அப்பண்டிதமணி வாயிலாகக் கல்வியை விருத்தி செய்தான். ......... அப்பண்டிதமணி பெயராலும் இரு குளங்களும் அமைப்பித்தான். குளங்கள் முறையே ஆரியகுளமென்றும், அடியார்க்கு நல்லார் குளமேன்றும் வழங்குவனவாயின. அடியார்க்கு நல்லார் குளம் இக்காலத்துக் கன்னுதிட்டிக் குளமென வழங்கப் படுவதாயிற்று" (ஈ. நா. த. பு. ச. பக் 67) இக்கூற்றுக்கள் மேலே கூறிய சரித்திராசிரியராலன்றிப் பிறராலும் கூறப்படும் பண்டைச் சிங்கையாரியரது வரலாறு பற்றிய உண்மைகளாகக் காணப் படுபவை. அன்றியும் ஓர் ஊரில் தலைமையும் பெருமையுமுடையார் ஒருவர் சம்பந்தப்படினன்றே அவர் பெயரால் அவ்விடம் பெரிதும் வழங்கற்கேதுவாகும்? அவ்விதமே தலைமையும் பெருமையுமுடைய அமைச்சராய ஒருவராய் இருந்தமையாற்றுன் அவர் பெயரோடு சம்பந்தப்பட்ட குளம் வரம்பு என்பன நீள நிலைத்து நின்று இன்றும் வழங்கப்படுவனவாயின என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, இக்கூற்றுக்களில் உள்ள உண்மைகளை முடித்துக்காண்பாம். இதுகாறும் கூறியவற்றால் குணபூஷணன் காங்கேயன் என்னும் சேனுபதியைத் தொண்டை நாட்டில் இருந்து அழைத்து வைத்திருந்தான் என்றும், அடியார்க்கு நல்லார் வரம்பு முதலாக மேலே கண்ட அடியார்க்கு நல்லாரை தொண்டை நாடு தவிர்ந்த இன்னொரு தமிழ்நாட்டில் இருந்து அழைத்துத் தனக்கு அமைச்சராய் வைத்திருந்தான் என்றும், இவ்வடியார்க்கு நல்லார் முத்தமிழுங் கற்று முறைதுறைபோகிய உத்தம வித்தகர் என்றும் அறிந்து கொள்க.

1. குணபூஷணனே வட இலங்கையையே சொந்த இடமாகக் கொண்டு பிறந்து வளர்ந்து மறைந்தவன். அடியார்க்கு நல்லார், காங்கேயன் என்பவர்கள் பிறந்து வளர்ந்த வரலாறு ஈண்டு அறியப் படவில்லை. எனவே அவர்கள் இந்தியத் தமிழகங்களில் இருந்து இங்கே அழைக்கப்பட்டனர் என்பது மிகப் பொருத்தமான சரித்திரக்கூற்று என்று ஏற்றுக்கொள்ளப்படும்.

2. காங்கேயன் என்பது சேனுபதியை உணர்த்தும் பட்டப் பெயர் என்று முன்னர் அறியப்பட்டது. குணபூஷணன் என்பவன் அரசன்; அடியார்க்கு நல்லார் அமைச்சர். எனவே, குணபூஷணனுல் அழைக்கப்பட்ட காங்கேயனைச் சேனுபதி என்றதும் உண்மைக்குப் பொருத்தமே.

3. குணபூஷணன் அரசன்; காங்கேயனே சேனுபதி. எனவே, குணபூஷணனுல் அழைக்கப்பட்ட அடியார்க்கு நல்லாரை அமைச்சர் என்றதும் உண்மைக்குப் பொருத்தமே.

4. அழைக்கப்பட்ட ஒருவர் சேனுபதி ஒருவர் அமைச்சர் எனவே, அழைத்தவனைக் குணபூஷணன் என்னும் அரசன் என்றதும் நன்கு பொருத்தமே.

5. சிங்கை நகரத்தரசன் இவர்களை அழைத்தான் எனவே இவர்கள் அழைக்கப்பட்ட இடம் சிங்கை நகரம் என்பதும் ஏற்றுக் கொள்ளத்தக்கது. இவையெல்லாம் மேலே கூறிய சரித்திரக்கோட்பாடுகள் முற்றிலும் உண்மைக்கே நிலைக்களனுனவை யென்பதை நிரூபிக்கும் பொருட்கோள்களாம் என்க. இனி இவை ஒருபு ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருக்க அமைச்சரே உரையாசிரியராய் இருக்கக் கூடுமானல் அவ் வமைச்சர் காலமும், அவர் தம் அரசனை குணபூஷணன் காலமும், இவ்வுரையாசிரியர் காலமும் ஒன்ருக இருக்கவேண்டுமென்பது நிச் சயம். ஆகையால் இவ்வுரையாசிரியர் காலத்தையும் நாம் அறிதல் வேண்டும். காலம் ஐயமின்றி அறியப்படுமாயின் இவ்வாராய்ச்சி யால் புலனுகும் உண்மைகளும் ஐயமின்றி அறியப்படும்.

## 17. உரை இயற்ற நேர்ந்த சந்தர்ப்பம்

கயவாகுவின் காலத்திலே இலங்கையிற் கண்ணகி வணக்கம் ஏற்பட்டது என்பது, வரலாற்றில் ஒரு முகமாக அறியப்பட்ட உண்மை. சிலப்பதிகாரத்தில் வரும்.

"அருஞ் சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ் சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
வந்தீங் கென்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரமென் றெழுந்த தொருகுரல்"

என வரந்தரு காதை அடிகளாலும், உரைபெறு கட்டுரையில், "அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகை கோட்டமுந் துறுத்தாங்கு அரந்தைகெடுத்து வரந்தரு மிவளென ஆடித்திங்க ளகவையினுங்கோர் பாடி விழாக்கோள் பன் முறை எடுப்ப மழைவீற்றிருந்து வளம்பலபெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று" எனச் சொல்லப்பட்டதாலும், கயவாகு காலத்திலே இலங்கையிற் கண்ணகி வணக்கம் ஏற்பட்டமை அறி யப்படுகின்றது.

இனி, இலங்கையின் வடபகுதியில் இப்பொழுதும் கண்ணகிக் கோட்டங்கள் பல இருத்தலையும் அக்கோட்டங்களில் கண்ணகி கதை படிக்கப்படுதலையும் காணலாம். இவ்வாற்ருல் கண்ணகிதேவிக் கேற்புடைத்தான சிலப்பதிகாரம் முற்காலத்தில் இவ்விடங்களில் படிக்கப்பட்டுவந்த தென்பதற்கு யாம் அறியக்கூடிய பல இயைபு கள் இருக்கின்றன வென்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றியும், இவ்இலங்கையின் வடபகுதியில் "முதலாவது கண்ணகிக்குக் கோயில் அமைத்தவிடம் அங்கணுக்கடவை எனப் படும். (அங்கணு — அம்மன்) சிங்களநாட்டில் பத்தினித் தெய்வம் என்று வணங்கப்படும் தெய்வம் கண்ணகியே. அங்கணுக்கடவைப் பூவலினருகே பன்னெடுங் காலமாக நின்றதும், ஒல்லாந்தர் காலத்து யானையால் உடைக்கப்பட்டதும், டாக்டர் பவுல் பீரிஸ் அவர்களால் சின்னட்களின்முன் கண்டெடுக்கப்பட்ட பாதங்களையும் தலையையு முடையதுமாய அக்கற்சிலை கயவாகுவினால் எடுத்த சிலையென ஊகிக் கலாம்" (செ. இ. யா. ச. பக். 17) எனத் திரு. இராசநாயக முதலியார் அங்கணுக்கடவைக் கண்ணகி அம்மன் கோயிற்சிலையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அதையும், இன்னும் சில புராதனமான கோயில் களையும் பார்வையிட்டு ஆங்குள்ள நிகழ்ச்சிகள், குறிப்புக்களைக் குறித் துக் கொண்டோம். அங்கே கண்ணகி கதை இப்பொழுதும் ஏட்டில் படிக்கப்பட்டு வருகின்றது. அதன் பாக்கள் எப்படி இருக்குமென் றறிதற்காக அவ்வேட்டையும் பார்வையிட்டோம். ஒரே தொடர்ச்சி யாகக் கண்ணகி கதை அவ்வேட்டில் சொல்லப்படுகின்றது. அதன் போக்கை அறிதற்காக இங்கே சில அடிகளைத் தருவாம்.

"சொல்லக்கேள் ஆச்சி அம்மை துர்க்கனவு கண்டேன்யான்
நல்லமானுங் கலையும் நாடிவரும் புனந்தனிலே [தான்
வில்லும் அம்புந் தானெடுத்து வேடனொரு கணைதொடுத்
வல்லகலை பட்டுருண்டு மான்பதறி விழவும் கண்டேன்
பழுதுநான் கண்டகனு பலிக்குமடி யாச்சியம்மை."

என இவ்வாறே ஏனைய பகுதிகளும் செல்கின்றன. இவை, "உலக்கை தேய்ந் துளிப்பிடி யாய" வாறுபோல, அக்கோட்டத்திலே சிலப்பதி காரம் படித்து உரை சொல்லப்பட்ட வழக்கம் நீங்கிக் காலகதியில் இத்தகைய பாடல்களைப் படிக்கும் வழக்கமாய் வந்து விட்டது போலும். இவை கண்ணகியினது உண்மைக் கதையைக் கல்வி வன்மை இல்லாதாரும் விளங்குவதற்காகப் பாவன்மையும் விவேகமும் உள்ள ஒருவர் இடைக்காலத்தில் பாடியிட்டவைக ளாக வேண்டும். இவை சிலப்பதிகாரத்தில் வரும் துன்பமாலையைப் பின்பற்றிய கதையேபோலும். இவை இவ்வாறாக, அடிகள் உயர்திரு. விபுலானந்தர் அவர்கள் " கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சிலப்பதிகாரம் வரந்தரு காதையினுள் சுட்டிக் கூறப்பட்ட கயவாகு வேந்தன் காலத்திலே இயற்றப்பட்ட பத்தினிக் கோட்டங்கள் பல ஈழ நாட்டில் இன்றும் உள. இக்கோயில்களிலெல்லாம் கண்ணகியார் வழக்குரை காதை என்னும் காப்பியமானது ஆண்டு தோறும் வைகாசித் திங்களில் நிறைமதி நாளிணையடுத்துப் படிக்கப் பட்டு வருகின்றது. இக்காப்பியம் நாடகத் தமிழ் யாப்பினைச் சார்ந்த சிந்து வண்ணம் கொச்சகம் முதலிய செய்யுட்களால் இயன்றது" எனக் (தமிழ்ப்பொழில் மலர் க. 1941 ஏப்ரில்) குறிப்பிட்டவைகளை யும் கண்டுகொள்க. (காங்கேயர்கோன் என்பதுதான் மேலே கண்ணகியார் வழக்குரை காதையில் காங்கேயர் தேவையர்கோனெனக் காலகதியில் வந்ததாகவேண்டும்).

அன்றியும், கண்ணகி காவியம் என்னும் வேறு பெயரோடும் பல ஏட்டுப் பிரதிகள் ஈண்டுப் பல இடங்களில் காணக்கூடியவை களாய் இருக்கின்றன. இங்கே (இலங்கையின் வடபகுதியில்) யான் பார்த்த ஒவ்வொரு பழங் கண்ணகி கோட்டங்களிலும் கண்ணகி வரலாற்றைப் பற்றிச் சொல்லும் ஒவ்வொரு ஏடுகள் இருக்கக் கண் டேன். எனவே, இவ்வாற்றால் கயவாகு காலத்தில் தொடங்கிய கண்ணகி வணக்கம் காலகதியில இலங்கையின் எல்லாப்பகுதிகளிலும் பரவி இருந்ததென்பதும், அவ்வாறே அவ்வணக்கம் சிங்கைநகர்க் காலத்திலே அந்நகர் எல்லையிலும் பரவி இருந்ததென்பதும், அவ் வாற்றால் கண்ணகி வழிபாடான சிலப்பதிகாரப் படனமும் அக் காலத்தில் அவ்விடங்களில் உள்ள கோட்டங்களிலே நிகழ்ந்தன வென்பதும் அறியக் கிடக்கின்றன. எனவே, இவையே அச்சிங்கை நகரில் அக்காலத்தில் குணபூஷணனுக்குச் சேனபதியாய் இருந்த காங்கேயர்கோனையும் அடியார்க்கு நல்லார் என்னும் அமைச்சரையும் தூண்டி (அன்றி உட்படையில் அவ்வரசனையும் தான்) இச்சிலப்பதி கார உரை வெளிவரச் சந்தர்ப்பம் அளித்தன வென்க.





விவேகாநந்தா பிரஸ், தளவாய்த்தெரு, மதுரை-44.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி.

## இரண்டாவது பகுதி.

### 18. உரைச்சிறப்புப் பாயிரத்திலும் சிங்கை நகர் வரலாற்றிலும் உள்ள ஒரே உண்மைகள்.

இலங்கைச் சிங்கை வரலாற்றில் கூறப்பட்ட உண்மைகளும், இவ்வுரைச் சிறப்புப்பாயிரத்தில் கூறப்பட்ட உண்மைகளும் ஒன்றே தான் என்பது அவ்விரண்டனையும் நோக்கி அறியப்படும். அவ்வப் பகுதிகளை முதலில் தனித்தனி காண்பாம். முதலில் பாயிரத் துண்மையையும் பின்னர் வரலாற்றுண்மையையும் காட்டுவாம்.

1. பாயிரத்தின்படி அடியார்க்கு நல்லார் என்னும் ஒருவர் உண்மை.

வரலாற்றின்படி குணபூஷணன் கீழ் அடியார்க்கு நல்லார் என்னும் ஒருவர் உண்மை.

2. "காருந்தருவுமனையான்" என்னும் அவர் வள்ளன்மை உண்மை.

குணபூஷணன் கீழ் உள்ள அடியார்க்கு நல்லாரும் ஒவ்வோர் சந்தர்ப்பம் நோக்கி அவ்வாறு பாடப்படமுடியும் என்னும் இயைபுண்மை.

3. "நிரம்பையர் என்னும்" அவர் பெயருண்மை.

வரலாற்றில் சொல்லப்படும் அடியார்க்கு நல்லார் தென்னிந்திய தமிழ் மண்டலங்கள் ஒன்றில் இருந்தே இலங்கைச் சிங்கை நகர்க்கு வந்தார் ஆதலினாலும் அம்மண்டலங்களில் நிரம்பையூரு மொன்றாய் இருத்தலினாலும் அவர் சிங்கை நகரில் இருந்து நிரம்பையர் என்று அழைக்கப்படக்கூடிய இயைபும் முடிபுமுடைமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. "காவலனே" என்னும் அவர் பெயருடைமை.

வரலாற்றில் சொல்லப்படும் அடியார்க்கு நல்லார் சிங்கை நகரில் ஒரு அரசனுக்கு முதல் அமைச்சராய் இருந்தமையின் அவர் பாடப் பெறும்போது ஒவ்வோர் சந்தர்ப்பம் நோக்கிக் காவலன் எனவும் பாடப்பட முடியும் என்னும் முடிபுடைமை.

5. "நிரம்பையர் காவலனே" என்னும் பெயருடைமை. [இத் தொடரைப் பிறர் ஒருபெயரென்பதால்எடுத்துக்கோண்டாம்]

வரலாற்றில் சொல்லப்பட்ட அடியார்க்கு நல்லார் நிரம்பையர் எனவும் பாடப் பெறமுடியும் காவலன் எனவும் பாடப்பெற முடியு மானல் நிரம்பையர் காவலன் எனவும் பாடப்பெற முடியும் தானே என்னும் முடிபுடைமை.

6. போப்பண்ண காங்கேயர்கோன் என்பவருடன் தொடர் புண்மை.

வரலாற்றில் சொல்லப்பட்ட அடியார்க்கு நல்லார் காங்கேயன் என்பாருடன் வாழ்ந்தமை சொல்லப்பட்டமை.

7. "காற்றைப் பிடித்து என்னும்" அப்பாட்டினல் அக் காங்கே யன் ஒரு அரசனகவேனும் ஒரு போர் வீரனகவேனும் ஒரு பிரபுவாகவேனும் இருக்க வேண்டுமேனும் ஊக முடைமை.

வரலாற்றில் சொல்லப்பட்ட காங்கேயன் ஒரு சேனதிபதி யென்றும் சொல்லப்பட்டமை. அன்றியும் காங்கேயன் என்பதே சேனபதிக்குரிய பட்ட பெயர் என்பதும், அவ்வாருனல் இயற் பெயர் ஒன்று பெறப்படவேண்டும் என்பதும், ஒவ்வோர் சந்தர்ப்பம் நோக்கி இக் காங்கேயனே "பொப்பண்ண காங்கேயர் கோன்" என்று பாடப்பட முடியும் என்பதும் பெறப்படுகின்றமை. இது காறும் வெளிப்படையில் இச்சிறப்புப்பாயிரத்தில் கூறப்பட்டவை களுக்கு இச்சிங்கை நகர் வரலாற்றை இடமாக வைத்துக்காட்டினும். இனிமேல் அப்பாயிரத்தில் உட்படையில் பெறப்படக்கிடப்பன வற்றுக்கும் இவ்வரலாறு இடமாய் இருக்குமாற்றைக் காட்டுவாம்.

8. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்கு உரைசெய்தார் எனவே! பாயிரத்தினல் அவர் வாழ்ந்த இடமோன்றுடைமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் சொல்லப்பட்ட அடியார்க்கு நல்லார் வாழ்ந்த சிங்கை நகர் என்பதொன்றுடைமை.

9. பாயிரத்தினுல் காங்கேயன் சொல்லுவித்தான், அடியார்க்கு நல்லார் சொல்லினுர் என்பதால், இவர்கள் இருவரும் ஓரிடத்தில் சந்தித்திருந்த சந்தர்ப்பம் ஒன்றுடைமை.

வரலாற்றில் சொல்லப்பட்ட அடியார்க்கு நல்லார் தொண்டை மண்டலம் தவிர்ந்த ஓரிடத் திருந்து வந்தார். காங்கேயன் தொண்டை மண்டலத்து இருந்து வந்தான். இவர்கள் இருவரும் குணபூஷணன் கீழ்ச் சந்தித்த சந்தர்ப்பம் ஒன்றுடைமை. அது சிங்கை நகரில் நிகழ்ந்தமை.

10. பாயிரத்தினுல் இவர்கள் உரை சொல்லவும் சொல்லுவிக்கவும் நேர்ந்த இடமொன்று இடனுய் இருந்தாற் போல, காலமும் ஒன்று இடனுய் இருந்தமை அறியப்படுகின்றமை.

வரலாற்றில் குணபூஷணன் பதினுன்காம் நூற்றுண்டில் வாழ்ந்தமை. அவன் காலத்திலே அவனுக்கு அமைச்சரும் சேனுபதியாயும் இருந்த இவர்களும் சந்தித்த காலம் ஒன்று இடனுய் இருந்தமை.

11. பாயிரத்தினுல் காங்கேயன் உரையைச் சொல்லுவிக்க வாய்த்த இடமொன்றுடைமை.

சிங்கை நகரிலே அடியார்க்கு நல்லார் அமைச்சராய் இருக்கக் காங்கேயன் சேனுபதியாய் இருக்க வாய்த்த காலமும் இடமும் உண்மை.

12 அவர்களில் அடியார்க்கு நல்லார் சொல்லவும் காங்கேயன் சொல்லுவிக்கவும் ஏற்ற ஒரு சந்தர்ப்பம் இருந்திருக்க வேண்டுமென்னு முடிபுண்மை.

காங்கேயன் காலத்திலே சிங்கை நகரிலே கண்ணகி வணக்கம் இருந்தமையும் கண்ணகி வழிபாட்டுக்காகச் சிலப்பதிகாரம் படிக்கப்பட்டு வந்தமையும் அதற்கு உரை இன்றி இருந்தமையும் அடியார்க்கு நல்லார் கல்வி விருத்திக்காக வரவழைக்கப்பட்டிருந்தமையும் என்னுமிவை யுள்ளமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பாயிரத்திலே இவர் நிரம்பையர் எனப்பட்டதால் இவ்வுரையை அவர் பிற்காலத்திலே செய்தமை.

வரலாற்றால் காங்கேயன் என்னும் சேனாபதி தொண்டை நாட்டில் இருந்து அழைக்கப்பட்டதும் அவனின் பிற்காலம் அடியார்க்கு நல்லார் இந்தியத் தமிழ் மண்டலம் ஒன்றில் (கொங்கு மண்டலத்தில்) இருந்து அழைக்கப்பட்டதும் அவரின் பிற்காலம்.

14. அடியார்க்கு நல்லார்க்குக் காங்கேயன் சோற்றைக் கூலியாகக் கோடாமல் சோற்றைக் கொடுத்துச் செருக்கச் செய்து சொல்லுவித்த சந்தர்ப்பம் ஒன்றுடைமை.

வரலாற்றில் சொல்லப்பட்ட அடியார்க்கு நல்லார் பொதுவாக ஒரு புலவரல்ல. அவர் அமைச்சர். காங்கேயன் அவருக்குச் சோற்றைக் கூலியாக ஈயும் நிலைமையில் உள்ளவனல்ல. அவன் அவருக்குக் கீழ்ப்பட்ட ஒரு சேனாபதி. ஆகையாற்றான் அவரை உபசரித்துச் சோற்றைக் கொடுத்துச் செருக்கச் செய்து இவ்வுரையைச் சொல்லுவித்துக் கொண்டான் என்றறியப்படும் இயைபுடைமை.

15. இயற்றினவரைக் காவலன் என்பதாலும் இயற்றுவித்தவரைக் காங்கேயர்கோன் என்பதாலும் இவர்கள் இருவரும் ஒரு அரசியலில் தொடர்புபட்டவர்கள் என்று பாயிரத்தினால் அறியப்படும் முடிபுடைமை.

வரலாற்றினால் சிங்கைநகர் அரசன் ஒருவனின் கீழ் அடியார்க்கு நல்லார் அமைச்சராகவும் காங்கேயன் சேனாபதியாகவும் வாழ்ந்ததென்னும் முடிபுடைமை.

16. பாயிரத்தினால் அடியார்க்கு நல்லார் நிரம்பையர் என்று பாடப்பட்டதால் அவ்வுரை செய்த இடம் நிரம்பைக்குப் புறம்பான ஒரு இடமென்னும் முடிபுடைமை.

வரலாற்றினால் இந்தியாவில் உள்ள கொங்குமண்டலத்தில் இருந்து வந்து சிங்கைநகரில் வாழ்ந்த அடியார்க்கு நல்லார் அப்பொழுது உரை சொன்னால் அவ்வுரை சொல்லப்பட்ட இடம் சிங்கை நகரம் என்னும் முடிபுடைமை.

எனவே, பாயிரத்தினால் நேரே பெறப்படுவனவன்றி அவற்றில் இருந்து பெறப்படும் நுண்ணிய வரலாற்றுக் குறிப்புக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சிங்கை நகர் வரலாற்றில் பொருந்தி இருப்பதாற்றான் உரைச் சிறப்புப்பாயிரம் சிங்கை நகரிற் பாடப்பட்ட தென்பதும் அப்பாக்களில் குறிப்பிடப்பட்ட அடியார்க்கு நல்லாரும் காங்கேயனும் சிங்கைநகர் வரலாற்றில் குறிப்பிடப்பட்ட அடியார்க்கு நல்லாரும் காங்கேயர் கோனும் என்றும் ஐயமற அறிந்து கொள்க.

இவ்வுண்மையை அறியாது, இவ் அடியார்க்கு நல்லார் சரித்திரம் இவ்வாறு அமைந்திருப்பதையும் அறியாது, பல பொருள் ஒரு சொல்லாக நிற்கும் காவலர், கோன் என்பவைகளைக் கண்டவுடன் அவை முறையே நிரம்பையூர்க்குத் தலைவன் என்றும் காங்கேயர் என்னும் மரபினர்க்குத் தலைவன்என்றும் பொருள் கூறுதல் பொருத்தற்பால தன்று. "நிரம்பையர் காவலர்" என்பதில் நிரம்பையர் என்றாலும் அவரையே சுட்டி உணர்த்தும்; நிரம்பையர் காவலன் என்றாலும் அவரையே சுட்டி உணர்த்தும்; காவலன் என்பது பாயிரத்தினுல் மட்டும் வந்ததால் அவர் காலத்திலே பேச்சு வழக்கில் அக் காவலன் என்னும் பெயரால் அவர் சுட்டி உணர்த்தப் படவுமில்லை. அழைக்கப் படவுமில்லை. நிரம்பையர் பேச்சு வழக்கில் உள்ள பெயர். அவரே அப்பொழுது அமைச்சராய் இருந்தார். அவர் அப்பொழுதுதான் உரை செய்தார். அவரையும் அவர் உரை செய்தமையையும் அறிந்து சிறப்புப் பாயிரம் பாடவந்தவர், காவற் றொழிலில் காவலனயிருக்கும் காவலனுக்கு அக்காவலில் உதவி செய்பவராய் அக்காவலனைப்போல் அமைச்சராயிருக்கும் தன்மையின் அமைச்சர் என்பதைக் காவலனுக, உபசரித்து அவருக்கு அப்பொழுதுள்ள நிரம்பையர் என்னும் அவரது பெயரையும் சேர்த்து, "நிரம்பையர் காவலனே" எனப் பாயிரம் பாடினர். இரண்டு பெயர்களும் அடியார்க்கு நல்லார் என்னும் அவ் வொருவர் மேலதாய் வந்தமையானும், பொது நோக்கில் ஒரு பெயர்போற் காணப்படுகின்றமையானும், "அடியார்க்கு நல்லார்க்கு நிரம்பையர் காவலர் என்னும் ஒரு பெயருண்டென்றும்" என ஒரு பெயராக வைத்துப் பின் வருவோர் கூறுவாராயினர். உரைச் சிறப்புப்பாயிரம் பாட, உரை இயற்ற முன் அவருக்குள்ள பெயர் நிரம்பையர் என்பது. பின்னரும் பேச்சு வழக்கில் உள்ளதும் நிரம்பையர் என்பதே. காவலர் என்பது அவரை உபசரித்துப் பாடப்பட்டது. எனவே "நிரம்பையர் காவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லர்" என்னும் பெயர் உரைச் சிறப்புப் பாயிரத்தில் மட்டும் தான் எழுத்து வழக்கில் உள்ளது. [இற்றைக்கு எழுநூற்றுண்டு வரை முற்படத்தொடங்கியே அவர் வரலாறும் அவர் பெயர் வரலாறும் தெரியாதுபோகவே இவ்வெழுத்து வழக்கில் பாயிரத்தில் மாத்திரம் நிரம்பையர் காவலர் என்று இருப்பதைக் கண்டுகொண்டு அவை இரண்டையும் அவரது இன்னொரு பெயர் என்று பிறர் எண்ணியும் உரைத்தும் வருவாராயினர் என்க.]

இவ்வுரை ஒரு அரசியலில் தொடர்புபட்டவர்களை இடமாகக் கொண்டு எழுந்ததென்பது இயற்றுவித்தவனை, அவனது இயற்பெயரான பொப்பண்ண(ன்) என்பதையும் சேனுதிபதிகளுக்குக் கொடுக்கப்படும் பட்டப்பெயரான காங்கேய(ன்)ர் என்பதையும் தலைவன் என்னும் பொருளில் வரும் கோன் என்பதையும் சேர்த்துப் "பொப்பண்ண காங்கேயர் கோன்" என்பதாலும் இயற்றிவிட்டவரைக் காவலன் என்பதாலும் ஐயமின்றி இவ் வுண்மை அறியப்படு மென்க. அன்றியும் அக் காங்கேயனுக்கு அடை கொடுத்த பகுதிகளாலும் அறியப்படும். (ஆயின் பாயிரத்தில் இவர் தமக்கு அரசனுயிருந்த குணபூஷணனைப் பற்றிய குறிப்பு ஒன்றும் கூறப்படவில்லை. அன்றியும் அவ்வுரை இயற்றப்பட்ட இடம் இலங்கையிலுள்ள சிங்கை நகரம் என்றேனும் வெளிப்படையில் சொல்லப்படவில்லை. ஆராய்ச்சியின் பின் தெரிகிறது.) அன்றியும் சேனைத் தலைவனுன காங்கேயன் கொடுத்த சோற்றுச் செருக்கினுல அமைச்சராய அடியார்க்கு நல்லார் உரைசெய்தார் என்றும் அப்பாயிரம் கூறிற்று. இவ்வையங்களும் நீங்கல் வேண்டும். ஒரு நூலுக்கோ உரைக்கோ பாயிரம் செய்வார், அந்நூலையோ உரையையோ செய்வித்தவரை இடத்தொடு படுத்திக் கூறுதலும் உண்டு. அவ்வாறு கூறுமல் அந்நூலையும் உரையையுமே தொடர்புபடுத்திக் கூறுதலும் உண்டு. நன்னூற் சிறப்புப் பாயிரத்தில் நன்னூலைச் செய்வித்த சீயகங்கன் எந்நாட்டிலே செய்வித்தான், அவன் எந்த நாட்டிலே உள்ளவன் என்று கூறப்படவில்லை. இவ்வாறு வருவன இன்னும் பல. இக்காலத்திலும் இவ்வாறு பாயிரம் கொடுக்கப்படலும் உண்டு. ஆயின் அது பாயிர இலக்கண உறுப்பில் குறைபாடில்லை. ஆயின் அவைசெய்த, செய்வித்தவர்களது விளக்கத்துக் கேற்றவாறு அக்காலத்திலே அந்நாட்டிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறநாட்டில் விளக்கமுள்ளவரானல் பிற நாட்டிலும் விளங்கும். காலம் செல்லச் செல்ல இவ்விளக்கம் குறைந்து ஒரு காலத்தில் இல்லாது போய்விடும். காரணம் என்னையெனில் அப் பாயிரப் பாக்கள் முன்னிருந்தவாறுதான் பின்னரும் இருக்கின்றன. ஆயின் பின்னர் (சில நூற்றாண்டுகளின் பின்னர்) அவற்றை வாசிப்பவர்களுக்கு அவற்றில் கூறப்பட்டிருப்பவைகளே யன்றிப் பிறிதொரு குறிப்பும் விளங்காது. பின்னர் ஆராய்ச்சியாற்றான் விளங்கும். இவ்வாறே இக்காலத்திலே உள்ளார்க்கு இப்பாயிர இயைபு விளங்கவில்லை. உரைசெய்த இடத்தையோ அவரையோ இடத்தொடு படுத்திக் கூறாமைதான் காரணம். அவ்வாறு கூறியிருந்தாலும் குணபூஷணனைத் தொடர்புபடுத்தி இருந்தாலும் ஆறரை நூற்றாண்டு வரை இவ்வடியார்க்கு நல்லார் வரலாறு தமிழ் நாட்டில் மறையக் காரணம் இராது. குணபூஷணன் இவ்வுரை இயற்றுவித்ததில் நேரே தொடர்பு படாமை கருதிப் பாயிரக்காரரால் அவன் குறிப்பிடப்படாமல் விட்டதோ! அன்றிக் குறிப்பிட்ட செய்யுள் ஒன்றோ, சிலவோ கிடையாமல் விட்டனவோ! என்னென்று சொல்வதற்கில்லை. இனி, அமைச்சராய அடியார்க்கு நல்லார் சேனபதியான காங்கேயன் கேட்க உரை சொன்னர் என்பதிலும் சரித்திர முரண்பாடு ஒன்றுமில்லை. இக் காங்கேயனிலும் பார்க்கக் கல்வியறிவுள்ள பண்டித சிரோமணியாய் அவர் விளங்கினமையாற்றான் அவரை உரை செய்யும்படி காங்கேயன் கேட்டான் என்க.

"பொப்பண்ண காங்கேயர் கோனளித்த சோற்றுச் செருக்கல்லவோ" என்பதற்குச் சோற்றை உரைக்குக் கைம்மாறாக - கூலியாகப் பெற்றுக் கொண்டு உரை சொன்னர் என்று கருதற்க. சோற்றை உண்ட செருக்கினல் என்க. அது அவ்வுரை இயற்றவில் ஊக்கந் தளராது இருத்தற்குச் சோறு முதலியன உதவியோ, உதவுவித்தோ வந்தமையைக் குறிப்பிட்டதாகும். இது அவ்வுரையைச் செய்வித்தவாற்றைக் குறிப்பிட்டது போலும்! இனி, சிங்கை நகர் வரலாற்றில் உரைக்கப்பட்டவாறு, பாயிரத்திலே காங்கேயன் தொண்டை நாட்டில் இருந்தும் அடியார்க்கு நல்லார் இன்னொரு தமிழ் நாட்டில் இருந்தும் வந்ததான குறிப்புகள் கூறப்படவில்லை. பாயிரம், உரை வரலாற்றைக் கூறுகின்றுழி, அங்ஙனம் செய்தவரையும் செய்வித்தவரையும் இன்னார்-இத்தகையார் என்று அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யக் கூடிய குறிப்புக்களை அன்றி அவர்களின் அப்பொழுதைய நிலைமைகளை அகப்படுத்தி உரைத்ததன்றி அவர்களின் பூர்வத்தை அறிந்துரைக்க வரவில்லை. அவ்வாறு உரைக்கவும் தேவையும் நியாயமும் அதற்கு இல்லையன்றோ? இவை நிற்க இன்னொரு ஐயத்தையும் தெளிவாக்குவாம்.

அக்காங்கயேனும் அவ்வடியார்க்கு நல்லாரும் முறையே தொண்டைநாட்டில் இருந்தும், தொண்டைநாடு தவிர்ந்த இன்னொரு தமிழ் நாட்டிலுமிருந்தன்றோ அழைக்கப்பட்டனர் என்று வரலாறு கூறிற்று. அவர் தாமே உரை இயற்றலில் தொடர்பு பட்டதால் அவ்விருவரையுமே சுட்டிப் பாயிரம் கூறிற்று என்பதும் மேலே பெறப்பட்டது. இனி உரை இயற்றிய அடியார்க்கு நல்லார் நிரம்பையில் அவதரித்தார் என்பது சதகத்தால் பெறப்பட்டது. அவ்வுரையாசிரியரே நிரம்பையர் காவலர் என்றும் முன்னர் பெறப்பட்டது. அன்றியும், சதகத்தால் நிரம்பையில் பிறந்து, நிரம்பையில் வாழாமல் இன்னொரு இடத்தில் வாழ்ந்து, நிரம்பையர் என்னும் பெயரைப் பெற்றார் என்பதாலும், பாயிரம் அவருக்கு நிரபையர் (காவலர்) என்பதாலும், அவர் வாழ்ந்த இடம் பாயிரம் பாடப்பட்ட இடம் என்பதாயிற்று. எனவே, தொண்டைமண்டலத்திலிருந்து காங்கேயன் வந்தான். தொண்டை மண்டலம் தவிர்ந்த இன்னொரு இடத்தில் இருந்து அடியார்க்கு நல்லார் என்னும் பண்டித சிரோமணி வந்தார். சிங்கை நகரில் உரை நிகழ்ந்தது. உரைச் சிறப்புப் பாயிரம் அவர்கள் இருவரையும் குறிப்பிட்டுப் பாடியது. அப் பாயிரத்தி லடியார்க்கு நல்லார் "நிரம்பையர் (காவலனே)" எனக் குறிப்பிடப்பட்டார். எனவே, குணபூஷணனால் அழைக்கப்பட்டு வந்தவர் கொங்கு மண்டலத்தில் உள்ள நிரம்பையில் இருந்து வந்தாரென்க. [தென்மொழி வரலாற்றார் தொண்டைநாட்டில் இருந்து காங்கேயனும் அடியார்க்கு நல்லாரும் அழைக்கப்பட்டார் எனக் கூறினாரெனின், அவர் அறியாமற் புரைபட உரைத்தார். வந்தவர் நிரப்பையில் இருந்து வந்தார் என்பது அவர் வாப்பட்ட இடத்தில் நிரம்பையர் என அழைக்கப்பட்டவாற்றால் தெரிகிறது. "நிரம்பை கொங்கு மண்டலத்தில் உள்ளது என்பது" நிரம்பைப் பதியுங் கொங்கு மண்டலமே எனக் கூறியதால் விளங்கும்.] இதனாற்றான் சதக ஆசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரியர் காங்கேயனைக் கொங்குமண்டலத்தில் அவதரிக்கவுமில்லை வாழவு மில்லை எனவும், அடியார்க்குநல்லாரை அவர் வாழவில்லை எனவும் கூறிவிட்டார் என்க. எனவே, அடியார்க்குநல்லார் தம் முற்பகுதிக் காலம் (முற்பகுதி என்பது அவர் பிறந்து வளர்ந்த) கொங்கு மண்டலத்திலும், பிற்பகுதி சிங்கை நகரிலும், காங்கேயனின் முற் பகுதி தொண்டைமண்டலத்திலும், பிற்பகுதி சிங்கை நகரிலும், குணபூஷணனது முற்பகுதியும், பிற்பகுதியும் சிங்கைநகரிலும் நிகழ்ந்தது என்க. இவ்வாற்றான் உரைச்சிறப்புப் பாயிரம் நிரம்பை யில் பாடப்படப்பெறவில்லை எனவும் மேலே முடிந்தது. அன்றி யும் அடியார்க்கு நல்லார் பிற்காலத்தில் ஈழச் சிங்கைநகரில் வாழ்ந்த படியாற்றான் கொங்குமண்டலத்தில் உரை இயற்றப் பெறவில்லை யென்றும் அச் சதக ஆசிரியர் குறிப்பிட்டார். (பிறந்தது ஒன் றையே கூறி ஏனையவற்றை வேண்டுமென்று விலக்கியே சதக ஆசிரி யர் பாடியிட்டார் என்பதை ஈண்டும் அறிக.) எனவே, சிங்கைநகரிற் செய்யப்பட்ட இவ்வுரை இவ்வாறு செய்யப்பட்ட இயைபு, தொடர் புக் குறிப்புக்களைக்கொண்டதாய் இருப்பதை ஆராய்ச்சியால் அறியக் கூடியதாய் இருந்தமைக்கும், நேரே அக் கூற்றை வெளிப்படையில் கூறப்பட்ட குறிப்புக்கள் ஒன்றையும் காணமுடியாதிருந்தமைக்கும் காரணம் என்னையெனில், இவ்வுரைத் தோற்றத்துக்கு நிலைக்கள னய் இருந்த அச் சிங்கை நகரத் தமிழரசர் அரசாட்சி ஈண்டும் அத் தொடர்போடு இருக்குமாறல் ஐயமின்றி அறியலாம் என்க.

ஒரு வயலில் விதைத்திட்ட வித்துக்களானவை, அடித்த புயல், காற்று, மழைகளால் அள்ளுப்பட்டு வெவ்வேறு இடங்களிலும சென்று முளைத்திட்டாற்போல, சிங்கை நகரிற் செய்யப்பட்ட இச் சிலப்பதிகார உரைக்கையெழுத்துப்படிகளும் காலத்துக்குக் காலம் எழுந்த அம் மாற்றங்களாலும் அத் தொடர்புகளாலும் காலாந்தரத் தில் தமிழ்நாடெங்கணும் பரவுவதாயிற்று. கொங்குமண்டலத்துக் கார்மேகக் கவிஞர்க்கும் கிடைப்பதாயிற்று. இனி, இச் சதக ஆசிரி யர் மிக நுட்பம் வாய்ந்தவர். சரித்திர நடுவுநிலை உள்ளவர். இவர் காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி. இவ்வடியார்க்கு நல்லார் காலம் பதின்மூன்றும் பதினான்காம் நூற்றாண்டுகளுக் கிடைப்பட்ட காலம். இவ்வடியார்க்கு நல்லார் காலந் தொடங்கி இவர் காலம் வரையும் ஏறக் குறைய ஐந்து நூற்றாண்டுகள் வரை

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரத்துக் குரைசெய்த அடியார்க்குநல்லார் கொங்குமண்டலத்திலே உள்ள நிரம்பைப்பதியிலே அவதரித்தார் என்னும் கர்ண பரம்பரைக் கதைவழக்கு இருந்திருத்தல் வேண்டும். அவர் அதனையும் அன்றிப் பிறவற்றையும் நன்கு அறிந்திருந்தார். அன்றியும் அவர் காலத்தே கிடைக்கப் பெறுவதாய் முன்னர் வெளியாய் இருந்த சிலப்பதிகார உரைச் சிறப்புப்பாயிரப் பாக்களையும் நன்கு அறிந்திருந்தார். அவ்வுரைப் பாயிரத்தில் நிரம்பையர் (காவலர்) என்னும் இன்னொரு பெயர் அவருக்குக் குறிப்பிட்டிருப்பதையும் கண்டார். அது அவருக்கு ஊரால் வரு பெயரென்றும் கண்டார். அதாவது நிரம்பையர் என்றிருப்பதால் அந் நிரம்பைப் பதியிலேயே பிறந்திருந்தார் என்று நிச்சயித்ததோடு, சிலப்பதிகார உரையாசிரியராய அவர் நிரம்பைப் பதியிலே பிறந்தார் என்பதைக் கர்ணபரம்பரைக் கதையாலும் அறிந்திருந்தார். இனி அவர் ஊராகிய விஜயமங்கலத்தின் பக்கத்தில் நிரம்பை உள்ளது ஆதலின், அந் நிரம்பையைப் பற்றியும் அந் நிரம்பை கொங்குமண்டலத்தைச் சேர்ந்ததென்பதையும் நன்கு அறிந்திருந்தார். தாம் அறிந்த கர்ணபரம்பரைக் கதையையும் எழுதிக் காட்டல் இயலாதாக, உரைசெய்த முறைமையினையும்உரைசெய்தவர் பெயரையும் கூறும் அம்முதலாம்பாட்டு ஒரு சரித்திரக் குறிப்பையுங் கொண்டிராமையின் அதனை நீக்கி (காரணம் என்னையெனில் இன்னொரு இடத்தில் உரையோ உரைப் பாயிரமோ பாடப்பட்டதென்ற குறிப்பு அதில்இல்லை. நிரம்பையில்தான் பாடப்பட்டதெனினும் பொருந்தும்.) அதற்காகவே, உரை செய்த நூல், உரை செய்தவர் இத்தகையார், உரை செய்த பிற இடம் என்னும் இவற்றை அறியவல்ல அவ் விரண்டாம் பாட்டையும், உரை செய்வித்தவர் இத்தகையார் அங்ஙனம் செய்வித்த இடம் இன்னொரு இடம் என்பனவற்றைக் கூறும் அம் மூன்றும் பாட்டையும், மேற்கோளாகக் காட்டி இவ்வுரை செய்த அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்திலே பிறந்தார் என்பதை முட்டில்லாமல் பின்னுள்ளாரும் அறிதற்கு உபகாரமாக, ஒரு நியாயப் பொருத்தனைக்கும் முரண்பாடில்லாமல் நிரம்பையர் காவலனென அவர் இன்னொரு இடத்தில் பெற்ற பெயரையும் தம் சதகத்தில் எடுத்துக் கூறாமல், "அருமை யுரைசெய் அடியார்க்கு நல்லார் அவதரித்த, வருமைப் பொழில்நிரம் பைப்பதி யும்கொங்கு மண்டலமே" என்று பாடி அமைத்தனர். கர்ணபரம்பரைக் கதையைக் கேட்டாரும் சொன்

ருருமாய் அவர் வழிவழி வந்த அனைவரும் உரைச் சிறப்புப்பாயிரத் துக்கும் சதகத்துக்கும் இடைப்பட்ட காலமான ஐந்நூறு ஆண்டு களுக்கிடையில் மறைந்துபோக அக் கர்ணபரம்பரைக் கதையும் மறைந்துவிட்டது. அதன் இயற்கையு மவ்வாறே. இவ் வுண்மை யைக் கொண்ட பாயிரமும் சதகமும் எழுத்துருவாய் வெளிவந்தன வாதலின் இன்றுகாறும் எஞ்சிநின்றன. முன்னர் சதகத்தில் இருந்து உரைச் சிறப்புப்பாயிரத்துக்கு வந்தாம். ஆயின் உண்மை யில் உரைச் சிறப்புப் பாயிரந்தான் முந்தியது. அப் பாயிரத்தில் இருந்து ஈண்டு சதகத்துக்கு வந்தாம்.

இனி மேலே பதினுன்காம் நூற்றுண்டின் மத்திய பகுதியே இவ் அடியார்க்கு நல்லார் வாழ்ந்தவர் என்று நிச்சயிக்கப்படுமாதலின் இவ ரைப்பற்றிப் பாடிய பாயிரப் பாட்டுக்களும் அக்காலத்தனவேயாகும். அக்காலம் தொடங்கி இக் கொங்குமண்டல சதக ஆசிரியர் காலமான கி. பி. 1720-ம் ஆண்டு [கொ-ம-ச-நூலாசிரியர் வ-று-பக்கம்-13.] வரையில் இவர் கொங்கு மண்டலத்தில் உரை செய்யாமல் வேறிடத் தில் செய்ததான செய்தியை அறியக்கூடிய சரித்திரக் குறிப்புக்கள் இருந்தே இருக்கவேண்டும். பாயிரத்தின் உள்ளபடியான நிலைமை அறிதற்கு இலங்கைச் சிங்கை ஆரியத்தமிழரசும் அத்தமிழ் அர சாட்சியும் இப்பொழுதும் இருக்குமாஞல் இவ்வுண்மையை ஆராய் வின்றி அறியலாம் என்பதில் தடை இல்லை. ஆயின், அப் பண்டைக் கலை நிலைமையைப் பின்னர் ஒருவாறும் அறிதற்கியலாத வாறு கலைஞானங்க ளெல்லாம் அழிக்கப்பட்டதாலும் அரசர் படை யெழுச்சியாலும் முடியாவாயின. எனவே பாயிரம் சதகத்துக்கு இடைப் பட்டகாலமும் இவ்வாருயிற்று. இச்சதக ஆசிரியர் கால மான பதினெட்டாம் நூற்றுண்டின் முற்பகுதி தொடங்கி இவ் இரு பதாம் நூற்றுண்டுவரை இவ்வுண்மையை அறியும் அறிகுறிகள் பிறர்க்குப் புலனுகாமையால் "ஆற்றிலே விழுந்ததைக் குளத்திலே தடவுதல் போல்" இலங்கையின் வெளி நாட்டு அறிஞருக்குச் சிங் கை நகரின் பண்டைய நிலைமையைப் பற்றிப் புலனுகாமையானும், அச் சிங்கை நகரில் இவர் வாழ்ந்தான குறிப்புக்களை அறியாமை யானும், அவர்கள் ஈழச்சிங்கை நகரொடுசார்த்தி இவர்தம் சரித்திரக் குறிப்புக்களை அறியாமல் விட்டுக் கொங்கு மண்டலசதகத்திலே அச் சதகத்தில் முடிக்திருக்கும் உண்மை முடிபை மாறுபடக் கருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் அன்றியும் இவர் வரலாறு பெரும்பகுதி அறியப்படாமை யாலும் கொங்கு மண்டலத்திலே தான் உரை செய்திருக்க வேண் டும் என்று கருதியும் அதற்கேற்கவே இவர் தம் வரலாற்றைக் குறித்தும் வருவாராயினர். அன்றியும் அவர் தாம் ஒருவர் குறித்து வந்ததை ஒருவர் பின்பற்றி அச் சதகத்தில் கூறியிட்ட உண்மையை ஆராய்ந்தறியாமல் புரைபட உணர்ந்தும் உரைத்தும் வந்தனர்.

இவ்வுண்மையையு மறியாது இவ்வடியார்க்கு நல்லார் வரலாறு இவ்வாறு அமைந்திருப்பதையுமறியாது பல பொருளொரு சொல் லாக நிற்கும் காவலர் கோன் என்பவைகளைக் கண்டவுடன் அவை முறையே நிரம்பையர்க்குத் தலைவன் என்றும் காங்கேயர் என்னும் மரபினர்க்குத் தலைவன் என்றும் பொருள் சொல்லலாமோ? இனி, இச் சிங்கை நகர் வரலாற்றில் உரைக்கப் பட்டவாறு பாயிரத்தில் காங்கேயன் தொண்டை நாட்டில் இருந்தும் அடியார்க்கு நல்லார் இன்னொரு தமிழ் நாட்டில் இருந்தும் வந்ததான குறிப்புக்கள் கூறப் படவில்லை. பாயிரம் உரை வரலாற்றைக் கூறுகின்றுழி, அங்ஙனம் செய்தவரையும் செய்வித்தவரையும் இன்னார் இத்தகையர் என்று அறியக்கூடிய குறிப்புக்களை அன்றி அவர்களின் அப் பொழு தைய நிலைமைகளை அகப்படுத்தி உரைத்ததன்றி அவர்களின் பூர் வத்தை அறிந்துரைக்க வரவில்லை என்க. அன்றி அவ்வாறுரைக்கத் தேவையும் நியாயமும் அதற்கு இல்லை யன்றோ? ஆயின் இப்பாயிரத் தில் அடியார்க்கு நல்லாரின் பூர்வம்பற்றியும் அறிய வல்ல குறிப்பு மிக நுட்பமாகக் கூறப்பட்டிருக்கின்றது. என்னையெனில், பாயிரம்தானே அவர் நிரம்பையர் (காவலர்) எனக் குறிப்பிட்டமையாலும் நிரம் பையர் என்பது அவர்பாடப்படமுன் நிரம்பையில் இருந்து வந் தவர் என்பதைப் புலப்படுத்துதலாலும் என்க. ஆயின் பாயிரம் அவ்வாறு நிரம்பையர் என அவர் அழைக்கப்பட்டமையானே அவ் வாறு சுட்டியதாம் என்க.

அன்றியும், சிறப்புப் பாயிரத்தையும் இச்சிங்கை நகர் வரலாற் றையும் இன்னொரு நோக்கொடு நோக்குகின்றுழி, உரைச் சிறப்புப் பாயிரமோ அவ்வடியார்க்கு நல்லார் இருக்கும் பொழுதே-அவர் சீவந்தராய் இருந்து உரை இயற்றிய அப்பொழுதே அவர் முன் னிலையிலோ அவர் அறியவோ பாடப்பட்டதாகும் என்பது உறுதி. சிங்கை நகர் வரலாறோ அப்படி எழுதப்பட்டதல்ல. அன்றியும் அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயிரத்தை மேற் கோளாகக் கொண்டு சிங்கை நகர் வரலாறும் எழுதப்படவில்லை. சிங்கை நகர் வரலாறு எழுதப்பட்டதைக் கொண்டு பாயிரம் பாடப்படவுமில்லை. இலங்கைச் சிங்கை நகர் வரலாற்றை எழுதிய இவ்வாசிரியர்க்கு, பாயிரத்துக்கும் வரலாற்றுக்கும் இடையேயுள்ள உண்மை விளங்கவில்லை.

இப்பாயிரமானது உரை இயற்றினார் இன்னார் என்றும், இயற்றுவித்தார் இன்னார் என்றும் உரைக்கும் வழியில் இன்னொரு வழியால் இயற்றிய அடியார்க்கு நல்லாரது அப்பொழுதுள்ள நிலைமையினையும் இயற்றுவித்த காங்கேயனது அப்பொழுதுள்ள நிலைமையினையும் அவர் குணம் செயல் என்பனவற்றையும் குறிப்பிட்டு அகப்படுத்தி உரை வரலாற்றுக்குத் தேவையான பகுதியை மட்டும் வரைந்து பதினுன்காம் நூற்றுண்டின் மத்திய பகுதியில் பாடப்பட்டது.

இச்சிங்கை நகர் வரலாறு திரு. ஆ. மு. என்பவரால் [நல்லூர் ரொட சார்த்தி] 1912-ம் ஆண்டில் எழுதப் பெற்றது. எனவே பாயிரத்தில் கூறப்பட்ட இவர் வரலாற்றுண்மைக்கு நிலைக்களன் சிங்கை நகர் வரலாற்றுண்மைகள் தாம் எனவும் பாயிரத்திலும் பார்க்க இவர் வரலாறு சிங்கை நகர் வரலாற்றில் இன்னொரு வழியில் தொடர்ந்து செல்கின்றதென்றும் அறிக. பாயிரம் அவர் வரலாறு என்னும் பெரும் பரப்பில் சொற்ப அளவான இவர் உரை வரலாற்றினை மட்டும்தான் சொல்கின்றதென்றும் அவ்வாறு சொல்லுவதுதான் அதன் நோக்கமும் என்றறிக. சிங்கை நகர வரலாறு இப்பாயிர உண்மைகளுக்கிடனுய் அவற்றுக்கிடந்தந்து நிற்கின்றது என்க. எனவே, அடியார்க்கு நல்லாரைப் பற்றிய வரலாற்றுண்மைகள் சிறப்புப் பாயிரத்திலும் சிங்கை நகர் வரலாற்றிலும் ஒரே முடிபினவாம் என்க. [இப்பத்தில் உள்ள ஆராய்ச்சிக் குறிப்புக்களை அறிவார் அவற்றுக்கறிசான்ருக-ஆதாரமாகச் சிங்கை நகர் நல்லை நகர்களையும் கி. பி. 1242 தொடங்கிக் கி. பி. 1560 வரை அந்நகரிலிருந்தரசாண்ட சிங்கையாரியச் சக்கரவர்த்திகளாகிய தமிழரசர்தம் வரலாறுகளையும் அறிந்திடுக.] எனவே, பாயிரத்தில் நேரே பெறப்படுவன வன்றி அப்பாக்களில் இருந்தும் உட்படையில் பெறப்படும் நுண்ணிய வரலாற்றுக் குறிப்புக்களும் இச் சிங்கை நகர் வரலாற்றில் பொருந்தி இருப்பதாற்றன் அப்பாக்களில் குறிப்பிட்ட அடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்க்கு நல்லாரும் காங்கேயனும் முறையே சிங்கை நகர் வரலாற்றில் பெறப்பட்ட அடியார்க்கு நல்லாரும் காங்கேயனும் என்பதை ஐயமின்றி அறிந்து கொள்ளப்படும் என்க.

## 19. அமைச்சரே உரையாசிரியர்

சிங்கை நகர் வரலாற்றோடு சிறப்புப் பாயிரத்தையும் பின் சதகத்தையும் ஒப்பநோக்கிக் கண்டமுடிபால், இவ்வமைச்சரே உரையாசிரியர் என்பது முட்டின்றி இனி துணரப்படும். ஆயினும் அது பல வேறுபட்ட உண்மைகளோடும் முடிபுகளோடும் கலந்து முடிந்து கிடப்பதாலும், உணர்ச்சியில் வல்லரல்லாத இளைஞர்க்கு அம்முடிபை வேறு பிரித்துணர்தல் கூடாமையானும் அதை ஒரு பத்தியில் வகுத்துக் காண்பாம். இத்தலைப்பே இவ்வாராய்ச்சியின் முக்கியமானது; அதனைத் தனித்தனி விளக்கங்களால் விளக்கிக் காட்டுவாம்

விளக்கம் (1) ஒன்றுவது :—

இது கொங்குமண்டல சதகத்தை முதலாகக் கொண்டு கூறுவது.

கொங்கு மண்டல சதகத்திலே "சிலப்பதிகாரத் தனித் தமிழுக்கு அருமையுரை செய்யடியார்க்கு நல்லார்" என்பதால் இச்சதகத்தில் கூறப்பட்டவர் "சிலப்பதிகாரத்துக்குரை செய்த அடியார்க்கு நல்லார்தான் என்பது ஐயமற அறியப்படும். உரைச் சிறப்புப் பாயிரத்திலே "சிலப்பதிகாரத்திற் சேர்ந்த பொருள் ஆரும் தெரிய விரித்துரைத்தானடியார்க்குநல்லான்" என்பதால் இப்பாயிரத்தில் கூறப்பட்ட அடியார்க்கு நல்லாரும் சிலப்பதிகாரத் திற்குரை செய்த அடியார்க்கு நல்லார்தான் என்பது அறியப்படும். எனவே இரண்டும் அவ்வுரையாசிரியராய அடியார்க்கு நல்லாரைப் பற்றித்தான் சொல்லுகின்றன. அச்சதகத்தில் "அடியார்க்கு நல்லார் அவதரித்த நிரம்பைப்பதியுங் கொங்கு மண்டலமே" என்பதால், இவ்வுரையாசிரியராய அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்தில் உள்ள நிரம்பைப் பதியில் அவதரித்தவர் என்று அறியப்பட்டவர். பாயிரத்தில் அவ் "அடியார்க்கு நல்லார் காரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவு மனையான் நிரம்பையர் காவலனே" என்னப்பட்டதால் அவரும் அடியார்க்கு நல்லார் என்னும் ஒரு பெயரன்றி நிரம்பையர் காவலர் என்னும் இன்னொரு பெயரைப் பெற்றவர் என்பதும் அறியப்பட்டது. பாயிரத்திலும் சதகத்திலும் கூறப்பட்ட அவர் உரை செய்த அடியார்க்கு நல்லார் என்று கூறப்பட்டதாலும், சதகம் அவரை நிரம்பையில் அவதரித்தவர் என்று சொல்லப் பாயிரம் அவரை "நிரம்பையர் (காவலர்)" என்று கூறியதால், அப் பெயர் நிரம்பையில் அவருக்கு வரமுடியாது எனவும், நிரம்பை தவிர்ந்த இன்னொரு இடத்தில் வாழ்ந்தால் தான் வரமுடியுமெனவும் கண்டதால், இவ்வுரையாசிரியராய அடியார்க்கு நல்லார் நிரம்பை யில் சதகத்தாலும் நிரம்பை தவிர்ந்த இன்னொரு இடத்தில் சிறப்புப் பாயிரத்தாலும் பாடப்பட்டவர் என்பதாயிற்று. அன்றி யும் சதகத்தில் "அருமையுரை செய்த அடியார்க்கு நல்லார்" என்பதால், அச்சதகத்தால் பின்னரும் பாயிரத்தில் "விரித்துரைத் தானடியார்க்கு நல்லான்" என்பதால், அப்பாயிரத்தால் உரை செய்த பொழுதும் பாடப்பட்டவர் என்பதாயிற்று. "இக்நிரம் பையர் (காவலன்)" என்பது உரைச் சிறப்புப் பாயிரத்தில் வந்துள்ள அவரது ஒரு பெயர் என்பதால், இவ்வுரைச் சிறப்புப் பாயிரம் நிரம்பையில் இயற்றப் பெறவில்லை என்பதும் உரையும் நிரம்பையில் இயற்றப்படவில்லை என்பதும் முன்னர் முடிந்தவை. எனவே, பாயிரம் அவர் சென்று வாழ்ந்த அவ்விடத்திலேயே பாடப்பட்டது. (சதகத்திலும் பார்க்கப் பாயிரம் நானூறு ஆண்டுகள்வரை முன்னர்ப் பாடப்பட்ட முதற்சான்று. இன்னோர் இயைபில் விரிந்த குறிப்புக்களையும் கொண்டது. இவ்விடத்தில் அதையே தொடர்வாம்.) அவ்விடம் யாது? அது, பாயிரத்திலே "காற்றைப் பிடித்து............பொப்பண்ணகாங்கேயர் கோன்" என்று கூறப் பட்ட காங்கேயன் என்னும் சேனாபதியால் உரை இயற்றித் தரும் படி கேட்கப்பட்ட இடம். இக்காங்கேயன் யார்? குணபூஷண னுக்குச் சேனைத்தலைவனாய் இருந்த ஒருவன். குணபூஷணன் யார்? இலங்கைச் சிங்க நகரிலே சிங்கையாரியர் குலத் தமிழரசனாய் இருந்த ஒருவன். இச்சிங்கை நகரிலே இருந்த தமிழரசனுக்குக் கீழ்ச் சேனாபதியாய் இருந்த ஒருவனால் இவர் கேட்கப்பட்டார் என்பதால், இவர் சென்று வாழ்ந்த இடம் (சென்ற காரணம் குணபூஷணன் அழைத்தமை) சிங்கை நகரம் என்பதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே உரைச் சிறப்புப்பாயிரத்தில் அப்பாயிரகாரரால் பாடப்பட்ட காங்கேயர் கோனும், நிரம்பையர் காவலர் என்னும் அடியார்க்கு நல்லாரும் முறையே அச் சிங்கை நகர் வரலாற்றிற் கூறப்பட்ட குணபூஷணனோடு உடன் அமைச்சராய் இருந்த பண்டித சிரோமணியான அடியார்க்கு நல்லாரும் காங்கேயன் என்னும் சேனைத் தலைவனும் என்பதாயிற்று. (உரைச் சிறப்புப் பாயிரம் சிங்கை நகரத்தில் பாடப்பட்டது என்பது முன் விளக்கமாயிற்று. அவ்வாறுனல் இவ்வுண்மை உணர்ச்சி வல்லார்க்கு இவ்வளவில் அறியப்பட்டுவிடும்.) எனவே. நிரம்பையர் காவலர் எனப்பட்டவர் பண்டித சிரோமணி என்னப்பட்டவரே. எனவே, பாயிரம் சிங்கையில் பாடப்பட்டதாதலின் அதில் (நிரம்பையர்) காவலன் என்று பாடப்பட்டவர் பண்டித சிரோமணியான அடியார்க்கு நல்லார் என்பதாயிற்று. உண்மை யென்னை? பண்டித சிரோமணியைக் காவலன் என்று கூறப்பட்டதா? ஆம். அச்சிங்கை நகர் வரலாறு "அடியார்க்கு நல்லார் என்னும் பண்டித சிரோமணியை அழைத்துத் தனது முதன் மந்திரியாக்கினான்" என்பதால், காவலன் என்பது இவ்வடியார்க்கு நல்லார் அமைச்சராய் இருந்தமையைச் சுட்டியதாயிற்று. எனவே, குணபூஷணனால் அழைக்கப்பட்ட பண்டித சிரோமணியான அமைச்சராய அடியார்க்கு நல்லாரே நிரம்பையர் காவலன் என அழைக்கப்பட்டார். (ஒருவர் மேலேயே மாறி மாறி முடிபுகள் வருமாற்றை யறிக.) 'நிரம்பையர் காவலரே' என்பது சிலப்பதிகார உரையாசிரியரைத் தானென்பது "ஆரும் தெரிய விரித்துரைத்தானடியார்க்கு நல்லான், காரும்தருவும் அனையான் நிரம்பையர் காவலனே" என்பதால் முன்னே அறியப்பட்டது. எனவே. அவ் அமைச்சரே உரையாசிரியர் என்பதை நன்கு அறிந்து தெளிந்திடுக. குணபூஷணன், அமைச்சராக ஒரு பண்டிதராகிய அடியார்க்கு நல்லாரை அழைத்ததும், அவர் வந்ததும் மெய். வந்தவர் இங்கே "நிரம்பையர் (காவலர்)" எனப் பட்டதால் வந்தவர் நிரம்பையில் இருந்து வந்தார் என்க. வந்த காரணம் குணபூஷணன் அழைத்தமைதான் என்க. இதனுற்றான் அடியார்க்கு நல்லார் நிரம்பையில் பிற்காலத்தில் வாழாமல் விட்டார் என்க. சிலப்பதிகாரத்துக்குரை செய்த அடியார்க்கு நல்லாரைப் பற்றிக் கூறுவதாக இப்பொழுது எல்லாராலும் ஐயமறக் கொள்ளப் படுவது, கொங்கு மண்டல சதகமே. இக் கொங்குமண்டல சதகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை முதலாகக் கொண்டு இக்நிரூபணங்களே மேற்கொண்டு சொன்னுற்றுன் தெளிவாக இம்முடிபு உரையாசிரியராய அடியார்க்கு நல்லாரைப் பற்றியது என்று பிறரால் எளிதாக விளங்க முடிவதாகும். அதற்காகவே மேலே காட்டிய முதலாம் விளக்கத்தைக் கொங்கு மண்டல சதகத்தை முதலாகக் கொண்டு காட்டியிட்டாம். ஆயின் அவ்வழி விளங்குவதற்குக் கடினமானது. அன்றியும் அவ்வாறு கூறுதல் அவரைக் குறிப்பிட்டறியக் கூடியதாய் இருந்த சான்றுகளும் அவற்றின் உண்மைகளின் அமைவுகளும் கால அமைவுகளும் இயைந்து கிடந்த வழியாற்சென்று கூருது, அவ்வுண்மையைக் கூறுவதற்கு ஒருகடினமான-ஒரு முட்டானவழியாற் சென்றதுமாம். அவ்வுண்மை என்னேயெனில் கொங்கு மண்டல சதகத்துக்கு ஆதாரம் உரைச் சிறப்புப்பாயிரம். அவ்வுரைச் சிறப்புப்பாயிரத்துக் காதாரம் சிங்கை நகர் வரலாறு. (ஆதாரமாகக் காட்டப்பட்டதல்ல. அவ்விரண்டன் உண்மையும் ஒன்றை யொன்று ஒன்றுவதால் என்க.) அவ்வரலாற்றுக் காதாரம் அவ்வரலாற்றிற் கூறப்பட்ட அவர்கள் பெயரால் இன்றும் எழுத்து வழக்கிலும் பேச்சுவழக்கிலும் அழைக்கப்படும் நிலம், குளம் என்பன வற்றின் பெயர்களும் பிறவும். (அன்றி அந்நிலமும் குளமும்தான்) எனவே இனி, முன்னர்க்கூறிய வாறு அம்முறை பற்றிக் கூருது ஈண்டு அம் மூலாதாரமான நில குளவழக்குகளில் இருந்து செல்வாம்.

விளக்கம் (2) இரண்டாவது:—

(அடியார்க்கு நல்லார் வரம்பு, குளம் என்பனவற்றிலிருந்து) இப்பொழுது வட இலங்கையிலே வண்ணுர் பண்ணே கிழக்கில் உள்ள வேங்கடேசப் பெருமாள் கோவில் இருக்கும் நிலமும், அதன் சுற்றுடலும், அடியார்க்கு நல்லார் வரம்பு என்று அழைக்கப் படுகின்றது. அன்றியும் அக்கோவிலின் மேற்குப் பக்கத்திலே கன்னுகிட்டியில் உள்ள வீரமாகாளியம்மன் கோவிலின் முன்பாக மாக இருக்கும் தாமரைக்குளமும், அடியார்க்கு நல்லார் குளமென அழைக்கப்படுகின்றது. ஆகையால் இக்குளத்தோடும், அந்நிலத்தோடும் தொடர்புபட்ட அடியார்க்கு நல்லார் என்பார் ஒருவர் இந்நிலத்தில் முன்னொரு காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டுமென்பது வெளிப்படை. ஆயின் அவ்வொருவர் பெயரால் அந்நிலமும், குளமும் அழைக்கப்படுதல் கொண்டு அவர் ஒரு பிரபலமான பெரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் அறியப்படும். ஆயின் அக்கோவில் உறுதிகளிலும் "கோட்டு" விற்பனவு விளம்பரம் ஒன்றிலுமன்றி இவற்றிற்கு ஆதாரமாயுள்ளதாய் ஒல்லாந்தர் காலத்து அவர்களால் எழுதப்பட்ட தோம்பைப் பார்த்தெழுதப்பட்ட தோம்புகளிலும் " அடியார்க்கு நல்லார் வரப்பு" என்று குறிக்கப்பட் டிருப்பதால் அப்பெயருடையார் ஒருவர் வாழ்ந்தாரென்பது நிச்சயமாய் நன்கு அறியப்படும். அன்றியும் அக்கோவில் உறுதிகளில் ஒன்று 1806-ம் ஆண்டு அறக்கொடை (தருமசாதனம்) செய்யப்பட்டதாகக் காணப்பட்டதால், அவ் வடியார்க்கு நல்லார் 1806-ம் ஆண்டிலும் முற்பட இருந்தவர் என்பது அறியப்படும். ஆயின் அவ்வாண்டுக்கு முற்பட ஒல்லாந்தர் காலத்தும் அவர் முற்படப் போர்த்துக்கேயர் காலத்தும் அப்பெயருடையார் ஒருவர் வாழ்ந்த வரலாறுமில்லை. அடியார்க்கு நல்லார் என்பது அப் பிறசாதியினருள் யாராமொருவர்க்குமுரிய பெயருமல்ல. அன்றி அவர்கள் காலத்து அத்தகைய ஒரு கல்விமான் இருந்திருக்கவும் முடியாது. எனவே அவர், அவர் தம்முள் முற்பட வாழ்ந்தவரான தமிழரசர் காலத்தவர் என்பது நிச்சயம். சிங்கை நகர் வரலாற்றால் அவர் (அங்கிலம் குளம் என்பவற்றால் அழைக்கப்படுபவர்.) குணபூஷணனுக்கு அமைச்சராய் இருந்த அடியார்க்கு நல்லார் என்பது அறியப்பட்டது. அன்றியும் இவ் வடியார்க்கு நல்லார் அக் குணபூஷணனால் தொண்டைமண்டலம் தவிர்ந்த இன்னொரு தமிழ் மண்டலத்தில் இருந்து (இந்தியாவில்) தமிழ்க்கலா விருத்திக்காகவே அழைக்கப் பட்டவர் என்பதும், இவர் அமைச்சராய் இருக்க இவருடன் தொண்டைமண்டலத்தில் இருந்து அக்குணபூஷணனால் அழைக்கப்பட்ட காங்கேயன் என்னும் (சேனாதிபதிக் குரிய பட்டத்தைப் பெற்ற) ஒருவன் இக் குணபூஷணனுக்குச் சேனைத்தலைவனாய் இவருடன் வாழ்ந்தமையும் அறியப்பட்டது. எனவே இவ்வடியார்க்குநல்லார் இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டவராய்-பண்டை வட இலங்கை இராச்சியத்தைச் சேர்ந்த சிங்கைநகரில் அமைச்சராக இருந்தவராய்—குணபூஷணன் கீழ்க் காங்கேயன் என்னும் சேனாபதியுடன் இருந்தவராய்—அன்றியுமச் சிங்கைநகர் காலத்தில் கண்ணகி வழிபாடும் சிலப்பதிகாரப் படனமும் நடைபெற்ற காலத்திலிருந்தவராயும் உள்ள ஒருவர் என்பது அறியப்பட்டது. [அன்றியும் உரைச்சிறப்புப்பாயிரம் நிரம்பையில் பாடப் பெறவில்லை. உரை நிரம்பையிற் சொல்லப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவில்லை. அடியார்க்கு நல்லார் பிற்காலத்தில் நிரம்பையில் வாழவில்லை என்பது முன்னர் முடிந்த முடிபுகள், உரைச்சிறப்புப்பாயிரம் சிங்கை நகரிற் பாடப்பட்டது. உரை சிங்கை நகரிற் சொல்லப்பட்டது. உரைச் சிறப்புப் பாயிரம் சிங்கை நகரத்தார் ஒருவராற் பாடப்பட்டது என்பது. பின்னரும் பெற்ற முடிபுகள். இவற்றை நினைத்துக்கொள்க]. எனவே, சிங்கை நகரில் உரை செய்யப்பட்ட போது அந்நகரில் அந் நகரத்தார் ஒருவராற் பாடப்பட்ட சிறப்புப் பாயிரப் பாக்களால் பாடப்பட்டவர்கள், முறையே இவ்வமைச்சராய அடியார்க்கு நல்லாரும் இக் காங்கேயர் கோனும் என்பதாயிற்று. இவரைப்பாடிய சிறப்புப் பாயிரத்தில் முதலாம் பாட்டு ஒரு வரலாற்றுக் குறிப்பையு முடையதல்ல. அதை விட்டு அவ்வுரைச் சிறப்புப் பாயிரப்பாட்டு இரண்டாவதில்,

"ஒரும் தமிழொரு மூன்றும் ........................
..................சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொருள்
ஆரும் தெரிய விரித்துரைத் தானடி யார்க்குநல்லான்
காரும் தருவு மனையான் நிரம்பையர் காவலனே" என்றன்றே

இவ்வடியார்க்கு நல்லார் குறிக்கப்பட் டிருக்கின்றார். இவர் உரைச் சிறப்புப் பாயிரத்தில் நிரம்பையர் காவலன் என்று குறிக்கப்பட்டது, அவர் காலப்பகுதியான கி.பி. 1320—1371 என்னும் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலமாகும். அக்காலத்தும் அவர்காலத்துப் பின் இக்காலத்தும் சிலப்பதிகார உரைச் சிறப்புப்பாயிரப் பாக்கள் அவ்வுரையோடு தமிழ்நாடு எங்கணும் பரவிற்று. கி. பி. 1720-ம் ஆண்டு வரை கொங்குமண்டலத்துள்ள குறும்பு நாட்டைச் சேர்ந்த விஜயமங்கலத்து வாழ்ந்த கார்மேகக் கவிஞர் தாமும் அவ்வுரைச் சிறப்புப்பாயிரப் பாக்களைப் பற்றி அறிந்தார். அன்றியும் இக் கவிஞர், அடியார்க்கு நல்லாரின் நிரம்பைப் பதிக்கு அடுத்த ஊரின ராதலின் நிரம்பையில் பிறந்த இவ் வடியார்க்கு நல்லார் தான் இன்னோரிடத்தில் சிலப்பதிகாரத்துக் குரைசெய்தார் என்பதைக் கர்ண பரம்பரைக் கதை முதலியவற்றாலும் இப்பாயித்தினாலும் நன்கு அறிந்திருந்தார். அவ்வுரைச் சிறப்புப் பாயிரத்தில் நிரம்பையர் காவலனென்று அடியார்க்கு நல்லார் குறிக்கப்பட் டிருத்தலையும் அறிந்தார். இந்நிரம்பை கொங்குமண்டலத்துக் குறும்பு நாட்டைச் சேர்ந்தது என்பதைத் தமக்கு அடுத்த ஊராதலின் நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திருந்தார். இவ்வாற்றால் அவர்தாம் இயற்றியிட்ட அக் கொங்குமண்டல சதகத்திலே,

" தருவை யுணர்ந்த இளங்கோ வடிகளுட் கொண்டுசொன்ன
தருவை நிகரும் சிலப்பதி காரத் தனித்தமிழுக்
கருமை யுரைசெய் யடியார்க்கு நல்லார் அவதரித்த
வருமைப் பொழில்நிரம் பைப்பதியுங் கொங்கு மண்டலமே "

என்று பாடி இட்டார் என்க. [இவ்வாறு முடிவதால்தான் மேலே இச்செய்யுள் அவதரித்து+வருமைப் பொழில் நிரம்பைப் பதி யென்பதல்ல, அவதரித்த+வருமைப் பொழில் நிரம்பைப்பதி யென யாம் எடுத்துக் காட்டியது. ஆயின் இம்முடிபு பின்னர் முடிவதா தலின் அதைவிட்டு முன்னர் அதன் இலக்கணத்தின் படியே அவ் வாறு இருக்க வேண்டுமென்று காட்டினும்.] இவ்வாறு சதகத்தால் பாடப்பட்டவர் யார்? சிங்கை நகரத்தில் பாயிரத்தில் பாடப்பெற் றவரே. பாயிரத்தால் நிரம்பையர் காவலனே என்று பாடப்பெற்ற வர் யார்? சிங்கை நகரத்துப் பண்டித சிரோமணியான அடியார்க்கு நல்லானன்றோ? அவர்தான் அமைச்சரன்றோ? எனவே, அமைச் சரே உரை யாசிரியரானார் என்பதை யறிக.

விளக்கம் (3) மூன்றாவது:—

இனி இங்ஙனம் காட்டிய இவ்விரண்டு நிரூபணங்களும் போ லாகாது தனித்தனி மேலே முடிந்த நியாய முடிபுகளை எடுத்துக் காட்டி இன்னொரு மிக நுட்பமான வழியாற்சென்று தெளிவாக வும் எளிதாகவும் விளக்குவாம்.

1. " தருவை நிகரும் சிலப்பதி காரத் தனித்தமிழுக்
கருமை யுரைசெய் யடியார்க்கு நல்லார் " என்பதால்,

சிலப்பதிகாரத்துக் குரைசெய்தவர் அடியார்க்கு நல்லார் என்னு மொருவர்.

2. இவர் கொங்குமண்டலத்திலுள்ள நிரம்பைப் பதியில் அவதரித்தவர்.

3. அக் கொங்குமண்டலத்தில் எவ்விடத்திலேனும் நிரம்பை யிலேனும் வாழாதவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அந் நிரம்பையில் உரையைச் சொல்லாதவர்.

5. அந் நிரம்பையில் சிறப்புப் பாயிரத்தில் பாடப்பட்ட காங் கேயர்கோன் என்பவனைச் சந்திக்கப்பெருதவர்.

6. அந் நிரம்பையில் அவனுல் உரை சொல்லுவிக்கப் பெருதவர்.

7. இன்னொரு இடத்தில் சென்று வாழ்ந்து, தமது சொந்த ஊரால் வந்த நிரம்பையர் என்னும் பெயரைப் பெற்றவர்.

8. அவ்விடத்தில் உரையைச் சொன்னவர்.

9. அவ்விடத்தில் பொப்பண்ண காங்கேயன் என்பவனைச் சந்தித்தவர்.

10. அவ்விடத்தில் அக் காங்கேயனுல் உரை சொல்லுவிக்கப் பெற்றவர்.

11. அவ்விடத்தில் உரைச்சிறப்புப் பாயிரம் பாடப்பட்ட பொழுது, அப் பாயிரக்காரரால் "நிரம்பையர் காவலனே" யெனப் பாடப்பெற்றவர்.

12. அப் பாயிரம் பாடப்பட்ட இடத்தில் அப் பாயிரத்தால் "காற்றைப் பிடித்து.........கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கேயர் கோன்" என்று பாடப்பெற்ற காங்கேயனுல் உரை சொல் லும்படி கேட்கப்பட்டவர்.

13. எனவே, பாயிரம் பாடப்பட்ட இடத்தில் (அப் பாயிரத்தி னுல் அறியப்பட்டபடி அவ்விடத்தில்) அக் காங்கேயனோடு உடன் வாழ்ந்தவர்.

14. பாயிரம் சிங்கை நகரிற்பாடப்பட்டது என்பது முன் நிரு பணம். எனவே, சிங்கைநகரத்தில் பொப்பண்ண காங்கேயர்கோன் என்று பாடப்பட்டவன் அந்நகரச் சேனுதிபதியாய காங்கேயன் என்பது.

15. எனவே, அச் சிங்கை நகரத்தில் அந் நகரத்தாரொருவரால் பாடப்பட்ட பாயிரத்தில் நிரம்பையர் காவலன் என்று பாடப்பட்டவர் அவ் வமைச்சராய அடியார்க்கு நல்லார் என்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எனவே, இவர்க்குப் பாயிரம்பாடமுன்னர் நிரம்பயைர் என்று பெயர். பாயிரத்தில்தான் நிரம்பையர் காவலன் என்னும் பெயர். அதாவது, நிரம்பையர் ஆகிய காவலன் என்பது. நிரம்பையர் என்பதும் அவரைத்தான்; காவலர் என்பதும் அவரைத்தான்.)

16. அவர் யார்? அவர்தான்,

"………சிலப்பதிகாரத்தில் சேர்ந்த பொருள்.
ஆருந் தெரிய விரித்துரைத் தானடி யார்க்குநல்லான்
காருந் தருவு மனையான் நிரம்பையர் காவலனே"

எனப் பாயிரத்தால் பாடப்பட்ட உரையாசிரியராய அடியார்க்கு நல்லார். அன்றியும் அவர்தான்,

"தருவை நிகரும் சிலப்பதி காரத் தனித்தமிழுக்
கருமை யுரைசெய் யடியார்க்கு நல்லார் அவதரித்த
வருமைப் பொழில்நிரம் பைப்பதி யுங்கோங்கு மண்டலமே"

என்று கொங்குமண்டல சதகத்தில் பாடப்பட்ட அடியார்க்கு நல்லார். எனவே, அமைச்சரே உரையாசிரியராஞர் என்று இனிமேல் உணர்ந்து கடைப்பிடிக்க. (இது கொங்குமண்டல சதகத்தில் கூறப்பட்ட உண்மைகளை முதலாக எடுத்துக்கொண்டு உரைச் சிறப்புப் பாயிரத்தின் வழியே வரலாற்றுக்கு வந்து பின்னரும் அப் பாயிர வழியே சதகத்துக்கு வந்தவாறு.) இனி, இன்னும் சில தெளிவு படுத்துவாம். நிரம்பையர் காவலர் என்று பாயிரத்தில் குறிப்பிடப்பட்டார் என்றும், பாயிரம் சிங்கை நகரத்தில் அந் நகரத்து ஒருவரால் பாடப்பட்டதென்றும், பாயிரம் பாடமுன்னர் பண்டைச் சிங்கைநகர மக்களால் நிரம்பையர் என அழைக்கப்பட்டார் என்றும் மேலே கண்டாம். ஆயின், சிங்கை நகரில் இருந்த அடியார்க்கு நல்லார் யார்? பண்டித சிரோமணியாய அடியார்க்கு நல்லாரே. அவர் எங்கிருந்து வந்தார்? இந்தியாவிலிருந்து வந்தார். இந்தியாவில் இருந்து வந்தவர் இங்கே சிங்கை நகரில் நிரம்பையர் என அழைக்கப்பட்டார் என்றல், உண்மை என்னை? எனவே, குணபூஷணனல் அழைக்கப்பட்டு வந்தவர் இந்தியாவில் உள்ள, கோங்குமண்டலத்துள்ள நிரம்பையில் இருந்து வந்தார் என்றறிக. எனவே, நிரம்பையில் அவதரித்த அடியார்க்கு நல்லார்தான் சிங்கை நகரில் நிரம்பையர் எனப்பட்டார் என்றறிந்திடுக. அவர் என் இங்கு வந்தார்? சிங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரைத் தலைநகர் ஆகக்கொண்டு அக் காலத்திலாண்டவனுன குண பூஷணன் என்னு மரசன் தமக்கு அமைச்சராயிருக்கவும் தன்னுட்டின் கலாவிருத்திக்காகவும் இவரை அழைத்தமையே. எனவே, நிரம்பையர் என்னும் உரையாசிரியர் நிரம்பையில் வாழாமைக்குக் காரணம் குணபூஷணனுல் அழைக்கப்பட்டமைதான் என்க. இனி இவையேயன்றி இவ்வுண்மைகளை விளக்க இன்னும் பல நிரூபணங்களைக் கூறலாம். நாம் கருதியவாறன்றி வேறு வழியானும் இவ்வுண்மைகளைக் கொண்டு வேறு பல நிரூபணங்களைக் கூறலாம். அன்றி வெகுவாய்ச் சுருக்கியும் கூறலாம். விளக்கத்துக்கே விரியக் கூறுகின்றும். எத்தனை நிரூபணங்களைக் கூறினும் முடிபு இம் முடிபே வரும். சிறந்த உண்மைகளின் இலட்சணமும் இதுவே. இவையெல்லாம் உணர்வார் உணர்ச்சி வல்லமையைப் பொறுத்ததே. இன்னும் சில நிரூபணங்களைக் கூறுவாம்:

விளக்கம் (4) நான்காவது :—

காவலர் எனப்பட்ட அடியார்க்கு நல்லார் பண்டை இலங்கையின் வடபகுதிச் சிங்கை நகரிலே குணபூஷணன் கீழ் அமைச்சராய் இருந்த பண்டித சிரோமணியாகிய அடியார்க்கு நல்லார். நிரம்பையர் எனப்பட்ட அடியார்க்கு நல்லார் நிரம்பையில் அவதரித்த உரையாசிரியராய அடியார்க்கு நல்லார். அவ்வாருயின் நிரம்பையர் காவலர் எனப்பட்ட அடியார்க்கு நல்லார் யார்? சிங்கை நகரத்து அமைச்சரா, அன்றேல் நிரம்பையில் அவதரித்த உரையாசிரியரா? அவ்விருவருமாகிய ஒருவரே. கொங்கு மண்டலசதகம் பாயிரம் வெளியாகி ஏறக்குறைய(சத-கி. பி. 1720வரை பாயி-1350வரை; இடைக்காலம் 370ஆ-வரை) முன்னூற்றெழுபது ஆண்டுகள் வரை சென்றதற் பின்னர், அப்பாயிரத்தில் சுட்டிய "நிரம்பையர் காவலர்" என்பதில் உள்ள நிரம்பையர் என்னும் பெயரினுல் அவர் நிரம்பையில் அவதரித்தவர் என்பதை அறிந்துகொண்டு "அவதரித்த நிரம்பைப்பதியுங் கொங்குமண்டலமே" யென்று பாடியது. இது உரை இயற்றிய பின்னரும் உரைச் சிறப்புப்பாயிரம் பாடப்பட்ட பின்னரும் என்க. காவலன் என்றதால் பாயிரம் பாடமுன்னர் (அன்றிப் பின்னருமாகலாம்) இருந்த அவரது தொழிலை-உத்தியோகத்தைக் குறிப்பிட்டவாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் (5) ஐந்தாவது :—

உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் காலம் பதினன்காம் நூற்றுண்டின் முற்பகுதி யெனச்சிலரும் அன்றிப் பதினன்காம் நூற்றுண்டெனச் சிலரும் கூறுகின்றனர். ஆயின் குணபூஷணனுக்கு அமைச்சராய் இருந்த அடியார்க்கு நல்லார் காலம் அக் குணபூஷணன் காலமான பதினன்காம் நூற்றுண்டென நாம் கண்டு கொண்டோம். இதுவரை இவ்வமைச்சராய அடியார்க்கு நல்லாரும் உரையாசிரியராய அடியார்க்கும் நல்லாருமென இவ்விரு அடியார்க்கு நல்லாரே இருந்தனரன்றி வேறு யாரேனும் இப்பெயருடையார் இல்லையே-அறியப்படவில்லையே-அன்றியுமப் பதினன்காம் நூற்றுண்டில் இல்லையே. இவர் தம்முள் உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் நிரம்பையில் அவதரித்து நிரம்பையில் வாழாமல் இன்னொரு இடத்தில் வாழ்ந்து நிரம்பையர் எனப்பட்டவர் என்றும். அமைச்சராய அடியார்க்கு நல்லார் இந்தியாவில் இருந்து குணபூஷணனல் சிங்கை நகர்க்கு அழைக்கப்பட்டு அந்நகரத்து இருந்தவர். ஈண்டு உண்மை என்னே? உரைசொல்ல முன் அவரை அமைச்சராகவும் உரை சொன்னபின் அவரை உரையாசிரியராகவும் வெவ்வேறு இடத்தில் வெவ்வேறு ஆளாக வல்லோ வைத்து ஈண்டுப் பேசிவிட்டோம். அமைச்சர்தானே சிங்கை நகரில் நிரம்பையர் எனப்பட்டவர். அவர்தானே பாயிரக்காரரால் நிரம்பையர் காவலர் எனப்பட்டவர். அவர்தானே சதகக் காரரால் கூறப்பட்ட அருமையுரை செய்த அடியார்க்கு நல்லார் அல்லவோ! இருவரும் ஒருவர் தாஞ, வேரு?

விளக்கம் (6) ஆறுவது:—

சிங்கை நகர் வரலாற்றின் சரியான ஆராய்ச்சியின் முடிபால் அந்நகரில் குணபூஷணன் என்னும் அரசனுடைமை; அவன் கீழ்ச் சிங்கை அல்லாத பிற தேசத்து அமைச்சருடைமை; காங்கேயன் என்னும் சேனுபதியுடைமை என்னும் இவைகள் ஒப்புக்கொள்ளப் பட்டவைகள். இவர்களையும் இவர்கள் குணம் செயல்களையும் கொண்ட உண்மைகள்தான் உரைச் சிறப்புப் பாயிரப்பாட்டுகளாகப் படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. அது எவ்வாறு என்பதைக் காட்டுவாம். சேனுபதியாய காங்கேயனே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்துக் கடியபெருங்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமற் காலமெனுங்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கேயர்கோன்" என்றும்,

அடியார்க்கு நல்லாரை,

"படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்னுல்
அடியார்க்கு நல்லா னென்பான்" என்றும்,
"...............அடியார்க்கு நல்லான்
காருந் தருவு மனையான் நிரம்பையர் காவலனே" என்றும்,

அவ்வுண்மைகள் பாட்டுவடிவமாய் வெளிவந்திருக்கின்றன. வரலாற்றில் அவர் இந்தியதேசத்தில் இருந்து வந்தவர் என்னும் உண்மை சிறப்புப்பாயிரத்தில் நிரம்பையர் என்பதால் பெறப்பட்டது. எனவே, வந்த அமைச்சர் நிரம்பையில் இருந்து வந்தார். அவரே உரை செய்தார். (இந்நிரூபணம் உணர்ச்சி வல்லார்க்கே) ஏனைய இப் பாயிரப்பாட்டுப் பகுதிகள், வரலாற்றுக் குறிப்புக்கள் இல்லாத பகுதிகள் ஆகையால் ஈண்டெடுத்துக் காட்டப்படவில்லை.

விளக்கம் (7) ஏழாவது:—

சிங்கை நகர் வரலாற்றில் கூறப்பட்ட அடியார்க்கு நல்லார் காங்கேயன் என்பானைப் பற்றிக் கூறிய பகுதிக்கும், நிரம்பையிலே பிறந்தவராய்ப் பின் எங்கோ சென்று வாழ்க் துரைசெய்தபோது அவர் தம்மைப்பற்றிப் பாடி இட்ட உரைச் சிறப்புப்பாயிரப் பாக்களுக்கும் பல ஒற்றுமை உண்டென்று மறிந்தாம். (அதாவது வரலாற்றில், வாழ்ந்தவர்கள் என்றறியப் பட்டவரே பாயிரத்தில் பாடப் பெற்றூர்கள் என்றறியின் அது உறுதியே.) வரலாற்றின் படி அடியார்க்கு நல்லார் காங்கேயன் என்பார் குணபூஷணனுக்கு அமைச்சராகவும் சேனுபதியாகவும் இருந்தவர்கள். ஆனல் அடியார்க்கு நல்லார் இந்தியாவில் இருந்தும் அழைக்கப்பட்டவர். அன்றியுமவனுல் அழைக்கப்பட்ட காங்கேயன் என்னும் சேனுபதியுடனே உடன் உறைந்தவர் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. பாயிரத்திலும் இவ்வுண்மையை அப்படியே அறிவாம். பாயிரத்தில் உரை செய்த அடியார்க்கு நல்லார் (நிரம்பையர்) காவலர். செய்வித்த காங்கேயன் "கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கேயன்" என்னும் சேனுபதியே யென வெளிப்படையே அறியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. சேனாபதி செய்வித்தான் எனவே, காவலன் என்பது அமைச்சரைத்தானே. செய்தவர் அமைச்சர் (காவலன்). செய்வித்தவன் சேனாபதி (காங்கேயன்) எனவே, அவர்கள் ஒரு அரசியலில் தொடர்பு பட்டவராய் ஒரு அரசனைத் தமக்கு அரசனாக உடையவர்கள் தானே. இவை வெளிப்படையிலிருந்து அறியப்பட்டவை. இனி அவற்றின் கிடக்கையு மவ்வாறே. கொங்கு நாட்டில் உள்ள நிரம்பையில் இருந்து வந்த அடியார்க்கு நல்லார், தொண்டை நாட்டில் இருந்து வந்த காங்கேயனை வந்த இடத்தில் சந்தித்தார்; அவ்விடத்தில் அவன் தூண்டுதலால் உரையையும் இயற்றி இட்டார்; என்பது வரலாற்றின் கிடக்கை. உரைப்பாயிரத்தின் கிடக்கையு மிவ்வாறே. அது எவ்வாறு? பொப்பண்ண காங்கேயர் கோன் என்னும் சேனாபதி, யாரை உரையியற்றித் தரும்படி கேட்டான்? நிரம்பையர் காவலனாகிய அடியார்க்கு நல்லாரை யல்லவா? நிரம்பையர் என்பது ஊரால் வருபெயர். ஊரால் வருபெயர்,சொந்தவூரை விட்டு இன்னொரு இடத்தில் சென்று வாழ்ந்தால்தானே வரும். இனி கேட்கும்பொழுது அவர் நிரம்பையர் காவலர் அல்லவா? எனவே, கேட்டது நிரம்பையைவிட்டு அடியார்க்கு நல்லார் சென்ற அந்த இடத்திலல்லவா? எனவே, கேட்கப்பட்ட அடியார்க்கு நல்லார், நிரம்பையை விட்டுச்சென்று வாழ்ந்த அந்த இடத்தில் காங்கேயனைச் சந்தித்த அடியார்க்கு நல்லார் அல்லவா? கேட்ட காங்கேயன் அங்ஙனம் சென்ற அடியார்க்கு நல்லாரை அவ்விடத்தில் சந்தித்த காங்கேயன் அல்லவா? எனவே, சிங்கை நகர் வரலாற்றிற் கூறப்பட்ட அடியார்க்கு நல்லார் என்னும் அமைச்சரும் காங்கேயன் என்னும் சேனாபதியும்தான் முறையே பாயிரத்தில் குறிப்பிடப்பட்ட உரை செய்த அடியார்க்கு நல்லாரும் செய்வித்த காங்கேயர் கோனும் என்க. (இவ்வாற்றால் ஐயம்தீர்ந்தது; உண்மையும் அறியப்பட்டது).

விளக்கம் (8) எட்டாவது :—

இனி இன்னொரு வழியாலும் இவ்வுண்மையைக் காட்டுவாம். சிங்கை நகர் வரலாற்றில் சொல்லப்பட்ட அடியார்க்கு நல்லாரையே பாயிரம் பாடியது. பாயிரம் சதகத்துக்கு மேற்கோளாகக் காட்டப்பட்டது. சதகம் உரையாசிரியராய அடியார்க்கு நல்லாரையே பாடியது. எனவே, சதகம், பாயிரம், வரலாறு என்னும் மூன்றினும் சொல்லப்பட்டவர் அவ்வொருவரே. ஆயின், வரலாற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்டவர் அமைச்சர். சதகம் பாடியது உரையாசிரியரை. எனவே அமைச்சரே உரையாசிரியராய் இருந்தார் என்பது விளங்க வில்லையா? எனவே, அப்பாயிரம் அமைச்சரைத்தான் உரையாசிரி யரானபோது பாடினது என்பதும் விளக்கிவிட்டதல்லவா? எனவே, அமைச்சரானமையாற்றான் காவலன் எனப்பட்டார் என்பதும் ஈண்டும் நிரூபணமாய் விட்டதன்றோ? அன்றியும் அவற்றை இன்னொரு முகமாகத் தெளிவுபடுத்திச் சொன்னால், வரலாறு அவர் அமைச்சராய் இருந்த அம்மட்டையும் அறிந்து சொல்லியது. சதகம் அவர் உரையாசிரியர் என்பதை மட்டும் அறிந்து சொல்லி யது. பாயிரம் இவ்விரண்டினையும் அறிந்து அவ்விரண்டின் தன் மையிலும் அவர் இருக்கும்போது சொல்லியது.

விளக்கம் (9) ஒன்பது:-

1. சிங்கை நகரைச் சேர்ந்த அடியார்க்கு நல்லார் வரம்பில் இருந்தவர் (அடியார்க்கு நல்லார் குளம் என்பதால் சுட்டி அழைக்கப் படுகின்றவர்.)

2. சிங்கை நகரத்திற்குக் குணபூஷணனால் வரவழைக்கப் பட்டவர்.

3. குணபூஷணனால் வரவழைக்கப்பட்டு ஏறக்குறைய கி. பி. 1324—1370-ம் ஆண்டுகளுக்கிடையில் சிங்கை நகரில் வாழ்ந்தவர்.

4. காங்கேயன் என்னும் சேனைத்தலைவனோடு வாழ்ந்தவர்.

5. குணபூஷணனுக்கு அமைச்சராய் இருந்தவர்.

6. காங்கேயனால்உரைசொல்லும்படிகேட்கஉரைசொன்னவர்.

7. உரை இயற்றியதைக் குறிப்பிட்டுப் பாடிய பாயிரக்காரரால் நிரம்பையர் காவலன் எனப்பட்டவர்.

8. நிரம்பையில் இருந்து வந்து அமைச்சராய் இருந்தவர்.

9. அவர் வட இலங்கைச் சிங்கைநகரில் நிரம்பையர் என அழைக்கப்பட்டவர்.

10. ஆகையால் நிரம்பையில்இருந்து சிங்கை நகருக்கு வந்தவர்.

11. நிரம்பையர் எனப்பட்டவர் நிரம்பையில் அவதரித்தவர்.

12. நிரம்பையில் அவதரித்தவர்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குருவை யுணர்ந்த இளங்கோ வடிகளுட் கொண்டுசொன்ன,
தருவை நிகரும் சிலப்பதி காரத் தனித்தமிழுக்
கருமை யுரைசெய் யடியார்க்கு நல்லார்" என்று கொங்கு மண்டல சதகத்தால் பாடப்பட்டவர்.

விளக்கம் (10) பத்து:- உரையாசிரியரே அமைச்சர்.

(அதாவது முதலில் உரையாசிரியராகவே வைத்து ஆராய்ந்து செல்வது).

1. நிரம்பையில் அவதரித்தவர்.

2. எங்கோ சென்று வாழ்ந்தவர்.

3. அவ்விடத்தில் காங்கேயன் என்னும் சேனுபதியோடு வாழ்ந்தவர்.

4. அவ்விடத்தில் காவலனுய் இருந்தவர். அதாவது காவலன் என்று சொல்லப்பட்ட அமைச்சரா யிருந்தவர்.

5. காங்கேயன் என்னும் சேனுபதியைச் சந்தித்து அமைச்சரா யிருந்தவர்.

6. குணபூஷணனுல் அழைக்கப்பட்டு அமைச்சராயிருந்தவர்.

7. சேனுபதியாய காங்கேயன் கேட்க அமைச்சராயிருந்து உரை யியற்றி யிட்டவர்.

8. உரை இயற்றியிடப்பட்ட இடத்தினரால் பாடப்பட்ட பாயிரத்தால்,

"சேரன் றெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொருள்
ஆரும் தெரிய விரித்துரைத் தானடி யார்க்குநல்லான்
காரும் தருவு மனையான் நிரம்பையர் காவலனே" என்று பாடப்பட்டவர்.

9. காவலன் என்று அமைச்சரே உபசரித்துக் கூறப்பட்டார் என்றுல் நிரம்பையர் காவலன் என்று பாடப்பட்டவர் நிரம்பையில் இருந்து வந்து இங்கே அமைச்சராய் இருந்தவர் அல்லவா? எனவே, உரை யாசிரியரே அமைச்சராயினுர் என்றறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய உண்மை முடிபுகளை நன்கு விளங்கிக் கொண்ட பின்னர் ஒவ்வோரு இவ்விரு வாக்கியங்களிலும் கூட நிரூபணம் அமைக்கலாம். உதாரணமாக:

விளக்கம் (11) பதினொன்று:- உரையாசிரியர் பெயர் நிரம்பையர் காவலர் அல்லவா? நிரம்பையர் காவலர் என்பது அமைச்சரை என்பது அன்றோ?

விளக்கம் (12) பன்னிரண்டு :- காங்கேயர் கோன் குணபூஷணனது சேனாபதி யல்லவா? குணபூஷணனது சேனாபதி கேட்க உரை சொன்ன அடியார்க்கு நல்லார் அமைச்சராய அடியார்க்கு நல்லார் அல்லவா?

விளக்கம் (13) பதின் மூன்று:- உரைச் சிறப்புப் பாயிரத்தில் குறிப்பிட்டது உரையாசிரியராய அடியார்க்கு நல்லாரை அல்லவா? உரைச் சிறப்புப் பாயிரம் பாடப்பட்ட இடம் சிங்கை நகரமல்லவா? சிங்கை நகரத்தில் பாடப்பட்ட அடியார்க்கு நல்லார் அமைச்சராய அடியார்க்கு நல்லார் அல்லவா?

விளக்கம் (14) பதின் நான்கு:- சிங்கை நகரத்திற்குக் குணபூஷணனால் அழைக்கப்பட்ட அடியார்க்கு நல்லார்தான் நிரம்பையர் காவலர் அல்லவா? ஆனால் அழைக்கப்பட்டவர் பண்டித சிரோமணியான அடியார்க்கு நல்லார் அல்லவா? எனவே, பண்டித சிரோமணியே நிரம்பையர் காவலர் ஆனார் அன்றோ?

*ஆயின், அடியார்க்கு நல்லார் வரலாற்றை முதலிலே கொங்கு மண்டல சதகத்தை முதலாகக் கொண்டு கூறினம். அவ்வாறு கூறுதல் அவர் வரலாற்றை இயைந்து கிடந்த வழியாற்கண்டு கூறிய வாறல்ல வென்பதை முன்னரும் சொற்றும். அவ்வாறு அம்மண்டல சதகத்தை முதலாகக் கொண்டு கூறியது என்னையெனின், அச்சதக வாயிலாக உரையாசிரியராய அடியார்க்கு நல்லாரை அறிந்தார்க்கு அவ்வறிந்ததில் இருந்தே ஏனைய அறியாத பகுதிகளை விளங்குதற் குபகாரமாகும் என்றும் அறியாத பகுதிகளை முதலிலே சிங்கை நகர் வரலாற்றில் இருந்து எடுத்துக் கூறின் அது இவ்வுணர்ச்சி வல்லாரில்லாரிடை ஐயம் விளைக்கக்கூடும் என்றும் கருதிக் கூறியவாறும். உண்மையில் இவ்வடியார்க்கு நல்லார் வாழ்ந்ததும் உத்தியோகம் பார்த்ததும் கல்வி விருத்தி செய்ததும் சிலப்பதிகா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்துக் குறை செய்ததும் செய்வித்த காங்கேயன் வாழ்ந்ததும் இருவரையும் ஆதரித்த அரசன் வாழ்ந்ததும் இலங்கைச் சிங்க நகரமே. (முன்னரும் ஒரு சந்தர்ப்பத்தில் சுட்டினும்.) இவ்வுண்மையை உள்ளகத்தே உணர்ந்து கொண்டு அன்னோர் வாழ்ந்த குறிப்புக்கள் பலவற்றுள் அறுநூறாண்டு வரை எஞ்சி நின்ற அடியார்க்கு நல்லார் வரம்பு, குளம் என்பவற்றைக் கொண்டு அவ்வடியார்க்கு நல்லாரையும் வரலாற்றைக் கொண்டு அவர் அமைச்சர் என்பதையும் அவ் வமைச்சர்மே லெழுந்த சிறப்புப் பாயிரம் நிரம்பையர் காவலன் என்பதால், அவர் நிரம்பையில் இருந்தும் வந்தார் என்பதையும் கொங்குமண்டல சதகம் அவர் அவதரித்த நிரம்பைப் பதி யென்பதால் அவர் நிரம்பையிலே பிறந்தார் என்பதையும் முட்டின்றி முடிக்கலாம் அன்றே. எனவே, வட இலங்கையில் மறைந்த சிங்கை நகரின் புறஎல்லையுள் (இவற்றைச் சிங்கை நகர் என்னும் நூலில் கண்டுகொள்க.) இப்பொழுது இருக்கின்ற நிலத்தாலும், குளத்தாலும் இடவழக்குப் பெற்ற அடியார்க்கு நல்லாரைப்பற்றி ஆராய்ந்து இவ்வாராய்ச்சி அவர்மேற் செல்வதாய் அவர்தான் உரையாசிரியர், அவர்தான் நிரம்பையில் இருந்து வந்தார் என்று கண்டதன்றி இன்னொரு அடியார்க்கு நல்லார் இருந்தாரோ, இல்லையோ, அவரைப்பற்றிய விசாரணை ஈண்டில்லை யென்க. (ஆயின் உண்மையில் இன்னொருவர் இல்லை. இருந்த குறிப்புக்களுமில்லை. இந்நிலங்கள்,குளங்களை இன்னொரு இடத்தில் வைக்கவும் முடியாது. அன்றிப் பதினன்காம் நூற்றூண்டில் அவரைவிட யாரும் யாதொரு குறிப்பும் இல்லை.) இனி இச் சதகப்பாட்டு இல்லாத வழியும் அவர் நிரம்பையில் அவதரித்தார் என்பதையும் காணமுடியும். எவ்வாறெனில் நிரம்பை இலங்கையின் வடபாலு மில்லை. இன்னொரு அடியார்க்கு நல்லார் ஈழத்தும் இல்லை. ஆயின், இங்கே பாடியிடப்பட்ட சிறப்புப் பாயிரத்தில் நிரம்பையர் (காவலர்) எனப்பட்டார் எனின் நிரம்பை கொங்குமண்டலத்துக் குறும்பு நாட்டூர்களில் ஒன்றாக இருக்கின்றதெனின் அவர் இந்தியத் தமிழ்நாட்டில் இருந்தே அழைக்கப்பட்டார் எனின் அவர் நிரம்பையில் இருந்தும் வந்தார் என்பதைக் கண்டு கூறிவிடலாம். ஆயின் அவ்விடத்தில் பிறர்பால் தோன்றும் ஐயங்கள் அவரின் ஏனைய வரலாறுகளைப் பற்றிக் கொங்குமண்டலத்து நிரைம்பையைச் சார்ந்தே தோன்றுமாதலாலும் உரைச் சிறப்புப் பாயிரத்தின், கொங்குமண்டல சதகத்தைச்சார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கை அப்பாயிரம் நிரம்பையில் பாடப்பட்ட தென்று கொள்ளச்செய்யு மாதலாலும் (உடன் பாட்டாலும் எதிர்மறையாலும் சாதித்து இவ்வுண்மையைக் கூறமுடியு மாதலாலும் சிங்கை நகர் வரலாற்றில் கூறப்பட்ட காங்கேயன் மேலும் அடியார்க்கு நல்லார் மேலும் பாடப்பட்ட தென்பதை அப்பாயிரம் ஒட்ட நின்றுணர்த்துவது நன்கு பிறரும் வல்ல உணர்ச்சியான் விளங்க முடியுமாதலாலும்) அச் சதகத்திலிருந்தே முதலில் கூறியிட்டா மென்க.

## 20 உரைச் சிறப்புப் பாயிரம் பாடப்பட்ட இடம் இலங்கைச் சிங்கை நகரம்

முன்னர் அதிகாரங்களில் பெறப்பட்டவைகளை விளங்கினார்க்கு இங்கே விளக்கம் சொல்லவேண்டியதில்லை. ஆயின் இதைத் தனியே விளங்குவார்க்கு விளக்கம் வேண்டும். ஆகையால் அடைப்புக்குள்ளேயும் வெளியேயும் இருபகுதியார்க்குமாகச் சொல்வாம்.

[உரையாசிரியராய அடியார்க்கு நல்லார் காலத்தை மேலே நிச்சயம் செய்துகண்டோம். அதை அறிதற்காக அவர் உரை செய்த சிலப்பதிகார உரைக்கூற்றுக்களை-அதாவது அவர் உரையை ஒருகருவியாக எடுத்துக்கொண்டோம். ஆயின் அவ்வுரை எவ்விடத்தில் செய்யப்பட்டது. அதாவது அடியார்க்கு நல்லார் இவ்வுரையை எவ்விடத்தில் இருந்து செய்தார் என்பதை இனி மேலே அறிவோம். இவ்வாறு அறிவதற்கு மேலே முடிந்த-கண்டு வைத்த முடிபுகளே இவ்வுண்மையைத் தருவதால் அவற்றை மீளவும் சிறிது பொதுமையில் சிந்தித்துக் கொள்ள வேண்டும். கொங்குமண்டலத்து நிரம்பையில் அடியார்க்கு நல்லார் அவதரித்தார் என்று அச்சதகப் பாட்டாலும் அப்பாட்டை அவர் பாடிய ஏனைய பாட்டுக்களோடும் ஒப்பிட்டுப் பார்த்து, உரைச்சிறப்புப் பாயிரத்தில் கூறப்பட்ட அவ்வடியார்க்கு நல்லார் அக்காங்கேயன் என்பவர்கள் அக் கொங்கு மண்டலத்தில் வாழவில்லை என்றும், அக்காங்கேயன் அம் மண்டலத்தில் உரை சொல்லுவிக்கவில்லை என்றும், அங்ஙனமே அடியார்க்கு நல்லாரும் அவ்விடத்தில் உரை சொல்ல இல்லை என்றும், அவ் வாசிரியர் வேண்டுமென்று விலக்கியே அவ்வாறு பாடினர் என்றும், அவ்

வாறு 'அவதரித்த' என்று சதகத்திற் பாடியது பாயிரம் பாடிப் பல நூற்றாண்டுகளின் பின்னரென்றும், அதற்குச் சதகக்காரர் பாயிரத்தையே பின்பற்றிக் கொண்டார் எனவும், பின்னர் நிரம்பையர் காவலர் என்னும் சொல்லாராய்ச்சியால் நிரம்பையர் என்பது ஊரால் வருபெயரெனவும், இது நிரம்பையை விட்டு இன்னொரு நாட்டிற் சென்று அந் நாட்டு மக்களால் அழைக்கப்பட்ட பெயரெனவும், 'காவலன்' என்பது அந் நாட்டிலே அவர்க்குத் தொழிலால் வருபெயராய் அப்பாயிரக்காரரால் மாத்திரம் குறிப்பிட்ட பெயரெனவும், "காற்றைப் பிடித்து" என்னும் அப்பாயிரப் பாட்டால் குறிப்பிடப் பட்ட காங்கேயன் சேனைத் தலைவன் எனவும், அவன் நிரம்பையர் காவலனாகிய அடியார்க்கு நல்லாரைக் கேட்டதால் அவன் கேட்ட இடம் இவர் சென்ற இட மெனவும், அவ்வாறே அடியார்க்கு நல்லார் உரை இயற்றியதும், இவன் இயற்றுவித்ததும் அவ்விடம் எனவும், அவ்விடம் உரைச் சிறப்புப் பாயிரம் பாடப் பட்ட இடமெனவும், அப்பாயிரம் அவ்விடத்து அறிஞர் ஒருவராலேயே பாடப்பட்டதெனவும் மேலே முடிந்த முடிபுகளை ஒன்றையேனும் ஒரு இடத்திலேனும் மறவற்க.]

இனி மேலே செல்வாம். குணபூஷணன் என்னும் அரசன் அடியார்க்கு நல்லார் என்னும் பண்டித சிரோமணியைத் தொண்டை மண்டலம் தவிர்ந்த இந்தியத் தமிழ் நாடொன்றில் இருந்து அழைப்பித்துத் தனக்கு அமைச்சராக வைத்திருந்தான். காங்கேயன் என்னும் சேனாபதியைத் தொண்டை மண்டலத்திலிருந்து அழைத்துத் தனக்குச் சேனைத்தலைவனாக வைத்து இருந்தான் என்பது அச்சிங்கை நகர் வரலாற்றால் கண்ட உண்மை. இவ்வுண்மை சரிவர அறியப்பட்டது. இனி இவ்வுண்மைகளை நிரூபித்துக் காணும் வழிகளில் செல்வாம்.

1. உரையாசிரியர் நிரம்பையில் இருந்து எங்கோ சென்று நிரம்பையர் என்னும் பெயரைப் பெற்றார். அவ்விடத்திலே காவலன் என்னும் பெயரைப் பெற்றார். அப்பெயரைப் பெற்றது வந்த இடத்தில். அப்பெயரைப் பெற்றதல்ல; அப்பெயராற் குறிப்பிட்டது பாயிரம். அப்பாயிரம் பாடப்படுமுன்னர் அவர் அத்தகைய தொழிலை உடையவராய் இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பண்டித சிரோமணியான அடியார்க்கு நல்லார் இந்தியாவில் இருந்து வந்தார். வந்த இடத்தில் அமைச்சராய் இருந்தார். அமைச்சராய் இருந்தவரும் பின் பாடப்படும் பாயிரத்தால் காவலன் எனக் குறிப்பிடப்படலாம் என்பது.

2. உரையாசிரியராய அடியார்க்கு நல்லார், நிரம்பையிலே அவதரிக்காத, வாழாத காங்கேயன் என்னும் சேனபதியைத் தாம் காவலன் என்னும் தொழிலைச் செய்த அவ்விடத்திலே சந்தித்தார்.

2. அமைச்சராய் இருந்த பண்டித சிரோமணியாய அடியார்க்கு நல்லார், தொண்டை மண்டலம் தவிர்ந்த இன்னொரு தமிழ் மண்டலத்தில் இருந்து வந்தார். வந்த இடத்திலேயே காங்கேயன் என்னும் சேனபதியைச் சிங்கைநகரத்தில் அந்நகர் அரசனின் கீழ்ச் சந்தித்தார்.

3. உரையாசிரியர் நிரம்பையில் இருந்து அவ்விடத்துக்கு வந்தார்.

3. அமைச்சராய அடியார்க்கு நல்லார் அந்நிரம்பையையுடைய கொங்கு மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம் இவற்றுள் எம் மண்டலத்தில் இருந்து வந்தார் என்று சிறப்பாகச் சொல்லப்பட வில்லை. ஆயினும் அவர் இந்தியாவில் இருந்து வந்தமையைப் பற்றி மறுப்பில்லை. இந்தியாவில் உள்ள மண்டலம் ஒன்றில் இருந்து வந்தார்.

4. சிறப்புப் பாயிரத்தின்படி காங்கயேன் என்பவன் சந்தித்தது காவலன் என்னும் உரையாசிரியரை.

4. வரலாற்றின்படி காங்கேயன் என்பவன் சந்தித்தது அமைச்சராய அடியார்க்கு நல்லாரை.

5. அப் பாயிரத்தின்படி காவலன் என்னும் அடியார்க்கு நல்லாரை அவர் சென்று வாழ்ந்த இன்னெரு இடத்திலேயே காங்கேயனும் இன்னெரு இடத்தில் இருந்து வந்து சந்தித்தான்.

5. அவ்வாறே இந்தியாவில் ஒரு இடத்தில் இருந்து வந்த அமைச்சராய அடியார்க்கு நல்லாரை அவ்வாறு இன்னெரு இடமான தொண்டைமண்டலத்தில் இருந்து வந்த காங்கேயன் வட இலங்கைச் சிங்கை நகரில் சந்தித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. காவலர் என்னும் அடியார்க்கு நல்லாரைச் சந்தித்த காங்கே யன் ஒரு சேனபதி. அவ்வாறே அமைச்சராய அடியார்க்கு நல்லா ரைச் சந்தித்த காங்கேயனும் ஒரு சேனபதி.

7. பாயிரத்தில் கூறப்பட்டபடி சந்தித்த காங்கேயன் சேனபதி யாய் இருப்பதாலும் சந்திக்கப்பட்ட அடியார்க்கு நல்லார் காவலனாய் இருப்பதாலும் அவர்கள் இருவரும் ஒரு அரசியலில் தொடர்பு பட்டவர்கள்.

8. அவ்வாறே வரலாற்றின்படி அமைச்சராய அடியார்க்கு நல் லாரைச் சந்தித்த காங்கேயன் சேனபதி; அவ்வாறே சந்திக்கப்பட்ட அடியார்க்கு நல்லார் அமைச்சர். ஆகையால் இவர்கள் குணபூஷணன் அரசியலில் தொடர்பு பட்டவர்கள் என்பது மேலே அறியப்பட்டது.

*காங்கேயன் ஒருவன் இருக்கலாம். அவன் சேனபதியாய் இருக்கலாம். அவன் குணபூஷணன் காலத்திலு மிருக்கலாம். ஆயின் அவன் தனது சொந்த இடத்தைவிட்டு இன்னொரு இடத்திற் சென்றவனாய், அவ்விடத்திலே அடியார்க்கு நல்லார் என்னும் அமைச்சனைச் சந்தித்தவனாய், அவரோடு தானும் ஒரு அரசியலில் தொடர்பு பட்டவனாய் இத்தகைய சந்தர்ப்பங்களைப் பெற்ற இன் னொருவன் இப்பாயிரத்தில் பாடப்பட்டவனைவிட அன்றேல் இவ் வரலாற்றிற் குறிப்பிடப்பட்டவனைவிட இன்னொருவன் இருக்கமுடி யாது- அதாவது இல்லை என்றபடி. அவ்வொருவனையே பாயிரத் தால் நோக்கி இத்தகையான் என்று காண்கிறோம். அவ்வொரு வனையே வரலாற்றால் நோக்கி இத்தகையான் என்று காண்கிறோம். வரலாற்றில்கூறப்பட்ட காங்கேயனின் ஒவ்வொரு நுண்குறிப்புக்களை யுமே அப்பாயிரப் பாட்டுப்பாடியது. வரலாற்றில் கூறப்பட்ட காங்கே யனைப்பற்றிய குறிப்புக்களும் பாயிரத்தில் கூறப்பட்ட காங்கேய னைப் பற்றிய குறிப்புக்களும் ஒவ்வொரு அம்சத்திலும் ஒன்றனை ஒன்று ஒத்து, பல்லாற்றானும் அவ்வொருவனையே குறிப்பிட்டதை நமக்குக்காட்டுகின்றன. ஆயின் பாயிரத்தில் கூறப்பட்ட குறிப்புக்க ளும் ஒத்து அவ் வொருவனையே குறிப்பிட்டதென்று அமைந்துவிட வில்லை. அவற்றையும் கடந்து வரலாற்றில் குறிப்பிட்ட காங்கேய னது சந்தர்ப்பத்தையே சந்தர்ப்பமாக அப்பாயிரமும் அப் பாயிரத் தினைப் பின்பற்றிச் சதகமும் கொண்டிருந்ததைக் கண்டவாற்றல் இவ் வுண்மை மேலும் நிச்சயமாம் என்க.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே " காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்துக் கடியபெருங்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமற் காலமெனுங்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கேயர் கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்வித்ததே "

என்னும் இம் மூன்றும் சிறப்புப்பாயிரப் பாட்டுக் குணபூஷண னுக்குச் சேனுபதியாய் இருந்த இக் காங்கேயனையே பாடியது. இனி இப் பாயிரப் பாட்டுக்கள் மூன்று. அவற்றுள் ஒரு பாட்டுத்தான் உரை இயற்றுவித்த இக் காங்கேயனைப் பற்றிப் பாடியது. ஏனை முதலாம் இரண்டாம் பாட்டுக்கள் அவ் வுரையாசிரியராய அடியார்க்கு நல்லாரைப் பற்றிப் பாடியன. இனி அவ்வடியார்க்கு நல்லாரைப் பற்றிப் பாடிய அம் முதலாம் பாட்டாவது:

" பருந்தும் நிழலுமென்னப் பாவும் உரையும்
பொருந்துநெறி யெல்லாப் பொருளும்—தெரிந்திப்
படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்னூல்
அடியார்க்கு நல்லானென் பான் "

என்பது. இப் பாட்டு அடியார்க்கு நல்லாரையும், அவர் உரை செய்த நூலையும் 'பருந்தும் நிழலுமென்னப் பாவும் உரையும் பொருந்த' வென அவர் உரை செய்த முறைமையினையும் பற்றிக் கூறியது, இப் பாட்டில் அவரை இடத்தொடுபடுத்தி அறியக் கூடிய சரித்திரக் குறிப்புக்கள் ஒன்றுமில்லை. முன்னர் நிரம்பையில் உரை செய்யவில்லை என்று பெறப்பட்டதால், நிரம்பை தவிர்ந்த எவ்விடத்திலும் அவர் இவ்வாறு பாடப்பெறலாம். எவ்விடத்தாரும் அவரை இவ்வாறு பாடலாம். என்னையெனில், செய்தவர் பெயரையும், செய்த நூலினையும், செய்த முறைமையினையும் சொல்லியிருப்பதால் என்க. ஆயின் இது அம் மூன்றும் பாட்டான காங்கேயனைப்பற்றிக் கூறிய பாட்டை அடுத்து முதலாம் பாட்டாக இருப்பதால் இதுவும் இங்கே (இலங்கைச் சிங்கையில்) பாடப்பட்டதாய் இவ் வமைச்சராய அடியார்க்கு நல்லாரையே குறித்துப் பாடப்பட்டதென்பது நன்கு காணப்படும். ஆயின், அவ் விரண்டினையும் அடுத்து இடையே கூறிய அவ்விரண்டாம்பாட்டால் இதுவும் இவ் வமைச்சரையே கூறிற்று என்பது நன்கு காட்டப்படும். அப் பாட்டாவது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஒரும் தமிழொரு மூன்று முலகின் புறவகுத்துச்
சேரன் றெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்த பொருள்
ஆரும் தெரிய விரித்துரைத் தானடி யார்க்கு நல்லான்
காரும் தருவு மனையான் நிரம்பையர் காவலனே "

என்பது. இப்பாட்டால் "விரித்துரைத்தானடியார்க்கு நல்லான்" என அவ்வடியார்க்கு நல்லாரைக் கூறி இருத்தல் காண்க. மேற்பாட்டில் அவ்வடியார்க்கு நல்லாரை " படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தானன்றால், அடியார்க்கு நல்லா" னெனக் கூறி இருத்தல் காண்க. இவ்விரண்டு பாட்டும் அவ்வொரு அடியார்க்கு நல்லாரைப் பற்றியே கூறியது. மேலே காட்டிய முதலாம்பாட்டு உரைசெய்தவரையும், உரை செய்த நூலையும், உரை செய்த முறைமையினையும் பற்றிக் கூறியது என்றும். அவ் விரண்டாம்பாட்டு அவ் வுரை செய்த அடியார்க்கு நல்லார் இத்தகையார் என்று மாத்திரம் கூற எழுந்தது. அதாவது முதலாம் பாட்டு உரை செய்த வரலாற்றைச் சொல்ல எழுந்தது. இவ் விரண்டாம் பாட்டு இவ்வுரை செய்த அடியார்க்கு நல்லாரைப் பற்றிச் சொல்ல எழுந்தது. இவ்விரண்டாம் பாட்டுத்தான் சிறப்பாக நின்று நிரம்பையில் அடியார்க்கு நல்லார்க்குச் சிறப்புப்பாயிரம் பாடப்பட்டிருக்கமுடியாது என்றும், அது இன்னொரு இடமாகிய இலங்கைச் சிங்கை நகரிற் பாடப்பட்டதென்றும் காட்டுகின்றது. எனவே, இவ்வுரைச்சிறப்புப்பாயிர மூன்றும் பாட்டு இக் குணபூஷணனின் சேனைத் தலைவனும் இருந்த காங்கேயனையும், இம் முதலாம்பாட்டு அவ் வுரையாசிரியர் அடியார்க்கு நல்லார் உரைசெய்த முறைமையினையும், அவ்விரண்டாம் பாட்டு அவ்வுரை செய்த அடியார்க்கு நல்லார் " காரும் தருவு மனையான் நிரம்பையர் காவலனே " என்று அவர் தகைமைபற்றிப் பாடியிட்டது என்றும் அறிந்திடுக. இனி, இன்னும் இப் பாக்களால் காணப்படும் நுட்பமான பகுதிகளுக்குச் செல்வாம்: சிறப்புப்பாயிரம் இரண்டாம் பாட்டால் " நிரம்பையர் காவலனே " என வன்றோ அவ்வுரையாசிரியராய அடியார்க்கு நல்லார் அழைக்கப்பட்டார். குணபூஷணன் அழைத்ததும் மெய், பண்டித சிரோமணியாய அடியார்க்கு நல்லார் ஒருவர் வந்ததும் மெய். வந்தவர் இலங்கைச் சிங்கை நகரிற் பாயிரம் பாடப்பட்டபோது அப் பாயிரக்காரரால் நிரம்பையர் எனப்பட்டார். எனவே, வந்தவர் நிரம்பையில் இருந்து வந்தார். எனவே, குணபூஷணன் நிரம்பையில் இருந்த அடியார்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாரையே (அதாவது அப்பண்டித சிரோமணியை நிரம்பையில் இருந்தே) அழைத்தான். அவர் நிரம்பையில் பிறந்து இன்னோர் இடத்தில் வாழ்ந்து நிரம்பையர் என்னும் பெயரைப் பெற்ற இடம் இலங்கைச் சிங்கை நகரம். எனவே, கொங்குமண்டலத்துள்ள நிரம்பை என்னும் ஊரில் பிறந்தவராய், பண்டித சிரோமணியாய் விளங்கியவராய், குணபூஷணனால் பின்னர் அழைக்கப்பட்டு அவனுக்கு மந்திரியாய் இருந்த அடியார்க்கு நல்லாரே இவ்வுரை யாசிரியர் என்க.

இனி, நிரம்பையர் என அவர் அழைக்கப்பட்ட இடம் இலங்கைச் சிங்க நகரமெனவே சிங்கை நகர்க்கு அவர் நிரம்பையிலிருந்து வந்தார் எனவே வந்த காரணம் குணபூஷணனால் அழைக்கப்பட்டமையே. எனவே, நிரம்பையில் பிறந்தவர் நிரம்பையில் வாழாமல் குணபூஷணனால் அழைக்கப்பட்டு இலங்கைச் சிங்கைநகரில் அமைச்சராய் வாழ்ந்தார் என்க. இனி இன்னொரு நிரூபணத்தாலும் இதை வலி உறுத்துவாம். நிரம்பையில் காவலர் என்பது இவ்வமைச்சர் எனவே இவரை உரைசெய்து தரும்படி கேட்டுக் கொண்ட காங்கேயன் அக் குணபூஷணனது சேனபதியாய காங்கேயன் என்பவன் ஆவான். எனவே, அப்பாயிரத்தில் பொப்பண்ண காங்கேயன் என்றது இச்சேனபதியாய காங்கேயனை. இதனால் பொப்பண்ணன் இயற் பெயர், காங்கேயன் பட்டப் பெயர் கோன் என்பது அப்பாயிரக் காரரால் அவன் தலைவன் என்று பாராட்டிப் பாடப்பட்ட பெயர் என்றறிக. இனி, இச்சேனபதியாய காங்கேயன் கேட்டானெனவே செய்த நிரம்பையர் காவலர் என்பது (செய்தவர் அமைச்சர் என்பது முன்னர் அறியப்பட்டு விட்டாலும் இந்நிரூபண இடத்தில் அதை மறந்து விடுவாம்.) இவ்வமைச்சராய இவ்வடியார்க்கு நல்லாரையே என்க. கேட்டவன் குணபூஷணனது சேனபதியாய காங்கேயன். செய்தவர் அவன்றன் அமைச்சராய அடியார்க்கு நல்லார் எனவே, செய்த இடம் அவர் தாம் அரசிருந்த இலங்கைச் சிங்கைநகரம் என்க. சிங்கை நகரத்துள்ள அமைச்சராய அடியார்க்கு நல்லார் உரைசெய்தார். காங்கேயன் உரையைச் செய்வித்தான். இவ்வாறு இவ்வுரை செய்த வரலாற்றையும் இவ்வுரை செய்தவரையும் அவ்வாறு செய்வித்தவரையும் குறித்தே இப்பாயிரம் பாடப்பட்டதெனின் இப்பாயிரம் பாடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட இடம் இலங்கைச் சிங்கைநகரம் என்க. எனவே, சேனுபதியாகிய காங்கேயனைப்பற்றிக் கூறியதால் அம்மூன்றும் பாட்டும் அமைச்சராய உரையாசிரியரைப் பற்றியும் அவர் உரைசெய்த முறையினைப் பற்றியும் கூறும் அவ்விரண்டாம் முதலாம் பாட்டுக்களும் இச்சிங்கை நகரிலே பாடப்பட்டவைகளாம் என்றறிந்து கொள்க.

சிலப்பதிகார உரைச் சிறப்புப்பாயிரப் பாக்கள் மூன்றையும் நோக்குவார்க்கு அப்பாக்கள் இக்குணபூஷணனது அவைக்களனையே நிலைக்களனுகக் கொண்டு இவ்வவைக் களனில் உள்ள அமைச்சராய அடியார்க்கு நல்லாரையும் சேனுபதியாய காங்கேயர் கோனையும் அவர்களது குணம், செயல், வரலாற்றுக் குறிப்புக்களையும் சுட்டி உரைப்பனவாய் அவற்றைத் தம்மகத்தே அடக்கி வைத்துக்கொண்டிருக்கின்றன என்பதுதான் தெற்றெனத் தேற்றமாகும்.

## 21. "காருந் தருவு மனையான்."

இப்பாயிரக்காரரால் பாடியிட்ட "காரும் தருவுமனையான் நிரம்பையர் காவலனே" என்னும் இவ்வடி பெரியதொரு பொருள்தரும் மந்திர சூத்திரமாய் நின்று இவ்வாராய்ச்சிக்குப் பெரும் உதவி புரிகின்றது. இதனுள் ஈண்டிவர் பெற்ற "காருந் தருவு மனையான்" என்னும் அடைச் சிறப்பைப் பற்றிக் காண்பாம். இவ்வுரையைச் செய்ய முன் இவ்வமைச்சர் பண்டித சிரோமணியென அழைக்கப்பட்டார். ஆயின் அவர் உரைசெய்தபின் அவரைப் பாடவந்த பாயிரக்காரர் இவ்வாறு இவருக் கடைகொடுத்துக் கூறுதலின் இப்பாயிரக்காரர் கல்வியால் அவருக்கிருந்த சிறப்பினும் இவ்வமைச்சராம் தன்மை உடைமையான் அவருக்கிருந்த சிறப்பே பெரிதென்று கருதிக் கூறியிட்டார் என்றவாறு. அன்றியும் இது அவ்வுரைசெய்த அடியார்க்கு நல்லார் யாரெனின் "காருந் தருவு மனையான் நிரம்பையர் காவலனே" என அவரது இன்னெரு பெயராய் விளக்கம் பெற்ற நிரம்பையர் காவலன் என்பதோடு சார்த்திச் சொல்ல எழுந்தது மென்க. அதாவது கல்வித் தொடர்பால் சுட்டி அத்தொடர்பால் அடியார்க்கு நல்லாரை விளக்குவதினும் அவர் அமைச்சராயிருந்து பிற நாட்டில் விளக்கம் பெற்ற நிரம்பையர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(காவலர்) என்பதனோடு சார்த்தி உரைக்கின் அவர் விளக்கம் இன்னுங்கூட விளங்குமென்று அப்பாயிரக்காரர் கருதினர் என்றவாறு. எனவே, அடியார்க்கு நல்லார் சென்று வாழ்ந்த அவ்விடத்தில் கல்வியால் பெற்ற சிறப்பினும் அமைச்சராய் இருந்த சிறப்பே பெரிதாய் இருந்ததென்க. அன்றியும் "பருந்தும் நிழலுமென்ன" என்னும் அம் முதலாம் பாட்டிலேனும் "ஒருந் தமிழொரு மூன்று" மென அவ்விரண்டாம் பாட்டிலேனும் இவ்வுரை செய்தவர் எத்தகையார்? என்ன பெருமையை யுடையவர்? என்று அவரைப் பற்றி அறிதற்கோ, அவரைப்பற்றிச் சிறப்பித்தற்கோ கூறிய பகுதி "காரும் தருவு மனையான் நிரம்பையர் காவலனே" என்னும் இவ்வளவும் தான் ஏனைய மேலே கூறியவாறு நூலின் பெயர், நூற்குரை செய்தவர் பெயர், நூலுக்குரை செய்த முறைமை என்பன. அன்றியும் பாயிரம் பாடும் பொழுதும் இவர் நிலையை அறிதற்குள்ளதான முக்கிய வரலாற்றுக் குறிப்பும் இப்பாயிரப் பாக்களின் இவ்வொரு அடியே தான் என்க.

இனிக் காவலன் என்பது அரசன் என்னும் பொருட்டாதலின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், காவலனாக - அதாவது அரசனாக இருந்தார் என்னல் வேண்டுமெனின் அற்றன்று. அமைச்சராயிருந்தாரன்றி அரசனாய் இருக்கவில்லை. பின்னை அமைச்சனை அரசனென்று கூறுதல் எவ்வாறு பொருந்துமெனின், இவ்வாறு கூறியது அடியார்க்கு நல்லாரைச் சிறப்பித்துக் கூறிய சிறப்புப்பாயிரமாதலினாலும், சிறப்புப் பாயிரம் அவரது குணம் செயல் என்பனவற்றை ஒவ்வோர் இயைபும் தொடர்பும் பற்றிக் கூறவல்லதாதலினாலும் அன்றியும் அவ்வாறே சிற்றரசனைப் பேரரசன் என்றும், சிறுநில மன்னனைப் பெருநில மன்னனென்றும், சிறுபுலவனைப் பெரும்புலவன் என்றும் பேச்சுவழக்கிலன்றிச் செய்யுள் வழக்கிலும் சில சில சந்தர்ப்பங்களில் ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு உபசாரமாகவும் முகமனுக்காகவும் சிலரைச் சிலர் பாடி இருத்தலைக் காண்கின்றோம் ஆதலினாலும் என்க. அன்றியும் அவ்வாறே திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைக் காழியர் காவலனென அவர் காவலனாக இல்லாமலே இருப்பவும் காவலனெனச் சுட்டிக் கூறப்பட்டிருத்தல் முன்னர் காண்க. எனவே, நேர் பொருளாய்க் காவலன் என்பதற்கேற்க அவர் அரசனாய் இருக்கவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையெனவும் அரசனை ஒப்ப அமைச்சராகவே இருந்தாரெனவும் இவ் வுண்மையைச் சுட்டியே சிறப்புப்பாயிரக்காரர் காவலனெனப் பாடியிட்டார் எனவும் ஐயமறத் தெளிந்திடுக. (முன்பின் கூறிய இவ் வுண்மைகளேயும் காண்க.)

எனவே, இவ்வுரையாசிரியர் (1) குணபூஷணன் காலத்தவராய் (2) இன்னொரு நாட்டிற்சென்று வாழ்ந்தவராய் (3) அந்த இடத்தில் ஒரு அரசியலில் தொடர்பு பட்டவராய் (4) அதனுள்ளும் அமைச் சுத்தியோகம் உடையவராய் இருந்தவர் என்பது நன்கு அறியப் படுகின்றது. இனிக் குணபூஷணன் காலத்தில் இவ்வாறு இருந்த வர் எனவே, அது அக்குணபூஷணனுக்கு அமைச்சரா யிருந்த அடியார்க்கு நல்லார்தான் என்பதும் அறியப்படும். என்னேயெனில் இவ்வமைச்சர் காலமும் இவ் வரசர் காலமும் ஒன்றுதலானும் இவ் வமைச்சரும் கொங்குநாட்டில் இருந்து வந்தவராதலினானும் அங் ஙனம் வந்தவர்க்கு இலங்கைச் சிங்கை நகர் பிற நாடாயிருத்தலி னானுமென்க.

## 22. உரையின் வரலாறு

"கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கேயர் கோன ளித்த சோற்றுச் செருக்கல்லவோ தமிழ்மூன்றுரை சொல்வித் ததே" என்பது பாயிரம். இதனுற் காங்கேயர்கோன் உரை செய் யச் சொல்லுவித்தான் என்பதும், அடியார்க்கு நல்லார் சொன்னூர் என்பதும் பெறப்படுகின்றன. எனவே, ஈண்டிதனுல் காங்கேயன் உரையைச் சொல்லுவித்த ஏவுதற் கருத்தா என்பதும், அடியார்க்கு நல்லார் அவ்வாறு சொன்ன இயற்றுதற் கருத்தா என்பதும் போத ரும். ஆயின், அடியார்க்கு நல்லார் தமது உரைப்பாயிரத்தில் "எழுத்தின் றிறனறிந்தோ இன்சொற் பொருளின், அழுத்தம் தனி லொன் றறிந்தோ-முழுத்தும் பழுதற்ற முத்தமிழின் பாடற் குரை யின் றெழுதத் துணிவதே யான்" என்று கூறுவதால் இவ்வுரையை எழுதியிட்டார் என்றன்றே பெறப்படுகின்றது. எனவே, புறச் சான்றான பாயிரக்காரரின் கூற்றின்படி அடியார்க்கு நல்லார் உரை சொன்னூர் என்றும், காங்கேயன் சொல்லுவித்தானென்றும் அவர் தம் கூற்றான அகச்சான்றால் "உரையின் றெழுதத் துணிவதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான்" என்பதால் அவ்வாறு சொன்னவரல்ல, எழுதினவர் என்று மன்றோ பெறப்படுகின்றது. இஃதென்னை சொன்னார் என்றாலும் எழுதினார் என்றாலும் பொருள் ஒன்றுமாறு இல்லையோவெனின் வாய்க்கருவியாக நிகழும் சொல்லுதன்வினையும் கைக்கருவியாகச் செய்யும் எழுதுதன் வினையுமொன்றுமாறு எங்ஙனம்? சொல்லுத லானே தோன்றும் பொருள் அங்ஙனம் சொல்லும்போதிருக்கு மவர்க்கே-அச் சொல்லொலி கேட்கும் அவர்க்கே மட்டும் புலப்பா டாய் வருவது. எழுதியிடுவதினாலே உண்டாம் பொருள் ஒப்ப உட னிருந்தாரன்றிப் பின் உள்ளார் எல்லார்க்கும் எப்பொழுதும் கிடைக்கப்பெறுவது. எனவே, இவ் வுரை அப் பாயிரக்காரர் கூறிய வாறு சொல்லப் பட்டதென்போமா? அந் நல்லார் கூறியவாறு எழுதப்பட்டதென்போமா? இவ் விசாரணைக்கு இன்னும் அப்பாலே போவோம்.

"இச் சொல்லப்பட்ட ஐந்திணையின் முதல் கரு உரிப் பொருளும் பிறவுமாகிய அகத்திணைப் பொருட்பயன் உடம்பொடு புணர்த்தி உணர்த்திப் புறத்திணைப் பொருட்பயனும் பிறவுமிவ்வாறு உடம்பொடு புணர்த்தி யுணர்த்துங்காற் புனைந்துரைக்கப்பட்டுக் கேட்போர்க்கு இன்பம் பயவாது உணர்வு சலிக்குமாகலின் வந்தன வந்துழிக் காட்டுதலைக் கருதிற்று இவ்வுரையென்க." இதிற் கேட் போர்க்கு என்பதால் இவ் வுரையைச் சொல்லியே விரித்தார் என் பதாம். "அடியார்க்கு நல்லார் உரை முதலில் இருந்து வழக்குரை காதை வரையுமே உள்ளது. மேற்கூறிய அரும்பதவுரையை அது பெரும்பாலும் தழுவியும் சிறுபான்மை மறுத்தும் சில இடத்துப் பத உரையாயும் சில இடத்துப் பொழிப் புரையாயும் எழுதப்பட் டுச் சொன்னயம் பொருணயங்களை இனிது புலப்படுத்தி உரிய இடங்களில் இயற்றமிழ்ப் பகுதியாகிய ஐந்திலக்கணங்களையும் இசைத் தமிழ், நாடகத் தமிழின் பகுதிகளையும், பலநூல் மேற் கோள் முகமாக நன்கு விளக்கும் விசேடவுரையோடுகூடி மிக விரி வாக அமைந்துள்ளது. இவ் வுரையில் இக்காலத்து விசேடித்து வழங்காத இசைத் தமிழ், நாடகத் தமிழ் இலக்கணங்களும் அவற் றுக் குரிய சூத்திரங்களும் பரிபாஷைகளும் இன்னும் வேறும் பல வும் நிறைந்திருக்கின்றன' (சில. முக. பக். 11) என்னும் இப் பகு தியாலும் இவ் வுரை சொல்லப்பட்டே வந்திருக்கின்றது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுகின்றது. என்னையெனில் எல்லாக் காதையும் ஒரேமாதிரி உரைசெய்யப்பெறுமல் சில பதவுரையாயும், சில பொழிப் புரையாயும், சில விசேட உரையாயும் விகற்பம் பெற்று இருத்தற்குக் காரணம் காலத்துக்குக் காலம் ஒவ்வொன்றுகச் சொல்லப்பட்டவைகளாகும். ஆகையாற்றுன் வழக்குரை காதை வரையும் உள்ளது. முறையாக எழுதப்பட்ட ஒரு உரையானல் ஒரேமாதிரியாய் அவ்வுரை இருத்தலோடு முழுதுக்கும் இருக்கவே செய்யும்.

அன்றியும் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் இவ்வுரைச் சிறப்புப்பாயிரப் பாக்களைப்பற்றிக் குறிப்பிட்டபோது இவை "ஒவ்வோர் உறுப்பின் உரை யிறுதியிலும் இருந்தன" என்றதும் இதை வலியுறுத்தும். இவை இவ்வாற்றுல் ஒவ்வொரு கதையாக - ஒவ்வோர் உறுப்பாக உரை சொல்லப்பட்டு, அதனை முடித்து அதற்குப் பாயிரம் பாடிப் பின் அடுத்த கதையை உரைசொல்லத் தொடங்கி அதனை முடித்து அதற்கும் பாயிரம் பாடி இவ்வாறே ஒவ்வொன்றுகச் சொல்லப் பட்டனவன்றிக் கால இடையீடும் பெற்றுச் சொல்லப்பட்டன என்பதில் யாதும் ஐயமில்லை. "இவருடைய உரைநடை சிற்சில இடத்து எதுகை மோனை முதலியவற்றேடு கூடி இனிய சுவை பயந்து செய்யுள் நடையாக அமைந்துள்ளது." "ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே படிப்போர்க்கு அவ்வப் பகுதி ஆங்காங்குள்ள உரையாலே புலப்பட வேண்டும் என்பது இவருடைய கருத்தாதலால் முன் எழுதியவற்றையே பின்னும் எழுதுவர். இவர் கருத்து இன்னதாதலை இப்புத்தகத்தின் கூ-அகூ-ம் பக்கம் முதலிய வற்றில் காண்க" என டாக்டர் ஐயரவர்களும் குறிப்பிட்டனர். (சிலப்-வரலாறு.பக்.20)ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே படிப்போர்க்கு அவ்வப்பகுதி ஆங்காங்குள்ள உரையாலே புலப்பட வேண்டுமென்பது இவருடைய கருத்தென்பதுண்மை, என்னை யெனில் இக்காலத்திலே உள்ள கோட்டங்களில் புராணங்கள் படிக்கப்பட்டு வருதல்போல இதுவுமொரு கண்ணகி கோட்டத்திலே வைத்து உரை சொல்லப்பட்டதால் என்க. ஒரு கதையைக் கேட்டவர் அடுத்த இன்னெரு கதையைக் கேட்க இயையாமல் (வாரமல்) போகவும் கூடும். அதாவது முன்னர் வந்து உரை கேட்டார் பின்னர் வாராமலும் பின் வந்தவர் முன்னர் வராமல் இருக்கவும் கூடுமென்று கருதி அவ்வப் பகுதிக்கு அவ்வப்பகுதியிலேயே உரை சொன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்க. "தலைப்பாட்டாவது உகம்; இடைப்பாட்டாவது ஒளகம். இவர் கூட்டக் கூத்தியர். இவையெல்லாம் முன்னம் அரங்கேற்றுக் காதை முதலியவற்றுள் விரித்துக் கூறின வாதலின் ஈண்டு விரித்துக்கூறல், கூறியது கூறல் என்னும் குற்றமாமெனின் ஒக்கும். ஆண்டுக்கூறிய அடிகளே ஈண்டுக் கூறுதலானும் இக்காதை ஒன்றனையுமே கற்றுணர்வார்க்குப் புலப்பட வேண்டுதலானும் ஈண்டும் விரித்துரைக்கப் பட்டன." (சில-ஊர் காண் காதை-பக்கம் ருஅரு) என அவரே கூறியதையும் கண்டுகொள்க. இக்காதை ஒன்றனையே கற்றுணர்வார்க்குப் புலப்படவேண்டு தலானும் என்னும் கூற்றை யோர்க. கற்றுணர்தல் என்பது ஈண்டுச் செவிவாயிலாகக் கேட்டுணர்தலே அன்றியும், "இனி, இசை நாடகத் தமிழ் நூலது பகுதியும் இவை போலப் பெருவழக்கன்றாதலானும், நிலத்தோடும், காலத்தோடும், கண்டத்தோடும், கருவியோடும், நிலையோடும், இயக்கத்தோடும், இருவகை பலவகை விலக்குறுப்புக் கை கால் வட்டணை பொருள் யோனி விருத்தி சந்தி சுவை சாதி குறிப்பு சத்துவம் அவிநயம் சொல் சொல்வகை வண்ணம் வரி சேதம் என்பனவற்றோடும் கதையோடும் பல கூத்துக் கூறுங்கால் உய்த்துணர் வில்லோர்க்குச் செவிச் சுவை பயக்கு மாதலானும் ஈண்டு விரியாது விரித்தலைக் கருதிற்று இவ்வுரை யெனக் கொள்க" (சிலப். பக். 19) என்பவற்றால் இவ்வுண்மை மிக நுண்ணியதாய் அறியப்படும். ஈண்டுய்த் துணர்வில்லோர்க்குச் செவிச் சுவை பயக்கு மென்பது என்னை? எத்துணை அன்றி எத்தகைய இசை நாடகப் பகுதியேனும் ஏட்டு வடிவத்தில் எழுதிக்காட்டின் அவை செவிக்குச் சுவை பயந்து காட்டுமா? இல்லையே. பின் என்னை? செவிவாயிலாகக் (கருவியாகக்) கேட்பார்க்கு அவர் உய்த்துணர் வில்லாராயின் மேற்கூறிய பல கூத்துக் கூறுங்கால் அவை செவிச் சுவை மட்டுமே பயந்து நிற்கும் என்று கூறினர் என்ற வாறு. எனவே, இவர்தம் உரையைச் செவி வாயிலாக மக்கட்குணர்த்தினர் என்பது நிச்சயமாயிற்று. அதாவது எல்லோரும் கேட்க உரை சொன்னர் என்றவாறு. ஆகையாற்றான் ஒருவகையில் அம்முறை பற்றிச் சொல்ல வேண்டி இருத்தலான் "விரியாது விரித்தலைக் கருதிற்று இவ்வுரை" என்று கூறினர் என்ற வாறு. எனவே, இவர் பின்னும் முன்னும் கற்போர் கேட்போர் என்று கூறுவதெல்லாம் இச்செவி வாயிலாகக் கற்போரையும் கேட்போரையுமா

மென்க. அன்றியும் இவர் தம் உரையகத்தே யாண்டேனும் இவ்வுரையைத் தாம் இயற்றி யிட்டது, செய்திட்டது என்று வெளிப்படையாயேனும் தெளிவாய் அக்குறிப்புத் தோன்ற வேனும் கூறுமையானும் இவ்வுண்மை நன்கு உணரப்படும். இனி அடியார்க்கு நல்லார் உரையைச் சொல்லினர், அவர் முன்னிலை அகத்திருந்தோர் அவ்வுரையைக் கேட்டனர், ஆயின் அவ்வுரையும் அவ்வளவான் சத்தமாத்திரையான் நின்று அப்பொழுதே மறைந்திருத்தல் வேண்டுமே. அவ்வாறின்றி ஈண்டும் எழுத்துருப்பெற்று வழங்கக் காண்கின்றமையின் அவ்வுரை அவரால் எழுதப்பட்டன்றோ இருக்கின்றதெனின், அஃதுண்மையே. ஆயின் அது முதலிற் சொல்லப்பட்டது. "அடியார்க்கு நல்லார் உரை முதலிலிருந்து வழக்குரைக் காதை வரையுமே உள்ளது." ஆதலால் அவ்வளவுக்குமே முதலில் அவர் சொல்லி வந்திருத்தல் வேண்டும். (அன்றி முழுதுக்குமெனினும் இழுக்கில்லை; அவை எவ்வாற்றாலோ கிடையாமலும் இருக்கலாம்.) கண்ணகி வணக்கத்துக்காகச் சொல்லப்பட்டாலும் அவ்வுரைச் சிறப்பினாலும், அவர் தம் கல்விச் சிறப்பினாலும், கல்வி விருத்திக்காகவே வந்தவராதலினாலும் அக் கல்வி விருத்திக்காக அவரை உரை எழுதும்படி (அவரினும் மதிக்கத்தக்க) அம் மன்னனே, அவன்றன் ஆணைவழிக் காங்கேயன் என்னும் சேனபதியோ கேட்டுக்கொண்டான். ஆகையாற்றான் அவரும் மறுக்கலாற்றாராய்,

"எழுத்தின் திறனறிந்தோ வின்சொற் பொருளி
னழுத்தந் தனிலொன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின்
றெழுதத் துணிவதே யான்" (சில-பக். 11) என அவ்வாறெழு

தச் சொன்ன அச்செயலுக்கு விடையிறுப்பார்போன்று இன்று எழுதத் துணிந்ததையும் புலப்படுத்திக் குறிப்பெச்சமாக முன்னர்ச் சொல்லத் துணிந்ததையும் புலப்படுத்தி, அவை அடக்கமாய் முழுதும் பழுதற்ற முத்தமிழின் பாடற்கு 'எழுத்தின் திறனறிந்தோ இன்சொற் பொருளினழுத்தம் தனிலொன் றறிந்தோ' யான் இன்று உரை எழுதத்துணிவது (துணிவதே என்பதில் ஏகாரம் எதிர்மறைப் பொருட்டு அவ்வாறே ஓகாரங்களும் எதிர்மறையில் வந்தன) என்று வெளிப்படுப்பா ராயினர். அடியார்க்கு நல்லார் தாம் உரை சொல்லுவதற்குத் தகுதிப்பா டுடையவரேனும் இவ்வாறு எழுதத் துணிவதற்கு ஆம் தகுதிப்பாடு தம் பால் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தோன்றவே இப்பாட்டை இவ்வாறு பாடி இட்டார் என்பது அப்பாட்டின் பல இடங்களிலும் தொனிக்கின்றன. அன்றியு மவன் சொல்லும்படி கேட்டுக்கொண்டதை நோக்கியே இப்பாட்டை இவ்வாறு பாடி இட்டார் எனின் அவர் அப்பாட்டில் சொல்லத்துணிவதே, என்றேனும் சொல்லின் திறனறிந்தோ என்றேனும் கூறி இருப்பரன்றோ. அவ்வாறு இல்லாமல் எழுதத் துணிவதை நோக்கித் தான் எழுதத் துணிவதோ! எழுத்தின் திறனறிந்தோ என்று கூறினார் என்க. அன்றியும் காங்கேயன் "தமிழ் மூன்றுரை சொல்லுவித்ததே" என்று அச்சிறப்புப் பாயிரக்காரர் செப்பினதால், இவர் சொன்னதை யன்றோ அப்பாட்டுக் குறிப்பிட்டது. இவரும் எழுதத்துணிவதே என்னும் குறிப்பெச்சத்தால் முன்னர் அவ்வாறு சொல்லத் துணிந்ததையும் தான் இப்பாட்டில் குறிப்பிட்டார் என்றறிக. அற்றன்று,இப்பாட்டை இவர் அவ்வாறு காங்கேயன் சொல்லும்படி சொன்னதைக் கருதித்தான் இவ்வாறு உரைத்திட்டார் எனின் காங்கேயனும் எழுத்தின் திறத்தினால் எழுதித் தரும்படி கேட்கவில்லையே. அவனைப்பாடிய பாயிரக்காரர் அவன் உரை இயற்றுவித்ததே, உரை செய்வித்ததே, உரை எழுதுவித்ததே என்றாற் போலும் பாடாமல், உரை சொல்லுவித்ததே என்றன்றோ பாடி இருக்கின்றனர். எனவே, முன்னொரு நோக்கத்துக்காக உரை சொல்லப் பட்ட அச்சிலப்பதிகார உரை அவ்வடியார்க்கு நல்லாரால் பின்னொரு நோக்கத்தாலும் பின் ஒருவர் தூண்டுதலாலும் உரை எழுதப்பட்டதென்றறிக. முன்னர் உரை சொல்லியவரே பின்னர் உரை எழுத எடுத்துக்கொண்டதால் முன்னர்ச் சொல்லுவதற்கு எடுத்துக் கொண்ட எழுதியிட்ட குறிப்புக்களையே எழுத்து முறைமைக் கேற்க மாற்றம் செய்து அவ்வுரையை எழுதி முடித்திட்டார் என்க. இவர் தம் சிலப்பதிகார உரையை நுட்பமாக ஆராயின் சில பகுதி சொல்லிய முறைமைக் கேற்பவும் சிலபகுதி எழுதிய முறைமைக் கேற்பவும் இருப்பதை அறியலாம். இனி, "தேவ விருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணக்கர் பன்னிருவருள்......இசையறிதற்குச் செய்த இசை நுணுக்கமும்........மதிவாணனார் நாடகத் தமிழ்நூலுமென இவ்வைந்தும் நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்கள் அன்றேனும் ஒரு புடை யொப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக் கொள்க." என உரை முடித்தலைக் குறிப்பிட்டுக் கூறிய பகுதிகள், அவர் உரை எழுத எடுத்துக்கொண்ட

பின் உரையைப்பற்றிக் குறிப்பிட்டவைகளாம். இவ்வாற்றால் அவ்வுரை எழுத எடுத்துக் கொண்டதும் புலப்படுகின்றது. அன்றியும் அது 'கட்டுரை காதையில் விளங்க வுரைக்கப்படும்." (சில. பதிக. பக். 24) "கானல் வரியில் விரியக் கூறுதும்' (பக். அஅ- ௯00) என்றும் "முன்னர் ஆணி என்பதனுட் கூறினும்' என்றும் (பக். ௨௬௬) 'அழற்படு காதைக்கண்ணே விரித்துக் கூறுதும்' என்றும் (பக். ௧௧௯) கட்டுரை காதையுள் விரியக் கூறுவாம். (பக். ௨௬௭) என்றும் கூறும் இப்பகுதிகளும் உரை எழுத எடுத்துக் கொண்டபின் அவ்வவ் விடங்களில் கூறியிட்டவையாம். கூறுதும் என்பது சொல்வாம் என்னும் பொருட்டன்றோ? அவ்வாறாயின் அடியார்க்கு நல்லாரின் இவ்வுரை யகத்தே கூறுவாம், சொல்வாம் என்னும் சொற்கள் காணப்படின் அவ்வுரை நியதியாகவே எழுதப் படவில்லை என்று மறுப்பதல்ல. எழுதும் முறையிலும் அத்தகைய சொற்களை எடுத்தாண்டு எழுதலாம். சொல்லும் முறைமையிலும் அத்தகைய சொற்களை எடுத்தாளலாம். அவை மேல்வரும் நியாயங்களாலேயே நிச்சயம் செய்யப்படும் என்பது. அன்றியும் "இவர் (உரை எழுதப் புகுந்தவிடத்து) மற்றை யுரையாசிரியர்கள் போலன்றி, தாம் எடுத்துக் காட்டும் மேற்கோள்கள் இன்ன இன்ன நூல்களின்கண் உள்ளனவென்று பெரும்பாலும் புலப்படுத்தி இருக்கின்றார். சொன்னயம், பொருணயங்களை இனிது புலப்படுத்தி உரியவிடத்து இயற்றமிழ்ப் பகுதியாகிய ஐந்திலக்கணங்களையும், இசைத்தமிழ், நாடகத்தமிழ்ப் பகுதிகளையும் பல நூன்மேற்கோள் முகமாக விசேட உரைசெய்து" விரிவாக அமைத்திருக்கின்றார். அன்றியும் முச்சங்க வரலாறுகளையும் அச்சங்கப் புலவர்களையும் எடுத்து விரித்துரைக்கின்றார். இவ்வாறு இவர் சொல்வதெல்லாம் என்னை? ஒரு காப்பியத்துக் குரைசெய்வார் ஆண்டைக்கு வேண்டாத தமிழ்ப் புலவர் வரலாறுகளையும் தமிழ்ச் சங்கப் புலவர் வரலாறுகளையும் உரைக்கக் காரணம் என்னை? அன்றி ஏனையோரால் உரை செய்யப்பட்ட ஏனைக்காப்பியங்களும் இத்தகைய வரலாறுகளைக் கொண்டதாய் வெளிவந்திருக்கின்றனவா? அடிகள், "அரசியல் பிழைத்தார்க்கு அறங் கூற்றாவதும், உரைசால்பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்பதும் பொருளாக ஒரு பாட்டைச் செய்யுள் நாட்டினரான்றிப் பண்டைச் சங்க வரலாறுகளையும், புலவர்களையும் குறிப்புடைப் பொருளாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அவர் யாதும் பாடவில்லையே! உண்மை என்னை? தமிழ் வரலாறு அறியார் முன்னிலையில் ஒரு காலத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ்க் கல்வி உணர்த்த வந்த தக்க பெரும் பேராசிரியர் அவரே ஆதலின் அப்பொழுதைக் கல்விடத்துக்கு ஏற்புடையவாறு பொது வகையான் தமிழ் வரலாற்றையும் சிறப்புவகையான் சிலப்பதிகாரத் துக் குரையும் செய்திட்டார் என்க. நல்லாரின் இவ்வுரை மூலபாடத்துக் குரைசொல்வதில் மட்டும் அமைவதன்றிக் கல்வி விருத்தியையே கடைப்பூண்டதும் கருத்தாகக் கொண்டதும் என்பது அவ்வுரையிற் பயின்றார்க்கு நன்கு புலனாகுமென்க. இவை நிற்க, அவ்வுரையின்கண் தனித்தனி சொல்லியிட்டதைப் புலப்படுத்த வல்ல காரணங்களும் பின் எல்லாக் கதைகட்கும் உரை எழுத எடுத்துக் கொண்டதைப் புலப்படுத்த வல்ல காரணங்களும் அவ்வுரைக் கண்ணே அமைந்து கிடக்கின்றனவென்றும் முன்னரே சொற்றும். இனி 'சொல்லுவித்ததே' என்று பாடப்பட்ட பாயிரம் உரையை அவர் சொன்ன பின்னரே அன்றி அதன் பின்னரே அவ்வுரைஎழுதி வெளி வரும் பொழுதே பாடப்பட்டது. என்னை யெனில் உரை சொல்லும் பொழுது அதற்குப் பாயிரமும் சொல்லிவிடுதல் யாண்டும் வழக்காறு இல்லையே. அன்றியும் அச் சிறப்புப்பாயிரத்தின் பயன் இந்நூலுக்குரையை இன்னார் செய்தார் என்பது விளக்குவதொன்றன்றோ; நல்லார் சொல்லிய அவ்வுரையைக்கேட்டு அவர் முன்னிலையில் உள்ளார்க்கு அங்ஙனம் விளக்கவேண்டியது யின்றே. பின்னை விளக்க வேண்டியது இவ்வுரை வரலாற்றை அறியப்பெறாராய் இருக்கும் காலத்தால் பின்னுள்ளார்க்கே. அவரும் அறியவேண்டிய அவாவும் சந்தர்ப்பமும் ஏற்படுவது அவ்வுரையும் எழுத்துருப்பெற்று வெளிவருங் அக்காலத்தேயன்றோ. எனவே, அச்சிறப்புப் பாயிரமும் அவ்வுரை எழுத்துருப் பெற்று வெளிவரும் அப்பொழுதே பாடிச்சேர்க்கப்பட்டதென்பது ஐயமறப் போதருகின்றது. இனி, "எழுதத் துணிவதே" யான் என்று அவர் கூறியகூற்று, அவர் எழுத எடுத்துக்கொண்ட பொழுது அதாவது அவ்வுரை எழுத ஆரம்பமாவதன் முன்னர் சொல்லப்பட்டதுஎன்றும், "சொல்லுவித்ததே" என்று சிறப்புப் பாயிரக்காரர் கூறியகூற்று, அவ்வுரை எழுதப்பட்ட பின்னரும் என்பது அறியப்படு மென்க.

எனவே "விரித்துரைத்தான்" என்பதாலும் "சொல்வித்ததே" என்பதாலும் அவ்வுரை சொல்லப்பட்ட முடிபும் அந்நல்லார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எழுதத்துணிவதே யான்" என்பதாலும் அவ்வுரை எழுத்து வடிவில் ஈண்டுங்கிடைக்கபெறுவதனாலும் எழுதப்பட்டதென்ற முடிபும் பெறப்படுகின்றது என்க.

இனிச் சொன்னமை முந்தியதா? எழுதியமை முந்தியதா? எனின் சொன்ன பின்னரன்றோ எழுத வேண்டிய அவசியம். எழுதிய பின்னர்ச் சொல்வதற்கு அத்துணை அவசியம் இல்லையே. எனவே, சொல்லியமை முன் நிகழ்ந்தது; எழுதியமை அதன்பின் நிகழ்ந்தது. அன்றியும் "இன்று எழுதத்துணிவதே யான்" என்னும் அந்நல்லார் கூற்றினால் அவ்வாறு எழுதியது மட்டுமல்ல; எழுதுவதன் முன்னர்ச் சொல்லியிட்டார் என்பதொன்றும் எச்சக்குறிப்பாகப் புலப்படுகின்றது என்க. அவ்வாறாயின் எழுதுவித்தவன் யார்? அவ்வாறு எழுதுவதற்குண்டாம் காரணம் தான் என்னே? "சொல்லுவித்ததே" என்பதால் அக்காங்கேயன் எழுதுவிக்கவில்லை என்பதும்; எழுத்தின் திறனறிந்தோ அல்லது இன் சொற்பொருளின் அழுத்தந் தனிலொன்றை அறிந்தோ எழுதத்துணிவதே யான் என்பதால் அந்நல்லாரும் தங்கருத்தாக எழுத எடுத்துக் கொள்ளவில்லை என்பதும் விளங்கப்படுகின்றதன்றோ? எனவே சொல்லுவித்தற்கு மேலே ஒரு காரணபுருடன் உண்டானாற்போல எழுதுவித்தற்கும் ஒருவர் உண்டெண்பதும் அவன் தூண்டுதலோ வேண்டுதலோ காரணமாகத்தான் இவர் எழுதியிட்டார் என்பதும் அறிதல் வேண்டும். அடியார்க்கு நல்லாரோ சிங்கை நகரத்தமைச்சர். காங்கேயனே சேனபதி. எனவே எழுதுவித்துக் கொண்டவன் அந்நகரத்தரசனே போலும். கண்ணகி தேவியின் ஆர்வத்தினாலும் கண்ணகி வழிபாடு காரணமாகவும் அவ்வுரை காங்கேயனால் சொல்லுவிக்கப்பட்டதென்பதும் கல்வி விருத்திக்காகக் குணபூஷணன் என்னுமரசன் எழுதுவித்துக் கொண்டான் என்பதும் இவ்வுண்மைகளையும் இயைபுகளையும் கொண்டாராய்ந்து அறிந்து கொள்ளப்படும் உண்மைகளாம்.

இது வரையும் உரைச்சிறப்புப் பாயிரத்தையும், உரைப் பாயிரத்தையும் உரையையுமே அறிந்து சொன்னோம். இனி உரை வெளியான காலநிலையில் இருந்துமே இவ்வுரை முதலில் சொல்லப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட தென்பதும் அறியப்படும். அது எவ்வாறெனில் உரை இயற்ற நேர்ந்த சந்தர்ப்பம் என்பதன் கீழ் அக்காலம் கண்ணகி வணக்கமும் சிலப்பதிகாரப் படனமும் வகுக்கப்பட்ட காலம் என்பது ஈழ நாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம், தென் மொழி வரலாறு, திரு. ஆ. மு. எழுதிய நல்லூர் வரலாறு என்பவற்றுள் சொல்லப்பட்ட தென்றும், அச்சிலப்பதிகாரப் படனம் காலகதியில் திரிந்து இப்பொழுது கண்ணகி கதை, கண்ணகியார் வழக்குரை காதை என்னும் கதைகளைப் படிக்கும் வழக்கமாய் வந்து விட்ட தென்றும், அது இன்றும் உள்ள தென்றும், அன்றியும் அவ்வுண் மையை யாமே அக்கோட்டங்களுக்குப் போய் அறிந்து கொண் டாம் என்றும், அன்றியும் அப்பாக்கள் இவை யென்றும் முன் னர்க் காட்டியிட்டாமன்றோ. இனி, இன்னும் நுட்பமான பகுதி களுக்குச் செல்வாம். உரை அன்றியும் அப்பாயிரப்பாக்கள் சொன் ஞரை யறிதற்காக உரையைச் சொன்ன பொழுதில் கூறப்பட்ட தெனின் ஓர் இடத்தில் ஓர் உரை சொல்லப்படின் அங்ஙனம் சொல் லும் பொழுதே அவர் முன்னிலையில் உள்ள கேட்போர் அனைவரும் அவ்வுரையை இன்னார்சொல்கின்றார் என்றும் அவர் சொல்வதற்குக் காரணம் இன்ன தென்றும் அன்றியுமவர் இத்தகையார் என்றும் நேரே அறிவரன்றோ? எனவே, அச்சிறப்புப் பாயிரம் அவ்வுரை யைச் சொன்னார் முன்னிலையில் அப்பொழுதுள்ளார் அறிதற்காக அப்பொழுது இன்னொருவரால் கூறப்பட்ட தல்ல.

அவ்வுரையின் வரலாற்றைப் பின்னுள்ளார் அறிதற்காகவே அக்காலத்துப் பின்னுள்ளார் ஒருவரால் அவ்வுரை எழுத்துருவத் தில் வரும்போது அப்பாயிரம் எழுதிச் சேர்க்கப்பட்டதென்க.

எனவே, பண்டைக் காலத்தில் சிங்கை நகரைச் சார்ந்த கோவில்களில் சிலப்பதிகாரம் சொல்லப்பட்டும் படிக்கப்பட்டும் வந்த வழக்கம்தான் "உலக்கைதேய்ந்து உளிப்பிடியாய வாறு" போல இப் பொழுதும் அந்நகர் இருந்த இடமான நல்லூருக்கண்மையில் உள்ள அங் கணுக்கடவை, களையோடை என்னுமிடங்களில் உள்ள கண் ணகி கோயில்களில் கண்ணகி கதை முதலியன படிக்கப்பட்டுவரும் வழக்கம் என்க. இனி, "இரண்டாம் ஊழியாகிய கபாட புரத்தின் இடைச் சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தி யாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் அவைக்களத்து, அகத்தியனு

7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும், தொல்காப்பியனாரும், இருந்தை யூர்க்கருங்கோழி மோசியாரும், வெள்ளூர்க்காப்பியனாரும், சிறு பாண்டரங்கனாரும், மதுரை ஆசிரியன் மாறனாரும், துவரைக் கோமானும், கீரந்தையாருமென் றித் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின் மருள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர் தம்மாற் பாடப்பட்ட கலியும், குருகும், வெண்டாளியு முதலிய செய்யுள் இலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதையுள்ளும்" என உதயணன் கதையைப் புலப்படுத்திக் காட்டுவதற்கு எவ்வளவு வருவித்துச் சொல்லிப் புலப்படுத்திக் காட்டுகின்றார் பாருங்கள்! அன்றியும் "........ கவிகள் காம வெரியெழவிகற்பித்திட்டார் எனச் சிந்தாமணியுள்ளும்" எனச் சிந்தாமணியோடு சார்த்தியும் "நாடகக்காப்பிய நன்னூனுனிப்போர் என மணிமேசுலையுள்ளும்" என மணிமேகலையைப் புலப்படுத்திக் காட்டியும் உரைக்கு மாற்றைக் காண்க. இனி, "இசைத் தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவ விருடியாகிய நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலாகவுள்ள தொன்னூல்கள் இறந்தன. நாடகத் தமிழ்நூலாகிய பாதம் அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்கள் இறந்தன. பின்னும் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒரு சார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணை யல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தனபோலும்! இறக்கவே வரும் பெருங்கல முதலிய பிறவுமாம். இவற்றன் பெருங்கலமாவது, பேரியாழ்.........." என்னும் இக் கூற்றுக்களும் "..........என நூலுள்ளும்.......... எனக் கதையுள்ளும் கூறினராகலின், பேரியாழ் முதலியன இறந்தனவெனக் கொள்க" என்பதாலும், "இனித் தேவ விருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிருவருள்............மதிவாணர் நாடகத்தமிழ் நூலுமென" எனவரும் இவை யெல்லாம் அடியார்க்கு நல்லார் தமது உரைப்பாயிரத்தில் கூறியிட்டவைகளன்றோ? இவை அடிகளாற் சொல்லப்பட்ட அம் மூல பாடத்தின் (பாட்டுக்களின்) எப்பகுதிகளுக் குரையாகவருகின்றன. இவை அவ்வாறு உரையாக வரவில்லை. அந்நூலுக்குப் புறம்பே அடியார்க்கு நல்லாரால் ஆண்டைக்கு வேண்டப்பட்டவைகளாகத் தந்துரைக்கப் பட்டனவென்க. ஒரு நூலோ ஒரு உரையோ வெளிவரும் பொழுது பின்னுள்ளார்க்குப் பயன் படுவதானாலும் அப்பொழுதைக்குள்ள இடத்தையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்துத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாகி அவ்வாறு பயன்படும் என்க. இவைகளை நோக்குமிடத்து அடியார்க்கு நல்லார் மக்கள் தமிழ்க் கல்வித் துறைகளை அறிய வேண்டிய ஒரு இடத்தில் இருந்து அறிவிக்கவேண்டிய ஒருவராய்த் தான் உரை சொன்னார் என்பதும், அவ்வாறு அறிவிக்கவே அவர் அவ்விடத்துக்கு அழைக்கப்பட்டவர் என்பதும் அவர் சிறப்புவகை யான் சிலப்பதிகாரத்துக்குரையும் பொது வகையான் தமிழ்ப் புல வோர் தமிழ்நூல்கள் என்பனவற்றை யுள்ளிட்ட தமிழ் வரலாற்றை யுமே இலங்கைச் சிங்கை நகரத்தார்க்கும் அவரைச் சேர்ந்த செந்தமிழ் நாட்டார்க்கும் செந்தமிழ் அறிவுறுத்தும் முகமாகவே அந் நோக்கிலும் போக்கிலுமே அப்பொழுது சொல்லியிட்டார் என் பதும் அவ்வுரைதான் எட்டுப் படிகளாய் யாண்டும் பரந்தனவென் பதும் இவையெல்லாம் இவர் தம் உரைப்பகுதிகளில் வரும் உரைச் சான்று என்னும் அகச்சான்றுளேயும் வைத்து அறியப்படும் என்பதும், நாம் நன்கு அறிந்திடுதல் வேண்டும். அவர், பதவுரை, கருத்துரை, விரிவுரை, விசேடவுரை, பொழிப்புரை என வெவ் வேறு வகையாய் ஏற்றவாறு கூறி (இவ்வாறு கூறியது இவ்வுரை இடையீடுபட்டு வந்ததைக் காட்டும்) சொன்னயம், பொருணயங் களை இனிது புலப்படுத்தி, இலக்கண சூத்திரங்களும், ஏதுக்களும் எடுத்துக்காட்டி அலங்காரம், மெய்ப்பாடு வேறு குறிப்புக்களும் ஆங்காங்கு எடுத்துக்காட்டித் தாம் காட்டும் மேற் கோள்களை நூலா சிரியர் பெயரோடேனும் நூலின் பெயரோடேனும் சார்த்தி உரைக் கும்திறத்தில் இருந்து, இவர் ஏனைத்தமிழ் எல்லா உரையாசிரியன் மாரிலும் பார்க்கச் சிறப்பாக இன்னொரு நோக்கத்தோடுதான் இவ் வுரையைச் சொன்னார், அன்றி எழுதினார் என்பது விளங்கவில்லையா?

## 23. உரைதோன்றிய இடம் இலங்கைச் சிங்கை நகரம்.

உரைச் சிறப்புப்பாயிரத்திலும் சிங்கை நகர் வரலாற்றிலும் கூறப்பட்ட ஒரே உண்மைகளாலும் உரைச் சிறப்புப்பாயிரம் சிங்கை நகரிற் பாடப்பட்டது, உரைச் சிறப்புப்பாயிரம் சிங்கை நகரத்தார் ஒருவராற் பாடப்பட்டது, என்னும் முடிபுகளாலும் அடியார்க்கு நல்லார் உரை தோன்றிய இடம் இலங்கைச் சிங்கை நகரம் என்பது நன்கு காணப்படும். ஆயினும் மேலே முடித்த முடிபுகளின் துணைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு ஈண்டு அவ் வுண்மையைத் தனிப்படக் காண்பாம். முத லில் உரைச் சிறப்புப் பாயிரம் பாடப்பட்ட இடம் எத்தகைய இட மாய் இருக்கவேண்டும். அது,

A. 1. அடியார்க்கு நல்லார் நிரம்பையர் என்னும் பெயரைப்பெற்ற இடம்.

2. அவர் காவலனாய் இருந்து காவற்கடம் (அமைச்சு) பூண்டு காவலன் என்று பெயர் பெற்ற இடம்.

3. அடியார்க்கு நல்லார் பிற்காலத்து வாழ்ந்த இடம்.

4. காங்கேயன் என்னும் சேனாபதியைச் சந்தித்த இடம்.

5. காங்கேயன் என்னும் சேனாபதி வாழ்ந்த இடம்.

ஆயின் உரைச்சிறப்புப்பாயிரம் பாடப்பட்ட இடம் இலங்கைச் சிங்கை நகரமென்பது முன்னர்முடிந்த முடிபாயிற்றன்றோ? எனவே உரைச் சிறப்புப்பாயிரம் பாடப்பட்ட இடத்தில் அன்றோ உரைச் சிறப்புப் பாயிரத்தால் பாடப்பட்ட அடியார்க்கு நல்லார் வாழ்ந்தார்! அவ்விடத்தில் வாழ்ந்த அடியார்க்கு நல்லாரை அதாவது அச் சிங் கைநகரில் வாழ்ந்த அடியார்க்கு நல்லாரை,

"சிலப்பதி காரத்திற் சேர்ந்த பொருள்
ஆருந் தெரிய விரித்துரைத் தானடி யார்க்குநல்லான்" என

அச்சிங்கை நகரத்தில் உள்ளோர் ஒருவரால் சிறப்புப்பாயிரம் பாடப் பட்டபொழுது குறிப்பிடப்பட்டால், அங்ஙனம் உரைக்கப்பட்டஇட மும் அச்சிங்கை நகரமன்றோ? அன்றி அங்ஙனம், உரைத்தவர் நிரம் பையர் காவலர் என்னும் பெயருடைய அடியார்க்கு நல்லார் என்றால் அது இன்னும் நிச்சயமன்றோ? இனி உரைத்த இடத்திலன்றோ "காங்கேயன் தமிழ் மூன்றுக்குரை சொல்லுவித்ததே" என்பதால் காங்கேயனால் சொல்லுவிக்கப்பட்ட இடமும் சிங்கை நகரமன்றோ? இனி இங்ஙனம் உரை சொல்லுவிக்கப்பட்ட இடத்திலும் சொன்ன இடத்திலும் இருந்து கொண்டன்றோ அவ்வாறு சொன்னவரும் சொல்லப்பட்டவருமான அடியார்க்கு நல்லார், "எழுத்தின் திற னறிந்தோ ......... எழுதத் துணிவதேயான்" என்று சொல்லி எழுதிவிட்டாரெனில் அங்ஙனம் எழுதிவிட்ட இடமும் சிங்கை நகரமன்றோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, குணபூஷண சிங்கை யாரியச் சக்கரவர்த்தியுடன் இருந்த அமைச்சரன்றோ உரை செய்தார்! குணபூஷண சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி இருந்த இடம் சிங்கை நகரமன்றோ? எனவே அமைச்சர் இருந்த இடமும் சிங்கை நகரமன்றோ? எனவே அவர் உரை செய்த இடமும் சிங்கை நகரமன்றோ? எனவே, அவ்வுரை நிகழ்ந்ததும் அவர்கள் காலமான கி. பி. 1320 கி. பி. 1370 என்னும் ஆண்டுகட்கிடையில் ஆகும். இனி சேனாபதி கேட்க அமைச்சராகிய இவர் உரை இயற்றினார் என்றும். அது என்னையெனின்! இல்லாதவன் கேட்க உள்ளவன் ஈந்தவாறுபோல சிங்கை நகர்க் கல்வி விருத்தி செய்ய அழைக்கப்பட்டவர் அவரே ஆதலினாலும் அவனோடு உடன் உறைந்தவர் அவரே ஆதலினாலும் என்க. எனவே காங்கேயன் தொண்டை நாட்டில் இருந்து வந்தான். அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்துள்ள நிரம்பையில் இருந்து வந்தார். இவர்கள் இருவரும் குணபூஷண சிங்கையாரியனின் (வட இலங்கையில் இருந்து மறைந்த) சிங்கை நகரிற் சந்தித்தனர். உரை இயற்ற வேண்டிய சந்தர்ப்பம் அந்நகரில் நேர்ந்தது. இக் காங்கேயன் கேட்டுக் கொள்ள அடியார்க்கு நல்லார் உரை சொன்னார் என்க. இனி, இவைகளை ஒவ்வோர் சிறுச்சிறு நிருபண முகமாகவும் காண்பாம். அவற்றுக்காக மேல் முடிந்த முடிபுகளையே துணைக்கொள்வாம்.

B. 1. அடியார்க்கு நல்லாரைக் கேட்டுக் கொண்ட காங்கேயன் குணபூஷணனது சேனாபதியாய காங்கேயன். ஆயின் உரை அவன் கேட்டுக் கொண்ட இடத்தில் தான் செய்யப்பட்டது. அவன் கேட்டுக் கொண்ட இடம் இலங்கைச் சிங்கை நகரம் எனவே உரை செய்யப்பட்ட இடம் அச்சிங்கை நகரம்.

2. கேட்க உரை செய்தவர் சிங்கை நகர அமைச்சர். எனவே உரை செய்யப்பட்ட இடம் சிங்கை நகரம்.

3. அடியார்க்கு நல்லார் நிரம்பையர் என அழைக்கப்பட்ட இடமே உரைசெய்யப்பட்ட இடம். ஆயின் நிரம்பையர் என அழைக்கப்பட்ட இடம் சிங்கை நகரம். எனவே உரை செய்யப்பட்ட இடம் அது. அவ்வாறே காவலன் என்பதாலும் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உரை செய்யப்பட்ட இடம் சிறப்புப் பாயிரம் பாடப்பட்ட இடம். ஆயின் சிறப்புப்பாயிரம் பாடப்பட்ட இடம் சிங்கை நகரம். எனவே உரை செய்யப்பட்ட இடமும் அது.

5. சிங்கை நகரத்தார் ஒருவரே இங் நல்லார்க்குச் சிறப்புப்பாயிரம் பாடினர். எனவே இங் நல்லார் வாழ்ந்துரை செய்யப்பட்ட இடமும் அது. இவ்வாறு இன்னும் சில நிருபணங்களும் சொல்லலாம். (இவை முக்கியமான பகுதிகள்).

## 24. உரைச் சிறப்புப்பாயிரம் பாடினேர் சிங்கைநகரத்து ஒருவரே

அப்பாயிரம் பாடினேர் யார்? காங்கேயன், அடியார்க்கு நல்லார் என்னும் இவர்களது உண்மை வரலாறு தெரிந்த ஒருவராலேயே பாடப்பட்டதென்பது அறியப்படும்.

1. இக்காங்கேயன் இருந்த விடம். அமைச்சராகிய நிரம்பையர் காவலர் என்னும் அடியார்க்கு நல்லார் இருந்த இடம். உரைசெய்த இடம், உரைச் சிறப்புப்பாயிரம் செய்யப்பட்ட இடம் சிங்கைநகரம். எனவே, அவர்களைச் சிறப்பித்துக் கூறுவதான உரைச் சிறப்புப் பாயிரம் பாடினேர் சிங்கை நகரத்து ஒருவர்தானே.

2. இனி, நிரம்பையர் ஊரால் வருபெயர் என்றும். ஆயின் அப்பெயரைப் பெற்று அடியார்க்கு நல்லார் பிற்காலத்தில் வாழ்ந்த இடம் சிங்கைநகரம். நிரம்பையர் என்று அழைத்தவர்கள் அச்சிங்கைநகரத்தினர். எனவே, "நிரம்பையர் (காவலர்)" என்று குறிப்பிட்டுப் பாயிரம் சொன்ன அவ்வொருவரும் சிங்கை நகரத்தார் அன்றோ? இன்னும் என்னையெனில் அதாவது நிரம்பையர் என ஊர்ப்பெயராலே அவர் அழைக்கப்பட்ட இடத்தில் இருந்து அவரை அங்ஙனம் ஊர்ப்பெயரால் பாயிரத்தில் சுட்டிய அவ் ஒருவரும் அச்சிங்கை நகரத்தாரென்க?

அன்றியும் அடியார்க்கு நல்லார் உரை இயற்றவும் எண்ணிச் சிங்கைநகரம் வரவில்லை. காங்கேயன் உரை இயற்றுவிக்கவும் எண்ணிச் சிங்கைநகரத்துக்கு வரவுமில்லை. இவர்களை அழைத்த குணபூஷணனும் இவர்களைக்கொண்டு உரை இயற்றவும் இயற்றுவிக்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி இவர்களை அழைக்கவுமில்லை. வந்த இடத்தில் உரை இயற்றவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தது. அப்பொழுது அக்காங் கேயன் கேட்க அடியார்க்கு நல்லார் உரைசெய்தார் என்க.

எனவே, உரை (இப்பொழுது செய்தவராக அறியப்பட்ட அவர் அழைக்கும்பொழுது செய்யாதவராய் இருந்தார்) செய்த அடியார்க்கு நல்லாரைக் குணபூஷணன் உரைசெய்ய முந்தி அழைத் தான். அவர் இங்கு வந்தார். வந்தவரே உரையாசிரியரானார்.

## 25. சிங்கை நகர் வரலாறும், கொங்குமண்டல சதகமும்.

சிங்கை நகர் வரலாற்றில் குணபூஷண சக்கரவர்த்தியென்பான் அடியார்க்கு நல்லார் என்னும் பண்டித சிரோமணியை அழைத்து முதன் மந்திரியாக்கினான் என்று கூறப்பட்டது. இவ்வாலாறு இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்டது. ஆயின், உரைச் சிறப்புப்பாயிரம் பதினான்காம் நூற்றாண்டின் மத்திய பகுதி யில் அவர் முன்னிலையிலோ அவர் காலத்திலோ அவரும் அறிந்து கொள்ளவே (சிங்கைநகரில் உள்ள ஒரு வரால்) அவரைக் குறிப்பிட் டுப் பாடியது. எனவே, அமைச்சராய அவ்வடியார்க்கு நல்லார் ஒரு வரே கி. பி. 1910-ம் ஆண்டு வரை எழுதப்பட்ட சிங்கைநகர் வர லாற்றிலும் கி. பி. 1340-ம் ஆண்டுவரை பாடப்பட்ட உரைச் சிறப் புப் பாயிரத்திலும் கி. பி. 1720-ம் ஆண்டு வரை பாடப்பட்ட கொங்குமண்டல சதகத்தாலும் குறிப்பிடப்பட்டார் என்க.

முன்னர் முற்பத்திகளில் அமைச்சராய அடியார்க்கு நல்லார் தான் நிரம்பையர் காவலராகிய அடியார்க்கு நல்லார் என்பது நியாய வதுக்களாலும் நிரூபண முடிபுகளாலும் முடிந்ததால்தான் ஈண்டு அமைச்சர் தான் நிரம்பையர் காவலர் என்று வைத்துக் கொண்டு அந் நிரம்பையர் காவலர் தான் உரையாசிரியர்; உரை யாசிரியர்தான் கொங்குமண்டல சதகத்தால் பாடப்பட்டவர். எனவே, இம்மூவகையானும் குறிப்பிட்டவர் அவ் ஒருவர்தான் என்று நன்கு அறிந்து கொள்க.

இனி சிங்கைநகர்க் காங்கேயனது வரலாற்றுண்மைகளுக் குச் செல்வாம். குணபூஷணனது அமைச்சராய அடியார்க்கு நல்லார் விரித்துரைத்தார் ஆயின், அங்ஙனம் உரை சொல்லுவித்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொப்பண காங்கேயர்கோன்" என்னும் சேனுபதி யென்பது நிருபணமுடிபு. எனவே, சொல்லுவித்தவரைப் பற்றிக் கூறும் பாயிரப் பாட்டு இவனையே பற்றிப் பாடியது. காங்கேயன் என்பது பட்டப்பெயர். பொப்பண்ண காங்கேயன் என்பதில் பொப் பண்ணன் இயற்பெயர். பொப்பண்ணன் என்னும் காங்கேயன் என்பது அதன் பொருள். எனவே, கோன் என்பது பாயிரக்காரரால் பாராட்டப்பட்ட பெயர் என்றும் பொப்பண்ண காங்கேயர் கோன் என்பது ஒருவனையே என்றும், அதுவும் குணபூஷணனுக்குப் படைத்தலைவனுன காங்கேயனை என்றும் யாம் முன்னர் ஆரம் பத்திலே சொன்னவைகள் சரியான உண்மை முடிபென்பதைக் கண்டுகொள்க.

## 26. அடியார்க்கு நல்லார் ஒருவரே.

அடியார்க்கு நல்லார் வரலாற்றுக் குறிப்புக்கள் புலப்பாடான முப்பத்தெட்டாம் (1938) ஆண்டிலேயே, அடியார்க்கு நல்லார் குளம், அடியார்க்கு நல்லார் வரம்பு என்பதில் சுட்டப்படும் அடியார்க்கு நல்லார் என்பவரும் உரையாசிரியராய அடியார்க்கு நல்லாரும் ஒருவரே, என்று குறிப்பிட்டோம். ஈண்டு இப்பத்தியில் அவற்றைத் தெளிவாய் விளக்குவாம். இதுவரை அறியப்பட்ட அடியார்க்கு நல்லார் என்னும் பெயர்களாவன:

1. 'அடியார்க்கு நல்லார் குளம்' என்பதில் ஒரு அடியார்க்கு நல்லார்.
2. "அடியார்க்கு நல்லார் வரம்பு" என்பதில் ஓர் அடியார்க்கு நல்லார்.
3. "குணபூஷணனுக்கு அமைச்சராய அடியார்க்கு நல்லார்" என்பதில் ஒரு அடியார்க்கு நல்லார்.
4. உரைச் சிறப்புப் பாயிரத்தில் கூறப்பட்ட "நிரம்பையர் காவலன்" என்னும் அடியார்க்கு நல்லார்.
5. கோ-ம-சதகத்தில் கூறப்பட்ட 'அருமை உரை செய் அடியார்க்கு நல்லார்' என ஐவர் அறியப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வைந்து பெயர்களாலும் தொடரப்படும் அவ்வொருவரே, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு குறிப்புக்களால் இவ்வாறு குறிப்பிடப்பட்டார் என்பது காணப்படும்.

1. அமைச்சராய அடியார்க்கு நல்லார் தம் பெயரால் வெட்டியிட்டதால் அக்குளம் இன்றும் அவர் பெயரால் வழங்கி வருகின்றது.

2. அடியார்க்கு நல்லார் வரம்பு என அந்நிலம் அடியார்க்கு நல்லார் என்னும் பெயரோடு சம்பந்தப்பட வேண்டிய காரணம், அமைச்சராகிய அவ்வடியார்க்கு நல்லார் அக்குளத்தினருகே உள்ள அந்நிலத்தில் இருந்ததனால் அந்நிலம் காலகதியில் பெற்றுக்கொண்ட தோம்புப் பெயரே. இவ் அடியார்க்கு நல்லார் வரம்பென்னும் தோம்புப்பெயர், அந்நிலத்து மக்கள் உறுதியில், அந்நிலத்தில் உள்ள பெருமாள் கோயில் உறுதியில், விசுவேசுவரி (காளி) அம்மன் கோயில் உறுதியில், யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள ஏட்டில் (தோம்பில்) கொழும்பில் உள்ள சாசனவாராய்ச்சிக் கந்தோர் (archivese office)தோம்பில் குறிக்கப்பட்டிருக்கின்றது.

3. எனவே, அமைச்சராய அடியார்க்கு நல்லார் ஒருவரே அக்குளத்தோடு தொடர்புபட் டழைக்கப்பட்டவரும் அவ்வரம்போடு தொடர்புபட் டழைக்கப்பட்டவரும் என்பதாயிற்று. இவ்வாறு இவர் தொடர்புபட்டது பதினான்காம் நூற்றாண்டு. (ஆயின் வரம்பு, குளம் என்பன இவ் விருபதாம் நூற்றாண்டிலல்ல; இன்னும் எவ்வளவோ காலத்துக்குப் பின்னும் அவர் பெயரால் அழைக்கப்படும்).

4. இனி, நிரம்பையர் காவலராகிய அடியார்க்கு நல்லார் என்பது இவ் வமைச்சராகிய அடியார்க்கு நல்லார் சிறப்புப் பாயிரம் பாடப்பட்டபோது, நிரம்பையிலிருந்து இங்கே வந்து அமைச்சராயிருந்ததால் அப்பதினான்காம் நூற்றாண்டில் அப்பாயிரத்தினால் பெற்ற பெயர்.

5. சதகத்தில் அருமை யுரைசெய் யடியார்க்கு நல்லார் என்று குறிப்பிடப் பட்டது இச் சிறப்புப் பாயிரத்தில் பாடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட இவ்வுரை யாசிரியராய அடியார்க்கு நல்லார் நிரம்பையில் அவதரித்தார் என்று பாட எழுந்த சந்தர்ப்பத்தில். இது அப் பாயிரத்தை மேற்கோளாகக் காட்டி இவரை இவ்வாறு பாடியது. இது ஒன்று தான் இந்தியாவில் உள்ள கொங்குமண்டலத்தில் அவர்பெயரைக் குறித்தது. இது கி. பி. 1720-ம் ஆண்டுவரையிலாகும். இனிச் சிங்கைநகர் வரலாற்றில் திரு. ஆ. மு. அவர்கள் ஒரு அடியார்க்கு நல்லாரைக் குறிப்பிட்டது, அவர் காலமான கி.பி. 1912 ஆண்டு வரையிலாகும். எனவே, குளம், வரம்பு என்பனவற்றோடும், அமைச்சர் என்பதோடு வரலாற்றிலும், நிரம்பையர் காவலன் எனப்பாயிரத்திலும் குறிப்பிடப்பட்டது இலங்கைச் சிங்கைநகரில். சதகத்தில் குறிக்கப்பட்டது கொங்குமண்டலத்தில். எனவே, கி. பி. பதினன்காம் நூற்றூண்டு தொடங்கி இருபதாம் நூற்றூண்டு வரை அமைச்சராகிய அடியார்க்கு நல்லார் ஒருவரே, ஒவ்வோர் சந்தர்ப்பம் காரணங்களால் இவ்வாறு குறிக்கப்பட்டார் என்பதையறிக.

## 27. அடியார்க்கு நல்லார் காலம்.

இனி, இவ்வுரையாசிரியர் அடியார்க்கு நல்லார் காலத்தையும் அவர் தம் அகச்சான்று கொண்டும் அறிந்து விடலாம். டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள், நச்சினர்க்கினியாரால் மறுக்கப்படுவன சில இவர் கொள்கையாய் இருத்தல் பற்றி இவ்வடியார்க்கு நல்லார் காலம் நச்சினர்க்கினியர் காலத்துக்கு முந்தி இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது என்று சிலப்பதிகார முகவுரைக்கண் உரைத்திருப்பதாலும் நச்சினர்க்கினியர் பதினலாம் நூற்றூண்டிச்கு முற்பட்டவர் அல்லரென்று சிலரும் (தமிழகம்: தொகு 1-பக் 91) பதினன்காம் நூற்றூண்டுக்குப் பிற்பட்டவரென்று வேறு சிலரும் சொல்லுவதாலும் அது நமக்குப் பொருத்தமாகத் தோன்றுவதாலும் நச்சினர்க்கினியர் பதினன்காம் நூற்றூண்டுக்கு முற்படாதவர் என்பதும், எனவே இவரால் மறுக்கப்பட்ட அடியார்க்கு நல்லார் பதினன்காம் நூற்றூண்டினர், அன்றி அதற்கும் முற்பட்டவர் என்றும் தெரிகிறது.

இனி, அடியார்க்கு நல்லார் தம் உரையில் பிற்காலத்தனவாய கலிங்கத்துப் பரணி, சீவகசிந்தாமணி, பெருங்கதை என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களையும் எடுத்தாண்டிருக்கின்றனர். டாக்டர். ஐயரவர்கள் அடியார்க்கு நல்லார் உரையில் கண்ட நூல்களாக இவற்றையும் குறிப்பிட்டிருக்கின்றனர் (சில. முக. பக். 22.)

இனி இவற்றுள் சீவகசிந்தாமணியின் தோற்றக் காலம் அதாவது சீவகசிந்தாமணியின் ஆசிரியரான திருத்தக்க தேவர் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு (900) அல்லது அதற்குப் பிந்தி இருக்கலாம் என்று சிலாசன பரிசோதகராகிய ஸ்ரீ மான். அ. கோபிநாதராவ் அவர்கள் உரைத்திருக்கின்றார்கள். (செந்தமிழ் 5-ந்தொகு. பக். 15.) எனவே அடியார்க்கு நல்லார் ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் பிந்தியவர் என்பது பெறப்பட்டது. இனிப் பெருங்கதை பத்தாம் நூற்றாண்டின் கண் தோன்றிய நூல் என்று கருதப்படுகின்றது. பண்டைத் தமிழிசை ஆராய்ச்சி என்பது பற்றிக் குறிப்பிட்ட இடத்து அடிகளார் உயர்திரு. விபுலானந்தர் அவர்கள் பெருங்கதையும் சீவகசிந்தாமணியும் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் குறிப்பிட்டுள்ளார்கள். (செ. த. செ. சில. 14. பக். 428) இவ்வாற்றால் இந் நூல்களை எடுத்தாண்ட அடியார்க்கு நல்லார் காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் பின்னர் என்பது அறியப்படும். அடியார்க்கு நல்லார் தமது உரையில் எடுத்தாளும் மிகப்பிந்திய நூல் கலிங்கத்துப்பரணியேயாகும். கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவனான முதலாம் குலோத்துங்க சோழன் கி. பி. 1070—1118 வரையும் வாழ்ந்தானென்று அறியப்படுவதாலும், அவன் காலமும் அவன் வென்றி வீரத்தைச் சிறப்பித்துப் பாடிய கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார் காலமும் அப்பதினொராம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற் பகுதிக்கும் இடைப்பட்ட காலமாகும். எனவே கலிங்கத்துப் பரணியு மக்காலத்ததாகும். எனவே இந்நூல் காலத்தில் எங்கும் பரவவும் அதனை அடியார்க்கு நல்லார் அறிந்து கொள்ளவும் இன்னும் பல வருடங்கள் செல்லும் எனவே கலிங்கத்துப்பரணி ஆசிரியர் செயங்கொண்டார் காலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி (1118)க்குப் பின் இன்னும் சில வருடங்கள் கூட்டிக் கணக்கிட, அக்கால எல்லை 1200 வரையிலோ, அன்றி அதன்பின்னரும் சில பல வருடங்கள் சென்றோ ஆகவேண்டும். உரை வெளியான காலத்தைச் சரியான உத்தேசமாகச் சொல்லப்போகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1200க்குப் பின்னர்) பன்னிரண்டாம் நூற்றுண்டின் பின்னரே வெளியாயிற்றென்பது தேற்றம். இவ்வுரையில் வரும் சில கொள்கைகளை நச்சினுர்க்கினியாரால் மறுத்து எழுதப்பட்டுள்ளன வென்றும் கண்டதால் சிலப்பதிகார உரை வெளியான காலம் (1200—1400க்கு இடைப்பட்ட காலம்) கி. பி. 13ம் அல்லது 14ம் நூற்றுண்டில் ஆகவேண்டும் என்பது சரியான உத்தேசம். எனவே இவ்வடியார்க்கு நல்லாரென்னும் உரையாசிரியர் காலமும் அக் காலம் என்பது நிச்சயம். எனவே இவ்வடியார்க்கு நல்லார் நிரம்பையை விட்டுச் சென்று அங்ஙனம் சென்ற இடத்தில் உரை செய்த காலம் 13ம் அல்லது 14ம் நூற்றுண்டேயா மென்பதை அறிக.

இனிக் குணபூஷணன் இந்திய தேசத்தினின்றும் அடியார்க்கு நல்லார் என்னும் பண்டித சிரோமணியை அழைத்து முதன் மந்திரியாக்கினுன் என்பதால் அவ் அமைச்சராய அடியார்க்கு நலலார் காலம் அக்குணபூஷணன் காலத்தோடு சார்த்தியறியப்படும்; அவ்வாறுமறிவாம். வணசுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள்,

1. "காலிங்க ஆரியச் சக்கரவர்த்தி சேகராச சேகரன் கி.பி. 1242

... ... ... ... ... ... ...

7. குணபூஷண சிங்கையாரின் சேகராச சேகரன் IV

8. வீரோதய சிங்கையாரியன் பரராச சேகரன் IV (1344)"

என்று குறிப்பிட்டதோடு பதினொராம் அரசனுன கனக சூரியனையும் குறிப்பிட்டு அவன் கி. பி. 1450-ல் அரசுக்கு வந்ததையும் குறிப்பிடுகின்றுர். அன்றியுமவர் "1242-க்கும் 1450-க்கும் இடையில் உள்ள காலம் 208 ஆண்டுகளே யாகும். இக்காலத்துள் பத்து அரசர்களின் கால எல்லை வருகின்றமையால் தலைக்கு (20) இருபது ஆண்டுகள் அளவில் ஆளுகைமட்டும் விழுக்காடாகின்றது. இவ் விழுக்காடு அக்கால அரசர்க்குப் பொருந்துமென்பது 'கொட்றிங்கன்' துரையவர்களது கொள்கையுமாகும். தலை ஈற்று ஆண்டுகள் போக இடையில் பிறைக்கோட்டினுள் இட்ட இலக்கங்கள் ஒவ்வோர் அரசன் காலச் செய்தி ஒவ்வொன்றைச் சுட்டி ஒருவாறு அறியப்பட்டுள்ள ஆண்டுக் குறிப்பாம் என உணர்க," (யா. வை. வி. 79. 80, 81-ம் பக்.) என்பதால் குணபூஷணன் காலம் இவ்வாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தேசமாக - அன்றி இயன்ற அளவில் வரைவாகவும் தான் (1324-1344) கி.பி. பதினாலாம் நூற்றாண்டின் முற்பகுதியாமென்று கருதினார் என்க. என்னையெனில் இடையில் பிறைக்கோடிட்டு இக் குணபூஷணன் மகன் வீரோதயன் காலம் வரைவாக அறியப் பட்டதாகக் குறிப்பிடலாலும் அவனது காலமான 1344-ல்இருந்து இருபது ஆண்டுகள் முன்னர்ச் சென்றால் அது 1324-ம் ஆண்டாகு மென்றும் அது அவன் தந்தையான குணபூஷணன் காலத்தைச் சரியாயும் வரைவாயும் அறியப்பட்ட கால அளவையாம் என்றும் அவர் கூற்றின்படி அறிக. இனி இக் குணபூஷணன் காலத்தைஇட்டு இன்னொரு சரித்திராசிரியர் குறிப்பிட்டவற்றைக் காண்பாம். அதற் காக, குணபூஷணனையும் அவன் தந்தையான மார்த்தாண்டனையும் அவன் மைந்தனான வீரோதயனையும் அவர்கள் கால எல்லைகளையும் குறிப்பிட்டுத் தருவாம். "சிங்கை நகரில் பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடங்கிப் பதினைந்தாம் நூற்றாண்டு மத்திவரை அரசாண் டவர்களை வைபவமாலையைப் பின்பற்றிச் சொல்லப்போனால் (The following list of kings who reigned at Singai Nagar from the 13th to the middle of the 15th century is adapted from the Vaipavamalai giving the probable dates of accession according to the average:-

1. Vijaya Kulankai Segaraja sekaran (Kalinga magha) 1210 A. D.

... ... ... ... ... ...

2. Martanda (Pararaja sekaran) 1325 "
3. Gunapushana (Segaraja sekaran) 1348—1371

A. J. P. 371)

எனவே, இவ்வாற்றால் இவ்வாசிரியர் குணபூஷணன் காலத்தை 1348 க்கும் 1371 க்கும் இடைப்பட்ட காலமெனக் கருதினர் என்பது இதனால் தெரிகிறது. யாழ்ப்பாண வைபவவிமர் சனம், பண்டை யாழ்ப்பாணம் (A. J.) என்னும் இவ் விரு நூல்க ளின் ஆசிரியர்களான முறையே வணசுவாமி ஞானப்பிரகாசர், முத லியார் திரு. செ. இராசநாயகம் அவர்கள் முதலியோர் சிங்கை ஆரியத் தமிழரசர் காலத்தைச் சிக்கறுத்துக் கூறிய மகா உபகாரிக

ளாவர். இவ்வாற்றால் குணபூஷணன்காலம் ஒருவர் முடிபாக கி. பி. 1324—1344க்கும் இடையே என்றும் மற்றவர் முடிபாக, கி. பி. 1348—1371க்குமிடையே என்றும் முடியுமாற்றை அறிக. இவ்விருவரும் குணபூஷணன் காலத்தை நிச்சயம் செய்திருப்பதைக் கண்டு கொள்க.

எவ்வாற்றானும் இக்கணக்குகள் மிகத் தெளிவும் வரைவும் உள்ளவைகள் என்பதில் யாதும் ஐயமில்லை. எனவே இந்நாலு இரண்டாண்டுகளின் வேறுபாடேட் கிடம்வையாமலும் இக்காலங்கள் அவர் அரசாட்சிக்கு வருமுன்னரும் 20 அல்லது 25 ஆண்டுகள் அவர்கள் காலத்தில் கழித்திருக்குமாதலாலும் எல்லாம் பொருந்த எல்லார் கணக்குகளும் பொருந்த இன்னும் அக்கால எல்லையைச் சிறிது அகலித்து எடுத்துக்கொண்டால் குணபூஷணன் காலம் 1324—1371-க்கு மிடைப்பட்ட ஒருகாலம் என்பதையறிக.எனவே குணபூஷணன் காலம் பதினான்காம் நூற்றாண் டென்றறிக. மேலே உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் காலம் 13-ம் அன்றிப் 14 ம் நூற்றாண்டெனக் கண்டவாற்றை யறிக. எனவே, குணபூஷணன் காலமும் அடியார்க்கு நல்லார் என்னும் உரையாசிரியர் காலமும் ஒன்றென்று தெளிந்திடுக. அன்றியும் குணபூஷணன் காலத்தை 1348-க்கும் 1371-க்கும் இடைப்பட்ட காலமெனத் தமது ஆங்கில நூலில் கணக்கிட்டு வைத்த திரு. செ. இராசநாயக முதலியார் இன்னொரு சந்தர்ப்பத்தில் அந்நூலிலே "In the Tamil Epic Cilappadikaram composed about three centuries earlier than the Mahavansa, Singapura is mentioned twice. In the same poem, discussing line 47 of the preface, Adiyarku Nallar the commentator who lived in the 14th or 15th Century A. D., describes Singapura as a town in the Kalinga Country, taking as his authority a later reference in the same poem" (A. J. P. 49). என உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் பதினான்காம் நூற்றாண்டினர் என்பதை உடன்பட்டுக் கூறி இருத்தல் காண்க. (14-ம் அல்லது 15-ம் நூற்றாண்டென்பதில் 14-ம் நூற்றாண்டையே யாம் உடன்பட்டுக் கொண்டாம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இவ்வாராய்ச்சியால் குணபூஷணன் பதினன்காம் நூற்றாண்டினன் எனவும் சரிவர அறிக. எனவே, உரையாசிரியராய அடியார்க்கு நல்லாரும் குணபூஷணனும் ஒரு காலத்தவர் என்பது மேலே முடிபாயிற்று. உரையாசிரியரும் குணபூஷணனும் ஒரு காலத்தவ ராகுல் குணபூஷணனுக்கு அமைச்சராய் இருந்த அடியார்க்கு நல்லார் காலம் யாது? அதுவும் அக்குணபூஷணன் காலமே. எனவே, குணபூஷணன் காலமே உரையாசிரியராய அடியார்க்கு நல்லார் காலமும் என்றறிக. [உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் என்றது சிலப்பதிகாரத்திற்கு அவர் உரை செய்தமையால், அவரே உரை செய்ததாகச் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டு அறியப்பட்டு வந்தமையால். எனவே, அவர் உரைசெய்த பின்னர், அவ்வுரை தமிழ்நாடெங்கணும் அறியப்பட்ட பின்னர், அவ்வுரையைப் படித்துவரும் நாம் அவரை உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் என்று உரைக்கின்றோம். ஆயின் அவர் உரையைச் செய்யு முந்தியும் உரையாசிரியரென் றழைத்தோமா? (அவரையன்றி யாரையேனும் அழைப்போமா) அப்பொழுது அவருக்கு உரையாசிரியார் என்ற பெயருண்டா? இல்லையே. ஆயின் அவ்வுரையைச் செய்த அவர் சிறந்த தமிழறிஞர் அல்லது ஒரு மாபெருந் தமிழ்ப்பண்டிதர் என்பது அவர் உரையில் இருந்தும் விளங்குகிறது. எனவே, உரையைச் செய்ய முந்தி இவர்காலமாய பதினன்காம் நூற்றாண்டில் இவர் ஒரு பண்டிதராய அடியார்க்கு நல்லாராய் விளங்கினர் என்பது ஐயமே இல்லை.] இனி, மேலே வரலாற்று நூலாருள் ஒருவர் கூறியபடி குணபூஷணன் கி. பி. 1344 ல் அரசுக்கு வந்த வீரோதய சிங்கையாரியன் றனக்குத் தந்தையாய் இருந்தலினல் அக் குணபூஷணனின் ஆட்சி கி. பி. 1344-க்கு முற்பட்டதென்றும் மற்றோர் ஆசிரியர் கூற்றின்படி கி. பி. 1348–1371-க்கும் இடைப்பட்ட காலமென்றும் சொற்றும்.

இனி, குணபூஷணனுக்கு அடியார்க்கு நல்லார் அமைச்சரானமையின் குணபூஷணன் அரசிருந்த காலமே அடியார்க்கு நல்லார் அமைச்சராயிருந்த காலமும் என்று அறியவேண்டுவதால் அடியார்க்கு நல்லார் சிங்கைநகரில் அமைச்சரா யிருந்த காலமும் முன்னெல்லை (கி. பி. 1344—20) கி. பி. 1324 ஆண்டு ஆகியும் பின்னெல்லை கி.பி. 1371 ஆகியும் வரும். எனவே, இயன்றபடி வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக அடியார்க்கு நல்லார் சிங்கைநகரில் அமைச்சராய் இருந்த காலமும் கி. பி. 1324-க்கும் கி. பி. 1371-க்கும் இடைப்பட்ட ஒரு காலம் என்பதாயிற்று. முன்னர் அடியார்க்கு நல்லார் நிரம்பையிற் பிறந்து வளர்ந்து அவர் சிலப்பதிகார உரையிற் காட்டப்பட்ட நூல் முதலியவற்றைப் படித்துப் பெரும் பண்டித சிரோமணியாய் அந் நிரம்பையிலே விளங்கினார் என்றும் அவர் கல்விப்பெருமையே சிங்கைநகர்க் கமைச்சராய் அழைக்கப்படக் காரணமாய் இருந்த தென்றும், அவை இயைபொடுபட்ட உண்மைகளா மென்றும் விளக்கியிட்டாமன்றே. எனவே, அவர் சிங்கைநகர்க்கு வருமுந்தி அவர் பண்டிதராகும் வரை நிரம்பையில் கழித்த இளமைக்காலமும் கல்விக் காலமும் ஏறக்குறையஇருபத்தைந்து ஆண்டுகள் வரையாகுமன்றோ? எனவே, அவர் பிறந்தகால எல்லை மேலேகண்ட முன்னெல்லையிலிருந்து-அதாவது கி. பி. 1324-ல்இருந்து ஏறக்குறைய இருபத்தைந்து, முப்பதாண்டு வரை கழித்துவிட அவ் எல்லை ஏறக்குறைய கி. பி. 1300ம் ஆண்டு வரையிலாகும். எனவே, பிறப்பு முதல் அமைச்சின் இறுதிவரை அவர்காலம் கி. பி. 1300—1371 வரையிலாகும். அமைச்சின் இறுதிவரை யன்றி அதன் பின்னரும் அவர் சீவந்தாராய் இருக்கமுடியுமன்றே. ஆகையாலும், அன்றிப் பிறப்பு இறப்புக்களைப் பொறுத்த வரையில் சில ஆண்டுகள் இக்குணபூஷண னுக்கு முன்னாகவேனும் பின்னாகவேனும் இருந்தாலும் இருக்கக்கூடு மன்றே. எனவே, இவையெல்லா மடங்க மேலே சுட்டிய ஆசிரியர் கணக்கிடுகட்கும் முரண்படாமல் கணக்கிட்டால் சரியாக உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் காலம் கி. பி. 1300-க்கும் கி. பி. 1400-க்கும் இடைப்பட்ட ஒரு காலமென்பது நன்கு நாட்டப்படும் என்றறிந்திடுக.

## 28. சதகச் செய்யுளின் சரியான (முடிபு) கருத்து "அவதரித்த" என்பதே.

அடியார்க்கு நல்லாரைப் பற்றிப் பாடிய கொங்குமண்டல சதகச் செய்யுளின் சரியான வடிவம், அதன் உண்மையின்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதரித்த+வரு என்பதுதான் எனவும் அதன் சரியான கருத்து அடியார்க்கு நல்லார் நிரம்பையில் அவதரித்தமை மட்டும் தான் என யாம் முன்னர் சொன்னது சரியெனவும் இப்பத்திகளில் காட்டுவாம். (என்னேயெனில்)

1. "அவதரித்து+வரு மைப்பொழில் நிரம்பை" என்பதிலுள்ள அவதரித்து என்பது வினையெச்சமாய் நிற்பின் அது நிரம்பை என்னும் பெயரைக் கொண்டு முடியாமல் அப்பாட்டு இலக்கணம் பிழைபடும் என்பதால்.

2. வரலாற்று நூலான சதகம் சுத்தலாகவும் மறைவாகவும் பாடாமல் வரலாற்றுக் குறிப்புக்களே விளங்க விரித்தே பாடவல்லதால் அவ்வாற்றாலும் அது அவதரித்த என்றே இருக்கவேண்டும்.

3. உரை சொல்லுவித்ததுங் கொங்குமண்டலமே என்றதால்.

4. அச் சதகக்காரர் சொல்லுவித்த காங்கேயன் வாழ்ந்ததும் கொங்குமண்டலமே என்றதால் அன்றிப் பெயரொடு சார்த்திக் காங்கேயனும் கொங்குமண்டலமே என்றதால்.

5. அச்சதகக்காரர் அடியார்க்கு நல்லார் சொன்னதுங் கொங்குமண்டலமே என்றதால்.

6. அடியாக்கு நல்லார் வாழ்ந்ததும் கொங்குமண்டல மென்றேனும் பெயரொடுசார்த்தி அடியார்க்கு நல்லாருங் கொங்குமண்டலமே என்றேனும் கூறுததால்.

7. ஒருவர் தம் சிறப்புக்களைச் சொல்லி அவரைத் தம் ஊரோடு சேர்க்குப்போது அவதரித்த, பிறந்த, வளர்ந்த, வாழ்ந்த என்றாற் போலும் பெயரெச்ச வாய்பாடாகவே சொல்லிச் சேர்த்தல் மண்டல சதகத்து மரபாயிருத்தலால்.

8. இச்சதகாசிரியரும் அவ்வாறு பவணந்தி முனிவரைப் பற்றிப் பாடிய விடத்துப் பெயரெச்ச வாய்பாடாகவே சனகாபுரத்தை அவ்வாறு தொடர்புபடுத்தி இருத்தலால்.

9. அவதரித்து வந்த வென்று அச்சதகத்துக்குக் கருத்துரை எழுதியவர் பொருள் கூறியதால்.

10. அச்சதகக்காரர் அவ்வுரை இயற்ற ஏற்பட்ட சந்தர்ப்பம் முதலியனவற்றைக் கூறுததால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சிலப்பதிகார உரை சிங்கை நகரில் இயற்றப்பட்ட பின் அச்சதகப் பாட்டுப் பாடப்பட்டதால்.

12. உரைச் சிறப்புப்பாயிரம் சிங்கைநகரிற் பாடப்பட்டதால்.

13. சிங்கைநகரில் நிரம்பையர் என்னும் பெயரைப் பெற்ற பின்னரே இக்கொங்குமண்டல சதகம் பாடப்பட்டதால். இன்னும் இவையன்ன நியாயங்கள் பல சொல்லலாம். இவை .யெல்லாம் முன்னர்ச் சொல்லாமல் பின்னரே சொல்லக் கிடந்தனவென்க.

## 29. அடியார்க்கு நல்லார் வரலாறு மறைவும், மாற்றமும் பெற்ற காரணங்கள்.

அடியார்க்கு நல்லார் வரலாறு (இந்நூலின் இக்காலம் வரை) பெரும் பகுதி யாதும் தெரியாது மறைந்து இருந்தது. ஏதோ ஒரு இயைபு பற்றிக் கூறும் கொங்கு மண்டல சதகத்தில் இருந்தும் அதனைத் தொடர்ந்து வந்த குறிப்புக்களில் இருந்தும், அறியக்கூடிய ஒரு சிறு பகுதி மாற்றம் அடைந்தும் இருந்தது. எனவே அவர் வரலாறு முழுமையும் மறைவும் மாற்றமும் உடையதாய் இருந்ததாகின்றது. அதன் காரணங்கள் யாவை என நோக்கின், மேலே யாம் அறிந்தவைகளை இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். இலங்கைச் சிங்கை நகர் வரலாற்றில் அடியார்க்கு நலலார் என்னும் அமைச்சரெனவும், நல்லூரில் மறைந்த சிங்கை நகரில் ஒரு நிலத்தோடு சேர்த்து அடியார்க்கு நல்லார் வரம்பு என்றும், உரைச்சிறப்புப் பாயிரத்தில் சிலப்பதிகாரத்தில் சேர்ந்த பொருள் ஆரும் தெரிய விரித்துரைத்தான் நிரம்பையர் காவலனே என்னும் அடியார்க்கு நல்லான் எனவும், சதகத்தால் அருமை உரை செய்த அடியார்க்கு நல்லார் நிரம்பையிலே அவதரித்தார் எனவும், கூறப்பட்ட கூற்றுக்களால் குறிக்கப்படும் அடியார்க்கு நல்லார் ஒருவர்தான் என்பது சரியான ஆராய்ச்சியாலன்றி அறிய முடியாதிருந்தது முதற்காரணமாகும். அன்றியும் இது சிறிது கடினமாய் இருந்ததுமாகும். என்னையெனில் அடியார்க்கு நல்லார் அமைச்சராய் இருந்தது, கி. பி. 1300-1380க்கும் இடைப்பட்ட காலமாகும். இச்செய்தியைக் குறிப்

பிட்ட சரித்திரம், ஒன்றையும் அறியாமல் ஒரு அடியார்க்கு நல்லார் அமைச்சராய் இருந்ததை மட்டும் சுட்டியதாக 1912ல் வெளியாயிற்று. இச்சரித்திரக்காரர் அப்பாயிரத்தினதும் சதகத்தினதும் உண்மையை அறியாமல் இச்சரித்திரத்தை வெளியிட்டார். இனி அச் சிறப்புப்பாயிரப் பாக்களில் இருந்து பாயிரம் பாடினோர், பாடப்பட்ட இடம், பாடப்பட்ட காலம், பாடப்பட்ட இடத்து அரசன் என்பனவற்றை அறியக்கூடியதாகக் குறிப்புக்கள், வெளிப்படையில் குறிப்பிட்டதாய் இராமையும் ஒன்று. அன்றியும் இவை ஒவ்வொன்றிற்கும் இயைபும் தொடர்பும் அறியப்படாமையோடு, இவ்வடியார்க்கு நல்லார் காலமும் அறிய முடியாதிருந்தமையுமாகும். இவை இவ்வுண்மையை அறிதற்கு எவ்வாறு இடையூறு விளைத்து நின்றன வென்பதை இனிமேலே காண்பாம்.

அடியார்க்கு நல்லார் குணபூஷணனுக்கு அமைச்சராய் இருந்து குளம் ஒன்று தன் பெயரால் கட்டியும் அதன் பக்கலில் உள்ள நிலத்தில் இருந்தும் வாழ்ந்தார். உரையை அவ்விடத்தில் இருக்கையில் இயற்றினார். அவரைப் பற்றிப் பாடிய உரைச்சிறப்புப் பாயிரப்பாக்கள் பதினைந்தாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் இலங்கைச் சிங்கை நகரில் வாழ்ந்த ஒருவரால் இயற்றப்பட்டு அவ்வுரையோடு கூடிய ஏட்டுப்படிகளாய் இருந்தன. அவை காலகதியில் கொங்கு மண்டல சதக ஆசிரியர் காலத்தில் (கி. பி. 1720) அதாவது பாயிரத்துக்கும் சதகத்துக்கும் இடைப்பட்ட 380 ஆண்டுகளுக்கிடையில் தென்னிந்திய நாடுகளிலும் பரவியிட்டன. கொ. ம. சதக ஆசிரியர் கார்மேகக் கவிஞர் கர்ணபரம்பரைக் கேள்வியால் இவரை நன்கறிந்தும், சிறப்புப் பாயிரத்தில் உள்ள நிரம்பையர் காவலன் என்னும் சொற்றொடரையும் ஆராய்ந்து 'அடியார்க்கு நல்லார் அவதரித்த வருமைப் பொழில் நிரம்பைப்பதி' யென்று இவர் கொங்கு மண்டலத்தில் அவதரித்ததாகப் பாடி அவ்வுரைச் சிறப்புப் பாயிரப் பாக்களையும் மேற்கோளாகக் காட்டித் தம் சதகத்தை ஏட்டுப்படிகளாக வெளியிட்டிருந்தார். 1923-ம் ஆண்டில் பல கையெழுத்துப்படிகளைக் கொண்டு பரிசோதித்து ஆராய்ந்து பதிப்பித்த திரு. முத்துச்சாமிக் கோனார், அவதரித்த+வரு என்பதை அவதரித்து+வரு எனப் படிமாற்றமாகப் பதிப்பித்து வெளியிட்டார். எனவே சிங்கை நகரிற் பாடப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகார உரைச்சிறப்புப் பாயிரப்பாக்கள் முன்னர் சிலப்பதிகார உரையோடும் பின்னர் சதகத்தோடும் சேர்ந்து ஏட்டுப்படிகளாகவும் கி.பி. 1923-ல் அச்சுப்படிகளாகவும் கொங்குமண்டலத்தை முதலிடமாகக் கொண்டு வெளியாயின. இவை இவ்வாறாக கி. பி. 1340-ம் ஆண்டு வரை சிங்கை நகரில் வெளியான உரைச்சிறப்புப்பாயிரப் பாக்களும் சிங்கை நகரில் கனக சூரியன் காலத்தில் கி.பி. 1450—1467க்கும் (இடைப்பட்ட காலத்தில்) எழுந்த செண்பகப் பெருமாளின் படையெழுச்சியாலோ! அன்றிச் சிங்கை ஆரியர் காலத்திருந்த சரசுவதி மகாலயம் என்னும் நூல் நிலயம் தீக்கொளுவப்பட்டமையாலோ! அன்றிப்பின் போர்த்துக்கேயப் படையெழுச்சிகளினாலோ அழிந்த சிங்கை ஆரியன் கலைஞானங்களோடு அவை எவ்விடத்தில் பாடப்பட்டன வென்றறியக்கூடிய வெளிப்படையான குறிப்புக்களையும் இழந்தன. சிங்கை நகரைச் செண்பகப் பெருமாள் தரைமட்ட மாக்கியதால் ஒரு முறையும் பின்னரும் அவ்விடத்திலே உள்ள பிற்காலச் சிங்கை நகரை (நல்லை நகரை)ப் போர்த்துக் கேயர் தரைமட்டமாக்கியதால் இரண்டாம் முறையும் அவ்வாரியரின் கலைஞானங்கள் அழிந்தன. (அழிந்தாலும் சில வைத்திய சோதிட நூல்கள் தப்பிப்பிழைத்தன) இவ்வாறாகச் சிங்கை நகர் இராச்சியம், நல்லை நகர் இராச்சியம் போய், பல நூற்றாண்டுகளின் பின்னால் இருந்து கொண்டு அதாவது உரைச்சிறப்புப்பாயிரம் பாடப்பட்ட அறுநூற்றாண்டு வரை பின் (கி. பி. 1340—கி. பி. 1944=604) இருந்து கொண்டு, அடியார்க்கு நல்லார் வரலாற்றைச் சிந்திக்கும் நமக்கு இப்பொழுது அம் மறைந்த சிங்கை நகர் இருந்த நில எல்லையைத் தன்னத்தே கொண்ட இவ்விலங்கையின் வட பகுதியில் உரைச்சிறப்புப் பாயிரப்பாக்களோடு அவ்வுரை ஏட்டுப்படிகள் இல்லா தொழிய, அவ்வுரைக்குக் காரணமாய் (இடமாய்) இருந்த சிங்கை நகரமும், சிங்கை யாரியத் தமிழரசும் இல்லா தொழிய, அவ்வுரைச் சிறப்புப்பாயிரம் சிங்கை நகரிற் பாடப்பட்ட தென்றேனும் அதில் குறிப்பிடப்பட்ட அடியார்க்கு நல்லாரும் காங்கேயர் கோனும் முறையே குணபூஷணனது அமைச்சராய அடியார்க்கு நல்லாரையும், சேனபதியாய காங்கேயர் கோனையும் தான் குறிக்கும் என்பது, இதுவரை யாவற்றானும் யாதும் அறியப்பட்டாதொழிய, அவ்வரம்பும், குளமும், அமைச்சரும், உரையாசிரியருமாகிய அவ்வடியார்க்கு நல்லார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததும் அவர் பெயரால் கட்டப்பட்டதும் என்றறியக் கூடிய குறிப்புக்கள் இல்லா தொழிய, இவ்விலங்கையின் வடதமிழ் நாட்டெல்லைக் குள்ளே வெளிப்படையில் உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரைப் பற்றி அறியக்கூடிய குறிப்புக்கள் யாவும் கிடையாவாயின.

இவை இவ்வாறு கிடையா தொழிய, யார் பாடியது? எக்காலத்தில் பாடியது? எவ்விடத்தில் பாடியது? என்று ஒரு எல்லையுமறிய முடியாத சிலப்பதிகார உரைச் சிரப்புப்பாயிரப் பாக்களும் அப்பாக்களை மேற்கொண்டதாய் அடியார்க்கு நல்லார் வரலாற்றுக் குறிப்பில் எவ்வளவினது என்றறிய முடியாதபடி அவர் வரலாறு முழுமைக்கும் பொதுமைமாய் நிற்கும் அவதரித்து வரு என்னும் வடிவத்தைக் கொண்ட அவரைப் பாடிய சதகப் பாட்டும் அக்கொங்கு மண்டல சதகம் மூலம் தமிழ் நாடெங்கணும் வெளியாயின. இவ்வாற்றால் அச்சதகப் பாட்டினதும் அப்பாயிரப் பாக்களினதும் உள்ளபடியான நிலைமையை அறிந்து கொள்ளாமல், அன்றியும் அச்சதகம் இல்லாதனவற்றை யெல்லாம் சொல்லாமல் விட்டு அந்நாட்டில் அவர்க்கிருந்த பிறப்பொன்றையே கூறியமுகத்தானே ஏனைய அவர் வரலாறுகளை யெல்லாம் வேண்டு மென்றே விலக்கிப் பாடி இட்டது என்றும் அறிந்து கொள்ளாமல் (இவரைப் பற்றிக் கூறும் வல்ல முதற் சான்றுக்களான) இச்சிறப்புப் பாயிரப்பாக்கள் சதகம் என்பனவற்றுள் எது முந்தியது? எது பிந்தியது? அவை ஒன்றேடொன்று இன்னும் எவ்வாறு தொடர்பு பட்டவை? பாயிரம் நிரம்பை யல்லாத இன்னேரிடத்தில் பாடப்பட்ட தென்பது எவ்வாறு? என்றின்னேரன்ன உண்மைகள் இதுகாறும் அறியப் படாமையாலும், பின் வந்தோர் எல்லாரும் "அவதரித்து வருமைப் பொழில் நிரம்பைப்பதியும் கொங்கு மண்டலமே" என்னும் கூற்றால் அவர் கொங்குமண்டலத்துள்ளவராக அன்றி அதனுள்ளும் நிரம்பையில் உள்ளவராக அச்சதகத்தால் சொல்லப்பட்டிருக்கின்ற தென்றும் கருதுவாராயினர். கொங்குமண்டல சதகஉரைத் தொகை நிகண்டில் வருவிஜய மங்கையும் நிரம்பையும் அம்மண்டலத்துக் குறும்புநாட்டைச் சேர்ந்தவை என்று சொல்லப்பட்டிருப்பதாலும் சிறப்புப்பாயிரத்தில் அவரை நிரம்பையர் காவலன் என்றுகுறிப்பிட்டிருப்பதாலும் அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்தில்தான் அவ்வுரை செய்தார், வாழ்ந்தார் என்றும் பாயிரம் அவ்விடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் செய்யப்பட்ட தென்றும் அப்பாயிரத்தில் கூறப்பட்ட காங்கேயன் கொங்கு மண்டலத்திலேதான் இருந்தான் என்றும் அதனுல் அவன் உரை செய்யும்படி கேட்டுக்கொண்ட இடமும் இக் கொங்குமண்டலமாகத்தான் இருக்க வேண்டுமென்றும் அன்றியும் நிரம்பையர் காவலன் என்பதால் அவர் அந்நிரம்பை என்னும் ஊருக்குத் தலைவராய் இருந்தார் என்றும் பிறர் பிறழ விளங்கிக் கொள்ள வேண்டிய ஒரு இயைபு அச்சதகம் பாடப்பட்ட பதினெட்டாம் நூற்றூண்டு (கி. பி. 1720) முற்பகுதி தொடங்கி இருந்து வந்திருக்கிறது. எனவே அச்சதகத்தின் பின் 18-ம் 19-ம் 20-ம் நூற்றூண்டுகளில் (கி. பி. 1720-ம் ஆண்டு தொடங்கி —கி. பி. 1944-ம் ஆண்டு வரை,) ஏறக்குறைய 224 ஆண்டுகளாக அவ்வாறு தவருக விளங்கவேண்டிய இயைபு இருந்து வந்திருக்கின்றது என்க. அவ்வாறே பின்னுள்ளாரும் இன்னும் பிற்கால எல்லைகளில் (கி. பி. 1900—1944-ம் ஆண்டு எல்லைகளில்) இவ் விளக்கத்தோடு குறிப்பிட்டு வந்திருக்கின்றனர். அடியார்க்கு நல்லார் நிரம்பையில் அவதரித்து வந்தார். நிரம்பையர் காவலன் என்பதால் அவர் அவ்வூருக்கரசனுய் இருந்தார் என்னும் குறிப்பும் அவற்றைப் பின்பற்றி வந்த குறிப்புக்களுமே இலங்கையின் வடதமிழகத்தார்க்கன்றி எல்லாத் தமிழகத்தார்க்கும் கிடைப்பனவாயின இவ்வாறு நிரம்பையைச் சார்ந்து இவர் வரலாற்றைக் கொள்ளக்கிடந்தது இச்சதகாசிரியர் காலந் தொடங்கி இக்காலம் வரை என்க. இச்சதகம் மாத்திரம் தான் வெளிப்படையில் இடத்தொடுபடுத்திக் கூறிய இப்பொழுதைய முதற் சான்றுமாகும். இது அடியார்க்கு நல்லார் என்பவர் தான் உரையாசிரியர் என்றதோடு அவர் நிரம்பையூரைச் சார்ந்தவர் என்பதொன்றையுமே தமிழ் நாட்டில் விளக்கம் செய்து விட்டது. கொங்கு மண்டலச் சதகத்தின் பின்னும் அபிதானசிந்தாமணி, அபிதானகோசம் என்பனவற்றின் பின்னும் சிலப்பதிகாரம் பெருங்கதை என்பனவற்றின் பதிப்பின் பின்னும் சென்னைப் பல்கலைக் கழகத்து லெக்ஸிக்கன் அகராதியில் இவரைக் கூறிய கூற்றின் பின்னும் நிரம்பையைச் சார்ந்தவர் என்பதொன்றுமே வலி உறுத்தப்பட்டு இவரின் உண்மையான வரலாற்றை அறியவல்ல விளக்கம் இன்னும் கருகலாய்விட்டது. எனவே மேலே காட்டிய அக்கால எல்லையுட்பட்டு அவ்விளக்கங்களோடு பயின்ருர்க்கு அவர் வரலாறு இப்பொழுதுவலி உறுத்தியே விளங்க வைப்பதொரு உண்மையாய் நின்று விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இவருடைய வரலாற்றைப் பற்றி ஒருவருக்கு விளக்கம் இப்பொழுது எவ்வாறு இருக்கமுடியும் என்பது இவ்வாற்றால் விளங்குமென்க. இனி, நிலமேல் கட்டிடங்கள் முதலியன அழியும் நீர்மையன, மாற்றமும் பெறும் நீர்மையன; ஒருவர் பெயரால் ஒரு நிலமோ, குளமோ அழைக்கப்பட்டால் அவை அழியா நீர்மையன. அவை நூற்றாண்டு நூற்றாண்டாகவல்ல; ஆயிர ஆயிர ஆண்டுகளாகவும் வழங்கற்பாடு பெற்றுவரும். அன்றியும், அத்தகையார் வாழ்ந்ததைக் குறிப்பிடவல்ல பிற இயைபுகளு முண்டானால் அது இன்னும் நிச்சயமே என்க. இவ்வுண்மையை இவ்வாறு அறிந்து கொண்டு அடியார்க்கு நல்லார் வரம்பு, குளம் என்பன இற்றைக்கு அறுநூறாண்டுகள் வரை முன்னிருந்தே உரையாசிரியர் அடியார்க்கு நல்லாராலேதான் தொடர்பு கொண்டவை யெனின் அது அமைவற்ற கூற்றாகுமோ? அன்றியும் இனி, நிரம்பையர் என்னும் பெயரின் நுண்மைச் சித்திரம் இதுகாறும் ஆராய்ச்சிப் படாமை—அதாவது புலப்படாமை இருந்ததும் ஒன்று. அவ்வாற்றாற்றான் நிரம்பைக்குப் புறம்பே அவர் வரலாற்றைப் பிறர் கருதாதிருந்தமை என்க. (இலங்கைச் சிங்கைநகரில், உரை இயற்றின பின்னர் தான் அவர்க்குத் தமிழ்நாடெங்கணும் உரையாசிரியர் என்ற பெயர் வரலாயிற்று என்க.) அவரைப்பாடிய உரைச் சிறப்புப்பாயிரப் பாக்கள் கடினமான சரித்திர மாற்றங்களுக்குள் அகப்பட்டு விட்டபடியால் அது சிங்கைநகரிலேதான் இயற்றப்பட்ட தென்றறிதலும் இதுகாறும் வல்லையாயிற்று. எனவே, முன்னர்க் கூறியவாற்றால் சிறப்புப் பாயிரம், சதகம் என்பனவற்றின் உண்மை முடிபுகள் இதுகாறும் அறியப்படவில்லை என்பதும் அவற்றைப் பின்பற்றி அவ்வுண்மையை யறியாமல் சிலர் குறிப்பிட்ட தவறான குறிப்புக்கள், ஊகிப்புக்களே நம் கால எல்லையுள் கிடைக்கப் பெறுகின்றன என்பதும் நம் கால எல்லையுள் மட்டுமல்ல; இற்றைக்கு இருநூற்றிருபத்து நாலு ஆண்டுகள் வரை முற்படவே அச்சதகத் தோற்ற எல்லையில் இருந்தே அவ்வாறு விளங்கவல்ல இயைபு இருந்துவந் திருக்கின்றது என்பதும் நாம் அறிந்திடல் வேண்டும். டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் போன்று பாயிரம் சதகம் என்பனவற்றில் இருந்து அவற்றினின்றும் விலகாது ஊகித்து (இவர்கள் ஊகித்ததைப் பிறர் கருத்துக்கள் என்பதில் காட்டுவாம்.) அவ்வளவில் அமைந்து விடாது, அன்றி அப்பாயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம், சதகம் என்பனவற்றைக் கடந்து சென்று இவ்வுண்மையை அறிந்தும் கூறாது அச்சதகப்பாட்டைக் கொண்டும் நிரம்பையர் காவலர் என்பதைக் கொண்டும் இவர் வரலாற்றை நிரம்பையொடு சார்த்திக்கூறிய பின்வந்த அபிதான சிந்தாமணி, அபிதான கோசம் என்னும் நூலாரும் மேற்படி அகராதிக்காரருமே இம்மறைவையும் மாற்றத்தையும் அண்மைக் காலத்தே விளங்கச் செய்தவர் என்க.

தென்மொழி வரலாற்றுக்காரர், பாயிரத்தில் இவர் நிரம்பையர் காவலர் என்று அழைக்கப்படுவதால் நிரம்பையொடு தொடர்பு பட்டவர் என்பதை அறியாமல் அச்சதகப் பாட்டையும் அறியாமல் தாம் முன்னர் அறிந்த சிங்கைநகர் வரலாற்று வழியாற்சென்று அவ்வழியில் காங்கேயன் தொண்டைமண்டலத்தி லிருந்து வந்தான் என்று அறிந்தவர் அமைச்சராய அடியார்க்கு நல்லாரும் இந்தியாவில் உள்ள தொண்டைமண்டலத்தில் இருந்துதான் வந்தார் எனப் புரைபாடாக மொழிந்திட்டார்.

இனி, வட இலங்கைக்கு வெளியேயுள்ள சரித்திராசிரியர்கட்கு அச்சதகப் பாட்டும், அச்சிறப்புப் பாயிரப் பாக்களும் கிடைப்பனவே. ஆயினும் அப்பாயிரப் பாக்களின் உண்மைகளையும் அவற்றிற்காதாரமான சிங்கைநகர் வரலாற்றுண்மைகளையும் ஆராயவல்ல வசதி வடஇலங்கைத் தமிழ்நாட்டார்க்கே ஒருவாறு கிடைக்குமென்க.

இச்சதகப்பாட் டில்லையேல் இவ்வரலாறும் இல்லையாய்விடும். என்னையெனில் இவர் வரலாற்றையும் இவரோடு தொடர்ந்த வரலாறுகளையும், கொங்குமண்டல சதகத்திலிருந்து விலக்கி எடுத்துக் கொள்ளச் செய்தது அச்சதகப் பாட்டுத்தான். (அப்பாட்டு மட்டுமல்ல, அந்நூன் முழுதும்தான். அதாவது இவ்வளவென்று அறிதற் குதவியது அப்பாட்டு, விலக்கற் குதவியது அந்நூல்.)

இனி, இன்னொரு முகமாகவும் செல்வாம். அவ்வமைச்சர் பிறந்ததான வரலாறு சிங்கைநகர் வரலாற்றில் காணப்படாமைக்குக் காரணம் அவர் நிரம்பையிலே பிறந்தமையும், அன்றி இன்னொரு அடியார்க்கு நல்லார் பண்டை வட இலங்கையில் பிறந்து வாழ்ந்த குறிப்புக ளில்லாமையுமே! அன்றியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வரலாற்றில் காங்கேயன் என்பான் பிறந்ததான குறிப்புக் கள் சிங்கைநகரில் இல்லாமைக்குக் காரணம் அவன் தொண்டை நாட்டில் பிறந்தவனாய் அங்கிருந்து அந்நகரத்திற் கழைக்கப்பட்ட மை. கொங்குமண்டல சதகத்திலே காங்கேயன் பிறந்த வாழ்ந்த குறிப்புக்களைப்பற்றிக் கூறுமைக்குக் காரணம், அவன் அக்கொங்கு நாட்டில் பிறவாமலும் வாழாமலும் தொண்டை நாட்டில் பிறந்து வளர்ந்து சேனாபதியாகிச் சிங்கைநகரத் தரசனாகிய குணபூஷணனால் அழைக்கப்பட்டவனாய் அவ்வாறு அக்குணபூஷ ணனால் நிரம்பையில் இருந்து அழைக்கப்பட்ட அவ்வடியார்க்கு நல்லாரோடு சிங்கைநகரத்து வாழ்ந்தமை. கொங்குமண்டல சத கத்திலே அவன் உரை இயற்றித் தரும்படி கேட்டதைக் கூறு மைக்குக் காரணம், அவன் அவ்வாறு கேட்ட இடம் சிங்கை நகரா யிருந்தமை. அச்சதகத்திலே அடியார்க்கு நல்லார் வாழ்ந்ததைப் பற்றிக் கூறுமைக்குக் காரணம், அவர் அவ்வாறு வாழ்ந்த இடமும் அச் சிங்கைநகரமா யிருந்தமையே. அவர் உரை இயற்றியது கொங் குமண்டலம் எனக்கூறுமைக்குக் காரணம், இவர் நிரம்பையர் என அழைக்கப் படுதற்கும் அமைச்சராய் இருத்தற்கும் காங்கேயன் என்னும் போர்வீரனைச் சந்திக்கப்பெற்று அவனால் கேட்கப்படுதற் குமிடனாய் இருந்த சிங்கை நகரில் உரை இயற்றினமையே. அருமை புரைசெய் யடியார்க்கு நல்லார் என்றதன்றி அவ்வியற் பெயரோடு நிரம்பையர் காவலர் என்பதைச் சேர்த்துச் சொல்லா மைக்குக் காரணம், நிரம்பையர் என அழைக்கப்பட்ட இடமும் அமைச்சராய் இருந்ததால் காவலனென அழைக்கப்பட்ட இடமும் சிங்கைநகரமா யிருந்தமையே. இவ்வாறு அக்கூற்றுக்களின் உண் மைகளை யறிக.

அன்றியும் இவற்றுள் முக்கியமானது இன்னொன்று; அது உரிச் சொல் நிகண்டு பாடிய காங்கேயனை இவ்வுரையைச் செய்வித்த காங் கேயன் என்று கருதினமை என்க. உரிச்சொல் நிகண்டுபாடிய காங் கேயன் அச்சதகத்தால் 'பொப்பண்ணன்' என்னும் இயற்பெயரா லும் 'கோன்' என்னும் சிறப்புப்பெயராலும் அடைபெறவில்லை என் பதையும் பிறர் கவனிக்கவில்லை. அன்றியும் சிங்கைநகர் வரலாற்று அடியார்க்கு நல்லார், காங்கேயர்கோன் என்பாரும் மறைந்து, அவர் கள் இயற்றிய சிலப்பதிகார உரைக்கும் இச்சிங்கை நகர்க்கும் உள்ள

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளும் மறைந்த, இவை பற்றியாதும் எழுதப்பட்ட குறிப்புக்கள், கர்ணபரம்பரைக் கதைகள் உண்டானல் அவையு மறைந்து மாற்றப்பெற்று இற்றைக்கு அறுநூறு ஆண்டுகளின் (வரை பின்னுல் பலநூற்றாண்டுகளாக அந்நிய ஆட்சி வயப்பட்டதன்) பின்னன்றே இவர்தம் வரலாற்றை ஒருவாறு அறிகின்றோம். அன்றியும் சிங்கை நகர் வரலாறு, சிறப்புப்பாயிரம், கொ.ம.சதகம் என்பன வெவ்வேறு காலத்தில் வெவ்வேறிடத்தில் வெவ்வேறு சந்தர்ப்பத்தில் சொல்லப் பட்டபடியால், ஒவ்வொன்றுக்கும் உள்ள இயைபும் தொடர்புகளும் அறியப்படாமையுமே இம்மறைவுக்கு இன்னொரு முக்கிய காரணமாம் என்க. இனி காலப்படி முறையே அவரைப் பற்றிய தவறான குறிப்புக்கள் வெளியான கால்எல்லை அளவுகளைக் காட்டுவாம்.

1. உரைச் சிறப்புப்பாயிரம் பாடப்பட்டது. கி. பி. 1350 வரையில் (சிங்கைநகரில்).

2. கொங்குமண்டல சதகம் 1720 வரையில் கொங்குமண்டலத்தில் இயற்றப்பெற்றது. இவற்றில் ஒருவிதத் தவறும் மாறுபாடு மில்லை.

3. கொ. ம. சதகம் பதிக்கப்பெற்றது 1923-ல். (இப்பதிப்புத் தொடக்கமே இம்மாறுபாட்டிற் கிடனாயிற்று).

4. சிலப்பதிகாரத்தில் திரு உ.வே.சா. ஐயர் அவர்கள் குறிப்பிட்டது 1927-ல்.

5. பெருங்கதையில் ஐயர் அவர்கள் குறிப்பிட்டது 1935-ல்.

6. சென்னைப் பல்கலைக்கழக லெக்ஸிகன் அகராதிக்காரர் குறிப்பிட்டது சுமார் 1935—40-ல்.

அபிதான சிந்தாமணி, தென்மொழி வரலாறு, அபிதான கோசம் என்பன சுமார் 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தவை. எனவே, இங்கே காட்டப்பட்ட இக்குறிப்புக்களும் பிறவுமே இவர் வரலாற்றை இவ்வாறு மாறுபடுத்தி வைத்தவை என்க.

ஆகவே, 14-ம் நூற்றாண்டு தொடங்கி 18-ம் நூற்றாண்டு முற்பகுதி வரை அவர் வரலாறு யாதொரு மாறுபாடுடைய குறிப்பையும் பெறவில்லை. (என்னையெனில் சதகமும் நிரம்பையில் அவதரித்தவர் என்றே சொன்னமையால் என்க.) அதன் உண்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமல் 20-ம் நூற்றுண்டின் முற்பகுதித் தொடக்கமாக எழுதப்பட்ட குறிப்புக்களே தொடர்பாக இம்மாற்றங்களைப் பிற்காலத்தில் உண்டாக்கியவை எனலாம்.

## 30. பிறர் கருத்துக்கள், முடிபுகள்.

இப்பத்தியுள் வைத்து இந்நூலின் காலம் வரையும் அடியார்க்கு நல்லாரைப்பற்றிக் குறிப்பிட்ட பிறர் கருத்துக்கள் இவ்வாராய்ச்சியால் எவ்வாறு முடிபடைகின்றன என்பது காட்டப்படும். அவற்றுள் முதலாவதாக டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் சிலப்பதிகார முகவுரையிலும் பிற இடங்களிலும் குறிப்பிட்டவைகளைக் கூறுவோம்.

1. "இவ்வுரையாசிரியர்க்கு (உரையாசிரியராய அடியார்க்கு நல்லார்க்கு) நிரம்பையர் காவலர் என்னும் ஒரு பெயர் உண்டென்பதும் இவ்வுரை அக்காலத்து இருந்த பொப்பண்ண காங்கேயர் கோன் என்னும் பிரபு ஒருவராற் செய்விக்கப் பட்டதென்பதும் இந்நூல் உரைச்சிறப்புப் பாயிரச் செய்யுட்களால் தெரிகின்றன. இவர்க்கு நிரம்பையர் காவலர் (னே) என்னும் பெயர் ஊரால் வந்ததென்றும் நிரம்பை என்னுமூர் கொங்கு மண்டலத்தில் குறும்பு நாட்டில் பெருங்கதையின் ஆசிரியராய கொங்குவேளிர் பிறந்த விஜயமங்கலத்தின் பக்கத்துள்ளதென்றும் கொங்குமண்டலசதகம் தெரிவிக்கின்றது" (சிலப். 3-ம் பதி. முகவுரை பக். 11.) என்பது.

டாக்டர் ஐயரவர்கள் "நிரம்பையர் காவலர்" என்பது ஒரு பெயர் என்றும் அது ஊரால் வந்தது என்றும் கருதி இருந்தார்கள் என்று தெரிகிறது. இவ்வாராய்ச்சியால் 'நிரம்பையர், காவலர்' என்பன ஒரு பெயரல்ல, இரண்டு பெயர்கள் என்பதும், நிரம்பையர் காவலனே என்னும் பெயர் ஊரால் வந்ததல்ல, அதில் உள்ள நிரம்பையர் என்னும் பெயர்தான் ஊரால் வந்ததென்பதும் அறியப்படும். அன்றியும் அப் பெயர் சிங்கை நகரில் இவர்க்கு அழைக்கப்பட்ட பெயர் என்பதும் கண்டாம். இனி நிரம்பை என்னும் ஊர் இருக்கும் இடம்பற்றி அவர்கள் கூறியது மிக வாய்மையே. கொ. ம. சதகம் ஊர்த்தொகைநிகண்டு முதலாவது பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கு இருபத்துநான்கு நாடுகள் எனக்கூறி அவையாவன "...... மல்குகாஞ்சி கோயில் செறிகுறும்பு நாடு......... மன்னிய புகழ்சேர் கொங்குமண்டலந் தன்னிலான இருபத்து நான்கு நாடே" எனக்கூறிக் குறும்பு நாட்டை அவற்றுள் ஒன்றாகக் காட்டப்பட்டிருக்கின்றது. பின்னர் ஊர்த்தொகை நிகண்டு முப்பத்தாறுவது பாட்டில் "வருவிஜய மங்கையும் நிரம்பை யூர்.........சேர் குழி குறும்பு (குறுப்பி) நாடே" என்று பாடி இருப்பதால் விஜயமங்கையும் நிரம்பையும் அடுத்தடுத்த ஊர்களாய்க் குறும்பு நாட்டைச் சேர்ந்தவையென்பதும் விளங்குகின்றன. கொங்குவேளிர் விஜயமங்கலத்தில் பிறந்தவர் என்பதும் கொங்கு மண்டல (கொ. ம. ச. 99) சதகத்தால் விளங்குகிறது. இனிக்காவலன் என்பதைப்பற்றிய ஆராய்ச்சி முன்னர்க் கூறப்பட்டது காண்க. இவ்வுரை அக்காலத்திருந்த பொப்பண்ண காங்கேயர் கோன் என்னும் பிரபு ஒருவராற் செய்விக்கப்பட்டது என்று இந்நூல் உரைச்சிறப்புப் பாயிரச் செய்யுட்களால் தெரிகின்றன என்று சொன்ன முடிபுகளைப் பின்னர் நோக்குவோம்.

ஐயரவர்கள் அடியார்க்கு நல்லார் வரலாறு என்பதன்கீழ்க் கூறியவாறு இவருடைய வருணம் சமயம் என்பன இன்னமும் அறியவும் ஆராயவும் படவேண்டியவைகளாய்த்தான் நிற்கின்றன. இனி இவர் காலம் நச்சினார்க்கினியர் காலத்துக்கு முந்தியதென்பது சரியான ஊகமே. அது பதினான்காம் நூற்றாண்டே ஆகும் என்பது ஐயமற அறியப்படு கின்றமையைக் காலவாராய்ச்சியில் முன்னர்க் கண்டுகொள்க.

அன்றியும் இன்னொன்று "அணித்தான இடத்தில் இருந்தமையாலே தான் அடியார்க்கு நல்லார் கொங்குவேளிருடைய ஆற்றலையும் இந் நூலையும் பரம்பரைக் கேள்வியால் நன்கறிந்தவராயினார் போலும்" என்பது ஐயரவர்கள் பெருங்கதையில் நூலாசிரியர் வரலாற்றில் குறிப்பிட்ட பகுதியாகும். இவ்வாற்றால் இவர்கள் கூறிய இடங்களை நோக்கு மிடத்து இவர்கள் சிறப்புப்பாயிரம், சதகம் என்னும் இரண்டனையும் பின்பற்றி உரைத்தார்களன்றி யாதும் அவற்றை விலகி உரைக்கவில்லை. அவற்றின் உண்மைகளை அறிதற்கு அப்பாலும் கடந்து செல்லவில்லை. ஆயின் இவர்கள் இவ்விடத்தில் சொன்னவைகள் சரியான ஊகசாதுரியமே. அடியார்க்கு நல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லார் கொங்குவேளிருடைய ஆற்றலையும், பெருங்கதையையும் பரம்பரைக்கேள்வியால் அறியுமக்காலத்தே அங்கேதான் இருந்தார். அதாவது விஜயமங்கலத்துக்கணித்தான நிரம்பையிலேதான் இருந்தார். பலகலைகளையும் கற்றுப் பண்டிதசிரோமணியான பின் தமது பிற்காலத்திலேதான் குணபூஷணனால் இலங்கைச் சிங்கைநகரத்திற்கழைக்கப்பட்டார் என்க. எனவே இவர்களுடைய ஊகிப்பு அடியார்க்கு நல்லார் பிறந்து வளர்ந்து கல்விபயின்ற அக்காலம் வரைக்கும் தான் உரியதன்றி அப்பால் செல்லாதென்க. ஆயின் டாக்டர் ஐயாவர்கள் அடியார்க்கு நல்லார் அவதரித்த + வருமைப்பொழில் நிரம்பைப்பதி யென்றிருக்கவேண்டிய அச்சதகப்பாட்டு அவதரித்து + வருமைப்பொழில் நிரம்பைப்பதியென்று வெளியாய் விட்டதென்பதை ஆராய்ந்து கொள்ள வில்லை. பெருங்கதையில் அவர்கள் அவதரித்து + வரு என்ற அவ்வடிவத்திலேயே அப்பாட்டை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்கள். ஆயின் அவர்கள் அப்பாட்டை ஆராய்ந்து கொள்ளாத வழியும் இவ்வுண்மைக்கு முரண்பாடான கூற்றுக்கள் ஒன்றையும் சொல்லவில்லை. அன்றியுமவர்கள் நிரம்பையர் காவலனே யெனப் பாயிரத்தில் பாடப்பட்ட காரணங்கள் இவ்வாராய்ச்சியானன்றி இதற்கு முன்னர் வெளியாகாமையாற் போலும்! அவ்விரு பெயர்களையும் ஒரு பெயராகக்கருதிக் கூறியிட்டார்கள். அவர்கள் அவ்விருபெயர்களையும் ஒரு பெயராகக் கருதக்கிடந்த காரணம் அவ்விரு பெயர்களும் பொது நோக்கில் இரு சொல்லாலாகிய ஒரு சொற்றொடராய் ஒரு பெயர் நீர்மைப்பட்டு நிற்பதோடு அடியார்க்கு நல்லார் என்னும் அவ்வொருவர் மேலே வந்தமையாற் போலும்! அன்றியும் உரைச்சிறப்புப்பாயிரத்தையும் கடந்து சென்று அப்பாயிரத்தில் இவ்வாறு "நிரம்பையர் காவலனே" என்று கூறக்கிடந்த காரணங்களைக் காணாமையாலுமாம் என்க. அன்றியும் அவ்வாறு காணுதல் அத்தகைய இயைபுகளையும் தொடர்புகளையும் கொண்ட குறிப்புக்களையுடைய இலங்கைச் சிங்கைநகரைச் சார்ந்தாராய் இருப்பவர்க்கே அவர் ஆராய்ச்சியைப் பொறுத்து ஒருவாறு வாய்ப்பதொன்றும். இனி வரலாற்று முடிபைக்கண்டு கூறாது சிறப்புப்பாயிரத்தை மட்டும் கண்டு கூறுவார்க்கு அத்தொடர் அவ்வாறே புலனாகவரும் என்பதும் ஒன்று. அன்றியும் பாயிரத்தை மேற்கொண்டுகூறிய சதகக்காரர் பாயிரத்தில் கூறியாங்கு நிரம்பையர் காவல(னே) என்னும் பெயரைக்கூறாது விலக்கி அவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அருமையுரை செய்யடியார்க்கு நல்லார்' என்று கூறியிட்டதையும் இவர் கவனிக்கவில்லை. இடத்தால் வருபெயரை அடியார்க்குநல்லார் பெற்றதால் அவர் சொந்த ஊரான நிரம்பையை விட்டு இன்னொரு இடத்தில் சென்று அந்த இடத்தில் வாழ்ந்தார் என்பதையும் நன் கறிந்திடவுமில்லை.

2. இனி அவர்கள் இவ்வுரை "பொப்பண்ண காங்கேயர் கோன்" என்னும், பிரபு காலத்தில் செய்யப்பட்டது என்றது அடுத்து ஆராயற்பாற்று. அவன் காலத்திற் செய்யப்பட்டது என்பதும் அவன் ஒரு பிரபு என்பதும் உண்மை. ஆயின் அவன் காலம் யாது? அவன் எத்தகைய பிரபு? அவன் எங்கே வைத்து இவ்வுரையைச் செய்வித்துக்கொண்டான்? என்பனதான் நன்கு ஆராய்ந்தறியவேண்டிய உண்மைகள். இவற்றுக்கு விடைகள் முன்னர் பாயிரமும் சதகமும் என்பதன்கீழும் பாயிரமும் சிங்கைநகர் வரலாறும் என்பதன் கீழும் கூறியிட்டாம். அவன்காலம் குணபூஷணன் காலம் என்றும் காங்கேயன் என்பது சேனைத்தலைவருக்குக் கொடுக்கும் பட்டப்பெயரென்றும் கோன் என்பது அக் கருத்தே பற்றி அவனுக்குச் சிறப்பித்துக் கூறப்பட்ட பெயரென்றும் 'காற்றைப்பிடித்து' என்னும் முதலையுடைய பாட்டில் அவனை அவ்வாறே சேனாபதியென்று சிறப்பித்துப் பாடி இருப்பதையும் காட்டியிட்டாம். கொங்குமண்டல சதகக்காரர் முன்னர்க் காட்டியவாறு பிழையானவடிவத்தோடு அச் சிறப்புப்பாயிரப் பாக்களை மேற்கொண்டவாறின்றி ஐயரவர்கள் திருந்தியவடிவத்தோடு மேற்கொண்டு அப்பாயிரப்பாக்களை வெளியிட்டமை பேருதவியாகும். அப்பாயிரப்பாக்களே இவ்வாராய்ச்சிக்கு மிகமிகமுக்கியமானவைகள். ஈண்டு இவர்கள் காங்கேயன் என்னும் சேனாபதியெனச் சிறப்பாகச் சொல்லாது பிரபு எனப் பொதுவில் மட்டும் சொன்னார் என்றறிக.

3. இனி, சென்னைச் சர்வகலாசங்கத்தால் வெளியிடப்பட்ட தமிழ் லெக்ஸிகன் அகராதி பகுதி 4ல் பக்கம் 2265-ல் (Madras University Tamil Lexicon Vol. 4. P. 2265.) இவ்வடியார்க்கு நல்லாரைப்பற்றிக் கூறியவற்றை அறிவாம். அவ்வகராதிக்காரர் "நிரம்பையர் காவலன் (N, Atiyarkkunallar The Chief of Nirampai; a Village in Konku Country) கொங்கு நாட்டில் உள்ள நிரம்பை என்ற ஊர்த்தலைவரான அடியார்க்கு நல்லார், 'காருந் தருவு மனையான் நிரம்பையர் காவலனே' (சில. பக். 11.)" எனக் கருத்துக் கூறினர். அன்றியுமிவர்கள் அச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப்பாயிரப்பாட்டை எடுத்துக் காட்டிய வாற்றையும் காண்க. மேலேயாம் எழுதிய பகுதிகளை இவ்விடங்களில் நன்கு அறிதல் வேண்டும். காவலன் என்பதை ஊர்த்தலைவராக வைத்துக்கொண்டாலும் அவரையே குறிப்பிட்டு வந்த நிரம்பையர் என்பதை (அவர் பிறத்தற்கிடனை) நிரம்பையென்னும் ஊரென்று பொருள் செய்வதாமோ? நிரம்பை-காவலன் என்று கூறியவழி அவ்வாறு நிரம்பையென்னும் ஊர்த்தலைவரான அடியார்க்கு நல்லார் என்று கூறின் ஏற்புடைத்தே. அற்றன்று நிரம்பை எனினும் அவ்விடவாகு பெயராய் நிரம்பையர் எனினும் ஒக்கும். ஈண்டு அவ்விடத்தினரை அவர்களுக்கிடனை அவ்விடத்தின்மேல் வைத்து நிரம்பையென்னும் ஊரென்று கூறினும் குற்றமாமோவெனின், ஈண்டு நிரம்பையர் என்பது அவ்வூரில் உள்ள மக்களை உணர்த்தி வரவில்லை. அவர் ஒருவருக்கே வந்ததென்று மல்லவா சொற்றும். அன்றியும் நிரம்பையர் என்பது நியதியாக அந்நாட்டு மக்களைத் தான் உணர்த்திவந்ததொன்று என்று காணப்பட்டதாயின் அது எவ்வாறு? அன்றியும் அப்பெயர் அவருக்கு ஊரால் வருபெயர் என்பதை டாக்டர், உ. வே. சாமிநாதையர் அவர்களும் கூறினர்களே. அன்றியும் அச்சதகக்காரர் அடியார்க்கு நல்லார் நிரம்பையில் அவதரித்தார், நிரம்பில் வாழாமல் விட்டார் என்று கூற, நிரம்பைக்கவர் தலைவராய் இருந்தார் என்று பிறர் கூறல் பொருந்துவதாமோ? அன்றியும் இவர் நிரம்பை என்னும் ஊருக்குத் தலைவராய் இருந்திருப்பாராமானல், சதகக்காரர் இவரைப்பாடிய அச்சதகத்திலே அப்பாட்டிலேனும் பிறபாட்டிலேனும் இத்தகைய குறிப்புக்கள் ஒன்றனையும் கூறுது விட்டுவிட்டனரா? அன்றியும் நிரம்பையர் காவலர் என்னும் அப்பெயரையும் சேர்த்துக் கூறுது அருமையுரை செய்யடியார்க்கு நல்லார் என்று கூறுவர் கொல்லோ? நிரம்பையர் என்னும் பெயர் ஈண்டு அவரைத்தான் சுட்டி வந்ததோ! அன்றி அந்நாட்டு மக்களைத் தான் சுட்டி வந்ததோ! என்று ஒரு தலை துணிதற்கியலாவாறு ஐயம் தோன்றிய வழி, அவ் வையத்தை நீக்குவதற்கு அவர் வரலாற்றை அறியவல்ல பிறவழியாற் சென்று, அவ்வாறுசென்று கண்ட முடிபால் அவர் வரலாறு, நிரம்பை என்னும் ஊருக்கு (அன்றி அவ்வூராருக்கு)த் தலைவராய் இருந்தார் என்றுநிச்சயப்பட்டது என்று எடுத்துக்காட்டி அப்பால் அந்நிரம்பையர் காவலர் என்னும் சொற்றொடருக்குப் பொருள் கூறுவதுதான் (அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வூருக்குத் தலைவர் என்றோ—அவ்வூரார்க்குத் தலைவர் என்றோ) பொருந்துவது ஒன்றாம். அவ்வாறின்றிப் பொருள் செய்ய எடுத்துக் கொண்டதும் நிரம்பையர் காவலர் என்னும் சொற்றொடர், அதை விளக்க எடுத்துக்கொண்டதும் அக் "காருந்தருவுமனையான் நிரம்பையர் காவலனே" என்னும் சொற்றொடராமெனின் அது பொருந்தாததொன்றாம். அன்றியும் இவ் வகராதி நூலார் நிரம்பையர் என்னும் அச் சொற்றொடரால் நிரம்பையூரில் உள்ளவர்களை உணர்த்தவே பாயிரக்காரர் கருதினார் என்று கருதியிட்டாரெனில் பாயிரக்காரர்க்குக் கருத்ததுவன்று. என்னையெனில் அவ்வாறாயின் நிரம்பையினர், நிரம்பையூரினர் என்றாற்போலும் விதந்து அம் மக்களையே தனித்து உணர்த்துமாறு சொற்பெய்து உரைப்பாரன்றி இவ்வாறு அவருக்கும் அந்நாட்டு மக்களுக்கும் பொதுவாகவேனும் அன்றி அவரையே சுட்டி நின்று உணர்த்தும் அவரது இன்னொரு பெயரென்ற பெற்றியிலேனும் அப்பாயிரக்காரர் கூறார் என்க.

அன்றியும் நிரம்பை + அர் = நிரம்பையர் என ஒருவரே உயர்வுப் பன்மையாகச் சொல்லப்படும் 'அர்' விகுதியையும் பெற்று நிரம்பையர் என நின்றவாற்றையுமறிக. எனவே அது நிரம்பையர் ஆகிய காவலன் என்க. (எனவே நிரம்பையர் என அழைக்கப்பட்டதும் அந்நிரம்பையிலேயல்ல, காவலன் என்று அழைக்கப்பட்டதும் அந்நிரம்பையிலே யல்ல, நிரம்பையிலே அவதரித்த அவர் நிரம்பையர் என அழைக்கப்பட்டது நிரம்பையைவிட்டு இன்னொரு நாட்டிற் சென்று வாழ்ந்த அந் நாட்டிலே யென்க. காவலன் என்ற பெயர் நிரம்பையர் என்பதன் பின்னே வந்தமைவதால் காவலனாய் இருந்ததும் சென்ற அவ்விடத்திலே யென்க. நிரம்பையர் ஒரு பெயர், காவலன் என்பதும் அவருக்கு வந்த இன்னொரு பெயர் என்பதை யாண்டும் மறவற்க.) எனவே, இவ்வகராதி நூலார் நிரம்பை என்ற ஊர்த்தலைவரான அடியார்க்கு நல்லார் என்றது பொருந்தாத ஒரு கூற்றாம்.

ஊர்ப்பெயர் எப்படி ஊரில் வரும்? ஊருக்கு வெளியிலேதானே வரும். அன்றியும் "காருந் தருவு மனையான் நிரம்பையர் காவலனே" என்பதால் இக்காவலன் என்பது 'கொங்கு நாட்டில் உள்ள நிரம்பை என்ற ஊர்த்தலைவரான அடியார்க்கு நல்லார்' என்று பெறப்படுகின்றமை எவ்வாறு? காவலன் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாண்டும் நியதியாய் ஊர்த்தலைவரைத்தான் உணர்த்துவதாமோ? காவலன் என்பது ஊர்த்தலைவனை உணர்த்துவதாயின் காவலன் என்பதை அடுத்து நிற்கும் நிரம்பையர் என்பது நிரம்பையர் என்றிராது. நிரம்பையென்று ஊரின் பெயராகவே இருக்கவேண்டும் என்னின் அதுவும் வாய்மையதொன்றன்றே? அன்றிப் பாயிரத்திலன்றே நிரம்பையர் காவலன் என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. பாயிரமோ நிரம்பைதவிர்ந்த இன்னொரு இடத்தில் இயற்றப்பட்டது என்றன்றே மேலே முடிபாயிற்று. அங்ஙனம் இயற்றப்பட்ட இன்னொரு இடத்திலிருந்த அடியார்க்கு நல்லார் நிரம்பை என்ற ஊருக்குத் தலைவராய் இருத்தல் எப்படி? ஆகவே நிரம்பையர் என்பது அவ்வூராருக்குப் பெயராகாமல் அவர் ஒருவருக்கே பெயராகும் என்றும் அவ்வாறே (நிரம்பையர்) காவலர் என்பதும் ஆகுமென்றும் மேலே சொற்றும்.

அடியார்க்கு நல்லார் வரலாறு இது காறும் அறியப்படாமையானும் சிலப்பதிகார உரைச் சிறப்புப்பாயிரப்பாக்கள் எவ்விடத்தில் பாடப்பட்டதென்று 'அறியப்படாமையானும் சதகம் 'அவதரித்த' என்பது மட்டும்தான் உரைக்கின்றதென்பதும் சிங்கை நகர் வரலாறும் அதன்கண் அடியார்க்கு நல்லார் வாழ்ந்ததான குறிப்புக்களும் இது காறும் அறியப்படாமையானும் இவ்வாறு பிறர் உரைக்க நேர்கின்றது என்க. நிற்க:

4. இவ்வகராதி பகுதி இரண்டாவதில் பக்கம் 844-ல் (Vol. II. P. 844) காங்கேயர் என்னும் சொற்றொடரை விளக்குகின்றார்கள். "காங்கேயர்............பொப்பண்ண காங்கேயர்கோன் உரிச்சொல் நிகண்டு செய்த ஆசிரியர் (சிலப்பதிகாரம் பக். 11.)" என்று குறிப்பிட்டனர். காங்கேயம் என்னும் ஊரின் பெயரும் "கங்காகுல நாட்டார் செழிக்குங் காங்கேய நாடெங்கள் நாடே" எனக் கொங்குமண்டல சதக ஊர்த்தொகை நிகண்டு ஏழாவது பாட்டால் காங்கேய நாடுங் குறிக்கப் படுவதால் அவ்வூரில் உள்ளவர்கள், அந் நாட்டில் உள்ளவர்கள் காங்கேயர் எனவும் அழைக்கப்பட்டிருக்கலாம். ஆயின் ஈண்டு நாம் சாதிக்க நிற்பதொன்றென்னை யெனின்:

"பொப்பண்ண காங்கேயர்கோன்" என்பதில் காங்கேயர் என்பது ஊரால் வருபெயரல்ல என்பதும், இப் பொப்பண்ண காங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர் கோன் என்பவன் உரிச்சொல் நிகண்டு செய்த ஆசிரியன் அல்லன் என்பதுமே. பொப்பண்ணன் இயற்பெயர், காங்கேயன் பட்டப்பெயர், கோன் என்பது அவன் சேனைத்தலைவனாய் இருந்தமையின் அவனைப் பாராட்டிப் பாயிரக்காரரால் பாடப்பட்ட பெயர் என்றும் முன்னர்க் குறிப்பிட்டாம். பொப்பண்ண காங்கேயர் கோன் என்பான் நிரம்பையிலே பிறப்பு வளர்ப்பினாலோ வாழ்வினாலோ தொடர்புபடாதவன். அடியார்க்கு நல்லார் நிரம்பையர் என அழைக்கப்பட்ட இடத்தில் (சிங்கை நகரில்) சென்று அவரைக் கொண்டு உரை சொல்லுவித்துக் கொண்டவன். அன்றியும் கொ. ம. ச. ஆசிரியரால் அந் நாட்டிலே எவ்வாற்றானும் தொடர்பில்லையென்று வேண்டுமென்றே பாடப்பெறாது விலக்கிவிடப் பட்டவன். உரிச்சொல் நிகண்டு செய்த காங்கேயன் கொங்குமண்டலத்துக் குரியவனாய் இச்சதக ஆசிரியரால் பாடப்பெறுபவன்.

அவன் " அலைகடல் சூழு மவனியிற் செந்தமி ழாய்பவர்கள்
நலனுறத் தக்க வகையாக உள்ளம் நனிமகிழ்ந்தே
இலகு முரிச்சொ னிகண்டுவெண் பாவி னிசைத்தகலை
வலவெழிற் காங்கேயன் வாழுமோ ரூர்கொங்கு மண்டலமே"
(கொ. ம. ச. பா. 91.)

எனக் கொங்குமண்டல சதக ஆசிரியரால் பாடப் பெறுபவன். அன்றியும், "பலகலைதேர் சாங்கேயன் பட்ட முடையான் உலகறியச் சொன்ன வுரிச்சொல்" என உரிச்சொல் நிகண்டிலும் "முந்து காங்கேயன் உரிச்சொல்" என ஆசிரிய நிகண்டிலும் "பொருந்த நூல் பலவுஞ் சுருக்கித் தமிழில் உரிச்சொல் நிகண்டென உரைத்த காங்கேயன்" எனப் பாம்பணக் கவுண்டன் குறவஞ்சியிலும் பாடப்பெறுபவன். இவற்றுள் ஒன்றிலேனும் இவன் சிலப்பதிகார உரையைச் செய்வித்தவன் என்ற செய்தி குறிக்கப்பட் டிருக்கவில்லையே. இனி இவனைப்பற்றிப் பாடிய இச் சதகப்பாட்டின் கீழ் "காங்கேயன் என்பது பட்டப்பெயர்; இவன் இன்ன பெயரை உடைய காங்கேயன் என்று விளங்கவில்லை" என்று அக்குறிப்புக்காரர் கூறினமையாலும், உரையை இயற்றுவித்த பொப்பண்ண காங்கேயனைப்பற்றி இச்சதகக்காரர் பாடாமை கொண்டும் இவ்வுண்மை துணியப்படும் என்க. அன்றியும் உரைச் சிறப்புப் பாயிரத்தையே மேற்கொண்டு அடியார்க்குநல்லாரைப்பாடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சதகக்காரர் இப் பொப்பண்ண காங்கேயனைப் பாடாமை விட்ட வாறும் அம்மண்டலத்திலே உரை இயற்றுவித்தவன், வாழ்ந்தவன் என்று கூறாமல் விட்டவாறும் என்னை? என்று பிறர் கருதவுமில்லை. அன்றியும் இவன் சிலப்பதிகாரத்துக் குரை செய்வித்தவனானால் அவ்வாறு 'கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கேயர்கோன்' என்று கூறாமல் "......செந்தமிழாய்பவர்கள்நலனுறத்தக்கவகையாக உள்ள நனிமகிழ்ந்தே,இலகுமுரிச்சொனிகண்டு வெண்பாவி னிசைத் தகலே, வலவெழிற் காங்கேயன்" என்று அச்சதகக்காரர் அவனைப் புரைபடக் கூறினர் கொல்லோ ! அந்நாட்டிலே கொங்கு மண்டலத் திலே இல்லாத அடியார்க்கு நல்லாரைக் கொண்டு, அந்நாட்டிலே இல்லாத காங்கேயன் உரை இயற்றுவித்தான் என்றன்றோ இவர் தம் முடிபு முடிபாகின்றது. எனவே, உரிச்சொல்நிகண்டு பாடிய காங் கேயனும் பொப்பண்ண காங்கேயனும் வேறு வேறு காங்கேயர்கள் என்று சரிவர அறிந்திடுக.

5. இனி, அபிதான சிந்தாமணி 32-ம் பக்கத்தில் 'அடி யார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக் குரையாசிரியர். இவர் நிரம் பை என்னும் ஊரிற் பிறந்தவர் என்பதை "ஆருந்தெரிய............ காவலனே" என்பதால் அறிக. இவர் பொப்பண்ண காங்கேயன் காலத்தில் இருந்தவர் என்பது "காற்றைப் பிடித்து.................. சொல்லுவித்ததே" என்பதால் அறிக' என்று கூறப்பட் டிருக்கின் றது. இதில் ஒரு சரித்திர விளக்கமும் இல்லை. அன்றியும் இச் சிந்தாமணியார், நிரம்பை என்னும் ஊரில் பிறந்தவர் என் பதை "ஆருந் தெரிய விரித்துரைத்தா னடியார்க்கு நல்லான் ...... .........நிரம்பையர் காவலனே" என்பதால் அறிக என்றும் கூறினார். இதனால் அவர் பிறந்த இடம் அறியப்படுமானாலும் இது அவருக்குப் பாயிரம் செய்த பாட்டு. "அவதரித்த நிரம் பைப் பதியுங் கொங்குமண்டலமே" என்னும் அக் கொங்குமண் டல சதகப்பாட்டுத்தான் அவரது பிறப்பையும் பிறந்த ஊரையும் பற்றிச் சொல்வது. சிந்தாமணிக்காரர், இந்நல்லார்க் கெடுத்துக் காட்டிய பாட்டு என்ன சந்தர்ப்பத்தில் பாடப்பட்ட தென்றேனும், இவர் பிறப்பைப் பற்றிச் சொல்லும் சதகப்பாட்டொன்று உண் டென்றேனும் அறியவில்லை. அன்றியும் அச் சிறப்புப் பாயிரத் தில் உள்ள நிரம்பையர் காவலர் என்பதில் உள்ள நிரம்பையர் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது, இன்னொரு இடத்துப் பெற்றபெயர். அது பிறந்த வூரை உணர்த்துகின்றது. அதைக் கொண்டுள்ள பாயிரத்திலும் அவ்வாறு அறியலாம் என்று அவ்வளவு விளக்கத்துக்கும் அவர் செல்ல வில்லை.

அன்றியும் இவ்வபிதான சிந்தாமணி 981-ம் பக்கத்தில் "நிரம்பையர் காவலர்"—அடியார்க்கு நல்லார்க்கு ஒரு பெயர்" என இவர் கூறினர். இவர் நிரம்பையர் ஒரு பெயர், காவலன் இன்னொரு பெயர் என்பதை அறியவில்லை.

6. அபிதான சிந்தாமணி பக்கம் 1206-ல் இவ்வகராதியார் "பொப்பண்ண காங்கேயர்கோன் = அடியார்க்கு நல்லார் என்னும் கவியைச் சிலப்பதிகாரத்துக் குரைசெய்ய ஏவின பிரபு" என அவனை ஒரு பிரபு என்று சொன்னாரன்றி அப்பிரபுவுள்ளும் இவன் ஒரு சேனைத்தலைவன் என்பதையும் காங்கேயன் என்பது சேனுபதிக் குரிய பட்டப்பெயர் என்பதையும் கோன் என்று விதந்தும் 'காற்றைப் பிடித்து, என்னும் பாட்டால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட அடைகளும் அக்கருத்திலேதான் என்றும் இவர் விளங்கவில்லை.

7. அபிதான கோசம் பக்கம் 11. "அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையாசிரியர். இவர் நச்சினார்க் கினியர் காலத்துக்கு முந்தியவர்" இவற்றில் யாதும் ஆராய்ச்சி முறை இல்லை. இவ்வாற்ருல் அவர் காலம் தெளிவுபடப் போவதும் இல்லை.

8. தென்மொழி வரலாறு பக்கம் 139. அமைச்சராய அடியார்க்கு நல்லார் ஒருவரைச் சுட்டி "இவர் (நல்லூரில்) அரசுசெய்த குணபூஷணச் சக்கரவர்த்திக்கு மந்திரியாய் விளங்கியவர்............ தொண்டை நாட்டினின்றும் சென்று வடஇலங்கையிற் குடிகொண்டவர் என்பதும்........."என்று இவ்வரலாற்றுக்காரர் உரைக்கின்றார். இக்கூற்றுக்களில் இவ்வமைச்சராய அடியார்க்கு நல்லார் தொண்டை நாட்டில் இருந்து அழைக்கப்பட்டார் என்பது பெரிதும் பிழைபா டுடையதன்ருே? என்னையெனில், அமைச்சராய அடியார்க்கு நல்லார் நிரம்பையில் இருந்துவந்த படியால் நிரம்பையர் என அழைக்கப்பட்ட பெயரையும் சேர்த்து 'நிரம்பையர் காவலர்' எனப் பாயிரக்காரர் கூறினரெனக் கண்டாம். எனவே நிரம்பையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து வந்தவரே சிங்கையில் நிரம்பையர் எனப்பட்டார் என்க. நிரம்பையூர் குறும்பு நாட்டைச்சேர்ந்த தென்பது "வருவிசய மங்கையும் நிரம்பையும்" என்பதை உள்ளடிகளில் அகப்படுத்திக் கொ. ம. சதகம் ஊர்த்தொகை நிகண்டு முப்பத்தாறுவது செய்யு ளால் "சேர்குழி (குறிப்பி நாடே) குறும்பு நாடே" என்று கூறப் பட் டிருக்கின்றது. இக் குறும்புநாடு கொங்கு நாட்டைச்சேர்ந்த தென்பது "கொங்கு இருபத்திநான்கு நாடுகள்" என்பதைக்கூறும் "சொல்ல வரிதான பூந்துறைசை" என்னும் முதலையுடைய பாட் டின் அகத்தே "இயல் செறிகுறும்பு நாடே" எனக் குறிப்பிட்டு இறுதியில் "இனிய புகழ்சேர் கொங்குமண்டலந்தனிலான இருபத்து நான்குநாடே" என்று கூறியவைகளால் விளங்கும்.

எனவே இவர் கொங்குமண்டலத்துள்ள குறும்பு நாட்டைச் சேர்ந்த நிரம்பையூரில் இருந்து வந்த அடியார்க்கு நல்லார் என்றறிக. இவ்வுண்மையை இவ்வாறு அறியாமல் பிழையாக விளங்கி இத் தென் மொழி வரலாறு என்னும் நூலார் இவரைத் தொண்டைநாட்டினில் இருந்தும் வந்தவர் என்று பிழைபாடாகக் கூறியிட்டனர். இவர்பிழை யாகவே விளங்கிக்கொண்டார் என்பது இவர்தாம் எழுதியசிங்கையாரி யர் வரலாற்றிலே "குணபூஷணச் சக்கரவர்த்தி காங்கேயன் என்னும் போர்வீரனைத் தொண்டை நாட்டில் இருந்தும் வருவித்துத் தனது சேனைக் கெல்லாம் அதிபதியாக்கினன். அடியார்க்கு நல்லார் என் னும் பண்டித சிரோமணியை வரவழைத்துத் தனக்கு முதல் மந்திரி யாக்கினன்" என்று கூறிய துணையானே விளங்கும். இதில் காங்கேய னைத் தொண்டை நாட்டில் இருந்து அழைத்தான் என்று கூறப்பட் டிருக்கிறது; அடியார்க்கு நல்லாரை எவ்விடத்தில் இருந்து அழைத்தது என்று கூறாமல் விட்டவாற்றைக் கவனிக்க. காரணம் என்னையெனில் இவருக்குக் கிடைத்த முதனூலில் அவரை இன்ன இடத்தில் இருந்து அழைத்ததென்று சொல்லவில்லை போலும்! அத னால்இவருக்கும்தெரியவில்லை. ஆயின்இவரோடுடன் அழைக்கப்பட்ட காங்கேயன் தொண்டைமண்டலத்திலிருந்து அழைக்கப்பட்டான் என்று கூறப்பட்டதால் இவரும் அவன் நாட்டில் அத் தொண்டை நாட்டில் இருந்துதான் அழைக்கப்பட்டார் என்று தவறாக ஊகித் துக் கொண்டு அதை எவ்வாறு கண்டதென்றும் கூறாமல், தனது தென்மொழி வாலாற்றில் குறிப்பிட்டார் என்றறிக. கொங்குமண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டலத்தில் உள்ள அடியார்க்கு நல்லாரும் தொண்டைமண்டலத்தில் உள்ள பொப்பண்ண காங்கேயனும் உரை இயற்றவேண்டிய சந்தர்ப்பம் உள்ள இன்னொரு இடத்தில் சந்தித்த சந்திப்புத்தான் இவ்வுரைத் தோற்றத்துக்குக் காரணமாய் இருந்தது என்பதும் அடியார்க்கு நல்லார் நிரம்பையை விட்டுச் சென்று வாழ்ந்த அவ்விடத்திலேயே காங்கேயன் என்பவன் அவரைச் சந்தித்து உரைஇயற்றித் தரும்படி கேட்டுக் கொண்டான் என்பதும் இந்நூலின்கண் நன்கு சாதிக்கப்பட்ட உண்மைகளாம் என்க.

9. இனி அடிகள் உயர் திரு. விபுலானந்தர் அவர்கள் கண்ணகியார் வழக்குரை காதை என்னும் காப்பியத்தினைப்பற்றிக் கூறுமிடத்து "இதன் ஆக்கியோன் பெயர் (காங்கேயன்) தேவையர்கோனென நூலில் கூறப்பட்டுள்ளது. இம் மன்னன் அடியார்க்கு நல்லாரை ஆதரித்த பொப்பண்ண காங்கேயர் கோனாக இருத்தல் கூடும். இளங்கோவடிகளது பெருங் காப்பியத்துக்குரை செய்வித்தோன் காப்பியத் தலைவி மீதுள்ள பேரார்வத்தினாலே தான் ஒரு சிறு காப்பியத்தை இயற்றி இருக்கலாம். கண்ணகியார் வழக்குரைகாதையினது ஆக்கியோன் யாராயினுமாகுக. சிலப்பதிகாரத்துக்குரை செய்வித்த பெரியோன் தமிழகத்தாரால் என்றும் போற்றற்குரியவன். அவன் அளித்த சோற்றுச் செருக்கினால் அடியார்க்கு நல்லார் உரை வெளிவந்தது. அவ்வுரை இல்லையேல் இசை, நாடகத் தமிழை அறிந்து இன்புறுதற்கு வேறுவழி இல்லை" (தமி. பொ. பக். 9. மலர் 1)" என்று கூறியிட்டவற்றை அறிவாம். இதில் இவர்கள் அக்காப்பியத்தை இயற்றியிட்டவர் காங்கேயன் தேவையர் கோனென்றும், அவன் ஒரு மன்னனென்றும், அவன் பொப்பண்ண காங்கேயர் கோனாக இருத்தல் கூடும் என்றுங் கூறிஇட்டார்கள். எனவே பொப்பண்ண காங்கேயர் கோனையும் இவர்கள் ஒரு மன்னனெனக் கருதிக்கொண்டார்கள். சிறப்புப்பாயிரத்தில் வரும் காங்கேயன் என்பது மன்னன் ஒருவன் பெயரல்ல என்றும், சேனாபதிக்குரிய பட்டப் பெயர் என்றும் முன்னர் அறியப்பட்டது. அன்றியும் அமைச்சராகிய அடியார்க்கு நல்லார்தான் உரையாசிரியர் என்பது நன்கு அறியப்படுவதால் இவரைக்கொண்டு உரை இயற்றுவித்தவன் இச்சேனாபதியே என்பதும் நன்கு பெறப்பட்டது. எனவே மன்னனுக்கும் சேனாபதிக்கும் ஏற்றவாறு சிறப்புப் பாயிரத்திலவன் அடைகள் புணர்க்கப்பட்டிருத்தலினாலும், சிறப்புப்பாயிரத்துக்குப் புறம்பே அவன் வரலாற்றினை அறியவல்ல சான்றுகள் இதுகாறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியப்படாமையாலும் தான் அவர்கள் இவ்வாறு கருதி இருக்க வேண்டும் போலும்! அன்றியும் அவன் பெற்ற கோன் என்னும் அடைத்தொடர்பாலும் "அளித்த சோற்றுச்செருக்கன்றோ தமிழ் மூன்றுக்குரை சொல்லு வித்ததே" என்பதாலும் அவனை ஒரு மன்னனென்றே அறியக் கூடிய குறிப்புக்களே தோன்றி நிற்கின்றன. பிறர் காவலன் என்பதால் அடியார்க்கு நல்லாரையும் ஒரு மன்னனெனக் கருதினர். இவ்வாருனால் ஒரு மன்னன் இன்னொரு மன்னனுக்குச் சோற்றை அளித்து இவ்வுரையைச் சொல்லுவித்துக்கொண்டான் என்று பிறர் சொல்லக்கூடிய குறிப்புக்களும் பொருந்தி வருகின்றன. அன்றியும் குணபூஷணனும் ஒரு மன்னனன்றோ?

அடிகள் அவர்கள் கண்ணகியார் வழக்குரை காதை யென்பது பற்றி இப் பத்தியுள் கூறியவை பல நுண்மையோடும் உண்மையோடும் பட்டவை. பொப்பண்ண காங்கேயர் கோன் என்னுமவன் பதினைகாம் நூற்றுண்டிலே சிங்கை நகரில் வாழ்ந்தவன். கண்ணகியின் மீதுள்ள பேரார்வத்தினலேதான் இவ்வுரையை அத்தகைய பழம் கோட்டம் ஒன்றிற்போலும் சோற்றைக் கொடுத்துச் செருக்கச் செய்து சொல்லுவித்திருக்கின்றான் என்னல் வேண்டும். அவன்றான் கண்ணகி தேவி மீதுள்ள பேரார்வத்தால் "கண்ணகியார் வழக்குரைகாதை" என்னும் அக் காப்பியத்தினையும் செய்திட்டான் என்றல் உண்மையே. காங்கேயர் கோன் என்பதுதான் பழைய ஏட்டுப்படிகளிலுள்ள மாற்றத்தினல் "காங்கேயர் தேவையர் கோன்" எனத் தோன்றியிருத்தல் வேண்டும் என்பது உறுதி. கண்ணகியார் வழக்குரைகாதை என்னும் அக்காப்பியமானது இவ்வீழத்திலேயே முதற்றோற்றத்தைப் பெற்றதாய்-சிங்கை நகர்க் காலத்திலே அச் சிங்கை நகரைச் சார்ந்து பாடப்பட்டு ஈழத்தின் பல பாகங்களுக்கும் பரவி இருக்கவேண்டும். எனவே அது இற்றைக்கு அறுநூறுண்டுகளுக்கு முற்பட்டதாதல் வேண்டும் என்க.

10. எனவே இதுகாறும் அடியார்க்குநல்லார் வரலாற்றைப்பற்றிய உண்மைகளைப்பற்றிப் பிறர் கூறியிட்ட குறிப்புக்களையும் அவை முடியுமாற்றையும் காட்டினும். இவை பெரும்பாலும் யாம் இவ் வரலாற்றை ஆராய்வதன் முன்னர் உள்ள குறிப்புக்களாயுள்ளவைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாம் இவ்வாராய்ச்சியைப் பத்திரிகைகளில் (இந்து சாதனம்.1938-40) எழுதி வெளியிட்டதன்மேல் அண்மைக் காலத்தில் (29-8-43 ஈழ கேசரியில்) கொழும்புப் பல்கலைக் கழகத்து ஆசிரியர் டாக்டர் திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் "இலங்கை இந்தியத் தொடர்பு" என்பது பற்றிக் குறிப்பிட்டபோது இவ்வட இலங்கைச் சிங்கை நகரையும் பற்றிக் குறிப்பிடுபவராய் "...........ஆனால் சரித்திரத் தொடர்பாய் யாம்...... இராச்சியத்தைப்பற்றி (வட இலங்கையில் உள்ள சிங்கை யாரியத் தமிழ் இராச்சியத்தைப்பற்றி)க் கேள்விப்படுவது கி. பி. 13-ம் நூற்றாண்டில் இருந்தே. அக் காலத்து அதன் தலை நகர் பருத்தித் துறைக்கருகாமையில் இருந்த சிங்கை நகராகும்...........அதன் பின் பதினாலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசாண்ட குண பூஷண செகராசசேகரன் அடியார்க்கு நல்லார் என்னும் பண்டித மணியை இந்தியாவினின்றும் அழைத்துத் தனது முதல் மந்திரியாக வைத்துக் கொண்டான்........." எனக் குறிப்பிட்டுள்ளார்கள். சிங்கை நகர் அரசனாய் இருந்த குணபூஷணனுக்கு அமைச்சராய் இருந்த அடியார்க்கு நல்லார்தான் சிலப்பதிகாரத்துக் குரைசெய்த அடியார்க்கு நல்லார் என்னும் உண்மையை யாமே முதன் முதலாகக் கண்டு அதனைப் பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டும் சிற்சில இடங்களில் விரிவுரைகள் நிகழ்த்தியும் வந்தோம்; அவை வெளியாகி ஆண்டுகள் பலவாயின. அவற்றால் சாதிக்கப்பட்ட நியாயக் கோட்பாடுகளும் பல. நிற்க, சிங்கை நகர் வரலாறுபற்றியும் அடியார்க்கு நல்லார் வரலாறு பற்றியும் அண்மைக்காலம் வரை அறியப்படவில்லை என்பதற்கு இவர் தம் இக் கூற்றுக்களும் ஒரு உதாரணமாகும். அடியார்க்கு நல்லார் வரலாற்றைப்பற்றிய உண்மை இந்நூலாராய்ச்சியால் ஆராய்ந்து முடிக்கப்பட்டதாயிற்று. இவர் வரலாற்றோடு தொடர்புபட்ட சிங்கை நகர் வரலாறு இந் நூலுக்குப் புறம்பே இன்னொரு நூலின் கண் வைத்து நன்கு ஆராயப்படும். பருத்தித் துறைத் துறைமுகத்துக்கருகாமையில் அப்படி ஒரு சிங்கை நகர், இல்லை யென்பது ஆண்டு நன்கு காட்டப்படும். (அதை யாம் எழுதிவரும் சிங்கை நகர் என்னும் நூலில் கண்டு கொள்க.)

## 31. நூன்முடிபும், குறிப்பும்

இனி, "இக் கொங்கு மண்டலம்' சேலம் ஜில்லாவின் தென் பகுதியும், கோயமுத்தூர் ஜில்லாவும், மதுரை ஜில்லாவிற் சிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் சேர்ந்தது .இக் கொங்கு இராச்சியம்'' என்று கொங்கு மண்டல சதகம் ஊர்த் தொகை நிகண்டு உரைக்கின்றது.

"வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்கு
குடக்குவேள் ளிப்போருப்புக் குன்று—கிழக்கு
கழித்தண் டலைசூழும் காவிரிசூழ் நாடா
குழித்தண் டலையளவுங் கோங்கு'' என்பது

கொங்கு மண்டல எல்லையைப் பற்றிக் கூறும் தனிப்பாடல் ஒன்று இக் கொங்கு மண்டலத்திலேயுள்ள,

"மன்னிய புகழ்சேர் கோங்கு மண்டலம் தன்னிலான
...... இருபத்து நான்கு நாடே''

என்பனவற்றுள் ஒன்றான குறும்பு நாட்டைச் சேர்ந்த முப்பத்தி ரண்டூர்களில் ஒன்றுதான் அடியார்க்கு நல்லார் பிறந்த நிரம்பை என்பது. இந்நிரம்பையூர் இம் மண்டலத்துக் குறும்பு நாட்டைச் சேர்ந்ததுதான் என்பது இம்மண்டல சதகம் ஊர்த் தொகை நிகண்டு முப்பத்தாறுவது பாட்டில் குறிப்பிட்டதை முன்னர்க் குறிப் பிட்டாம்.

"இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் ...... உதயணன் கதை யென்று அடியார்க்கு நல்லார் இந்நூலைப் பாராட்டி எழுதி இருப்பதை உற்று நோக்குகையில் இவர் காலத்தில் இடைச் சங்க நூல்கள் இருந்தன வென்பதும் அவற்றிலும் கூட இவரும் இவர் காலத்தவர்களும் பயிற்சி பெற்று இருந்தார்கள் என்பதும் தெரி கின்றன'' (பெ. க. நூ. ஆ. வ. பக். 44) என்றும் டாக்டர் ஐயரவர் கள் உரைப்பதாலும் அன்றியும் இவர் உரையிற் கண்ட நூல்களா லும் இவர் காலத்திலே இடைச் சங்க நூல்கள் பல இருந்திருக் கின்றன என்பதும் இவரும் இவர் காலத்தவர்களும் அந்நூல்களில் பயின்றிருந்தார்கள் என்பதும் உண்மையே. நிற்க:

இவர் இருந்த நிலமும், இவர் கட்டிய குளமுமே அச்சிங்கை நகர் மறைந்த அவ்விடத்திலே அதன் எல்லையைச் சார்ந்து இப் பொழுதும் முறையே அடியார்க்கு நல்லார் வரம்பு, அடியார்க்கு நல்லார் குளம் என்று அழைக்கப்படுகின்றன என்றும். அவற்றைப் படத்தில் முன்னர் காட்டியிட்டாம். இவர் இருந்தமைச்சாண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கை நகரமும் அவற்றின் எல்லையிலே அழிந்த வடிவத்தோடு நல்லூரில் காட்சியளிக்கின்றது. இந்நூன் முகப்பிலே உள்ள வில் முகப்புக் கட்டிடம் அந்நகரின் தொடர்பில் (நல்லை நகர்க்காலத்தினைச் சேர்ந்ததாயும்) உள்ள ஒன்றே. அவர் மறைந்தாலும் அவர் வரலாறு மறைந்தாலும் அவர் இருந்த சிங்கை நகரமும் அவர் பெயரைக் கொண்ட நிலமும் குளமும் இன்றும் ஆராய்ச்சிக்கு மறைபடவில்லை. இன்று மல்ல அவை என்றும் மறைபடா வென்க. எனவே இவ்வடியார்க்கு நல்லார் வரலாறு அவர் பிறப்பு முதல் மறைவு வரை முழுதும் வெளியாயிற்று. முற்பகுதி சதகத்தாலும் மத்திய பகுதி சிங்கை நகர் வரலாற்றாலும் சிறப்புப் பாயிரத்தாலும் இன்னும் பிறவற்றாலும் பிற்பகுதி அடியார்க்கு நல்லார் வரம்பு முதலிய அச் சிங்கை நகரத்தொடர்பு முதலியவற்றாலும் அறியப்பட்டன வென்க.

இந்நூலில் ஆராய்ந்து கண்டு முடிக்கப்பட்ட முடிபுகள் யாவும் உண்மைக்குறுதியானவையே. அவை அனைத்தையும் ஒரே தொடர்பில் வைத்துக் காணும் கணக்கீடுகளால் சரிகாணவும் முடியும்.

## இந்நூலாராய்ச்சியால் புதிதாய் அறியப்பட்ட உண்மைகள்.

1. அடியார்க்கு நல்லாரைப் பாடிய கோங்குமண்டல சதகப் பாட்டை ஆசிரியர் 'அவதரித்த' என்றே பாடினர் என்பது.
2. அவதரித்து + வரு என்று அச் சதகப் பாட்டைப் பதித்தது பொருந்தாது என்பது.
3. கோ-ம-ச. ஆசிரியர் அடியார்க்கு நல்லார் அவதரித்ததைமட்டும் கூறி உரைச்சிறப்புப் பாயிரத்தில் சொல்லப்பட்ட எல்லா உண்மைகளையும் வேண்டுமென்றே விலக்கிப் பாடினர் என்பது.
4. உரைச் சிறப்புப்பாயிரம் சிங்கை நகரில் பாடப்பட்டது என்பது.
5. அடியார்க்கு நல்லார் பிற்காலத்தில் அச் சிங்கை நகரில் வதிந்தவர் என்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ‘போப்பண்ண காங்கேயன்’ என்பதில் உள்ள காங்கேயன் என்பது சேனபதிக்குரிய பட்டப்பெயர் என்பது.

7. போப்பண்ண காங்கேயர் கோனேச் சிங்கை நகரிற் சென்றே அடியார்க்கு நல்லார் சந்தித்தார் என்பது.

8. அடியார்க்கு நல்லாரும் காங்கேயர் கோனும் முறையே சிங்கை நகர அமைச்சராகவும் சேனபதியாகவும் இருந்த வர்கள் என்பது.

9. ‘நிரம்பையர் காவலர்’ என்பது ஒரு பெயரல்ல என்பது.

10. நிரம்பை, ஊராலும் காவலன், தொழிலாலும் வந்தபெயர்கள்.

11. காவலன் என்பது பாயிரத்தால் மட்டும் உபசரித்துக் கூறப் பட்ட பெயர்.

12. உரைச் சிறப்புப்பாயிரம் பாடினேர் சிங்கை நகரத்து ஒரு வர் என்பது.

13. அடியார்க்கு நல்லார் காலம் கி.பி. 14-ம் நூற்றுண்டு என்பது.

14. உரை வெளிவரவேண்டி இருந்த சந்தர்ப்பம் சிங்கை நக ரத்து அக் காலக் கண்ணகி வணக்கம் என்பது.

15. அடியார்க்கு நல்லாரால் முன்னர்ச் சொல்லப்பட்ட உரையே பின்னர் எழுதப்பட்டது என்பது.

16. போப்பண்ண காங்கேயர் கோன் சொல்லுவித்துக் கொண்ட வனேயன்றி எழுதுவித்துக்கொண்டவன் அல்லன் என்பது.

17. ‘எழுத்தின்றிறனறிந்தோ’ என்று அந் நல்லார் பாடிய அப் பாட்டின் இயைபால் எழுதுவித்துக்கொண்ட ஒருவர் உளர் என்னும் உண்மையும் அறியப்படும் என்பது.

18. இலங்கையின் வடபகுதியில் இட்போழுது நல்லூரைச் சார்ந்து கன்னுதிட்டியாகவும் உள்ள இடத்தில்-வண்ணுர் பண்ணை கிழக்கில் அமைந்துள்ள அடியார்க்கு நல்லார் வரம்பு, அடியார்க்கு நல்லார்குளம் என்பனவற்றில் சுட்டப் படுபவரே உரையாசிரியர் என்பது.

19. அவர் வாழ்ந்த நிலமே அடியார்க்கு நல்லார் வரம்பேன்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. குணபூஷணனால் அழைக்கப்பட்ட அமைச்சரே உரையாசிரியர் என்பது.

21. சிங்கைநகர் வரலாற்றில் கூறப்பட்ட அடியார்க்கு நல்லார், காங்கேயன் என்பவர்களே உரைச் சிறப்புப்பாயிரத்தில் கூறப்பட்டவர்கள் என்பது.

22. உரை இயற்றி யிட்ட இடம் சிங்கை நகரம் என்பது.

23. உரையாசிரியர் நிரம்பையில் இருந்து சிங்கைக்கு உரை இயற்ற முன் வந்தார் என்பது.

24. சதகம் பதினேட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் உரைச் சிறப்புப்பாயிரம் பதினான்காம் நூற்றாண்டு மத்தியபகுதியிலும் வெவ்வேறிடங்களில் பாடப்பட்டவைகள் என்பது.

25. அடியார்க்கு நல்லார் வரலாறு மறைபடக்கிடந்த காரணங்கள் இவையென்பது.

26. தென்மொழி வரலாற்றின் தவறு இன்னதென்பது.

27. வரலாற்றுண்மைகளை அறிதற்குச் சான்றுகளேயன்றி சரியான கணக்கீடுகளும் ஒரு சிறந்த வழி யென்பது.

இங்ஙனம்
பொ. செகந்நாதன்

EV LYN RUTNAM INSTITUTE
34
REFERENCE LIBRARY
JAF

பதிப்புரிமை ஆசிரியருக்கே உரியது

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை—44.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கை நகர் என்னும் நூல் விரைவில் வெளிவரும். இதன்கண் சிங்கை நகர் இருந்த இடம் இருந்த காலம் என்பனபற்றிய பல புதிய முடிபுகளைப் புதுமையும், நுண்மையுங் கொண்ட முறைகளால் ஆராய்ந்து காணப்படும்.

அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சியின் முடிபின் பின்னர், அவர் வரலாற்றைக் கொங்குமண்டலத்து நிரம்பையில் அறிதல் ஒருபடி. நிரம்பைக்கு வெளியே அறிதல் அடுத்த இரண்டாம்படி. அப்பாற் சிங்கை நகரில் அறிதல் அடுத்த மூன்றும்படி. இவ்வாறு அவர் வரலாறு மூன்று படிகளாக அறியக்கூடியதாக அமைந்துள்ளமை காணலாம்.

இப்புத்தகம் கீழ்க்காணும் முகவரியிற் பெற்றுக்கொள்ளலாம் :—

பொ. செகந்நாதன்

ஆசிரியர்

சரசுவதி உயர் நிலைப்பள்ளி

வேலணை

யாழ்ப்பாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org